# Value
## with every step




KURUNEGALA PLANTATIONS LIMITED

வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்ட பயிர்ச்செய்கைகள் கம்பனி

அரசாங்க தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு

வருடாந்த அறிக்கை 2015





# எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் பெறுமானங்கள்

முன்நோக்கி எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும், எதிர்காலத்திற்கான பெறுமானங்களை வழங்க வேண்டும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

எனவே, நாம் முன்னோக்கிச் செல்லவென வைக்கும் ஒவ்வொரு அடியையும், வெற்றியை- எதிரொலிக்கும் மைல் கல்லாக மாற்ற அர்ப்பணிப்பு, காருண்யம், சமர்ப்பணம், தெளிவான உந்து சக்தி என்பனவற்றுடன் பணியாற்றுகின்றோம். புதிய உறவுகளை ஆதரித்து, புதிய சந்தர்ப்பங்களை வரவேற்று, பலதரப்பட்ட சவால்களையும் வென்றெடுத்து, நிலைபேறான வளர்ச்சிக்கு ஊக்கமளித்து நாம் செயற்படுகையில், எமது தொலைநோக்கு சகலருக்கும் தெளிவானதாகும், எமது நடவடிக்கைகள் வெளிப்படையானவையாகும்.

குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தில் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு நடவடிக்கையின் போதும், சிறந்ததும், பசுமையானதுமான எதிர்காலத்திற்கென, பலமான இணைப்புக்கள் முன்னெடுக்கப்படும் அதேசமயத்தில், நிறுவனம் ஒவ்வொரு உறவுக்கும் பெறுமானங்களை வழங்கும்.

# கௌரவ அமைச்சரின் செய்தி



அரசாங்க தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் சார்பில், குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பிப்பது எனக்கு பெருமகிழ்ச்சியைத் தருகின்றது.

இலங்கையின் அரச உடைமை நிறுவனங்கள் கடந்த பல வருடங்களாக பொருளாதாரப் பின்னடைவை எதிர்நோக்கியிருந்தன. இருந்தபோதிலும், அர்ப்பண சிந்தையுள்ள ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவக் குழுவினர் ஆகியோரின் மனப்பூர்வமான ஒத்துழைப்புடன், அரச உடைமை நிறுவனமொன்றை வெற்றிகரமாக நடத்த முடியுமென்று, குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் நிரூபித்துள்ளது.

அதிமேதகைய சனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மாண்புமிகு பிரதம அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் வழிகாட்டலில், இலங்கையின் பொருளாதாரம், விவசாயத்துறைக்கு முன்னுரிமையளித்து, பாரிய வளர்ச்சியை இலக்காகக் கொண்டு அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது. குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் வெற்றி, அரசாங்க மற்றும் தனியார் துறைகளைச் சேர்ந்த சகல பெருந்தோட்ட நிறுவனங்களுக்கும், வழிகாட்டி ஒளிவிளக்காகத் திகழும்.

குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம், தொடர்ந்து காண்பித்து வரும் முன்னேற்றத்தையிட்டு, அரசாங்க தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு பெருமையடைகின்றது. இந்த வழியில் அது தொடர்ந்து முன்னேற்றம் காணும் என்பதில் நான் பூரண நம்பிக்கை கொண்டுள்ளேன்.

நிறுவனத்தை முன்னெடுத்துச் செல்வதில் அதன் தலைவர், பணிப்பாளர் சபையினர் மற்றும் ஊழியர்கள் ஆகியோருக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

**கபீர் ஹஷீம்**
அரசாங்க தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர்

# உள்ளடக்கம்



### எம்மைப் பற்றி


எம்மைப் பற்றி ____ 06
எமது தொலைநோக்கு, இலக்கு, பெறுமானங்கள் ____ 07
சாதனைகள் ____ 08
முக்கிய நிகழ்வுகள் ____ 10
நிதித்துறை சிறப்பு அம்சங்கள் ____ 12
தலைவரின் மீளாய்வு ____ 14
பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு ____ 18
பணிப்பாளர் சபை ____ 22
சிரேஷ்ட முகாமைத்துவம் ____ 27
பிரதேச அத்தியட்சகர் ____ 28


### முகாமைத்துவக் கலந்துரையாடலும் பகுப்பாய்வும்


செயற்பாட்டு மீளாய்வு ____ 30
நிதித்துறை மீளாய்வு ____ 33
நிலைபேற்றுத்தன்மை அறிக்கை ____ 37
இடர் முகாமைத்துவம் ____ 40
கூட்டிணைப்பு ஆளுமை ____ 42
கணக்காய்வுக் குழுவின் அறிக்கை ____ 43


### நிதித்துறை அறிக்கை


பணிப்பாளர் சபையினரின் ஆண்டறிக்கை ____ 46
அறிக்கை - பணிப்பாளர்களின் பொறுப்பு ____ 49
அறிக்கை - வருமானத் தொகுப்பு ____ 50
அறிக்கை - நிதி நிலைமை ____ 51
அறிக்கை - பங்குகள் மாற்றம் ____ 52
அறிக்கை - காசுப்பாய்ச்சல் ____ 53
கணக்கியல் கொள்கைகள் ____ 54
நிதி அறிக்கைகள் மீதான குறிப்புக்கள் ____ 67
நிதி அறிக்கை மீதான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை ____ 84
கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை மீதான கருத்துக்கள் ____ 100
பத்து வருடகால தொகுப்பு ____ 104


### இணைப்புக்கள்


வருடாந்தப் பொதுக் கூட்ட அறிவித்தல் ____ 108
அதிகாரம் பெற்ற பிரதிநிதிக்கான படிவம் ____ 109
கூட்டிணைப்புத் தகவல்கள் - பின் அட்டையின் உட்பக்கம்



# எம்மைப் பற்றி


எம்மைப் பற்றி 06

எமது தொலைநோக்கு, இலக்கு, பெறுமானங்கள் 07

சாதனைகள் 08

முக்கிய நிகழ்வுகள் 10

நிதித்துறை சிறப்பு அம்சங்கள் 12

தலைவரின் மீளாய்வு 14

பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு 18

பணிப்பாளர் சபை 22

சிரேஷ்ட முகாமைத்துவம் 27

பிரதேச அத்தியட்சகர் 28

# எம்மைப் பற்றி

1992 ஆம் ஆண்டில் கூட்டிணைக்கப்பட்ட, முற்றிலும் அரசுடைமையான, குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள் பதிவு செய்யப்பட்டதாகும். அந்த நாளிலிருந்து பன்முகப்படுத்தப்பட்ட விவசாய வர்த்தக நிறுவனமாக துரித வளர்ச்சியடைந்துள்ளது. பயிர்ச்செய்கை, உற்பத்தி, தென்னை, இறப்பர் மற்றும் சிறு பயிர்கள் என்பனவற்றின் உற்பத்திப் பொருள்களைப் பதனிடல், விற்பனை ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அரச தனியார் மயப்படுத்தும் கொள்கையின் கீழ் கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச உடைமையான வர்த்தக ஸ்தாபனங்கள் என்பனவற்றை 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க பொது நிறுவனங்களாக மாற்றும் சட்டத்தின் கீழ் ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்தி சபையினால் நிர்வகிக்கப்பட்ட காணிகளைச் சட்டபூர்வமாக உரித்தாக்கியதன் அடிப்படையில் இந்த நிறுவனம் உருவாக்கப்பட்டது. ஒரே ஒரு பங்குடைமை நிறுவனமாகச் செயல்படும் நிறுவனத்திற்கு இலங்கை அரசாங்கத்தின் திறைசேரியினது செயலாளர் தனியான பங்குதாரராக விளங்குகின்றார்.

குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் மொத்த நடவடிக்கைகள் அனைத்தும் தென்னை மற்றும் இறப்பர் செய்கைகளாகவே தொடர்ந்தும் காணப்படுகின்றன. குருநாகல், கம்பஹா, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் 5,244.58 ஹெக்டயர்களை உள்ளடக்கிய 08 பெருந்தோட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு பெருந்தோட்டமும் குறிப்பிட்ட ஏக்கர்களைக் கொண்ட சிறுச்சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளில் இவை உள்ளன.

நிறுவனம் 1,235 பேருக்கு நேரடியாகவும், நேரடியற்ற வகையிலும் வேலை வாய்ப்புக்களை வழங்குவதோடு, மேலும் பலரின் ஜீவனோபாயத்துக்கும் பின்னணியிலுள்ளது. நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம், குருநாகல், தம்புள்ள வீதி, 80 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளது.

ஆரம்ப காலத்திலிருந்தே குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் முகாமைத்துவம் தனியார் துறையை அடித்தளமாகக் கொண்டிருந்தது. பொருளாதார ரீதியில் பின்னடைவு கண்டதனாலும், 13 வருட காலமாக சரியான முகாமைத்துவம் இல்லாததனாலும், 2005 ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்து நிறுவனத்தின் முகாமைத்துவத்தை மீண்டும் பொறுப்பேற்க அரசாங்கம் தீர்மானித்தது. இத்தகைய நடவடிக்கை காரணமாக, நிறுவனம் பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சின் நேரடி மேற்பார்வையின் கீழ் கொண்டுவரப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இதன் நிர்வாகம் பல்வேறு அமைச்சுக்களினால் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து, 2015 செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதியிலிருந்து, பொது நிறுவனங்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

## எமது தொலைநோக்கு

தென் கிழக்காசியப் பிராந்தியத்தில் சிறந்த மாதிரிப் பெருந்தோட்ட விவசாய, வர்த்தக நிறுவனமாகத் திகழுதல்.

## எமது குறிக்கோள்

பெருந்தோட்ட மற்றும் விவசாய, வர்த்தக நிறுவனங்களை, இயற்கை, பௌதீக, மனிதவளம் என்பனவற்றை ஒன்றுதிரட்டி, சூழலை அசுத்தமாக்காத வகையிலும், சமூக ரீதியில் பொறுப்புணர்ச்சி கொண்ட விதத்திலும், பங்குதாரர்கள் மற்றும் நாட்டு மக்கள் அனைவருக்கும் நன்மையளிக்கும் வகையிலும் நிர்வகித்தல்.

## மூலாதாரப் பெறுமானங்கள்

| | |
|---|---|
| சிறந்த தொழிலதிபர் | : தரம், உற்பத்தி, தொழிலதிபர் திறன், பெறுமான உருவாக்கம், இலாபமீட்டும் தன்மை, சூழல் பாதுகாப்பு, கூட்டிணைப்பு சமூகப் பொறுப்புணர்ச்சி என்பனவற்றை இலக்காகக் கொண்ட கௌரவம் மிக்க, தகைமை கொண்ட அர்ப்பணித்துப் பணிபுரியும் சேவையாளர்களுக்கு அதிகாரமளித்தல். |
| தரம் வழங்குநர் | : அதிகரித்த மனநிறைவு, செயலாற்றும் சகல விடயங்களிலும் தொடர்ச்சியான அபிவிருத்தி. |
| உற்பத்தி | : ஒரு யூனிற் மூலவளத்திற்கு உச்சக்கட்ட உற்பத்தியைப் பெறுதல், ஒரு ஹெக்டயருக்கு அதிகரித்த விளைச்சலைப் பெறுதல், நிறைபேறான அடிப்படையில் உச்சக்கட்ட காணி உபயோகம், வீண் விரையத்தை இயன்றளவு குறைத்தல். |
| தொழிலதிபர் திறன் | : செயற்பாட்டு அடிப்படையில் சகல வேளைகளிலும் புதுப்புது அணுகுமுறைகளை நோக்கி நடவடிக்கை மேற்கொள்ளல். |
| பெறுமான உருவாக்கல் | : வர்த்தக சூழலின் மாற்றமடையும் தேவைகளுக்கு தொடர்ச்சியாக ஈடுகொடுத்தல். |
| இலாபமீட்டும் தன்மை | : அடிப்படை உற்பத்திப் பொருட்களுக்கும், பெறுமதிசேர் உற்பத்திப் பொருட்களுக்கும், உச்சக்கட்ட தேறிய விற்பனைச் சராசரியையும், மிகக் குறைந்த உற்பத்திச் செலவினத்தையும் பெறுதல். |
| சூழல் பாதுகாப்பு | : சுற்றாடலுடன் தொடர்புபட்ட வளங்களை உபயோகித்து, சூழலுக்கு மிகக் குறைந்த பாதிப்பை அல்லது எத்தகைய பாதிப்புமற்ற சூழலை நிச்சயித்தல். |
| சமூகப் பொறுப்புணர்ச்சி | : சிறந்த ஆளுமைக்கு மதிப்பளித்து, மக்களுக்கும் சூழலுக்கும் பாதுகாப்பளித்தல். |

# பெறுபேறுகள்

## 2015

இலங்கை தேசிய வர்த்தக சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட 2015 ஆம் ஆண்டின் விசேட திறமைக்கான விருது வழங்கும் விழாவில், விவசாய மற்றும் பெருந்தோட்டப் பிரிவில் குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.




## 2014

விவசாயத் துறைக்கான தேசிய தங்க விருதை தொடர்ந்து மூன்றாவது வருடமாகவும், பெருந்தோட்ட உற்பத்தித் துறையில் பாரிய உற்பத்திக்கான தங்க விருதை நான்காவது வருடமாகவும் பெற்றதன் மூலம், தொடர்ச்சியாக இந்த விருதுகளைப் பெறுவதில் குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் மீண்டும் ஒரு தடவை சரித்திரம் படைத்துள்ளது.

## 2013

தேசிய தங்க விருதை மீண்டும் ஒரு தடவை வென்றெடுப்பதன் மூலம், நாட்டின் தேசிய தங்க வெற்றியாளர் என்ற நிலைப்பாட்டை குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் தொடர்ந்து நிலைநாட்டி வருகிறது. தேசிய விவசாய வர்த்தக விருதுகள் பிரிவில் பெருந்தோட்ட உற்பத்தித் துறையில் பாரிய உற்பத்திக்கான தங்க விருதைப் பெற்றதன் அடிப்படையில் தங்க விருதுகள் பிரிவில் சாதனை படைத்துள்ளது.




## 2012

தேசிய விவசாய வர்த்தக விருதுகள் (2012) பிரிவில் குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் தங்க விருதை வென்றெடுத்துள்ள அதேசமயத்தில், பெருந்தோட்ட உற்பத்தித் துறைக்கான தங்க விருதை மீண்டும் பெற்றுள்ளது.

## 2011

2011 தேசிய விவசாய வர்த்தக விருது வழங்கும் விழாவில், குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் இரண்டு பெறுமதிமிக்க விருதுகளைப் பெற்றுள்ளது. பெருந்தோட்ட உற்பத்தித் துறையில் பாரிய உற்பத்திக்கான தங்க விருது மற்றும் தேசிய விவசாய வர்த்தக விருது வழங்கும் விழாவில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் வென்றெடுத்துள்ளது.

# முக்கிய நிகழ்வுகள்

**1992 ஜுன் 18,** குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் (KPL), 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 1992.06.18 இல் நிறுவப்பட்டது. அரச தனியார் மயப்படுத்தும் கொள்கையின் கீழ், கூட்டுத்தாபனங்கள், அரச உடைமை நிறுவனங்கள் என்பனவற்றை 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க பகிரங்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் பூரணமாக அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனமாக ஏற்படுத்தப்பட்டது. அப்போது, ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையினால் நிர்வகிக்கப்பட்ட காணிகள் 1992 ஜுன் 18 இலிருந்து 2004 டிசம்பர் 31 வரை ஒதுக்கீடு செய்யப்பட்டு தனியார் முகாமையாளர் ஒருவரினால் நிர்வகிக்கப்பட்டு வந்தன.

**2005 ஜனவரி 01,** தனியார் முகாமையாளர் ஒருவரினால் 13 வருட காலமாக சீரற்ற முறையில் நிர்வகிக்கப்பட்டு வந்ததைத் தொடர்ந்து அப்போதைய அரசாங்கம், குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் நிருவாகத்தை 2005 ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்து பொறுப்பேற்றுக்கொள்ளத் தீர்மானித்தது. இதனையடுத்து இதன் நிர்வாகம் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது.

**2006 ஜுன் 06,** தெங்கு அபிவிருத்தி அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் கொண்டுவரப்பட்டது.

**2007 ஏப்ரல் 18,** அரச பெருந்தோட்டங்கள் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி அமைச்சின் கீழ் குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் நிர்வாகம் மாற்றப்பட்டது.

2015 செப்டம்பர் 21, குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம், பொது நிறுவனங்கள் அபிவிருத்தி அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

2015 ஜனவரி 18, குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

2010 நவம்பர் 16, குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம், தெங்கு அபிவிருத்தி மற்றும் ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

2010 ஜுன் 18, குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் நிர்வாகம், அரச வளங்கள் மற்றும் நிறுவனங்கள் அபிவிருத்தி அமைச்சுக்கு மாற்றப்பட்டது.

# நிதித்துறை முக்கிய அம்சங்கள்

ரூபா *492,140,403*
**வருமானம்**




ரூபா *155,910,741*
**இலாபம்**

ரூபா *1,898,393,856*
**மொத்தச் சொத்துக்கள்**


## மொத்த வருமானம்

ரூபா மில்லி.





## வரிக்கு முந்திய இலாபம்

ரூபா மில்லி.





## மொத்த சொத்துக்கள்

ரூபா மில்லி.





## ஒரு பங்குக்கான தேறிய சொத்து

ரூபா மில்லி.





## செயற்படு மூலதனம்

ரூபா மில்லி.




## ஒரு பங்கின் சம்பாத்தியம்

ரூபா மில்லி.



# தலைவரது மீளாய்வு

எமது "நீண்டகால மீட்சி" மற்றும் "தொலைநோக்குடைய முகாமைத்துவம்", 2007 ஆம் ஆண்டிலிருந்து பொதுத் திறைசேரிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் அரசுடைமையாக்கப்பட்ட நிறுவனங்களில் ஒன்றாகவும், அதிகரித்த இலாபமீட்டும் ஸ்தாபனமாகவும் குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தை வழிநடத்தி வந்துள்ளது. ரூபா 280 மில்லியன் மொத்தப் "பங்குலாபங்கள்" என்ற வகையில் இவ்வாறு பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளது.



# தலைவரது மீளாய்வு தொடர்ச்சி...

குருநாகல் பெருந்தோட்ட நிறுவனமானது (KPL), 2015 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்கு எமது பங்குதாரர்களை நான் அன்புடன் வரவேற்கின்றேன். நான் எமது பணிப்பாளர் சபையின் சார்பில் 2015 டிசம்பர் 31 உடன் முடிவடைந்த நிதியாண்டிற்குரிய வருடாந்த அறிக்கையையும், கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களையும் உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

பின்னோக்கிய பார்வையில், கடந்த 2015 ஆம் ஆண்டானது, KPL இல் உள்ள நாம் மட்டுமல்லாது, இலங்கையின் தெங்கு மற்றும் இறப்பர் துறைகளில் உள்ள அனைவரும் சர்வதேச அளவில் ஏற்பட்ட சரிவினைச் சமாளிப்பதில் கஷ்டங்களை எதிர்நோக்கிய ஒரு கடினமான ஆண்டாகும். உள்நாட்டு மற்றும் சர்வதேசச் சந்தைகளில் பல சவால்கள் இருந்தாலும், உங்கள் நிறுவனமானது, கடந்த வருடத்தில் பெற்றுக்கொண்ட 207 மில்லியன் ரூபாவிற்கு எதிராக இவ்வருடத்தில் வரி நீங்கலாக 156 மில்லியன் ரூபாய்கள் எனும் பாராட்டத்தக்க இலாபத்தை அடைந்துள்ளது. இது உண்மையிலேயே எமது உறுதியையும், அர்ப்பணிப்பையும் சோதிப்பதாக அமைந்திருந்தது.

உள்ளூர் மட்டத்தில் பல முரண்பாடுகள், பாதகமான ஒழுங்கற்ற காலநிலைகள் மற்றும் மந்த நிலையான வர்த்தக சூழ்நிலைகள் காணப்பட்டாலும், KPL இல் உள்ள நாம் எமது வர்த்தகத்தைச் சூழக் காணப்படும் உள்புற மற்றும் வெளிப்புறச் சவால்களைச் சமாளித்து நிற்கக்கூடிய “நெகிழ்வுடன் கூடியதான ஒரு செயற்பாட்டினைக் கட்டியெழுப்புதல்” எனும் எமது குறிக்கோளில் உறுதியாக இருந்து வந்துள்ளோம். கடந்த வருடத்தில் நாம் ஒரு பெரிய படத்தினைப் பார்க்கவும், எமது உபாய மார்க்கத்தை எதிர்காலத்திற்கு ஏற்ற வகையில் மாற்றியமைக்கவும் ஆரம்பித்ததுடன், எமது நிதிகளை அதிகப்படுத்துவதன் மூலமும், நிதி சாராத அம்சங்களைக் கூர்மையாக்குவதன் மூலமும், எமது வர்த்தகத்தின் நீடுறுதித் தன்மையை முன்னேற்றுவதற்காக உழைத்து வருகின்றோம்.

அது வருடத்தில் பங்கீட்டாளர்களின் வருமானத்தை முன்னேற்றுவதற்கும், நிறுவனத்தின் நில அடிப்படையைப் பாதுகாப்பதற்கும், விரிவாக்குவதற்குமான முயற்சிகள், சூழல் சார்ந்த செயற்பாடுகளை முன்னேற்றுவதற்கும், மனித மூலதனத்தை முன்னேற்றுவதற்கும் என நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அத்துடன், தமது வாழ்வாதாரங்களிற்கு நிறுவனத்தில் தங்கியிருக்கும் தொழிலாளர் சமூகங்களின் நன்மை கருதி பரந்தளவிலான சமூக மாற்றத்தினையும் நாம் உருவாக்க முயற்சி செய்துள்ளோம்.

தென்னை, இறப்பர் மற்றும் ஊடுபயிர்களைக் கொண்ட எமது சமநிலைப் பயிர்களின் தொகுப்பானது, பல வருட காலமாக அரச மேலாண்மையின் கீழ் இருந்து வந்ததுடன், அதிகப்படியான பங்குலாப வருமானத்தையும் காட்டியது. நெகிழ்வுத் தன்மையையும், தொலைநோக்குப் பார்வையையும் கொண்ட எமது முகாமைத்துவமானது, இந்நிறுவனத்தினை குறிப்பிடத்தக்க இலாபமீட்டும் தன்மைக்குக் கொண்டு வந்ததன் மூலம், 2007 ஆம் ஆண்டிலிருந்து பொதுத் திறைசேரிக்கு பங்களிப்பு மேற்கொள்ளும் சில அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களில் ஒன்றாகக் காணப்படுவதற்கு உதவியுள்ளது.

இக்காரணத்திற்காக மொத்தத் தொகை 280 மில்லியன் ரூபாய்கள் பங்குலாப வருமானம் எனும் வடிவத்தில் பங்களிக்கப்பட்டிருக்கின்றது. அதேவேளை, வருடத்தில் முன்மொழியப்பட்ட தொகையான 30 மில்லியன் ரூபாய்கள் மீளாய்வின் கீழ் உள்ளது. அவ்வருடத்தில் நாம் மேற்கொண்ட மற்றுமொரு உத்தியான பயிர்களைப் பல்வகைப்படுத்தல் என்பதும் மீளாய்வின் கீழ் உள்ளது.

இதன் சார்பில் சில வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட கறுவா பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டத்தினை விஸ்தரிப்பதில் நாம் கவனத்தைச் செலுத்தினோம். முதலில், ஏற்கனவே உள்ள பயிர்களுடன் சேர்த்து சிறிய அளவில் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட கறுவா, நிதிகளின் வருகையைப் பார்த்து என்பதனால் 1,676,574 ரூபாய்கள் எனும் தொகை இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

சிறிய அளவில் வைத்திருப்பவர்களையும், தோட்டங்களையும் உள்ளடக்கிய எமது நாட்டின் பெருந்தோட்டத் துறையானது, தேசிய அளவிலான விருப்புகளுக்குரிய தொகுப்பில் உள்ளடங்கியுள்ளது. ஆதலால், இது மானியங்கள் மற்றும் வேறு விதங்களினாலான குறைப்புகளின் மூலம் ஆதரவைப் பெறுகின்றது. அதேபோல், இத்துறையானது, அதிகளவு தொழிலாளர்கள் தேவைப்படும் தொழிற்துறையாக இருப்பதனால், முழு தொழிற்துறையின் வளர்ச்சிக்கும் இடையூறு ஏற்படுத்தக்கூடியதான உயர் ஊதியச் செலவுகள் மற்றும் வலுவான தொழிற்சங்கங்கள் என்பனவற்றைக் கொண்டிருக்கின்றது. வேறு தொழில்களுடன் ஒப்பிடும் போது, ஊதியமானது, உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருக்கவில்லை என்பதனால், தொழிலாளர்களைப் பெறுவதானது, முன்னேற்றம் காணப்படாத ஒரு தடையாகவே இருந்து வருகின்றது, மக்களின் மீதான எமது அர்ப்பணிப்பைத் தெரிந்து கொண்டுள்ள நாம், தொழிலாளர்களது வாழ்க்கைத் தரங்களை உயர்த்தும் நோக்கில் அவர்களது வசதிகளை முன்னேற்றமடையச் செய்வதில் ஈடுபட்டு வருகின்றோம்.

தேங்காய் ஆனது, பல நூற்றாண்டு காலமாக, உள்ளூர் உணவுகளில் மட்டுமல்லாது, சர்வதேச உணவு வகைகளிலும் பயன்படுத்தப்பட்டு வரும், சமையற் கலையின் ஒரு அற்புதமாக சாதனமாக விளங்குகின்றது. தென்னை ஆனது, எமது முக்கிய பயிராக இருப்பதன் மூலம் எமது சகல மற்றும் முழுப் பெருந்தோட்டத் தொழிற்துறையிலும் குறிப்பிடத்தக்க அடையாளத்தை எமக்குப் பெற்றுத் தந்திருக்கின்றது. வருடாந்த நுகர்வு ஏறத்தாழ 2,000 மில்லியன் தேங்காய்கள் என்பதுடன், உள்ளூரில் இவை புதிய விதைகளாகவும், எண்ணெய், பானங்கள் மற்றும் பிற வடிவங்களாகவும் நுகரப்படும் அதேவேளை, மில்லியன் கணக்கான விதைகள் ஏற்றுமதி செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தென்னை மரங்களில் இருந்து பெற்றுக் கொள்ளப்படும் முக்கியமான வர்த்தக உற்பத்தியான தேங்காய் எண்ணெய், சாதாரண தேங்காய்களை நேரடியாக செயன்முறைக்கு உட்படுத்தியோ அல்லது சிறந்த, தரமான கொப்பறாவினைப் பிழிந்தோ எடுக்கப்படுகின்றது. கடந்த 15 வருடங்களின் போது ஆசியப் பிராந்தியத்தில் மட்டும் தனி நபருக்கான எண்ணெய் மற்றும் கொழுப்பு நுகர்வானது, சுமார் 6.5 கிலோவிலிருந்து 11 கிலோவாக இரட்டிப்படைந்துள்ளது என புள்ளிவிபரவியல் காட்டுகின்றது.

திறந்த பொருளாதார அமைப்பின் கீழ் வர்த்தகத்திலுள்ள தடைகளைப் படிமுறையாக நீக்கியதன் மூலம், கடந்த இரு தசாப்தங்களில், உள்ளூர் சந்தைகளிற்கு உணவுக்கான எண்ணெய் வகைகள் இறக்குமதி செய்யப்படுவதானது வியக்கத்தக்க வகையில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

எண்ணிக்கை அடிப்படையில், பாம் எண்ணெய் மற்றும் பாம் கேணல் எண்ணெய் ஆகியன முக்கியமான இறக்குமதிப் பொருட்களாகும். தொடர்ச்சியாக பல தொழிலதிபர்கள் தேங்காய் எண்ணெய் பாவனையில் இருந்து மரக்கறி எண்ணெய், சோள எண்ணெய் உள்ளடங்கலான பிற எண்ணெய் வகைளின் பாவனைக்கு மாறிவிட்டனர்.

பிரதியீட்டுப் பொருளாகக் காணப்படும் மரக்கறி எண்ணெய்யின் இருப்பினாலும், பல நூற்றாண்டு காலமாக தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெய் பாவிக்கப்பட்டு வந்தாலும், இருதய நோய்களை அது ஏற்படுத்தும் எனும் தவறான பயத்தினாலும், தேங்காய் எண்ணெய்க்கான உள்ளூர் நுகர்வோரின் தேவைகளானது தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டு வருகின்றது.

பொதுவாக தனியார் கணக்காய்வு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் வருடாந்தக் கணக்காய்வானது, இவ்வருடம் நிபந்தனைகளுடன் கூடிய வகையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் வகையில் மாற்றம் ஒன்றினை ஏற்படுத்தியது. இந்த மாற்றமானது, எமக்கு ஒரு கற்றல் அனுபவமாக அமைந்திருந்தது. இக்கணக்காய்வின் போது வலியுறுத்தப்பட்ட ஒரு அம்சமான ஒழிவு மறைவற்ற தன்மையை எமது அனைத்து நடைமுறைகளிலும் உள்வாங்குவதற்கு நாம் முனைகின்றோம். அவ்வருடத்தில் இடம்பெற்ற மற்றுமொரு குறிப்பிடத்தக்க முயற்சியாக, பெறுமதியை அதிகரித்தலை அரசு வலியுறுத்தியமையைக் குறிப்பிடலாம்.

பொதுத் தொழில் முயற்சிகள் அமைச்சின் வரம்பின் கீழ் வரும் இவ் நிகழ்ச்சித் திட்டமானது, நிறுவனத்தையும், நாட்டினையும் உயர்த்துவதற்காக, நிலையான முதலீட்டினை நோக்கிய உள்ளூர் மற்றும் வெளிநாட்டுக் கூட்டு முயற்சிகளினை ஏற்படுத்துவதில் உள்ள முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. ஆகையினால், இதனை முன்னெடுக்கும் நோக்கில், அமைச்சு மற்றும் நிறுவனம் அளவில் திட்டங்களானவை வகுக்கப்பட்டுள்ளன. நிலையான வளர்ச்சி தொடர்பாக ஆலோசனை கூறப்பட்ட பகுதிகளானவை, சுற்றுலா தொடர்பான அபிவிருத்தி, கனிய அபிவிருத்தி, நீர் வள அபிவிருத்தி, மின்சக்தி மற்றும் சக்திவலு தொடர்பான அபிவிருத்தி, விவசாய பெருந்தோட்டத் திட்டங்கள், வீடமைப்பு மற்றும் வணிக சொத்து அபிவிருத்தி, பெருந்தோட்ட உற்பத்திகளின் அபிவிருத்தி உள்ளிட்ட பெயர் குறிப்பிடக்கூடிய சிலவாகும்.

தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் புள்ளி விபரங்களின் அடிப்படையில், இலங்கையின் மொத்த தென்னையை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்களின் தொழிற்துறை ஏற்றுமதிகளின் அடிப்படையில் 2015 ஆம் ஆண்டில் 75 பில்லியன் ரூபாய்களாக இருந்ததுடன், இதில் கேணல் உற்பத்திகள் 41 பில்லியன் ரூபா வருமானத்தைப் பெற்றுக் கொடுத்தன. தென்னை நார் உற்பத்திப் பொருட்கள் மற்றும் ஒரு உற்பத்திப் பொருள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏற்றுமதி வருமானமானது, 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், முறையே 29% மற்றும் 04% இனால் குறைவடைந்து காணப்பட்டது. 2014 ஆம் ஆண்டில் 33 மில்லியன் விதைகள் என்பதுடன் ஒப்பிடுகையில், 2015 ஆம் ஆண்டில் இலங்கையானது 13 மில்லியனுக்கும் அதிகமான புதிய விதைகளை ஏற்றுமதி செய்துள்ளது.

பல்வேறு பரிசோதனைகளின் வாயிலாக தேங்காய் எண்ணெய்யில் உள்ள கொலஸ்திரோல் உள்ளடக்கமானது மனித சுகாதாரத்திற்கு உகந்தது என வெளிப்படுத்தப்பட்டதனாலும், தேங்காய் எண்ணெய் மனித சுகாதாரத்திற்கு நல்லதல்ல எனும் பார்வைகளும், நம்பிக்கைகளும் தற்போது தவறு என நிரூபிக்கப்பட்டதனாலும், தேங்காய் எண்ணெய்யின் மிகத் தூய்மையான வடிவமான வேர்ஜின் தேங்காய் எண்ணெய்க்கான தேவை துரிதமாக அதிகரித்துள்ளது.

இலங்கை தேசிய வர்த்தகப் பேரவையினால் 2015 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட தேசிய வணிகத்துறை உயர் விருதுகள் விழாவில் விவசாயம் மற்றும் பெருந்தோட்டத் துறையில் வெள்ளி விருது பெற்றமையானது, எமது விருதுகள் மற்றும் கௌரவங்களுக்கான பட்டியலில் ஒரு புதிய சேர்க்கையாக அமைந்துள்ளது.

இக்கௌரவங்களின் துணையுடன், நாம் எமது பெருந்தோட்ட நிறுவனத்தை, பிராந்திய மற்றும் சர்வதேச அளவில் ஒரு முன்மாதிரியான பெருந்தோட்ட நிறுவனம் என்னும் நிலைக்கு மாற்றுவதற்காக முனைந்து வருகின்றோம். நாம் எமக்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கும் வளங்களின் உதவியுடன், தொடர்ச்சியான விரிவாக்கத்திற்கும், முன்னேற்றத்திற்கும் முயல்கின்ற அதேவேளை, அரச மற்றும் பிற ஆளும் பகுதிகளில் இருந்து எமக்குக் கிடைக்கும் ஊக்குவிப்பை அடுத்து நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இச்சந்தர்ப்பத்தில் நான் அரசாங்க தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் மாண்புமிகு கபீர் ஹஷீம், அரசாங்க தொழில்முயற்சி அபிவிருத்தி பிரதியமைச்சர் அரசாங்க தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் இரான் விக்கிரமரத்ன, அரசாங்க தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திரு. ரவீந்திர ஹேவாவிதாரண மற்றும் தமது முழு ஆதவினையும், அயராத சேவைகளையும் வழங்கிய அனைத்து அதிகாரிகளுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன், அனைத்து சபை விவகாரங்களிலும் ஆர்வத்துடன் பங்கேற்று, பெருமளவிலான ஆதரவையும் எந்த நேரத்திலும் எனக்கு வழங்கிய எனது பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கும் நான் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். முகாமைத்துவக் குழு மற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் இவ்வருடத்தில் அவர்களது அர்ப்பணிப்புக்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்ற அதேவேளை, எதிர்வரும் வருடங்களிலும் அதனை நான் எதிர்பார்க்கின்றேன்.

நிறைவாக, எமது அனைத்துப் பங்காளர்களுக்கும், அவர்கள் எமது நிறுவனத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு நன்றிகூற விரும்புகிறேன். எதிர்வரும் வருடங்களிலும் உங்களது தொடர்ச்சியான ஆதரவுகளை எதிர்பார்த்திருக்கின்றேன்.



**ஏ.எம்.பியசோம உபாலி**
தலைவர்



# பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

**“**நீண்டகால அடிப்படையில், நிலைபேறான அபிவிருத்தி நடவடிக்கைகளை, எமது பெருந்தோட்டங்களில் மேற்கொள்வது என்ற எமது கொள்கைக்கமைய அபிவிருத்தி மற்றும் பன்முகப்படுத்தல் முயற்சிகளை தொடர்ந்து மேற்கொள்வோம்**”**.

# பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு தொடர்ச்சி...

எமது அனைத்துப் பங்குதாரர்களையும் நான் பெரும் உற்சாகத்துடன் வரவேற்பதோடு, குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் 2015 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டிற்குரிய வருடாந்த அறிக்கையையும், நிதியியல் கூற்றுக்களையும் உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமையடைகின்றேன். எமது நிறுவனம் முன்னெடுத்த செயற்பாடுகளில் நீங்கள் வைத்துள்ள நம்பிக்கைக்கும், கௌரவத்திற்கும் நாம் நன்றியாக உள்ளதோடு, பெரும் களிப்பும் அடைகின்றோம். மீளாய்வுக்கு உட்பட்ட வருடமானது, நிறுவனத்தின் அடித்தளத்தை வேறுபட்ட வெளிக் காரணிகள் பாதிக்கின்றமையினால் குறிப்பிட்டுக் கூறும் வகையில் சவால்கள் மிக்கனவாகவே காணப்பட்டன. முக்கிய ஏற்றுமதிச் சந்தைகளில் ஏற்பட்ட அழுத்தங்கள், தேவைகளை நலிவடையச் செய்தமை, பாதகமான காலநிலைகள் மற்றும் இறப்பர் விலைகளில் ஏற்பட்ட பாரிய சரிவு ஆகியன எமது நிறுவனத்தின் மீது எதிர்மறையான தாக்கத்தைச் செலுத்திய வெளிக் காரணிகளில் சிலவாகும். எவ்வாறிருப்பினும், சரியான நேரத்தில் கவனிப்பு மற்றும் வளங்களின் மீதான பயனுள்ள மேலாண்மை ஆகியவற்றின் மூலம் நிறுவனமானது, அனைத்துக் கஷ்டங்களையும் பெருமளவில் சமாளிக்கக்கூடியதாக இருந்தது. அவ்வருடத்தில் குருநாகல் பிளான்டேஷன்ஸ் லிமிட்டெட் நிறுவனமானது, 492 மில்லியன் ரூபாவை வருமானமாகவும், வரிக்குப் பின்னரான 156 மில்லியன் ரூபாவை இலாபமாகவும் ஈட்டியது. பயனுள்ள செலவு மற்றும் நிதியியல் முகாமைத்துவம் ஆகியன, பெருந்தோட்டத் தொழிற்துறைக்கு பாரியளவில் சவாலாக விளங்கக்கூடிய மற்றுமொரு ஆண்டிலும் இவ் நிறுவனமானது நிலைத்து நிற்கக்கூடியவாறு ஆக்கியுள்ளது.

## தொழிற்துறை மீளாய்வு

### தெங்குத் துறை

இவ்வருடத்தில் தேங்காய்களுக்கான விலைகள் அதிகரித்துக் காணப்பட்டமையானது, தேங்காய் கிறீம், தேங்காய்ப் பால் மா மற்றும் திரவத் தேங்காய்ப் பால் ஆகியவற்றின் உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து கேள்வி அதிகரிப்பினைப் பிரதிபலிக்கின்றது. தேங்காயினது சராசரி ஏற்றுமதி விலையானது, கடந்த வருடத்தில் பதிவாகிய ரூபா 39.08 இலிருந்து 54.54 ஆக உயர்ந்துள்ளது. தேங்காய் ஒன்றின் சராசரி சில்லறை விலையும் 2014 ஆம் ஆண்டில் பதிவாகிய ரூபா 45.50 என்பதிலிருந்து தேங்காய் ஒன்றிற்கு ரூபா 50.00 ஆக உயர்ந்துள்ளது.

எமது நிறுவனம் மீளாய்வுக்கு உட்பட்ட நிதியாண்டில் 14.1 மில்லியன் தேங்காய்களை இதற்கு முன்னைய ஆண்டில் பெற்றுக்கொண்ட 16.7 மில்லியன் தேங்காய்களுக்கு எதிராக அறுவடை செய்துள்ளது. இது 16% ஆல் ஏற்பட்ட வீழ்ச்சியைக் காட்டுகிறது. இவ்வீழ்ச்சியானது. பிரதானமாக 2014 இல் காணப்பட்ட பாதகமான காலநிலைகளால் ஆகும். இக்காலநிலை மாற்றமானது, உலர் விவசாயக் காலநிலை வலயத்தினுள் காணப்படும் KPL பெருந்தோட்டங்களில் மிகத் தீவிரமான பாதிப்பை ஏற்படுத்தியது. எவ்வாறாயினும், பாதகமான வறட்சியின் விளைவானது, பொருத்தமான விவசாய நடவடிக்கைகளினால் மட்டுப்படுத்தப்பட்டது. KPL பின்பற்றும் சிறந்த விவசாய மற்றும் காணி முகாமைத்துவ முறைகள், கடந்த வருடங்களில் பெருமளவில் நன்மைகளைப் பெற்றுக் கொண்டமையைக் காட்டியிருக்கின்றன. சர்வதேச அளவில் சேதன உற்பத்திப் பொருட்களுக்கு ஏற்பட்ட கேள்வி அதிகரிப்பைத் தொடர்ந்து KPL இலுள்ள நாம், சேதன உரத்தினைப் பயன்படுத்துவதன் மூலம், 2,000 ஏக்கர்கள் நிலத்தை சேதனத்திற்கு மாற்றுவதுடன், சர்வதேச ஆடுகளத்திற்குள் நுழைவதற்கும் ஒரு வழியை உருவாக்க ஆரம்பித்துள்ளோம்.

கீழ் நடுகை 22% சதவீதத்தினால் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டியுள்ளமை, இடை நிரப்புதல் விதிவிலக்கான வகையில் நேர்விளைவுகளைக் காட்டியுள்ளமை மற்றும் மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியில் மரங்களின் எண்ணிக்கையானது, ஏக்கருக்கு 58 மரங்கள் என்ற நிலையில் அதிகரித்தமையானது, எதிர்வரும் வருடங்களில் மிகவும் வலுவான ஒரு விளைச்சலைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை உறுதிப்படுத்துகின்றன. கடந்த வருடத்தில் விஞ்ஞான ரீதியான அறுவடையைச் செயற்படுத்தியமையானது, 2015 ஆம் ஆண்டு மிகவும் செழிப்பானதாக அமைந்ததை நிரூபிக்கின்றது. உயர்தர உற்பத்தி மற்றும் சிறந்த வாடிக்கையாளர் சேவை என்பனவற்றின் காரணமாக, தொழிற்துறையில் உயர் தர தேங்காய்களை வழங்குபவர்களாக இருந்து, புதிய தேங்காய்களுக்கான பொது ஏலத்தின் சராசரியில் எமது நிலையை மேலிடத்திற்குத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

### இறப்பர் துறை மற்றும் பிற பயிர்கள்

சர்வதேச அளவில் இயற்கையான இறப்பருக்குக் குறைவான கேள்வி மற்றும் பாதகமான காலநிலை என்பனவற்றினால் இலங்கையின் இறப்பர் உற்பத்தியானது, தொடர்ச்சியாக நான்காவது வருடமாகவும் சரிவைச் சந்தித்துள்ளது. தேசிய உற்பத்தியானது, 10.1% இனால் குறைவடைந்தது. இறப்பரைப் பொறுத்த வரையில், அது ஒரு கடினமான ஆண்டாக அமைந்திருந்தது. KPL இல் இறப்பர் உற்பத்தி 11% இனாலும், NSA இல் 14% இனால் குறைவடைந்ததுடன் மட்டுமல்லாது, 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், அது மொத்தம் 09 மில்லியன் ரூபாய்கள் ஆகும். இறப்பர் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு, பாதகமான காலநிலை மற்றும் திறமையான இறப்பர் பால் சேகரிப்பவர்களுக்கான பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு காரணிகள் காரணமாயின. இப் பற்றாக்குறையானது, தொடங்கஸ்லந்த பெருந்தோட்டத்தில் மாத்திரமே நிரந்தரமாக வசிக்கும் வேலையாட்கள் இருந்தமையினாலும், மற்றைய இரு தோட்டங்களும் நாளாந்த வேலையாட்களை நம்பியிருப்பதும், அவ் வேலையாட்கள் தோட்டத்துறையை விட ஏனைய மாற்று வேலைகள் பண அளவில் இலாபகரமாக இருப்பதனால் அவற்றினைச் செய்ய விரும்புவதாலும் ஏற்பட்டதாகும்.

மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையில் காணப்படும் முக்கியமான பயிர்களில் பெருமளவில் தங்கியிருப்பதனால் ஏற்படும் ஆபத்தைக் குறைக்கவும், ஒருசில அலகிற்கான வருமானத்தை அதிகரிப்பதற்குமென ஊடுபயிர்ச் செய்கையானது, 2007 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ் ஊடுபயிர்ச் செய்கையானது, தற்போது 1,435 ஏக்கர்களைக் கொண்டுள்ளதுடன், தனது தொகுப்பில் கறுவா பன்முகப்படுத்தலையும் கொண்டுள்ளது. ஊடுபயிர்களில் இருந்து கிடைக்கப்பெற்ற வருமானமானது, 2014 ஆம் ஆண்டிலிருந்த 22.9 மில்லியன் ரூபாய்களில் இருந்து 2015 ஆம் ஆண்டில் 19.4 மில்லியன் ரூபாய்களுக்கு வந்து 3.5 மில்லியன் ரூபாய்கள் வீழ்ச்சியைக் காட்டியது. விவசாயத் திணைக்களம் மற்றும் ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் ஆகியவற்றுடன் ஏற்படுத்திக்கொண்ட கூட்டுமுயற்சிகளின் ஊடாக இந்நிறுவனமானது, 2015 ஆம் ஆண்டில் தனது ஊடுபயிர்களை 9,600 கறுவாப் பயிர்கள், 4,540 பாக்கு மரங்கள், 3,789 பலா மரங்கள் மற்றும் 1,028 ரம்புட்டான் மரங்கள் என விஸ்தரித்துக் கொண்டது. மேலும், இந்நிறுவனமானது, பாரம்பரியமற்ற பயிர்களினது தற்போதைய மற்றும் எதிர்காலக் கேள்விகளை அடையாளம் கண்டதன் மூலம், தனது கவனத்தினை அப் பயிர்களை உருவாக்குவதிலும் செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இத் தொலைநோக்குப் பார்வையும், ஊடுபயிர்கள் மூலம் உற்பத்தித் திறன் கூடுதலும் இந்நிறுவனத்திற்கு பல்வேறு நன்மைகளை அள்ளித் தரும் என்பதில் சந்தேகம் இல்லை.

### தேசிய அங்கீகாரம்

KPL ஆனது, அரச முகாமைத்துவத்தின் கீழ் கொண்டுவரப்பட்டிருப்பதில் இருந்து ஒரே பகுதியிலுள்ள பிற தனியாருக்கு உரிமையான பெருந்தோட்டங்களுடன் ஒப்பிடுகையில், விதிவிலக்கான முறையில் நன்றாகச் செயற்பட்டுள்ளது. பெருந்தோட்டத் துறையின் வெற்றியில் KPL ஆனது, தரமட்டமாகக்

காணப்படுவதுடன், தான் பெற்றுக்கொண்ட கௌரவங்களில் தன்னிறைவு கொள்ளாமல், தனது வர்த்தகம், வேலையாட்கள் மற்றும் அனைத்துப் பங்குதாரர்களுக்கும் கௌரவத்தை அதிகரித்துக்கொள்வதற்கு தொடர்ச்சியாக முயன்று வருகின்றது. தொடர்ச்சியாக தேசிய விருதுகளைப் பெற்றுக்கொண்டது என்பது இந்நிறுவனத்தின் பலத்தையும், அர்ப்பணிப்பையும் காட்டுகின்றது.

மனித மூலதனமே மிகப்பெரிய சொத்து என நாம் கருதுவதனால், தொடர்ச்சியாக எமது மக்களிலேயே முதலீடு செய்து வருகின்றோம். எமது கவனமானது, மனித சக்தியைத் தக்க வைத்துக் கொள்ளல் மற்றும் உற்பத்தித் திறனை அதிகரித்தல் என்பதன் வாயிலாக, எமது வேலையாட்களின் திறன் மட்டங்களை விரிவாக்குதலையும், முக்கியமாக பெருந்தோட்டத் தொழிலாளர் சமூகங்கள் உட்பட ஒவ்வொரு மட்டங்களிலுமுள்ள அனைத்துத் தொழிலாளர்களும் திருப்தியாக உள்ளார்கள் என்பதனையும் நாம் தொடர்ச்சியாக உறுதிப்படுத்தி வருகின்றோம். மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் எமது மக்கள் மீது நாம் கொண்டிருந்த இப் பொறுப்பினை வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள் அலுவலக மற்றும் பெருந்தோட்ட மட்டங்களில் மேற்கொள்ளப்பட்டன. சில குறிப்பிடத்தக்க நிகழ்ச்சித் திட்டங்களாக பெருந்தோட்ட அளவில் வதிவிட வசதிகளை மேம்படுத்தல், பணியாளர் வீடுகளை மேம்படுத்தல், நீர் மற்றும் சுகாதார வசதிகளை அதிகரித்தல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். தொழிற்துறை நிபுணர்களுடன் இணைந்து பல கல்வி புகட்டும் பட்டறைகள், பயிர்களைப் பாதுகாக்கும் முறைகளை மேம்படுத்தும் நோக்கில் நடத்தப்பட்டதுடன், அவை தற்போது பயிர்களை முன்னேற்றும் முறைகளில் பயன்படுத்தப்பட்டும் வருகின்றன.

அனைத்து மட்டங்களிலுமுள்ள எமது தொழிலாளர்களுடன் நாம் மிகவும் சுமுகமான உறவினைப் பேணி வருவதுடன், அவர்களுடன் தொடர்ச்சியாக கலந்துரையாடல்களை மேற்கொள்வது மற்றும் அவர்களின் குறைகளை நியாயமான, சமத்துவமான வழிகளிலும் அணுகுகி வருகின்றோம். அவர்களது செயற்பாடுகள் வருடாந்தம் இடம்பெறும் ஊக்குவிப்புத் திட்டத்தில் பொருத்தமானவாறு ஏற்றுக்கொள்ளப்பட்டு வெகுமதிகளும் வழங்கப்படுகின்றன. இந்நிறுவனமானது, சூழல் உணர்வு மிக்கதாகவும், சபை ரீதியில் சிறந்த பழக்க வழக்கங்களைப் பின்பற்றுவதாகவும் உள்ளது. நீடித்து நிற்கக்கூடிய நிகழ்ச்சித் திட்டங்களான மரநடுகை, காடுகளைப் பாதுகாத்தல், நீர் உள்ள பகுதிகள் மற்றும் ஓடை நீர் நிலைகளைப் பராமரித்தல் போன்றவற்றையும் வருடம் தோறும் நாம் மேற்கொண்டு வருகின்றோம்.

### எதிர்காலக் கண்ணோட்டமும் பன்முகப்படுத்தலும்

முன்னோக்கிப் பார்க்கையில், இலங்கையின் பொருளாதாரமானது, 2016 ஆம் ஆண்டில், மதிப்பீட்டளவில் GDP வளர்ச்சியானது 5.8% இனுடன் கூடிய குறைந்த காலத்தில் நீடித்து நிற்கக்கூடிய வளர்ச்சியை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது ஏறத்தாழ 7% இனைக்கொண்ட ஒரு நடுத்தரக் கால வளர்ச்சி வீதத்தினை இலக்கு வைக்கின்றது. முதலீட்டாளர்களுக்கு சிநேகபூர்வமான சூழலை உருவாக்கி, பொருளாதாரத்தின் அனைத்து முக்கிய துறைகளிலும் தனியார் துறைகளினது பங்கெடுப்பினைக் அதிகரிப்பதன் மூலம் இவ்வளர்ச்சியைச் சாத்தியமாக்க முடியும். அரசாங்கமானது, நடுத்தர ஒற்றை இலக்க பணவீக்கத்தினையும் (3% தொடக்கம் 5%) மிதமான அளவுள்ள வட்டி வீதத்தினையும் நடுத்தர அளவிலான காலத்தில் இலக்கு வைக்கின்றது. இலாபமீட்டும் தன்மையை விரிவாக்கும் நோக்கில், பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகள், பன்முகப்படுத்தல் மற்றும் ஊடுபயிர்களின் வளர்ச்சி என்பன வலியுறுத்தப்பட்டதனால், எதிர்காலமானது நெகிழ்திறன் உடையதாகக் காணப்படுகின்றது. பயிர்ச் செய்கையுடன் இணைந்து காணப்படும் பாதகமான காரணிகளை மட்டுப்படுத்தும் நோக்கில், எமது செயற்பாடுகளைப் பன்முகப்படுத்தும் முகமாக நாம் பல வகையான திட்டங்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

உலர்த்திய தேங்காயினை உற்பத்தி செய்தல், வேர்ஜின் தேங்காய் எண்ணெய் மற்றும் நார் உற்பத்திகள் போன்ற தேங்காயிற்குப் பெறுமதி சேர்க்கும் சில பொதுத் தனியார் கூட்டுத் திட்டங்களையும் நாம் அடையாளம் கண்டுள்ளோம். அடையாளம் கண்டு கொள்ளப்பட்ட பிற சாத்தியமான திட்டங்கள் ஆரம்ப நிலைகளிலும் காணப்படுகின்றன. சூரிய, காற்று / நீர் மின்சக்தி, இயற்கைச் சுற்றுலா, காபன் வர்த்தகம், பழங்கள் மற்றும் வாசனைத் திரவியங்களைப் பயிரிடுதல் மற்றும் பதப்படுத்துதல் தொடர்பான கூட்டுமுயற்சித் திட்டங்கள் மற்றும் கால்நடை வளர்ப்பு உட்பட்ட பெயர் குறிப்பிடக்கூடிய சிலவாகும்.

### சிறப்புச் சாதனைகள்

2015 ஆம் ஆண்டில் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தென்னை, இறப்பர் மற்றும் வர்த்தகப் பயிர்கள் சார்ந்த பெருந்தோட்ட முகாமைத்துவம் மற்றும் விவசாய வர்த்தகத் துறையில் SLS ISO 9001:2008 தரச் சான்றிதழை இந்நிறுவனம் பெற்றுக் கொண்டுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

### பாராட்டுதல்கள்

அரசாங்க தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் மாண்புமிகு கபீர் ஹஷீம், அரசாங்க தொழில்முயற்சி அபிவிருத்தி பிரதியமைச்சர் மாண்புமிகு இரான் விக்கிரமரத்ன, அரசாங்க தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திரு. ரவீந்திர ஹேவாவிதாரண மற்றும் செயலாளர்கள், அமைச்சின் அதிகாரிகள் அனைவருக்கும் அவர்களின் வழிகாட்டுதல்கள் மற்றும் ஊக்குவிப்பிற்காக நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அயராது எமக்கு வழிகாட்டிய எனது தலைவர் திரு. பியசோம உபாலி அவர்களுக்கும், பெறுமதியுடைய உள்ளீடுகளை அளித்த சபை அங்கத்தவர்கள் மற்றும் அவர்களின் ஊக்குவிப்பு, ஆதரவு என்பனவற்றுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கோப்பரேட் அட்வைசறி சேர்விசஸ் (பிரைவேட்) லிமிட்டெட், KPL இனது செயலாளர்கள் மற்றும் இவ்வருடத்தில் பங்களிப்புச் செய்த அனைத்துப் பங்குதாரர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பயனுள்ள மற்றும் திறமையான மூத்த முகாமைத்துவ அணி, பகுதி மேலதிகாரிகள் மற்றும் சகல ஊழியர்களுக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளதுடன், அவர்களின் பொறுப்பு, அர்ப்பணிப்பு மற்றும் விசுவாசத்தினாலேயே குருநாகல் பிளான்டேஷன்ஸ் லிமிட்டெட் ஆனது குறிப்பிடத்தக்க வெற்றிகளை அடைந்தது எனக் கூறிக்கொள்ளவும் விரும்புகின்றேன்.

எமது பெருந்தோட்டங்களின் நீடுறுதியான அபிவிருத்தி எனும் நீண்டகால உத்தியுடன் சேர்ந்த வகையில் எமது நிகழ்ச்சித் திட்டங்களை விருத்தியாக்குவதுடன், பன்முகப்படுத்தலிலும் தொடர்ந்தும் ஈடுபடவிருக்கின்றோம். மூலோபாய நிலையில், எமது நீண்டகால வழியாக தொடர்ச்சியான அபிவிருத்தியும், எமது அடிப்படைப் பெருந்தோட்ட வர்த்தகத்தை ஒருங்கிணைத்தலுமாக உள்ள அதேவேளையில், பலதரப்பட்ட பயிர்கள் ஊடாக பெறுமதி சேர்க்கும் புதிய முயற்சிகளின் மூலம் பன்முகப்படுத்தலுடனான வளர்ச்சியையும் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன், இவை இந்நிறுவனத்தை முதலான உற்பத்தியாளர் எனும் நிலையில் இருந்து, பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தியாளர் நிறுவனமாக உருமாற்றம் செய்ய உதவும் என்பதுடன், நீண்டகால நீடுறுதித் தன்மையையும் இது உறுதி செய்யக்கூடியதாக இருக்கும்.



**எஸ்.எம்.எம்.சமரக்கோன்**
பிரதம நிறைவேற்று அதிகாரி

# சபையின் பணிப்பாளர்கள்



**ஏ.எம்.பியசோம உபாலி**
தலைவர்



**டீ.எம்.பண்டாரநாயக்க**
செயலாற்றுப் பணிப்பாளர்



**எச்.என்.எஸ்.சமன் குமார**
பணிப்பாளர் /
திறைசேரிப் பிரதிநிதி



**டப்ளியூ.எம்.டீ.பி.அபேரத்ன**
பணிப்பாளர்



**எச்.ஏ.பீ. துஷித குமார டயஸ்**
நிறைவேற்றுப் பணிப்பாளர்



**ஆர்.சிட்னி குலதிலக**
பணிப்பாளர்



**இந்துனில் அமரசிங்க**
பணிப்பாளர்

# பணிப்பாளர்கள் தொடர்ச்சி...

### திரு.ஏ.எம்.பியசோம உபாலி
தலைவர்

திரு. பியசோம உபாலி, குருநாகல் பிளாண்டேஷன்ஸ் லிமிட்டெட் (KPL) இனது தலைவர் பதவியில் தை மாதம், 2015 ஆம் ஆண்டில் இணைந்து கொண்டார். இவர் தன்னுடன் கூடவே கொண்டு வந்த மிகப்பரந்த அறிவும், வெளிப்பாடும், இந்நிறுவனமானது இன்று உள்ள நிலையை எட்டுவதற்கு மிகவும் செயல்திறன்மிக்க வகையில் பங்காற்றுகின்றது. இவர் மூன்று தசாப்த காலமாக அரசியல் நிர்வாகத் துறையில் ஒப்பற்ற பணியினை ஆற்றிக் கொண்டிருந்த வேளையில், வரலாற்றில் குளியாப்பிட்டிய பிரதேச சபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தனிநபராகவும், வயம்பவின் முதலாவது மாகாண சபையின் வடமேல் மாகாண சபையின் துணைத் தலைவராக 1988 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் நபராகவும் விளங்குகின்றார்.

இவர் தனது அரசியல் பணியினை ஆரம்பிக்கும் முன்னரே, 1980 ஆம் ஆண்டில் குருநாகல் மாவட்டத்தின் முதல் அபிவிருத்திச் சபையின் அங்கத்தவராகவும், குளியாப்பிட்டிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும், தேசிய கூட்டுறவுச் சபையின் பணிப்பாளராகவும் பதவிகளை வகித்து, பொதுமக்களிற்குத் தனது சேவைகளை ஆற்றியுள்ளார். அதிலிருந்து திரு. உபாலி அவர்கள், பாராளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில், குளியாப்பிட்டிய வாக்காளர் தொகுதியை 1988 ஆம் ஆண்டில் பிரதிநிதித்துவப்படுத்தியும், 1989 தொடக்கம் 2004 ஆம் ஆண்டு வரையிலும் தொடர்ந்து 16 வருடங்கள், பாராளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் குருநாகல் மாவட்டத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தியும் இருந்தார்.

இவர் 2002 தொடக்கம் 2004 ஆம் ஆண்டு வரையிலும் அரச போக்குவரத்து அமைச்சராக நியமிக்கப்பட்டார். இலங்கை பாராளுமன்றத்தில் இவரது நீண்ட பதவிக் காலத்தின் போது, எண்ணற்ற பதவிகளையும், அவற்றில் சிலவற்றில் துணை அரசாங்க முதல்வராகவும், உதவி அரசாங்க முதல்வராகவும் பணியாற்றியுள்ளார். ஜப்பானில் இடம்பெற்ற விவசாய மற்றும் கூட்டுறவுகள் தொடர்பான நிகழ்ச்சி, ரஷ்யாவில் இடம்பெற்ற இளைஞர் விவகார நிகழ்ச்சி, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளில் இடம்பெற்ற அதிகாரப் பகிர்வு தொடர்பான நிகழ்ச்சி உள்ளடங்கலாக பல்வேறு வெளிநாட்டு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டுள்ளார். மேற்கூறப்பட்டவற்றுக்கு மேலாக, தனது மாவட்டமான குருநாகலில் மிகவும் கவனத்தைச் செலுத்திய வண்ணம் தேசிய அளவிலான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களிலும், செயல்திறன் மிக்க வகையில் தொடர்புபட்டிருக்கின்றார். திரு. உபாலி அவர்களது சர்வதேச மற்றும் உள்நாட்டின் வாயிலாகப் பல வருடங்களாகக் கிடைத்த வெளிப்பாடும், அனுபவமும், குருநாகல் பிளான்டேஷன்ஸ் லிமிட்டெட்டினது நேர்நிலையான அபிவிருத்தி மற்றும் முன்னேற்றத்தினை நோக்கியதான ஒரு சொத்தாக அமையும் எனப்தில் சந்தேகம் இல்லை.

### திரு. எச்.ஏ.பி.துஷித குமார டயஸ்
நிறைவேற்றுப் பணிப்பாளர்

குருநாகலில் மிக ஆழமாக வேரூன்றிய வர்த்தகக் குடும்பத்தில் இருந்து வந்தவர் என்ற அடிப்படையில் திரு. டயஸ் அவர்கள், தனது வாழ்க்கையின் ஆரம்ப காலகட்டத்திலேயே அவர்களது குடும்ப வியாபாரத்தில் தொடர்புபட்டிருக்கின்றார். இவர், தனது கல்வியினை குருநாகல் மலியதேவ கல்லூரியில் பெற்றுக்கொண்டதன் பின்னர், வர்த்தகத்தை விருத்தியடையச் செய்யும் நோக்கில், ஜப்பானில் இருந்து இலங்கைக்கு இரண்டு சக்கர டிரக்டர் வண்டிகளை இறக்குமதி செய்யும் அவர்களது வியாபாரத்தில் இணைந்து கொண்டார். அக்காலத்தில் நாட்டிற்கு 'குபோட்டா' கையால் இயக்கும் டிரக்டர்களை இறக்குமதி செய்த முன்னோடிகளில் ஒன்றாக டயஸ் மோட்டர் இன்ஜினியர்ஸ் மற்றும் சேல்ஸ் விளங்கியது. ஜப்பானிற்கும் இலங்கைக்கும் இடையிலான பயணங்களை அதிகளவு மேற்கொண்டிருந்த வேளையில் இந்த வியாபாரத்தை மேலும் விருத்தி செய்துகொள்ளும் வகையில், பார இயந்திரங்கள், விவசாய உபகரணங்கள் மற்றும் டிரக்டர்கள் போன்ற மேலும் பல இறக்குமதிகளிலும் இவர் துணிந்து இறங்கினார்.

பின்னாளில் இவ்வியாபாரமானது, LST வர்த்தகத்தின் கீழ் சொத்து விரிவாக்கம், கட்டுமானம், வாடகைக்கு விடுதல் மற்றும் பிற வியாபாரங்களுக்காக வணிகக் கட்டடங்களைப் பராமரித்தல் எனப் பல்வகைப்பட்டது. மேலும், இவர் தென்னை. இறப்பர் பயிர்ச் செய்கைகள் மற்றும் தோட்ட மேலாண்மைகளிலும் ஈடுபட்டுள்ளார். திரு. துசித அவர்கள், அப்பகுதியில் உள்ள கீழ் மட்ட சமூகத்தினரை முன்னேற்றுவதில் கவனம் செலுத்தியதுடன். நன்கு அறியப்பட்ட ஒரு கொடை வள்ளலும் ஆவார்.

### திரு. டி.எம்.பண்டாரநாயக்க
செயற்பாட்டுப் பணிப்பாளர்

மார்ச் மாதம் 2015 ஆம் ஆண்டில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் KPL இனது செயற்பாட்டுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட திரு. பண்டாரநாயக்க அவர்கள், மாகோ விஜயபாகு தேசியக் கல்லூரியின் ஒரு உற்பத்தியாகக் காணப்படுவதுடன், விவசாயம், பண்ணைத் தொழில் மற்றும் தனியார் போக்குவரத்துத் துறைகளில் பல வருடகால அனுபவம் வாய்ந்தவராகக் காணப்படுகின்றார். இவர் அரசியல் மற்றும் தனியார் துறைகளில் உள்ள மக்களுடனும், பொதுத் துறையிலுள்ள ஊழியர்களுடனும் இணைந்து பணியாற்றுவதன் மூலம் அனுபவம் என்னும் செல்வத்தினை உள்ளே கொண்டு வருகின்றார். இவர் 1989 இலிருந்து 2004 ஆம் ஆண்டு வரை பாராளுமன்ற உறுப்பிராக இருந்து, குருநாகல் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியதுடன், கமத்தொழில் அமைச்சின் கீழ் முன்னாள் நெல் அபிவிருத்தி அமைச்சராகவும் கடமையாற்றியுள்ளார்.

திரு. பண்டாரநாயக்க அவர்கள், 1985 இலிருந்து 1986 ஆம் ஆண்டு வரை கல்கமுவ தனியார் பேரூந்து இயக்குபவர்கள் சங்கத்தின் பொருளாளராகவும், விலாவ பிரதேச செயலகத்தின் செயலணியின் தலைவராகவும் தீவிர உறுப்பினராக இருந்த அதேவேளை, 1985 இலிருந்து 1989 ஆம் ஆண்டு வரை விலாவ கிராமோதய அபிவிருத்திச் சபையின் தலைவராகவும் சேவையாற்றினார். 1985 இலிருந்து 1989 ஆம் ஆண்டு வரை யாப்பகூவ பால் பண்ணையாளர்கள் சங்கத்தின் தலைவராகவும், யாப்பகூவ கோவில் அணிவகுப்பு ஒழுங்கமைப்புக் குழுவின் தலைவராக 1989 இலிருந்து 2003 ஆம் ஆண்டு வரை கடமையாற்றிய வேளையிலும், இவர் யாப்பகூவ பிரதேசத்தின் கோயில்கள் மற்றும் கல்வி நிறுவனங்களின் முன்னேற்றத்திற்குப் பெரும் பங்காற்றினார்.

### திரு. எச்.ஏ.என்.சமன் குமார
பணிப்பாளர் / திறைசேரியின் பிரதிநிதி

மார்ச் மாதம் 2015 ஆம் ஆண்டிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் KPL இனது பணிப்பாளர் / திறைசேரிப் பிரதிநிதி பதவிக்கும், ஏப்ரல் மாதம் 2015 ஆம் ஆண்டிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் குருநாகல் பிளாண்டேஷன்ஸ் லிமிட்டெட்டினது கணக்காய்வுக் குழுவினது தலைவர் பதவிக்கும் நியமிக்கப்பட்ட திரு. குமார அவர்கள், இலங்கையிலுள்ள பொதுத் துறை நிறுவனங்களில் மூத்த முகாமைத்துவக் குழுவின் அங்கத்தவராகவோ அல்லது சபையின் பணிப்பாளராகவோ கடமையாற்றியதன் மூலம் பெற்றுக் கொண்ட பல வருடகால அனுபவம் வாய்ந்தவர் ஆவார். இவர் வளிமண்டலவியல் திணைக்களத்தில் உதவிப் பணிப்பாளர் (நிதி) பதவியில் மே மாதம் 2002 தொடக்கம் ஆகஸ்ட் 2005 ஆம் ஆண்டு வரையிலும், ஆகஸ்ட் மாதம் 2005 இலிருந்து டிசம்பர் 2010 ஆம் ஆண்டு வரை பொதுத் தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளராகவும், டிசம்பர் 2010 இலிருந்து ஜுலை 2013 ஆம் ஆண்டு வரை அரச கணக்குள் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராகவும், ஜுலை 2013 இலிருந்து செப்டம்பர் 2013 ஆம் ஆண்டு வரையிலும் பொதுத் தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளதுடன், செப்டம்பர் 2013 ஆம் ஆண்டில் இருந்து பொதுத் தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் சேவையாற்றுகின்றார்.

திரு. குமார அவர்களது முன்னைய சபைப் பதவிகளானவை, 2006 இலிருந்து 2010 வரையில் காணிகள் சீர்திருத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் பதவி, 2008 இலிருந்து 2011 வரையில் கல்-ஓயா பிளான்டேஷன்ஸ் பிரைவேட் லிமிட்டெட் இனது பணிப்பாளர் பதவி, 2009 இலிருந்து 2011 வரை கல்-ஓயா ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிட்டெட் இனது பணிப்பாளர் பதவி, 2010 இலிருந்து 2011 வரையில் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் பதவி, 2013 இலிருந்து 2015 வரையில் பரந்தன் கெமிக்கல்ஸ் பிரைவேட் லிமிட்டெட் இனது பணிப்பாளர் பதவி என்பனவற்றை உள்ளடக்குவதோடு, மேற்குறிப்பிட்ட அனைத்து நிறுவனங்களிலும் கணக்காய்வுக் குழுப் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

# பணிப்பாளர்கள் தொடர்ச்சி...

தற்போது இவர் வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிட்டெட்டினது பணிப்பாளராக 2015 ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து சேவையாற்றிக் கொண்டிருக்கின்றார். இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வணிகமாணி (சிறப்பு) பட்டத்தினையும் (2001), ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பிரயோக நிதியியலில் விஞ்ஞான முதுமாணிப் பட்டத்தினையும் (2009), ஜப்பான் சர்வதேச பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முதுகலைமாணிப் பட்டத்தினையும் (2013) பெற்றுள்ளார்.

## திரு. டப்ளியூ.டீ.பி.அபேரத்ன
பணிப்பாளர்

மார்ச் 2015 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் KPL இனது பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்ட திரு. அபேரத்ன அவர்கள், கணக்கியல் மற்றும் கணக்காய்வுத் துறைகளில் பல வருட கால அனுபவம் வாய்ந்தவர் ஆவர். மேலும், குருநாகல் பிளாண்டேஷன்ஸ் பிரைவேட் லிமிட்டெட்டினது கணக்காய்வுக் குழுவின் ஒரு அங்கத்தவராகவும் ஏப்ரல் மாதம் 2015 ஆம் ஆண்டிலிருந்து சேவையாற்றி வருகின்றார். இவர் தனது தொழிலை தோர்ன்டன் பண்டிதரத்ன அன்ட் கம்பனி நிறுவனத்தில் ஆரம்பித்ததுடன், பின்னாளில் மில்க் இன்டஸ்ரீஸ் லங்கா லிமிட்டெட், மாலைதீவின் ஹொலிடே ஐலன்ட் றிசோட், டி.பி.அபேரத்ன அன்ட் கம்பனி மற்றும் அரச மரக் கூட்டுத்தாபனத்திலும் சேவையாற்றினார். இவரிடம் கணக்கியலில் உயர் தேசிய டிப்ளோமா, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் மற்றும் நிதி முகாமைத்துவத்தில் பட்டப் பின்படிப்பு டிப்ளோமா மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைகள் டிப்ளோமா உள்ளிட்ட பல தொழில் தகைமைகளும் உள்ளன.

மிகவும் தகுதிவாய்ந்த கணக்கியல் மற்றும் கணக்காய்வுத் தொழில் சார்ந்தவரான திரு. அபேரத்ன அவர்கள், இலங்கைக் கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம், Association of Financial Accountants - ஐக்கிய இராச்சியம், International Association of Book Keepers - ஐக்கிய இராச்சியம், Institute of Certified Professional Manager (இலங்கைக் கிளையினை நிறுவிய அங்கத்தவர்), இலங்கை சான்றுபடுத்திய முகாமைக் கணக்கறிஞர் நிறுவகம், Association of Public Finance Accountants of Sri Lanka, கண்டி றோட்டரி ஹெரிடேஜ் - இலங்கை ஆகிய அமைப்புக்களின் அங்கத்தவரும், அகில இலங்கை சமாதான நீதவானும் ஆவார்.

## திரு. ஆர்.சிட்னி குலதிலக
பணிப்பாளர்

குருநாகலைச் சேர்ந்த திரு.குலதிலக அவர்கள், ஒக்டோபர் மாதம் 2016 ஆம் ஆண்டிலிருந்து KPL இனது பணிப்பாளராகச் சேவையாற்றி வருகின்றார். ஆரம்பக் கல்வியை மாவத்தகம, பொத்துபோவ மத்திய மகா வித்தியாலயத்தில் பெற்றுக் கொண்ட இவர், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலை இளமாணிப் பட்டத்தினைப் பெற்றுக் கொண்டார்.

திரு. குலதிலக அவர்கள் தனது தொழிலை அரசாங்கப் பாடசாலையில் புவியியல் கற்பிக்கும் ஆசிரியராக ஆரம்பித்தாலும், பின்னாளில் தன்னை வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி முழுநேர வணிகரானார். இவர் தற்பொழுது எஸ்.ஏ.கன்ஸ்ரக்ஷன் இனது முகாமைத்துவப் பணிப்பாளராகவும், மாவத்தகம Safety Fuse Industry இனது முகாமைத்துவப் பணிப்பாளராகவும், Tristar Industrial Explosives தனியார் நிறுவனத்தின் பணிப்பாளராகவும் பணியாற்றி வருகின்றார். மேலும், இவர் ஒரு அகில இலங்கை சமாதான நீதவானும், Explosive Dealers Association இனது செயலாளரும், அரசாங்க தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஒருங்கிணைப்பாளரும் ஆவார்.

## இந்துனில் அமரசிங்க
பணிப்பாளர்

தொழில் ரீதியில் பண்ணையாளரான திரு. இந்துனில் அமரசிங்க அவர்கள் பெருந்தோட்டத் துறையில் சிறப்பு வாய்ந்த தொழிலைக் கொண்டுள்ளார். இவர் இத்தொழில் துறையில் 1999 ஆம் ஆண்டில் கொட்டகல பெருந்தொட்டத்தில் இளநிலை துணை மேலதிகாரியாக சேவையாற்றியதன் மூலம் இணைந்து கொண்டார். இவர் 2003 ஆம் ஆண்டில் Finlay's தேயிலைத் தோட்டத்தில் இணைந்து கொண்டதுடன், அலுப்பொல தோட்டம், Blairlemond தோட்டம், தம்மேரியா ஏ தோட்டம், நாகவில தோட்டம் ஆகியவற்றில் மேலதிகாரியாகவும் தற்போது Finlay's இற்குக் கீழே உள்ள பசற குழுவிலுள்ள 1100 ஹெக்டயர்கள் கொண்ட பல பயிர் தம்மேரியா பீ தோட்டத்தை நிர்வகித்து வருகின்றார். இவர், தென்னை, இறப்பர், கறுவா, மிளகு மற்றும் தேயிலை சார்ந்த அனைத்து விடயங்களிலும் அனுபவம் வாய்ந்தவர். இவர் பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணிப் பட்டத்தினை வயம்ப பல்கலைக்கழகத்தில் இருந்து பெற்றுக் கொண்டார். UVA Executives Association இனது செயலாளராகவும் இவர் சேவையாற்றியுள்ளார்.

# சிரேஷ்ட முகாமைத்துவம்



பிரதம நிறைவேற்று அதிகாரி
**திரு. எஸ்.எம்.எம்.சமரக்கோன்**
B. Sc. (விவசாயம்) சிறப்பு
M.Sc. (விவசாய பொருளாதாரம்)



முகாமையாளர் - நிதி
**திரு. பீ.எம்.டீ.ஜீ.பிரேமதிலக**
B.Sc. கணக்கியல் மற்றும்
நிதி முகாமைத்துவம் சிறப்பு
CBA, MCPM



முகாமையாளர் - கணக்காய்வு
**திரு. எம்.எம்.ஜே.குரே**



முகாமையாளர் - மனிதவளம் மற்றும் நிர்வாகம்
**திரு. ஐ.ஏ.குணவர்தன**
B.B முகாமைத்துவம் (மனிதவளம்) சிறப்பு
PG Dip M (இலங்கை)



முகாமையாளர் பெருந்தோட்டக் கண்காணிப்பு
மற்றும் ஒன்றிணைப்பு
**திரு. எஸ்.எம்.ஆர்.பீ.சத்குமார**
B.Sc. (விவசாய விஞ்ஞானம்) பெருந்தோட்ட
முகாமைத்துவத்தில் விசேடத்துவம்



முகாமையாளர் - சந்தைப்படுத்தல்
**திரு. ஜே.கே.ஜே.பீ.ஜயவர்தன**
B.Sc. (விவசாயம்) M.Sc. (விவசாய
விஸ்தரிப்பு)

# சிரேஷ்ட முகாமைத்துவம் தொடர்ச்சி...



**திரு. எம்.எல்.ஏ.பீ.பெரேரா**

பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் டிப்ளோமா



**திரு. ஜீ.கே.ஏ. ஜயவர்தன**



**திரு. கே.எல்.எச்.சீ. பெரேரா**

விலங்கினப் பராமரிப்பு டிப்ளோமா



**திரு. ஏ.எம்.பீ.அபேகோன்**

B.Sc. (பெருந்தோட்ட முகாமைத்துவம்)இ
விவசாயத்துறையில் டிப்ளோமா



**திரு. கே.பீ.டி.என். களுகல்ல**

பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் டிப்ளோமா
மனிதவள முகாமைத்துவத்தில் டிப்ளோமா



**திரு. யூ.பீ.ஆர்.எம்.பத்திரண**

B.V.Sc.
பதிவுபெற்ற விலங்கின சத்திர சிகிச்சை நிபுணரும் மருத்துவரும்
(பதிவிலக்கம் 1265)



**திரு. எம்.ரீ.ஜே.பெரேரா**

B. Sc. (விவசாயம்) (விசேடம்) சிறப்பு



**திரு. ஜே.எம்.ஏ.ஏ.முனசிங்க**

NDT தொழில்நுட்பம் (விவசாயம்)
B. Sc. (பெருந்தோட்ட முகாமைத்துவம்)



# முகாமைத்துவக் கலந்துரையாடலும் பகுப்பாய்வும்


செயற்பாட்டு மீளாய்வு 30

நிதித்துறை மீளாய்வு 33

நிலைபேற்றுத்தன்மை அறிக்கை 37

இடர் முகாமைத்துவம் 40

கூட்டிணைப்பு ஆளுமை 42

கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 43

# தொழிற்பாட்டு மீளாய்வு

நிறுவனத்தின் சுமுகமான தொழிற்பாடானது, கட்டுப்படுத்த முடியாத வெளிப்புறச் சூழற் காரணிகளினால் தடுக்கப்படுகின்றது. பொருளாதார வளர்ச்சி, பரிமாற்று வீதங்கள், வேலையில்லாப் பிரச்சினை மட்டங்கள், நிதி மற்றும் கண்காணிப்புக் கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் ஆகியனவையே தாக்கத்தை ஏற்படுத்தும் முக்கியமான காரணிகளாகும். தற்போதுள்ள நிலைக்குப் பொருளாதாரத்தை இட்டுச்சென்ற காரணிகளாக, உலக கேள்விக்குரிய காரணிகள், முக்கியமான ஏற்றுமதி மையங்களிலுள்ள குறைந்த கேள்வி மற்றும் குறைந்த கேள்வியினால் ஏற்பட்ட விலைகளின் வீழ்ச்சி என்பன அமைகின்றன. அரசாங்கத்தின் தற்போதைய நடவடிக்கைகள் சாதகமான வாய்ப்புக்களை ஐரோப்பிய வலயத்தில் பெற்றுக் கொள்வதுடன், எதிர்கால பொருளாதார வளர்ச்சியையும், உருவாக்கியுள்ளது. உள்ளூர் பார்வையில் குறைந்த சந்தை விலை மற்றும் கேள்வி என்பன உற்பத்தியில் மந்த நிலையை ஏற்படுத்தியுள்ளதுடன், மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் தேசிய உற்பத்தியையும் குறைவடையும் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.

மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சியானது, கடந்த வருடத்தில் பதிவாகிய 4.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், 2015 ஆம் ஆண்டில் 4.8 சதவீதமாகப் பதிவாகியுள்ளது. அந்த வருடத்தில் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தியானது, 3,853 அமெரிக்க டொலர்களில் இருந்து 3,924 அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளதன் மூலம் 1.8 சதவீதத்தினால் குறைவான வளர்ச்சியைக் காட்டியுள்ளது. விவசாயத் துறையானது, கடந்த வருடங்களில் பெற்றுக் கொள்ளப்பட்ட 4.9 சதவீத்துடன் ஒப்பிடுகையில், இவ்வருடத்தில் 5.5 சதவீதத்தைப் பெற்று துரிதமான வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்துள்ளது. 2015 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்குப் பங்களிப்புச் செய்த 7.8 பங்கிலிருந்து 7.9 இற்கு சிறிய சதவீதத்தனால் அதிகரித்துள்ளது.

இறப்பர் உற்பத்தியானது, கடந்த வருடத்தில் பெற்றுகொள்ளப்பட்ட 98,573 மெற்றிக் தொன் உடன் ஒப்பிடுகையில், தொடர்ச்சியாக நான்காவது வருடமாகவும் 88,570 மெற்றிக் தொன்களாக 10.1 சதவீதத்தினால் குறைவடைந்து பின்னடைவான நிலையை அடைந்துள்ளது. உலகச் சந்தையில் இயற்கையான இறப்பருக்கு ஏற்பட்ட மந்தமான கேள்வி, இயற்கை இறப்பரின் விலைகளைக் குறைத்ததன் விளைவாக சிறிய இறப்பர் உற்பத்தியாளர்களின் உற்பத்தியும் குறைவடைந்தது. வருடத்தின் இரண்டாம், மூன்றாம் காலாண்டுகளில் தொடர்ந்து சாதகமற்ற காலநிலைகள் நாட்டின் தேசிய உற்பத்தியைப் பாதகமான நிலைக்கு இட்டுச் சென்றது.

தேசிய தேயிலை உற்பத்தியும், தேசிய இறப்பர் உற்பத்தியைப் போன்ற பாதகமான நிலைமையைக் காட்டியது. தேயிலை உற்பத்தியானது, கடந்த வருடத்தின் 338 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில், மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் 2.7 சதவீதத்தினால் குறைவடைந்து 329 மெற்றிக் தொன்கள் உற்பத்தியைக் காட்டின. 'மெதுவாகச் செல்லல்' (Go Slow) எனும் தொழிற்துறை செயற்திட்டமும், வருடத்தின் குறிப்பிடத்தக்களவு காலத்திற்குத் தொடர்ந்து சாதகமற்ற காலநிலைகளும் உற்பத்தியைத் தடுத்ததுடன், குறைந்த எண்ணெய் விலைகளினால் உருவாகிய சாதகமற்ற உலக நிலைப்பாடுகளும், அரசியல் நிச்சயமற்ற தன்மையும் இறப்பர் சந்தையினைக் குறைத்தன.

தேசிய தெங்கு உற்பத்தியானது, 2000 ஆம் ஆண்டில் இருந்து பார்க்கையில் இவ்வருடத்தில் உச்ச செயற்பாட்டைப் பதிவு செய்துள்ளது. இது, 6.5 சதவீதத்தினால் 2,870 மில்லியன் தேங்காய் என்பதிலிருந்து 3,056 மில்லியன் தேங்காய்கள் என்னும் எண்ணிக்கைக்கு வளர்ந்தது. இவ் அதிகரித்த உற்பத்தியின் விளைவாக, தேங்காய் சார்ந்த பொருட்களான தேங்காய் எண்ணெய், தேங்காய் கிறீம், தேங்காய்ப் பால் மா, திரவத் தேங்காய்ப்பால் என்பன விரிவாக்கம் பெற்றன. GDP இனுள் உள்ளடங்கும் தொழிற்துறையின் பங்கானது, 03 சதவீத வளர்ச்சியை அவ் வருடத்தில் காட்டியதுடன், தேசிய உற்பத்தியில் 26.2 சதவீதமும் பங்களிப்புச் செய்தது. சேவைத்துறையானது, 56.6 சதவீத GDP இணைக் காட்டியதுடன், 2014 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட 5.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், இவ் வருடத்தில் 5.3 சதவீத வளர்ச்சி வீதத்தைக் காட்டியது. பொது நிர்வாக செயற்திட்டங்கள் தவிர்ந்த மீதி அனைத்து உப துறைகளும் துரிதமான வளர்ச்சியைப் பதிவு செய்ததுடன், பொது நிர்வாக செயற்திட்டங்களானவை 2014 இல் பெற்றுக்கொள்ளப்பட்ட 4.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2015 ஆம் ஆண்டில் 1.3 சதவீதத்தையே பெற்றுக்கொண்டது. வருடத்தின் இறுதிப் பகுதியில் மேல்நோக்கிய இயக்கம் இருந்தாலும், வட்டி வீதங்களின் கீழ்நோக்கிய போக்கு 2015 ஆம் ஆண்டில் தொடர்ந்தது.

வருட ஆரம்பத்தில் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் ஏற்பட்ட விலை மாற்றங்களின் காரணமாக, கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் அடிப்படையில் வருடா வருட பண வீக்கமானது, 0.6 சதவீதமாகப் பதிவாகியுள்ளது. 2015 செப்டம்பர் வரை இது 01 சதவீதத்தினை விடக் குறைவாகவே காணப்பட்டதுடன், ஜுலை தொடக்கம் செப்டம்பர் மாதம் வரையிலான காலப் பகுதியில் எதிர்மறையான பணவீக்கத்தைப் பதிவு செய்துள்ளதன் மூலம், பொருளாதாரத்தின் மேலான, குறிப்பிடத்தக்களவு விளைவினை எடுத்துக்காட்டியதுடன், 2015 ஆம் ஆண்டு இறுதியில் 2.8 சதவீதமாகவும் பதிவாகியுள்ளது. பரிமாற்று வீதத்தினைத் தீர்மானிக்கும் போது பெருமளவில் நெகிழ்திறனை அனுமதிக்க வேண்டும் என்ற மத்திய வங்கியின் தீர்மானத்தின் பின்னர் இறுதிக் காலாண்டில் இலங்கை நாணயமானது, கணிசமான அளவு அதிகரித்தது. இதன் விளைவாக, 2015 ஆம் ஆண்டில் அமெரிக்க டொலருடன் ஒப்பிடும் போது இலங்கை ரூபாவானது 9.03 சதவீதம் தேய்மானத்தைக் காட்டியதுடன், ஒரு அமெரிக்க டொலருக்கு ரூபா 144.06 எனவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலைமையானது, அரசு பத்திரங்களில் உள்ள வெளிநாட்டு முதலீடுகளை மாற்றிப் பதிதல், எண்ணெய் அல்லாத இறக்குமதிகளின் வெளிநாட்டு நாணயமாற்று வீதத்திற்கான கேள்வி அதிகரிப்பு மற்றும் வெளிநாட்டுக் கடன் சேவை பணத்தைச் செலுத்துதல் என்பனவற்றினால் ஏற்பட்டதாகும்.

## சர்வதேச பொருளாதார செயற்திறன்

சர்வதேச பொருளாதாரமானது, 2015 ஆம் ஆண்டில் 2.4 சதவீதம் என்ற மந்தமான வளர்ச்சியை வெளிப்படுத்திய அதேவேளை, 2014 ஆம் ஆண்டில் அது 2.6 சதவீதமாக இருந்தது. வளர்ச்சியானது, உலக மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியன எதிர்வுகூறப்பட்ட பிரகாரம் நட்டங்களாக இருக்கவில்லை. தொடர்ச்சியாக, பொருட்களின் விலை வீழ்ச்சி, முக்கியமாக எண்ணெய் விலை, ஒடுக்கப்பட்ட உலகளாவிய வர்த்தகம், குறுகிய காலத்தில் நிதிச் சந்தைகளில் ஏற்படும் தளம்பல் நிலைகள் மற்றும் நலிவடைந்த மூலதனப் பாய்ச்சல் ஆகியனவையே இவ்வாறு நிலைத்திருக்கும் சர்வதேச பொருளாதார வளர்ச்சிக்குக் காரணமாகும். மேலதிகமாக வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் குறைந்து வரும் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் நாணயக் கொள்கையில் ஏற்பட்ட படிமுறையான இறுக்கம் என்பனவும் தொடர்ந்து வரும் இந்த நிலைமைக்குக் காரணமாகும். உலக வங்கியானது, 2016 ஆம் ஆண்டிற்குரிய சர்வதேச பொருளாதார வளர்ச்சி 2.9 சதவீதமாகும் எனவும், இது, 2017 - 2018 ஆம் ஆண்டுகளில் 3.1 சதவீதமாக அமைந்திருக்கும் எனவும் எதிர்வுகூறியுள்ளது. ஆனால், வாங்கும் செலவுகளில் ஏற்பட்ட சடுதியான அதிகரிப்பு, ஐக்கிய அமெரிக்காவின் நாணயக் கொள்கையில் ஏற்பட்ட இறுக்கத்தினால் டொலரில் ஏற்பட்ட அதிகரிப்பு, ஆசியாவின் மந்தமான வர்த்தகத்தினால் ஜப்பான் மீதான தாக்கம் ஆகியன, முன்கணிப்புச் செய்யப்பட்ட சர்வதேச வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்த வல்லவையாகும். எவ்வாறிருப்பினும், எதிர்வரும் வருடத்தில், சர்வதேச பணவீக்கத்தில் எதிர்பார்க்கப்படும் நடுத்தர அளவிலான அதிகரிப்பு, அதிக வருமானம் ஈட்டும் நாடுகளை மீட்டெடுத்தல், சீனாவில் குறைந்த வேகத்துடன், படிமுறையாகப் பொருளாதாரத்தை மீளச் சரிபார்த்தல் மற்றும் சர்வதேச வட்டி வீதங்களில் அதிகரிப்பு என்பன எதிர்வரும் வருடமான 2016 இல் எதிர்பார்க்கப்படும் நிகழ்வுகளாகும்.

## அரசு கொள்கைகள்

அரசாங்கமானது, பாரம்பரியம் அல்லாத பயிர்ச்செய்கைப் பகுதிகளை விரிவாக்குதல் மற்றும் சிறந்த விவசாய வழக்கங்களை ஊக்குவிப்பதன் மூலம் உற்பத்தித் திறனை முன்னேற்றுதல் என்பனவற்றில் கவனத்தைச் செலுத்திய வண்ணம் உள்ள அதேவேளை, தேயிலைக் கைத்தொழிலில் உற்பத்தித் திறனை அதிகரித்தல், பெறுமதி சேர்த்தல் மற்றும் போட்டித் தன்மையை முன்னேற்றுதல் என்பனவற்றையும் திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றது. நிறுவனமானது, செழிப்புறக் காரணமாக இருக்கும் நிலத்தினது உரிமையைக் கொண்ட ஒரு வலிமையான பங்குதாரர் என்ற முறையில், அரசானது பாரம்பரிய ஏற்றுமதி உற்பத்திப் பொருட்களை ஊக்குவிக்கும் முகமாக இறப்பர், தேயிலை மற்றும் தெங்குப் பயிர்களை நடுதல், மீள நடுதல் என்பனவற்றுக்குரிய மானியக் கொள்கைகளைத் தொடர்ந்து வந்தது. பதிவு செய்யப்பட்ட தேயிலைத் தொழிற்சாலைகளைக் கொண்டிருப்பவர்களுக்கு வழங்கப்பட்ட மூலதனத்திற்கான குறுகியகாலக் கடன் கொள்கைகள், குறுகிகால நிதிப் பிரச்சினைகளைத் தீர்க்க உதவியுள்ளது. உற்பத்திப் பொருட்களின் தரத்தை அதிகரிக்கும் முகமாக முன்னேற்றகரமான வெட்டும் கத்திகள், மின்சக்தி மூலம் இயக்கும் பாய்கள், ஒரு நாளில் உலர வைக்கும் தொகுதி மற்றும் அதிக விளைச்சலைத் தரும் முளைகள் என்பன போன்ற புதிய தொழில்நுட்ப முறைகள் சிறிய அளவில் வைத்திருப்பவர்களது துறையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இருந்த போதிலும், உர மானியங்களை நீக்கியமை மற்றும் நெற் பயிர்ச் செய்கைகளுக்கு மாத்திரம் மானியங்களை ஒதுக்கியமை என்பன முழுக் கைத்தொழிலையும் எதிர்மறையாகப் பாதித்துள்ளதுடன், உற்பத்திக்கான செலவுகளையும் அதிகரிக்கச் செய்துள்ளன. பெரிய நிறுவனங்களின் துணை நிறுவனங்களாகக் காணப்படும் பெருந்தொட்ட நிறுவனங்களானவை, ஆதாய வரி (Supper gain tax) பிறப்பிக்கப்பட்டதனால் மறைமுகமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

## காலநிலைகள்

பெருந்தோட்டத் தொழிற்துறையானது, விவசாயச் சூழலுடன் இணைந்து காணப்படுவதனால், இயற்கைச் சூழலானது முக்கிய பங்காற்றி வருகின்றது. வளிமண்டலவியல் திணைக்களத்தின் அவதானிப்புகளின்படி, அவ்வருடத்தில் வறட்சி காணப்படாத போதிலும், காலநிலையானது இறப்பருக்குச் சாதகமாக அமைந்திருக்கவில்லை. காலநிலை மாற்றங்களின் காரணமாக ஏற்படும் கட்டுப்படுத்த முயாத இந்த நிலைமைகளானவை, பயிர்களுக்குச் சாதகமான இயற்கைச் சூழலைப் பாதிக்கின்றன. ஆகையினால், உற்பத்தியானது தடுக்கப்பட்டதுடன், செலவுகளைச் சமாளிக்கும் நிலையையும் குறைத்துள்ளது. இயற்கையில் நிலையான செலவுகள், தொழிலாளர்களுக்கான செலவுகள் மற்றும் இதர செலவுகள் என்பன நிறுவனங்களின் இலாபமீட்டும் தன்மையினைத் தடுக்கின்றன.

## முக்கிய நடவடிக்கைகள் மற்றும் வியாபாரத்தின் தன்மை

இவ்வருடத்தில் நிறுவனத்தினது முக்கிய கடமைகளாக தென்னை, இறப்பர் மற்றும் ஊடுபயிர்களைப் பயிரிடுதல், உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல் என்பன அமைந்திருந்தன.

## செயற்பாட்டு நோக்கம்

குருநாகல், கம்பஹா, அநுராதபுரம் மாவட்டங்களிலுள்ள வெவ்வேறுபட்ட விவசாய காலநிலை வலயங்களை உள்ளடக்கிய 5,244.58 ஹெக்டயர்கள் நிலப்பரப்பில் எட்டுப் பெருந்தோட்டங்களை KPLm கொண்டுள்ளது. ஒவ்வொரு பகுதித் தோட்டமும் இரண்டு அல்லது மூன்று பிரதேச செயலகங்களில் சிதறிக் காணப்படக்கூடிய சிறிய நிலப்புரப்புகளை (ஏக்கரில்) கொண்டது.

## வைத்திருக்கும் நிலங்களின் விஸ்தீரணம்

குருநாகல் பெருந்தோட்ட நிறுவனமானது (KPL), பெருமளவிலான உற்பத்தித் திறனுடைய நிலங்களை, தேசியத் தேவைகள் மற்றும் சட்ட உறுதிமொழிகளின் பிரகாரம் வெளியிட்டமையினால் இழந்துள்ளது. 1992 ஆம் ஆண்டில் இடம்பெற்ற நிறுவன உருவாக்கத்தின் போது கையளிக்கப்பட்ட 6,555.03 ஹெக்டயர்கள் நிலப்பரப்பில் 20% (1310.45) ஹெக்டயர்களை குருநாகல் பிளான்டேஷன்ஸ் லிமிட்டெட் இழந்துள்ளது.

# தொழிற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி...

### உற்பத்திகளின் தொகுப்பு

அனைத்து எட்டு தோட்டங்களிலும் தென்னையே முக்கிய பயிராக விளங்குகிறது. அத்தனகல்ல, மஹராயாய, தொடங்கஸ்லந்த ஆகிய மூன்று தோட்டங்களுக்கு மட்டுமே இறப்பர் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நிலத்தின் உற்பத்தி திறன் மற்றும் உயிர் பல்வகைமைத் தன்மை என்பனவற்றை அதிகரிக்கும் முகமாக, இறப்பர் பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கென புதிய பகுதிகள் குருநாகல் மற்றும் நாரம்மல பகுதிகளில் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவ் இரு இடங்களிலும் அதற்குரிய செயற்பாடுகளும் அவ்வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. KPL ஆனது, நில மற்றும் காலநிலைகளின் பொருத்தமான தன்மையை அதிகரிக்கும் முகமாக, பிற பயிர்கள் அல்லது ஊடுபயிர்களையும் முக்கியமாக தென்னந்தோட்டங்களில் பராமரித்து வருகின்றது.

### முகாமைத்துவ நிபுணத்துவம்

KPL இனது முகாமைத்துவமானது, 2005 ஆம் ஆண்டில் மாற்றம் பெற்றதில் இருந்து உயர் தரத்திலான முகாமைத்துவ முறைகள் பின்பற்றப்பட்டதுடன், அவை இந் நிறுவனமானது இத்தனை வருடங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட விருதுகள் மற்றும் கௌரவங்களின் வாயிலாக தேசிய மட்டத்திலான அங்கீகாரத்தினையும் பெற்றுள்ளது. இந்நிறுவனமானது, அதன் நிதியியல் மற்றும் விவசாய செயற்திறன் மூலம், நாட்டிலுள்ள மிகவும் தொழில் ரீதியாக நிர்வகிக்கப்படும் விவசாய வர்த்தக நிறுவனங்களில் ஒன்று என்பதை நிரூபித்துள்ளது. KPL இனது தொலைநோக்கானது, ஆசியப் பிராந்தியத்தின் பெருந்தோட்ட நிறுவனங்களது முன்மாதிரியாகும் என்பதுடன், இதற்கான வழியில் நாம் உறுதியாகவும் இருந்து வருகின்றோம். 2011 ஆம் ஆண்டில் தேசிய விவசாய வர்த்தக சபையினால் நடத்தப்பட்ட தேசிய விவசாய வணிக விருதுகள் 2011 நிகழ்வில் KPL ஆனது பெரிய வகை உற்பத்தியாளர்களுக்கான (பெருந்தோட்டம்) தங்க விருதும், தேசிய அளவில் இரண்டாம் நிலை விருதையும் பெற்றுக்கொண்டது. 2012 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட தேசிய விவசாய வணிக விருதுகள் விழாவிலும் KPL ஆனது அகில இலங்கை ரீதியில் தங்க விருதைப் பெற்றுக்கொண்டது. பெரிய வகை உற்பத்தியாளர்களுக்கான (பெருந்தோட்டம்) தங்க விருதை இரண்டாவது முறையாகவும் பெற்றுக்கொண்டதன் மூலம் தனது இடத்தை பெருந்தோட்டத்துறையில் தக்க வைத்துக்கொண்டது. 2013 ஆம் ஆண்டில் தேசிய விவசாய வணிக விருதுகள் வழங்கும் விழாவில் KPL இரண்டு தங்க விருதுகளைப் பெற்றுக்கொண்டது. அவையாவன - இரண்டாவது தடவையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட தேசிய விவசாய வணிக தங்க விருது மற்றும் மூன்றாவது வருடமாகவும் தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட பெரிய உற்பத்தியாளர்களுக்கான (பெருந்தோட்டங்கள்) தங்க விருது ஆகியனவாகும். 2014 ஆம் ஆண்டில் KPL ஆனது மூன்றாவது தடவையாக தேசிய ரீதியில் தங்க விருதையும், நான்காவது தடவையாக பெரிய வகை உற்பத்தியாளர்களுக்கான (பெருந்தோட்டங்கள்) தங்க விருதையும் பெற்று நாட்டின் விவசாய வர்த்தகத் துறையில் புதிய மைல்கல்லை உருவாக்கியுள்ளது.

2015 ஆம் ஆண்டில் மேலும் இரண்டு விருதுகளைப் பெற்று தனது வெற்றி வரிசையை மீண்டும் சுடர் விட்டு எரியச் செய்தது. இவ்விருதுகளானவை, பெரிய வகை உற்பத்தியாளர்களுக்கான (பெருந்தோட்டங்கள்) தங்க விருது மற்றும் இலங்கை தேசிய வர்த்தகப் பேரவையினால் நடத்தப்பட்ட தேசிய வணிகத்துறை உயர் விருதுகள் விழாவில் விவசாய மற்றும் பெருந்தோட்டத் துறையில் பெற்ற வெள்ளி விருது என்பனவாகும்.

### பயிற்சி மற்றும் அபிவிருத்தி

நிறுவனத்தின் உற்பத்தித் திறனானது, தொழிலாளர் படைகளையே அதிகம் அடிப்படையாகக் கொண்டது. ஆகையால், உற்பத்தியின் தரத்தைப் பேணுதல், தொழிலாளர்களின் திறமைகளை அதிகரித்தல் என்பன நிறுவனத்தின் பொறுப்பாகும். இதன்பிரகாரம், நிறுவனமானது, தொழிலாளர்கள், ஊழியர்கள் மற்றும் நிறைவேற்று அலுவலர்களை உற்பத்தித் திறன் தொடர்பில் பயிற்றுவித்தல், தரமான உற்பத்தி மற்றும் விவசாய நடைமுறைகள், தலைமைதாங்குதலுடன் கூடிய குழு வேலை, தொழில் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி போன்றவற்றைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. நிறுவனத்தின் குறிக்கோள்களான ஊழியர்களின் முன்னேற்றம் மற்றும் திறமைகளை விருத்தி செய்தல் என்பனவற்றை அடைவதற்காக பின்வரும் வருடாந்த நிகழ்ச்சித் திட்டங்களானவை ஒவ்வொரு நிதியாண்டிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

### தொழிலாளர்கள்

- மரங்களில் வெட்டுக்களை ஏற்படுத்துதல் மற்றும் பிற விவசாய நடைமுறைகள்
- மூட்டைப் பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல்
- இறப்பர் உற்பத்தி மற்றும் தொழிற்சாலை நடைமுறைகள்
- ஊடுபயிர்ச்செய்கை மற்றும் ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை
- நிறுவனத்தின் மேம்பாடு (தலைமைத்துவமான அணி மற்றும் நடத்தை)
- விவசாய வாகனங்களைப் பராமரித்தல்

### உத்தியோகத்தர்கள்

- தலைமைத்துவம் மற்றும் குழுவாகப் பணியாற்றுதல்
- திறமைகளை முன்னேற்றுதல்
- சக்தியைச் சேகரிக்கும் முறைகள்

### நிறைவேற்று அலுவலர்கள்

- தனிப்பட்ட வளர்ச்சி மற்றும் தொழில் வளர்ச்சி
- தொழில் அழுத்தங்களைச் சமாளித்தல்
- தலைமைத்துவம் மற்றும் தகுதிகளை வளர்த்துக்கொள்ளல்
- முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் தொடர்பான வெளிநாட்டு நிகழ்ச்சித் திட்டம்
- வரி விதிப்பு

# நிதித்துறை மீளாய்வு

## முக்கிய நடவடிக்கைகளும் வர்த்தகத்தின் வகையும்

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் நிறுவனத்தின் முக்கிய நடவடிக்கைகளாவன, பயிர்ச்செய்கை, தெங்கு, இறப்பர் ஏனைய விவசாயப் பொருட்களின் தயாரிப்பு மற்றும் விற்பனையும் என்பனவாகும்.

## செயற்பாட்டின் எதிர்பார்ப்பு

குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் (KPL) 5,244.58 ஹெக்டயர் விஸ்தீரணமான பிரதேசத்தைக் கொண்ட 08 பிரதேச பெருந்தோட்டங்களை உள்ளடக்கியதாகும். இந்த விசாலமான பிரதேசம், குருநாகல், கம்பஹா, அநுராதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களில் பல்வேறு விவசாய சுவாத்திய வலயங்களை உள்ளடக்கியதாகவுள்ளது. சிறியளவிலான பிரதேசத்தைக் கொண்ட ஒவ்வொரு பிரதேச பெருந்தோட்டமும், இரண்டு தொடக்கம் மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளில் பரந்துள்ளன.

## காணிகளின் விஸ்தீரணம்

தேசியத் தேவைகள், உத்தியோகபூர்வப் பிரகடனங்கள் என்பனவற்றுக்கென பெருமளவு காணிகள் வழங்கப்பட்டுள்ளதனால், KPL உற்பத்தியைத் தரும் விசாலமான பிரதேசத்தை இழந்துள்ளது. குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம், ஆரம்பத்தில் 1992 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 6,555.03 ஹெக்டயர் காணியில் 20% ஐ 1,310.45 ஹெக்டயரை இழந்துள்ளது.

| நிதியாண்டின் இறுதியில் | ஹெக்டயர் |
|---|---|
| 2006 | 5,450.28 |
| 2007 | 5,450.28 |
| 2008 | 5,409.70 |
| 2009 | 5,397.51 |
| 2010 | 5,397.51 |
| 2011 | 5,327.77 |
| 2012 | 5,316.43 |
| 2013 | 5,261.17 |
| 2014 | 5,244.58 |
| **2015** | **5,244.58** |

## பிரதேச பெருந்தோட்டங்களின் விஸ்தீரணம்

| | விஸ்தீரணம் (ஹெக்டயர்கள்) |
|---|---|
| அத்தனகல்ல | 703.22 |
| தம்பதெனிய | 462.18 |
| தொடங்கஸ்லந்த | 798.83 |
| ஹிரியால | 1,107.77 |
| கட்டுகம்பொல | 619.13 |
| குருநாகல் | 555.80 |
| மஹாயாய | 446.26 |
| நாரம்மல | 551.39 |
| | 5,244.58 |

## உற்பத்திப் பொருள் விபரங்கள்

8 பிரதேச பெருந்தோட்டங்களின் பிரதான விளைபயிர் தென்னை ஆகும். அத்தனகல்லை, மஹாயாய, தொடங்கஸ்லந்த பிரதேசங்களில் மாத்திரம் இறப்பர் செய்கை பண்ணப்படுகிறது. நிலத்தின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், உயிரியல் பன்முகத்தன்மையை நிலைநாட்டவுமென, இறப்பர் செய்கையைப் புதிய பிரதேசங்களில் விஸ்தரிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இறப்பருக்கான புதிய செய்கைகள் குருநாகல், நாரம்மல பிரதேசங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தென்னந்தோட்டங்களில் காணி மற்றும் காலநிலைப் பொருத்தத்தின் அடிப்படையில் ஊடுபயிராகச் செய்கை பண்ணப்படும் பல்வேறு பயிர்களையும் KPL கொண்டுள்ளது.

## வருமானம்

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், நிறுவனத்தின் வருமானம், இந்த வருடத்தில் வீழ்ச்சி கண்டுள்ளது. பெருந்தோட்ட வரலாற்றில் சென்ற வருடம் வருமானம் சம்பந்தப்பட்ட மட்டத்தில் மிகச் சிறந்த ஆண்டாகும். இருந்த போதிலும், தெங்குப் பொருட்களின் வருமானத்தின் அடிப்படையில் 2014 ஆம் ஆண்டில் ரூபா 576.79 மில்லியனாக இருந்த வருமானம், இந்த வருடத்தில் ரூபா 492.14 மில்லியனாக ஆக்கபூர்வமான வகையில் நிறைவடைந்துள்ளது. வருமானத்தின் அமைப்பு கீழே தரப்பட்டுள்ளது:

- தென்னை - 90%
- இறப்பர் - 6%
- ஏனைய பயிர்கள் - 4%

| | 2015 ரூபா மில்லி. | 2014 ரூபா மில்லி. |
|---|---|---|
| தென்னை | 442.11 | 514.18 |
| இறப்பர் | 30.61 | 39.70 |
| ஏனைய பயிர்கள் | 19.42 | 22.91 |
| | **492.14** | **576.79** |

## இலாபம்

நிறுவனத்தின் வரிக்குப் பிந்திய இலாபம் 2015 ஆம் ஆண்டில், முந்திய வருடத்துடன் ஒப்பிடுகையில், 25% வீழ்ச்சியைக் காண்பித்துள்ளது. இதனை 2014 இல் ரூபா 207.13 மில்லியனாக இருந்த தொகை ரூபா 155.91 மில்லியனாக குறைவடைந்ததைக் குறிப்பிடலாம். இந்த வருட இலாபத்தில் பெரும்பாலான பங்கு தெங்கு உற்பத்தியினால் ஏற்பட்டதாகும். 2015 ஆம் ஆண்டில் இது ரூபா 179 மில்லியனாக இருந்தது. (2014 ரூபா 247 மில்லியன்). இருந்த போதிலும், இறப்பர் உற்பத்தி சம்பந்தப்பட்ட மட்டில் சென்ற வருடத்துடன் ஒப்பிடுகையில், எதிர்மாறான பங்களிப்பே காண்பிக்கப்பட்டுள்ளது. சீரற்ற காலநிலை காரணமாக இறப்பர் மரங்களில் இருந்து இறப்பர் பால் எடுக்கும் நடவடிக்கைகள் வீழ்ச்சி கண்டதே இதற்கான காரணமாகும். சென்ற வருடத்தில் 2.4 மில்லியன் ரூபா நட்டத்தை அடைந்த இறப்பர் உற்பத்தி, இந்த வருடம் 6.9 மில்லியன் ரூபா நட்டத்துடன் நிறைவடைந்தது. ஆய்வுக்குட்பட்ட இந்த வருடத்தில், நிர்வாகச் செலவினங்கள் 01% ஆல் அதிகரித்து ரூபா 132.94 மில்லியனாக இருந்தது (2014 ரூபா 131.15). வருமான வரிக்கு முந்திய இலாபம் 25% ஆல் குறைந்து ரூபா 165.92 ஆக 2015 இல் இருந்தது. (2014 ரூபா 220.91) ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் மொத்த வருமான வரி ரூபா 10.01 மில்லியன் ஆகும். (2014 ரூபா 13.77 மில்லியன்).

# நிதித்துறை மீளாய்வு தொடர்ச்சி...

| | 2015 ரூபா மில்லி. | 2014 ரூபா மில்லி. |
|---|---|---|
| தெங்கு உற்பத்தி வருமானம் | 179.98 | 247.22 |
| இறப்பர் மூலம் இலாபம் / (நட்டம்) | (6.95) | (2.36) |
| ஏனைய பயிர்களின் இலாபம் | 2.47 | 5.94 |
| மொத்த இலாபம் | 175.50 | 250.80 |
| ஏனைய நடவடிக்கைகள் மூலம் கிடைத்த இலாபம் | 121.73 | 95.92 |
| நிர்வாகச் செலவினங்கள் | (132.94) | (131.15) |
| நடவடிக்கைகள் மூலமான இலாபம் | 164.29 | 215.57 |
| நிகர நிதித்துறை வருமானம் | | |
| வட்டி வருமானம் | 28.11 | 31.35 |
| வட்டி செலவினம் | (26.48) | (26.01) |
| | 1.63 | 5.34 |
| வருமான வரிக்கு முன்னரான இலாபம் | 165.92 | 220.91 |
| வருமான வரி செலவினம் | (10.01) | (13.78) |
| ஆண்டுக்கான இலாபம் | 155.91 | 207.13 |

## தெங்குச் செய்கை பிரிவு


KPL இல் 2015 ஆம் ஆண்டில் தெங்குச் செய்கைக்கு உட்பட்டிருந்த பிரதேசம் 3,186.82 ஹெக்டயர்களாகும். தற்சமயம் மொத்த தெங்குச் செய்கை பிரதேசத்தில் 22% க்கும் அதிகமான பிரதேசத்தில் தென்னை மரங்கள் நாட்டப்படுகின்றன. KPL தென்னந் தோட்டங்களில் ஏக்கர் ஒன்றுக்கு 58 தென்னை மரங்கள் உள்ளன. உச்சக்கட்டமான தென்னைகளின் எண்ணிக்கை ஏக்கருக்கு 60 ஆகும். 2005 ஜனவரி 01 ஆம் திகதியில் இருந்து ஏக்கருக்கு 50 தென்னை மரங்கள் என்ற நிலைப்பாட்டில் இருந்து ஏக்கருக்கான தென்னைச் செய்கை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த வருடத்தில்தான் அரசாங்கம் நிறுவனத்தின் முகாமைத்துவத்தைப் பொறுப்பேற்றுக் கொண்டது. 2005 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக அதிகரித்து வந்த தெங்கு உற்பத்தி 2012 ஆம் ஆண்டில் உச்சக்கட்டத்தை அடைந்தது. இருந்த போதிலும், KPL உட்பட ஏனைய தென்னந்தோட்ட நிர்வாகங்கள் 2013 ஆம் ஆண்டில் இருந்து குறிப்பிடத்தக்க பின்னடைவைக் கண்டன. 2012 ஆம் ஆண்டில் 18.10 மில்லியன் தேங்காய்களாக இருந்த KPL இன் உற்பத்தி 13.0 மில்லியன் தேங்காய்களாக வீழ்ச்சி கண்டது. ஆனால், சென்ற வருடத்துடன் ஒப்பிடுகையில் 16% வீழ்ச்சியின் அடிப்படையில் 14.7 மில்லியன் தேங்காய்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. சென்ற வருடத்தில் இலங்கை முழுவதிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட தெங்குப்பொருள் உற்பத்தி 6.5 சதவீத அதிகரிப்பைக் காண்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

KPL பெருந்தோட்டத்தின் தேங்காய்கள் பகிரங்க ஏல விற்பனையில் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் விற்கப்படுகின்றன. இருந்த போதிலும், KPL இன் தனிப்பட்ட ரீதியிலான விற்பனை சராசரி இந்த ஏலவிற்பனை சராசரியிலும் பார்க்க அதிகரித்ததாகும். 2014 ஆம் ஆண்டில் நிகர விற்பனை சராசரி ரூபா 30.65 ஆக இருந்த சமயத்தில் 2015 ஆம் ஆண்டில் ரூபா 31.16 ஆக இருந்தது. மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கொப்பரா, தேங்காய் எண்ணெய் என்பனவும் நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படுகின்றன. KPL இன் முக்கிய பயிர் தென்னை ஆகும். இதுவே வருமானத்தின் முக்கிய பங்கிற்கும் காரணமாக உள்ளது.

தெங்கு உற்பத்திகள் களவாடப்படுதலைக் குறைக்கவும், உற்பத்தியை அதிகரிக்கவுமென KPL முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மாதம் ஒருமுறை தேங்காய்களைப் பறிக்கும் நடவடிக்கைகள், மாதம் இரு முறைகளாக அதிகரிக்கப்பட்டன. இதன் காரணமாக, பழுத்து விழுந்த தேங்காய்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. தேங்காய்களை களவாடும் நடவடிக்கைகளும் வீழ்ச்சி கண்டுள்ளன. முற்றிய தேங்காய்கள் உடனடியாக பறிக்கப்படுவதனால், மேலதிகத் தேங்காய்களை அறுவடை செய்ய முடியும். இதன் அடிப்படையில் தென்னந்தோட்டத்தின் உற்பத்தியை அதிகரிப்பதற்கென நீர், பசளை முதலிய பொருட்களும் சேமிக்கப்படுகின்றன. மாதாந்த அறுவடை, அறுவடை பரப்பளவில் உச்சக்கட்டமான 90% ஐ அடைந்துள்ள அதேசமயத்தில், 2014 ஆம் ஆண்டில் 26மூ வீதமே பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இத்தகைய சூழலிலும், கடந்த வருடங்களில் 20% ஆக இருந்த நிலத்தில் வீழ்ந்த தேங்காய்களின் எண்ணிக்கை 17% ஆக அமைந்து நிலையான வீதத்தையும் காண்பித்துள்ளது. இந்தப் பயன்பாடுகள் அனைத்தும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் தாக்கத்தைக் காண்பிக்கின்றன. மறுபுறத்தில், உடனடியாக மாதா மாதம் தேங்காய்கள் பறிக்கப்படுவதனால், அயலிலுள்ள கிராமவாசிகள் தேங்காய்களைக் களவாடும் நடவடிக்கையும் வீழ்ச்சி கண்டுள்ளது.

தேங்காயின் உற்பத்திச் செலவை கணிசமாகக் குறைப்பதற்கு இவையே காரணமாகும். ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் இது 02% வீதத்தினால் குறைவடைந்து, ரூபா 262.14 மில்லியனாக இருந்தது. (2014 - ரூபா 266.96 மில்லியன்) வீண்விரையங்கள் குறைக்கப்பட்டன. தொழிலாளரின் செயற்திறன் அதிகரித்துள்ளது. தொழிலாளருக்குப் பதிலாக மாற்று நடவடிக்கைகள் அறிமுகம் செய்யப்பட்டன. இருந்த போதிலும், 2014 இல் ரூபா 15.98 ஆக இருந்த தேங்காய்க்கான உற்பத்திச் செலவு ரூபா 18.61 ஆக அதிகரித்தது. உற்பத்தி வீழ்ச்சியே இதற்கான காரணமாகும்.

வருமானம் - தெங்கு உற்பத்திப்பொருள்





## இறப்பர் செய்கைப் பிரிவு


நாட்டின் இரண்டாவது பெருந்தோட்டப் பயிராக இறப்பர் பயிர் அமைந்துள்ளது. இறப்பர் மரங்களைக் கொண்ட 183.53 ஹெக்டயர் நிலப்பரப்பை நிறுவனம் நிர்வகித்து வருகிறது. இருந்த போதிலும், சென்ற வருடத்துடன் ஒப்பிடுகையில், முதிர்ந்த இறப்பர் மரங்களைக் கொண்ட தோட்டங்களின் விஸ்தீரணம் 9.09 ஹெக்டயராக வீழ்ச்சி கண்டது. 2015 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்த உற்பத்தி குறைவடைந்ததற்கு இது ஒரு காரணமாகும். 2015 ஆம் ஆண்டிலும் இறப்பர் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம்

தொடர்ச்சியாக வீழ்ச்சி கண்டது. 2011 ஆம் ஆண்டிலிருந்து இத்தகைய வீழ்ச்சியை தொடர்ச்சியாக அவதானிக்க முடியும். சர்வதேச சந்தைகளில் இறப்பருக்குக் கிடைத்த மிகக் குறைந்த விலையே இதற்கான காரணமாகும். 2014 ஆம் ஆண்டில் ரூபா 39.69 மில்லியனாக இருந்த இறப்பர் வருமானம் 2015 இல் ரூபா 30.61 ஆக வீழ்ச்சி கண்டது. தேசிய மட்டத்தில் இறப்பர் உற்பத்தியும் 2015 ஆம் ஆண்டில் 10.1 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. 2015 ஆம் ஆண்டில் 11% வீழ்ச்சியை கிலோ ஒன்றுக்கு ரூபா 219 எனக் குறிப்பிடலாம். வரட்சியான காலநிலை இதனைத் தொடர்ந்து கடும் மழை, பெரு வெள்ளம் என்பன இறப்பர் பால் எடுக்கும் நடவடிக்கைகளை சீர்குலைத்தன. நிறுவனத்திற்கு 11% வீழ்ச்சி ஏற்பட்டது. ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் இறப்பருக்கான உற்பத்திச் செலவினம் ரூபா 4.5 மில்லியனால் குறைக்கப்பட்டு ரூபா 37.6 ஆக இருந்தது. (11% வீழ்ச்சியைக் கொண்ட 2014 ஆம் ஆண்டு ரூபா 42.1 மில்லியன்) பால் எடுக்கும் செலவினத்தில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்டதையும் இங்கே குறிப்பிடலாம். பாதிக்கப்பட்ட காலநிலை காரணமாக இறப்பர் பால் எடுக்கும் நடவடிக்கைகள் குறைவடைந்ததே இதற்கான காரணமாகும்.

இறப்பர் உற்பத்தி





இறப்பர் வருமானம்




## ஏனைய பயிர்கள்

2005 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிகரமான வகையில் ஊடுபயிர் உட்பட சகலவித பயிர்ச் செய்கைகளையும் குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் பன்முகப்படுத்தியுள்ளது. இவை செய்கை பண்ணப்பட்ட நிலத்தின் விஸ்தீரணம் 71.79 ஹெக்டயர்களாகும். 2015 ஆம் ஆண்டு இறுதியளவில் ஏனைய பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட பிரதேசத்தின் விஸ்தீரணம் 581.10 ஹெக்டயராக இருந்தது. தற்சமயம் மிளகு, கறுவா, றம்புட்டான், துரியான், மாம்பளம், கொக்கோ, மரமுந்திரிகை, டிரகன் என்பனவற்றின் செய்கையை குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் ஊடுபயிராக மேற்கொள்கிறது. துரியான் பழமரச் செய்கை சம்பந்தப்பட்ட மட்டில் மஹாயாய பிரதேசத்தில் 1,040 மரங்களை குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் கொண்டுள்ளது. குருநாகல் பிரதேசத்தின் வரண்ட வலய தோட்டங்களில் மரமுந்திரிகை, கறுவா, மாம்பழம், டிரகன் என்பன செய்கை பண்ணப்பட்டுள்ளன. கம்பஹாவின் ஈரலிழப்பான வலயத்தில் ரம்புட்டான், துரியான் பழமரச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது.

ஏனைய பயிர்கள் வருமானம்




## நிதி நிலைமை அமைப்பு


மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 111.32 மில்லியனாக (2014 - ரூபா 170.63) அதிகரித்தது. உயிரியல் சொத்துக்கள் மற்றும் ஆதனங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் என்பனவற்றில் முதலீடு செய்ததனால் இந்த அதிகரிப்பு ஏற்பட்டது. புதிதாக மரங்கள் நாட்டப்பட்டதும், பராமரிப்புக்கான செலவினம் அதிகரிக்கப்பட்டதை அடுத்து, முதிர்ச்சியடையாத மரங்களிலிருந்து பயன்பெற்றுக்கொள்ளப்பட்டமை என்பனவே உயிரியல் சொத்துக்களின் மூலமான அதிகரிப்புக்குக் காரணமாகும். 2015 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 567.79 மில்லியனாக இந்தது. (2014 - ரூபா 540.66 மில்லியன்) இது, ரூபா 27.13 மில்லியன் அதிகரிப்பைக் காண்பிக்கிறது

## நிதிப்பரிமாற்ற முகாமைத்துவம்

குறுகியகால முதலீடுகள் அதிகரித்ததனால் தேறிய செயற்படு மூலதனம் ரூபா 485.60 மில்லியனாக அதிகரித்தது. (2014 - ரூபா 457.69 மில்லியன்). 2014 ஆம் ஆண்டில் ரூபா 409.71 மில்லியனாக இருந்த காசும், குறுகியகால முதலீடுகளும், 2015 இல் ரூபா 445.14 மில்லியனாக அதிகரித்தது. நிறுவனம் கடைப்பிடித்த புத்திசாதுரியமான நிதித்துறை முகாமைத்துவ நடவடிக்கைகளே இதற்கான காரணமாகும். குறுகியகால முதலீடுகளாக நிறுவனம் 2015 டிசம்பர் 31 இல் ரூபா 415 மில்லியனைக் கொண்டிருந்தது. (2014 - ரூபா 400 மில்லியன்) இந்த முதலீடுகளில் பெரும்பாலானவை அரச வங்கிகளில் செய்யப்பட்ட நிலையான வைப்புக்களாகும். நிறுவனத்தின் தற்போதைய சதவீதம் 6.91 ஆகவுள்ளது. 2014 இல் 6.52 ஆகும். சென்ற வருடத்துடன் ஒப்பிடுகையில் துரித விகிதம் 4.99 இல் இருந்து 5.48 ஆக அபிவிருத்தி கண்டது.

# நிதித்துறை மீளாய்வு தொடர்ச்சி...

வருமானம் - ஏனைய பயிர்கள்





## ஒப்புரவு

200 மில்லியன் ரூபா அறிவிக்கப்பட்ட மூலதனத்தோடு ரூபா 1,360.47 மில்லியனும் இணைந்து மொத்தப் பங்கின் மதிப்பீடாக உள்ளது. ஒதுக்கீடுகள் 114 மில்லியனால் அதிகரித்துள்ளன.

| | 2015 ரூபா மில்லி. | 2014 ரூபா மில்லி. |
|---|---|---|
| பிடித்து வைக்கப்பட்ட சம்பாத்தியங்கள் | 1,098.03 | 1,036.04 |
| மரம் சம்பந்தமான ஒதுக்கீடுகள் | 247.39 | 203.48 |
| ஏனைய ஒதுக்கீடுகள் | 15.03 | 6.94 |
| மொத்தம் | **1,560.47** | **1,446.46** |

## பங்குலாபக் கொடுப்பனவு

பெரும்பாலான அரச நிறுவனங்கள் திறைசேரிக்குப் பாரமாகவுள்ள அதேசமயத்தில், KPL வெற்றிகரமான சுய நிதி பூர்த்தி கொண்ட நிறுவனமாக மாறியுள்ளதோடு, தங்கப் பங்குதாரருக்கு பொதுத் திறைசேரி பங்குலாபங்களை வழங்கும் அதன் கடப்பாட்டைப் பூர்த்தி செய்துள்ளது. சமகால நிதியாண்டில் KPL அரச முகாமைத்துவத்திற்கு உட்பட்ட சுய நிதி பூர்த்தி கொண்ட பொது நிறுவனமாக தொடர்ந்து இருந்து வருகிறது.




2005 ஆம் ஆண்டில் KPL இன் முகாமைத்துவத்தை அரசாங்கம் பொறுப்பேற்றதை அடுத்து, வரலாற்றின் முதல் தடவையாக, 2007 ஆம் ஆண்டில் நிறுவனம் பங்குலாபத்தை வழங்கியுள்ளது. 2015 ஆம் ஆண்டில் ரூபா 30 மில்லியனை பங்குலாபமாக பிரகடனம் செய்ய நாம் உத்தேசித்துள்ளோம். இந்தத் தொகையுடன், 2007 ஆம் ஆண்டில் இருந்து வழங்கப்பட்ட மொத்தப் பங்குலாபம் ரூபா 310 மில்லியனாகும்.

## எதிர்காலத் திட்டங்கள்

காலநிலையும், உலகளாவிய நிதி நெருக்கடி நிலையும் உள்ளூர் பொருளாதாரத்திலும், பெருந்தோட்டத் துறையிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் அதேசமயத்தில், KPL இன் தொலைநோக்குடைய முகாமைத்துவ வழிமுறைகள் காரணமாக கடந்த சில வருடங்களில் KPL அதன் வளர்ச்சி வேகத்தை தொடர்ந்து பேணியுள்ளது. இருந்த போதிலும், நிறுவனத்தின் எதிர்கால அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் வகையில், பெருந்தோட்டங்களை மேலும் அபிவிருத்தி செய்ய முகாமைத்துவம் திட்டமிட்டுள்ளது. தேசிய பொருளாதாரத்திற்கு அதன் பங்களிப்பை வழங்கும் அதேசமயத்தில், நிறுவனத்தை மேலும் அபிவிருத்தி செய்யவென அடிப்படை உற்பத்திப் பொருட்களின் பெறுமானத்தை அதிகரிப்பதற்கு நிறுவனம் உத்தேசித்துள்ளது. அரச நிறுவனங்கள் அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்படும் இந்தத் திட்டம் நிலைபேறான முதலீட்டை அடிப்படை நோக்கமாகக் கொண்டு, உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கூட்டிணைப்பு நடவடிக்கைகளை நோக்கமாகக் கொண்டுள்ளது. எனவே, அமைச்சு மற்றும் நிறுவன மட்டத்தில் திட்ட நடவடிக்கைப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கான நோக்கம், இந்தத் திட்டத்தைத் துரிதமாக முன்னெடுப்பதாகும். நிலைபேறான வளர்ச்சிக்கான பிரிவுகளில் இவையும் அடங்கும். சுற்றுலா இணைந்த அபிவிருத்தி, கனிப்பொருள் அபிவிருத்தி, நீர்வள அபிவிருத்தி, சக்திவளம் தொடர்பான அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் வர்த்தக சொத்துக்கள் அபிவிருத்தி, பெருந்தோட்ட உற்பத்திப் பொருள் அபிவிருத்தி என்பனவாகும். இந்தத் திட்டத்திற்கான அடிப்படை நடவடிக்கைகள் தற்சமயம் மேற்கொள்ளப்படும் அதேசமயத்தில், இலாபமீட்டும் தன்மையை அதிகரிப்பதற்கான வழிவகைகளை மேம்படச் செய்வதில் நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இத்தகைய நடவடிக்கைகளில் ஒன்று, குறுகியகால அடிப்படையில் தெங்குச் செய்கையை மேற்கொள்ள விரும்பும் தொழிலதிபர்களுக்கு பெருந்தோட்டக் காணிகளை வழங்குவதாகும். அடுத்த வருடத்தில் இது நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, இயற்கை வள பிரதேசத்தில் சுரங்கத் தொழிலை மேற்கொள்வதும் மற்றொரு நடவடிக்கையாகும்.

உற்பத்திப் பொருள் வளத்தை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கையில் கலப்பையின் உதவியுடன் தென்னந் தோட்டங்களை உழும் நடவடிக்கைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம், கடினமான தரையைப் பிளந்து அதற்குள் நீர்ப்பாய்ச்சலை அனுமதிக்க முடியும். இதனடிப்படையில், தென்னை மரங்களுக்குப் போதிய பாசன வசதி கிடைக்கவிருக்கிறது.

ஏனைய அரச நிறுவனங்களைப் போலல்லாமல், திறைசேரிக்குப் பாரமாக இருப்பதைத் தவிர்ப்பதற்கு எதிர்காலத்தில் அதிகரித்த நன்மைகளைப் பெறுவதற்கு KPL தயாராகவுள்ளது. பெரும்பாலான அரச நிறுவனங்களுக்கும், தனியார் பெருந்தோட்ட அமைப்புக்களுக்கும் KPL ஒரு முன்னுதாரமாகத் திகழ்கிறது. நிலைபேறான திட்டங்களை நடைமுறைக்கிடுவதில் முக்கிய கவனம் செலுத்திய KPL இன் முகாமைத்துவம் அதன் தொலைநோக்கு நிறைவேற்றப்படுவதற்கும் முன்னுரிமை அளித்துள்ளது. நிறுவனத்தின் வெற்றிக்கு இதனை காரணமாகக் கூற முடியும்.

# நிலைபேற்றுத் தன்மை அறிக்கை

பெருந்தோட்ட நிறுவனம் என்ற வகையில், குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தைச் சேர்ந்த நாம் நிலைபேறான தன்மையை, பொருளாதார சுற்றாடல் மற்றும் சமூக அபிவிருத்தி எனக் கருதுகின்றோம். பொருளாதார நிலைபேறான தன்மை நிறுவனத்தின் நிதித்துறை நிலைபேற்றுத் தன்மையை அடிப்படையாகக் கொண்டது. இதன்மூலம் சமூகத்தினருக்கும், பங்குதாரர்களுக்கும் பொருளாதார சந்தர்ப்பங்களும், நன்மைகளும் நிச்சயிக்கப்படுகின்றன. விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட நிறுவனம் என்ற வகையில் நிதித்துறை நிலைபேறான தன்மை, சூழல் நிலைபேறான தன்மையுடன் இணைந்துள்ளதாகும். எனவே, எமது வர்த்தக நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கும் இயற்கைச் சூழலையும், புவியியல் வழிமுறைகளையும் பாதுகாத்துக் காப்பாற்றுவதில் நாம் அர்ப்பணித்து நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம். இதன் காரணமாக, இயற்கை வளங்களைப் பாதுகாப்பது உட்பட நிலத்தையும் நீரையும் நிலைபேறாக உபயோகித்தல், நிலைபேறான விவசாய வழிமுறைகளைப் பிரயோகித்தல் என்பன இதில் அடங்கும்.

இவற்றுக்கு மேலதிகமாக எமது பெருந்தோட்டங்களிலும், அதன் சூழலிலும் வாழும் மக்களுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் சமூக நிலைபேறான தன்மை நிச்சயிக்கப்படுகிறது. பொது ஸ்தாபனம் என்ற வகையில் சிறந்த ஆளுமை மூலம் பொதுமக்களுக்கான நன்மைகளைப் பெற்றுக் கொடுப்பதில் எமது கடப்பாட்டையிட்டு நாம் கவனம் செலுத்தியுள்ளோம். வெளிப்படையான நடைமுறைகள், ஒழுங்கான கண்காணிப்பு, மதிப்பீடு, அறிக்கை சமர்ப்பித்தல் என்பனவற்றின் மூலம் சிறந்த ஆளுமையை நாம் நிச்சயித்துள்ளோம். இவற்றின் அடிப்படையில் இலஞ்ச ஊழலும், தவறான நடவடிக்கைகளும் தவிர்க்கப்படுகின்றன.

## நிலைபேறான விவசாய நடவடிக்கைகள்

நிறுவனத்தின் ஆரம்ப காலத்திலிருந்து நிலைபேறான விவசாய முகாமைத்துவ வழிமுறைகளே எமது முதுகெலும்பாக இருந்து வந்துள்ளது. எமது 08 பெருந்தோட்டங்களிலும் இந்த வழிமுறைகள் கடைப்பிடிக்கப்படுவதை அவதானிக்க முடியும். அதிகரித்த காணிப் பாவனைத் திறமை, பயிர்கள் பன்முகப்படுத்தல், ஊடுபயிர்ச் செய்கை, தென்னை மரங்களின் கீழான பயிர்ச்செய்கை ஆகிய நடவடிக்கைகள் மூலம் இவை பெற்றுக்கொள்ளப்பட்டன. ஒரு ஏக்கருக்கு உச்சக்கட்ட தென்னை மரங்கள் என்பதை ஸ்தாபிப்பதற்கு தீவிர நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுள்ளோம். 2005 ஆம் ஆண்டில் ஒரு ஏக்கருக்கு 50 தென்னை மரங்கள் என்பதிலிருந்து தென்னை மரங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. 2005 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் முகாமைத்துவம் தனியார் துறையில் இருந்து பொறுப்பேற்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தற்சமயம் ஒரு ஏக்கருக்கான தென்னை மரங்களின் எண்ணிக்கை 58 ஆகும். தென்னை மரங்களின் கீழான பயிர்ச் செய்கை பெருந்தோட்டங்களின் சகல பகுதிகளிலும் மேற்கொள்ளப்படுகின்றது. இத்தகைய பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படாத பிரதேசங்களே இல்லை என்று கூறலாம். இத்தகைய பயிர்ச்செய்கை 2015 ஆம் ஆண்டின் இறுதியளவில் மொத்த தென்னந் தோட்டங்களின் 22% ஆக இருந்த அதேசமயத்தில், முதிர்ச்சியடையாத தென்னை மரங்களுக்கு சிறந்த வளர்ச்சியைப் பெற்றுக் கொடுக்கவென 73.6 மில்லியன் ரூபா முதலீடு செய்யப்பட்டது. இதற்கு மேலதிகமாக, தென்னந் தோட்டங்களின் சகல பிரதேசங்களிலும் மண் இட்டு நிரப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2015 ஆம் ஆண்டில் மண் இட்டு நிரப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பிரதேசம் 8,578 ஆகும். இதனடிப்படையில், ஒரு ஏக்கருக்கான தென்னை மரங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதனால், எதிர்காலத்தில் தேங்காய்களின் அறுவடை பெருமளவு அதிகரிக்குமென நம்பப்படுகின்றது.

சிறந்த விவசாய வழிமுறைகளான சேதனப் பசளையின் அதிகரித்த உபயோகம், இரசாயனப் பசளையின் பாவனை ஒழுங்கான அடிப்படையில் குறைப்பு, விவசாயக் காணிகளைச் சரிவான முறையில் புனரமைக்கும் தொழில்நுட்பம், வடிகாண்கள், கால்வாய்கள் அமைப்பு என்பன எமது காணிகளில் நிலைபேறான உற்பத்தி அதிகரிப்பை நிச்சயிக்கும். சேதனப் பசளையின் உபயோகம், மண் வளத்தில் ஈரலிப்பை பேணுதல், மண்ணுக்குள் போதிய காற்றோட்டம், மண்ணின் நுண் உயிரியல் நடவடிக்கை என்பனவற்றை நிச்சயிக்கும். இத்தகைய விவசாய வழிமுறைகள் எமது காணிகளின் நிலைபேறான தன்மையை மேம்படச் செய்கின்றன. சேதனப்பசளை உபயோகிப்பதனால் பெறப்பட்ட தேங்காய்களுக்கு சிறந்த விலை கிடைத்தை அடுத்து, நிறுவனம் மேலும் இரண்டாயிரம் ஏக்கர் தென்னந் தோட்டங்களில் சேதனப் பசளையை உபயோகிக்க ஆரம்பித்துள்ளது.

## பெருந்தோட்டங்களில் இரசாயனப் பசளையின் உபயோகம் குறைப்பு

சூழல் பாதுகாப்பை முக்கியமாகக் கருத்திற் கொண்ட நிறுவனம், கிருமிநாசினிகள் உட்பட்ட இரசாயனப் பசளைகளின் உபயோகத்தைக் குறைப்பதற்கு சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. உயிரியல் மற்றும் இயந்திரவியல் கட்டுப்பாடுகளின் மூலமும் அதிகரித்த சேதனப்பசளையின் உபயோகத்தின் மூலமும் இந்த இலக்கை அடைவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### உயிரியல் கட்டுப்பாடு

• தென்னந் தோட்டங்களில் தென்னைகளை அழிக்கும் வண்டுகள், பூச்சிகள் என்பனவற்றைக் கட்டுப்படுத்தவும், அவற்றை ஒழித்துக்கட்டுவதற்கான கிருமிநாசினியைத் தயாரிக்கவுமென ஆய்வுகூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான வழிமுறை சூழல் பாதுகாப்பின் அடிப்படையில் அமைந்துள்ளது. ஏற்கனவே 22,379 பொதிகளைக் கொண்ட கிருமிநாசினிகள் பெற்றுக்கொள்ளப்பட்டு, எமது பெருந்தோட்டங்களில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு இந்த வருடத்தில் விநியோகிக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கை மூலம் உச்சக்கட்ட பெறுபேறுகள் பெற்றுக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நிலைபேற்றுத் தன்மை அறிக்கை தொடர்ச்சி...

- தென்னந்தோட்டங்களில் காணப்படும் செந்நிற வண்டுகளையும், பழமரத் தோட்டங்களில் உள்ள பூச்சிகளையும் கட்டுப்படுத்தல்.

- மரமுந்திரிகைச் செய்கையில் காணப்படும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தவென செந்நிற எறும்புகளை அறிமுகம் செய்தல்.

## இயந்திரவியல் கட்டுப்பாடு

கிருமிநாசினியான கிளைபோசெட்டின் (Glyphosate) உபயோகம் பற்றி பல்வேறு கருத்தரங்குகளில் விவாதிக்கப்பட்டுள்ளது. தற்சமயம் இதன் உபயோகத்திற்கு அரசாங்கம் தடை விதித்துள்ளது. கீழ்க்காணும் வழிமுறைகளின் மூலம் கிளைபோசெட்டின் உபயோகத்திற்கு நாம் தடை விதித்துள்ளோம்.

- உழுதல், தரையைச் சமப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளுக்கென இயந்திரங்களை உபயோகித்தல்
- கால்நடைகளை மேயவிடுதல்
- காப்புறைப் பயிர்களை வளர்த்தல்
- பசளை சுற்றுவட்டங்களின் ஈரத்தை பாதுகாத்தல்

## எமது சேவையாளர்கள்

### சேவையாளர்களுக்கான நன்மைகளும் ஊக்கங்களும்

எமது சேவையாளர்களுக்கு பாதுகாப்பான, மகிழ்ச்சிகரமான, பயன்தரும் சூழலை வழங்குவதற்கான பொறுப்பு பற்றி நாம் நன்கு உணர்ந்துள்ளோம். எமது சேவையாளர்களே மிகவும் பெறுமதி வாய்ந்த எமது சொத்துக்கள் என்பதையிட்டு நாம் பெருமையடைவதோடு, அவர்கள் அனைவரும் தகைமையும், அனுபவமும் பெற்ற, நம்பகமான தொழிலாளர்கள் என்பதையிட்டும் நாம் பெருமை கொள்கின்றோம். உச்சக்கட்ட தொழிற்திறன் மற்றும் நிபுணத்துவம் என்பன இல்லாமல் பெருந்தோட்டங்களை இலாபகரமான முறையில் முகாமைத்துவம் செய்ய முடியாது என்பது தெளிவான விடயமாகும். இதனை சாத்தியமானதென நிச்சயிப்பதற்கு மனிதவள மூலதன அடிப்படைத் தளத்தை KPL கொண்டிருப்பது மகிழ்ச்சியும், அதிஷ்டமும் வாய்ந்ததாகும். KPL இல் உள்ள மொத்த சேவையாளர்களின் எண்ணிக்கை 1235 ஆகும்.

### செயற்பாட்டின் அடிப்படையிலான ஊக்கக் கொடுப்பனவு

2005 ஆம் ஆண்டில் இருந்து செயற்பாட்டின் அடிப்படையிலான ஊக்கக் கொடுப்பனவை வழங்க நிறுவனம் ஆரம்பித்துள்ளது. இத்தகைய ஆரோக்கியமான பரிசளிப்பு வழிமுறை எமது சேவையாளருக்கு மேலும் சிறந்த முறையில் பணியாற்றுவதற்கு ஊக்கத்தை அளித்துள்ளது. மொத்த இலாபத்தில் 14% ஆன 25.2 மில்லியன் ரூபா 2015 ஆம் ஆண்டில் செயற்பாட்டின் அடிப்படையிலான ஊக்கக் கொடுப்பனவாக நிதி அறிக்கைகளில் காண்பிக்கப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டில் இதற்கான தொகை 28.8 மில்லியன் ரூபாவாகும். இந்த ஏற்பாட்டின் அடிப்படையில் மதாதாந்த சம்பளம் பெறும் சேவையாளர்களுக்கு 1.8 மாத மொத்த சம்பளத்தை வழங்க முடிந்துள்ளது. நாளாந்த சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட தொகை ரூபா 15,000/- (2014 - ரூபா 12,000/-)

### எமது சேவையாளர்கள் பெறும் ஏனைய நன்மைகள்

- குறைந்த வட்டி வீதத்தில் இடர் நிவாரணக் கடன்
- பாடசாலைப் புத்தகங்களுக்கும் துணி வகைகளுக்குமென வட்டியில்லாக் கடன்கள்
- சகல ஊழியர்களுக்கும் தேங்காய் ஒன்று, ஒரு ரூபா என்ற மிகக் குறைந்த வீதத்தில் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான தேங்காய்களை சொந்தப் பாவனைக்கு வழங்குதல்.
- கீழே விழுந்த தேங்காய்களைச் சேகரிப்பதற்கான ஊக்கக் கொடுப்பனவும் காவலாளர்களுக்கு மாதாந்த தின வருகை சம்பந்தமான ஊக்கக்கொடுப்பனவும்
- மின்சாரம் இல்லாத இடங்களில் வசிக்கும் காவலாளிகளுக்கு மண்ணெண்ணெய் கொடுப்பனவு
- சகல ஊழியர்களுக்கும் காப்புறுதி வசதிகளும் தொழிலாளர் நட்டஈட்டுக் கொடுப்பனவும்
- நிறைவேற்று அதிகாரிகளுக்கு விபத்துக் காப்புறுதியாக ஒரு மில்லியன் ரூபா சொந்தக் காப்புறுதி
- நிறைவேற்று அதிகாரிகளின் குடும்பங்களுக்கு சுகாதாரக் காப்புறுதியாக ரூபா 400,000
- சேவையாளர்களின் உயர்கல்விக்கென நிதியுதவி
- சேவையாளர்களின் பிள்ளைகளினது உயர்கல்விக்கான புலமைப் பரிசில்கள்
- உபயோகிக்காத மருத்துவ விடுமுறையை ஈடு செய்வதில் ஒரு மாத சம்பளக் கொடுப்பனவு

### வசிப்பிட வசதி

எமது பெருந்தோட்டங்களில் வீடமைப்பு நிலைமையை அபிவிருத்தி செய்வதில் பல்வேறு நடவடிக்கைகளை கடந்த பல வருடங்களாக நாம் மேற்கொண்டுள்ளோம். ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் சகல வசதிகளையும் கொண்ட 17 காவலாளிகளுக்கான வசிப்பிடம் அமைக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நீர், மின்சார விநியோகம், சுகாதார வசதிகளைக் கொண்ட இந்த வசிப்பிடங்களின் நிர்மாண வேலைகள் மேலதிகமாகக் காணப்பட்ட ரூபா 23 மில்லியனை உபயோகித்து ஆரம்பிக்கப்பட்டன. இவற்றுக்கு மேலதிகமாக, பெருந்தோட்டங்களில் தங்கி வேலை செய்யும் ஊழியர்கள் சம்பந்தமாக நிறுவனம் தொடர்ந்து கவனம் செலுத்தி வந்துள்ளது. இவர்களுக்கு மின்சாரம் மற்றும் சுகாதார வசதிகளுடன் சிறந்த வசிப்பிடங்களை நாம் வழங்கியுள்ளோம்.

## சேவையாளர் பயிற்சியும் அபிவிருத்தியும்

எமது சேவையாளரின் பயிற்சியையும், மேம்பாட்டையும் அபிவிருத்தி செய்யவென நாம் தொடர்ந்தும் முதலீடு செய்து வருகின்றோம். சிறந்த வகையில் சேவையாற்றவென தேவைப்படும் தொழிற்திறன், அறிவு, உற்பத்தியை அதிகரிப்பதற்கான அர்ப்பணிப்பு என்பனவற்றை அவர்கள் மத்தியில் நிச்சயிக்கவென இது மேற்கொள்ளப்படுகின்றது. 2014 இல் 801 மில்லியன் ரூபாவாக இருந்த இந்தச் செலவினம் 2015 இல் 855 மில்லியன் ரூபாவாக இருந்தது. உள்ளக மற்றும் வெளிக்களப் பயிற்சிகள் விரிவான அடிப்படையில் வழங்கப்பட்டன. சேவையாளர் தொழிற்திறன் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு இவை மேற்கொள்ளப்பட்டன. எமது சேவையாளர், டிப்ளோமா, பட்டம், முதுமாணி உட்பட பல்வேறு பட்டங்களைப் பெறுவதற்கு நாம் உதவிகளை வழங்கியுள்ளோம். வெளிக்கள உத்தியோகத்தர்கள் கடமையிற் பயிற்சி அளிப்பதோடு, விசேட பயிற்சியுடன் விவசாயத்துறை நிபுணர்களினால் விவசாயத்தொழில் திறன் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

## சேவையாளருடன் வாழ்நாள் முழுவதற்குமான உறவை ஏற்படுத்துதல்

சேவையாளருடன் வாழ்நாள் முழுவதற்குமான உறவை ஏற்படுத்துவதில் நிறுவனம் பலதரப்பட்ட நடவடிக்கைகளை ஒழுங்கு செய்துள்ளது.

- தொடர்ச்சியாக 7வது வருடமாக இரவு முழுவதற்குமான பிரித் பாராயணம் பூர்த்தி
- தொடர்ச்சியாக இரண்டாவது வருடமாக கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் 15,000 தாமரை மலர்கள் அர்ப்பணிக்கப்பட்ட விசேட வழிபாடு
- குருநாகல் தலைமை அலுவலகத்தில் தொடர்ச்சியாக ஒன்பதாவது வருடமாகவும் பொசொன் பண்டிகையின் போது கிரிபத் தானசாலை.
- சேவையாளரினதும் குடும்பத்தினரதும் ஒன்றுகூடல்.
- பெருந்தோட்டங்களுக்கு இடையிலான கிரிக்கட் போட்டி
- வருடாந்த சுற்றுலா நடவடிக்கைகள்

எமது மனிதவள முகாமைத்துவ வழிமுறைகள் சேவையாளர் மத்தியில் உந்துசக்தியை வழங்குவதை இலக்காகக் கொண்டிருந்தன. இதன்பலனாக, உச்சக்கட்ட உற்பத்தி, விசுவாசம், நிறுவனத்திற்கான அர்ப்பணித்த சேவை என்பன பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

## KPL உம் சமூகமும்

கடந்த சில வருடங்களாக பெருந்தோட்டத்தைச் சுற்றி வசிக்கும் விவசாயிகள், தங்களது கால்நடைகளை தென்னந் தோட்டங்களில் மேயவிட்டு நன்மை பெற்றுள்ள அதேசமயத்தில், கால்நடைகளின் சாணியில் இருந்து சேதனப் பசளையையும், அவை மேயும் போது நச்சு மரங்களும், புல் பூண்டுகளும் உண்ணப்பட்டு அழிக்கப்படுவதனால் அதன் நன்மையையும் KPL பெற்று வந்துள்ளது. அதேவேளை, பால் உற்பத்தியும் அதிகரிப்பதோடு, கால்நடைகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றது. அருகிலுள்ள கிராமங்களில் வாழும் விவசாயிகளுக்கு பணப் பயிர்களையும் ஓரளவு நிரந்தர பயிர்களையும் செய்கை பண்ணுமாறு நாம் ஆலோசனை விடுத்துள்ளோம். இத்தயை ஊக்க நடவடிக்கை மூலம் அவர்களின் குடும்ப வருமானத்தை அதிகரிக்கும் அதேவேளையில், விவசாய தேசிய உற்பத்தியும் அதிகரிக்கின்றது. பெருந்தோட்டங்களின் மண் அமைப்பில் உயிரியல் மற்றும் பௌதீக ரீதியிலான சமநிலை ஏற்படுத்தப்படுவதோடு, பாரம்பரிய விவசாய அறிவை பெருமளவு கொண்டுள்ள தொழிற்திறன்மிக்க சேவையாளரை இனங்கண்டு நிறுவனத்துடன் இணைத்துக் கொள்ளவும் வகை செய்கிறது.

கண்டி ஸ்ரீ தலதா மாளிகை வருடாந்த பெரஹர ஊர்வலத்திற்கு வருடா வருடம் நிறுவனம் கொப்பராவை வழங்குகிறது. உள்ளூர் விகாரைகள், தேவாலயங்களின் கலாசார நிகழ்வுகளுக்கும் இந்த உதவி வழங்கப்படுகின்றது. பாடசாலைகளும் பல்வேறு உதவிகளையும் பெற்றுள்ளன. எமது சகல நடவடிக்கைகளிலும் நிலைபேறான தன்மையின் பெறுமானத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. சரியான முகாமைத்துவம் கொண்ட வர்த்தக அல்லது பெருந்தோட்ட நடவடிக்கை, பொருளாதார, சமூக, சூழல் பாதுகாப்பு நிலைபேற்றுத் தன்மையைக் கொண்டிருப்பது அவசியமாகும். பெருந்தோட்ட நிறுவனமான KPL பொருளாதார ரீதியில் தொடர்ந்து நிலைபெறக்கூடிய விவசாயத்தில் ஈடுபட்டிருப்பதுடன், சூழல் பாதுகாப்பு உயிரியல் பன்முகத் தன்மையின் அபிவிருத்தி, அதன் சேவையாளர்கள் மற்றும் எமது நாட்டு மக்கள் ஆகியோரின் நலனை நிச்சயித்தல் என்பனவற்றிலும் கவனம் செலுத்தியுள்ளது.

# இடர் முகாமைத்துவம்

ஏனைய நிறுவனங்களைப் போன்று குருநாகல் பெருந்தோட்ட நிறுவனமும் பல்வேறு இடர்களை எதிர்நோக்கியுள்ளது. பெருந்தோட்டத்துறைக்கே உரிய விசேட இடர்களும் மேலதிகமாக உள்ளன. இந்த விசேட இடர்கள் இறப்பர், தென்னை, ஊடுபயிர்கள் என்பனவற்றின் செய்கை மற்றும் பதனிடல் என்பனவற்றுடன் இணைந்துள்ளதாகும். திட்டவட்டமான நிதித்துறை மற்றும் செயற்பாடு, கட்டுப்பாட்டு வழிமுறைகள் உரிய முறையில் இடம்பெறுவதை நிச்சயிக்கவென முகாமைத்துவ இடர், வர்த்தக இடர்களின் முகாமைத்துவம் சம்பந்தமாக நிறுவனத்தின் முகாமைத்துவக் குழுவுடன் இணைந்து பணிப்பாளர் சபையினர் விசேட கவனம் செலுத்தியுள்ளனர். உள்ளகக் கணக்காய்வாளர்களும், முகாமைத்துவக் குழுவினரும், காலத்திற்குக் காலம் இதற்கான வழிமுறைகளை மீளாய்வு செய்துள்ளனர். பங்குதாரர்களின் முதலீட்டையும், சொத்துக்களையும் பாதுகாப்பதற்கென இடர்கள் சம்பவிப்பதைக் குறைக்கவென இந்த மீளாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## இடர் கலாசாரம்

காத்திரமான இடர் முகாமைத்துவ வழிமுறையை ஏற்படுத்தவென பணிப்பாளர் சபையினர் தங்களது நிலைமையை இனங்கண்டுள்ளனர். இத்தகைய வழிமுறையின் முக்கியத்துவத்தை வற்புறுத்தும் வகையில் இந்த நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. தார்மீகக் கொள்கைகளை கடைப்பிடித்து அர்ப்பணித்துப் பணி புரிவதில் முகாமைத்துவம் முக்கியத்துவம் அளித்துள்ளது. பங்குதாரர்களின் நிலைமைக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தலைமைத்துவத்தினருடன் இணைந்து சேவையாளர்களும், பணிப்பாளர் சபையினரின் தார்மீகக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தை இனங்கண்டுள்ளனர்.

## இடர்களை இனங்காணுதல்

நிறுவனத்தின் அமைப்பினுள் இடர் கலாசாரத்தை உருவாக்கவும், சேவையாளர் மத்தியில் இடர் விழிப்புணர்ச்சியைப் போதியளவு ஏற்படுத்தவும், அதன் உயர் முகாமைத்துவம் அர்ப்பணித்து நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. உள்ளக இடர்களை இனங்காணவென புதியதொரு வகையான அணுகுமுறையை நிறுவனம் கடைப்பிடிக்கிறது. இதன் காரணமாக, செயற்படு மட்ட சேவையாளர்களும் தங்களது சேவைக்குட்பட்ட பகுதியில் ஏற்படும் இடர்களை இனங்காண்பதில் ஊக்கமளிக்கப்பட்டுள்ளனர். வெளிவாரி இடர்களை இனங்காணவென, வெளிக்கள நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் உயர் முகாமைத்துவம் எப்போதும் அவதானத்துடன் செயற்பட்டுள்ளது. பல்வேறு இடர்களை நிறுவனம் எதிர்நோக்கியுள்ள போதிலும், பெருந்தோட்டத்துறை சம்பந்தமான சில இடர்கள் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் பொதுவானவை ஆகும். இந்த இனங்காணப்பட்ட இடர்கள் தீவிர கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கென வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

## செயற்பாட்டு இடர்கள்

எமது முக்கிய பயிரான தென்னை, நிறுவனத்தின் அதிகரித்த வருமானத்தைத் தரும் பிரதான பயிராகவுள்ளது. தேசிய உற்பத்தியில் 70 சதவீதமான பங்கு உள்ளூரிலேயே பாவிக்கப்படுகின்றது. எனவே, கைத்தொழில் துறைக்கென 30 சதவீதமான பங்கே எஞ்சியுள்ளது. இதன் காரணமாக, அதிகரித்த அறுவடை நிலைமை, குறைந்தளவு வருடாந்த மொத்த உற்பத்திக்கு வழிவகுத்துள்ளதை அடுத்து, சந்தையிலும் ஏற்றத் தாழ்வுகள் உருவாக்கப்பட்டுள்ளன. உயர் தரம் கொண்ட தேங்காய்களின் உற்பத்தி, அறுவடையில் நிராகரிக்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கையை இயன்றளவு குறைத்தல் என்பன காரணமாக கொள்வனவாளர் மத்தியில் எமது நிறுவனத்திற்கு கௌரவம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, தெங்கு அபிவிருத்தி அதிகார சபையினால் நடத்தப்பட்ட ஏலவிற்பனையில் குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்திற்கு உயர் மட்ட தேறிய விற்பனை சராசரி கிடைத்துள்ளது. சந்தையில் உயர்மட்டப் போட்டியை உருவாக்கவென, உள்ளூர் கொள்வனவாளர் அடித்தளம் ஒன்றை நிறுவனம் உருவாக்கியுள்ளது. அதிகரித்த அறுவடை காலங்களில் தேங்காய் விற்பனை சம்பந்தமாக இந்த நடவடிக்கை வெற்றியை அளித்துள்ளது. சேகரிக்கும் இடங்களுக்குச் செல்வதற்கான சிறந்த பாதை, தேங்காய் உரிப்பவர்களுக்கு வசிப்பிட வசதிகள், மோசமான சந்தர்ப்பங்களில் தேங்காய்களைக் கொண்டு செல்வதில் வெளிக்கள போக்குவரத்து வசதி என்பனவும் வழங்கப்பட்டன. தேங்காய்களைக் கொண்டு செல்வதற்கென வாகனங்களில் ஏற்றுவதில் கடைப்பிடிக்கப்பட்ட விட்டுக்கொடுக்கும் தன்மை, கொள்வனவாளர் மத்தியில் சிறந்த மதிப்பைப் பெற்றுள்ளது. வாடிக்கையாளர் நட்புறவைக் கொண்ட விநியோகஸ்தர் என்ற பெருமையையும் நிறுவனம் பெற்றுள்ளது.

தற்போது அடிக்கடி ஏற்படும் சீரற்ற காலநிலை தெங்குச் செய்கை உட்பட சகல விவசாயப் பயிர்ச் செய்கையையும் பெரிதும் பாதித்துள்ளது. ஒருபுறத்தில் நீண்டகால வறட்சி, மறுபுறத்தில் கடும் மழை, பெரு வெள்ளம் என்பன விவசாய அறுவடையைப் பெரிதும் பாதித்துள்ளன. மண்ணின் ஈரலிப்புத் தன்மையைப் பாதுகாக்கவும், மண்ணை பாதுகாக்கவுமென நிறுவனம் சிறந்த விவசாய வழிமுறைகளைக் கடைப்பிடித்து வருகிறது. சேதனப் பசளையின் உபயோகம், தேங்காய் மட்டையை நிலத்தில் புதைத்தல், வடிகாண்களின் அபிவிருத்தி என்பன இவற்றுள் சிலவாகும். காலநிலை மாற்றம் காரணமாக ஏற்பட்ட மோசமான நிலைமையினால் இறப்பர் மரங்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. மோசமான காலநிலை காரணமாக இறப்பர் மரங்கள் இறப்பதை தவிர்ப்பதற்கென TRI யின் பரிந்துரைகள் உட்பட புத்திசாதுரியமான விவசாய வழிமுறைகளை நிறுவனம் கடைப்பிடித்து வருகிறது.

## தீங்கு விளைவிக்கும் பூச்சிகளும் நோய்களும்

பெருந்தோட்டங்களில் காணப்படும் தீங்கு விளைவிக்கும் நோய்ப் பூச்சிகள் என்பனவற்றோடு மேலும் ஐந்து பிராணிகளும் நோய்களும் இணைக்கப்பட்டுள்ளன. உயர்தர தேங்காய்களின் உற்பத்திக்கு இவை மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பிட்ட ஒரு தீய பூச்சிகளுக்கு இதுவரை தடுப்பு மருந்து எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே, பாதிக்கப்பட்ட மரத்தை அழிப்பதே நிறுவனத்திற்கு உள்ள ஒரே வழியாகும். இதனடிப்படையில் அந்த நோய் குறிப்பிட்ட சுற்றாடலிலிருந்து அழிக்கப்படுகின்றது. இதன் மூலம் நோய் பரவுவதையும் தடுக்க முடியும். அதிஷ்டவசமாக இத்தகைய கட்டுப்பாட்டு வழிமுறையை தெங்கு அபிவிருத்தி அமைச்சு, மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை என்பன இதனைப் பாராட்டியுள்ளன. இந்த ஸ்தாபனங்கள் மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக, நாட்டின் தென் பகுதியில் இந்த நோய் பரவுவது தடுக்கப்பட்டுள்ளது. குறைந்த அளவிலான இடரையே நிறுவனம் எதிர்நோக்கியுள்ள போதிலும், அதன் ஊழியர்கள் மத்தியில் நோய்களை இனங்காணவென போதியளவு அறிவையும், அனுபவத்தையும் நாம் வழங்கியுள்ளோம். தென்னை மரங்களுக்கு ஏற்படும் மற்றொரு நோயும் கடைப்பிடிக்கப்பட்ட உயிரியல் வழிமுறைகளின் அடிப்படையில் வெற்றிகரமாக ஒழிக்கப்பட்டுள்ளது. தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் வழிகாட்டலில் எமது ஆய்வுகூடங்களில் நாம் மேற்கொள்ளும் ஆராய்ச்சிகளின் பலனாக தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை ஒழித்துக் கட்டுவதற்கான தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அயலில் உள்ள தென்னந்தோட்ட சொந்தக்காரர்களுக்கு

இத்தகைய மருந்து வகைகள் நியாயமான விலையில் விற்கப்படுகின்றன. தீவிர கண்காணிப்பு, அனுபவம் மிக்க வெளிக்கள சேவையாளர்களின் நடவடிக்கை என்பன காரணமாக, தென்னை மரங்களுக்கு ஏற்படும் நோய் ஆரம்பத்திலேயே கண்டுபிடிக்கப்படுவது முக்கிய அம்சமாகும். இதனையடுத்து கட்டுப்பாடு, முற்றாக ஒழிப்பு என்பன சம்பந்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. வெளிக்கள ஊழியர்களுக்கு பயிற்சி அளித்து, அவர்களது அறிவை தொடர்ந்து தரமுயர்த்துவதில் தீவிர முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. அவர்களுக்கான பயிற்சி தென்னை ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படுவது முக்கியமான விடயமாகும்.

## பயிர் பாதுகாப்பு

தீ, பெருவெள்ளம் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் போன்ற இடர்களைத் தவிர அதிக எண்ணிக்கையில் தேங்காய்களைக் களவாடும் நடவடிக்கையினாலும் தெங்குச் செய்கை பெரிதும் பாதிக்கப்படுகிறது. உயர்மட்ட பாவனைப் பொருளாக தேங்காய்கள் இருப்பதே இதற்கான காரணமாகும். பல பிரதேச செயலாளர் பிரிவுகளில் காணப்படும் சொற்ப எண்ணிக்கையான ஏக்கர்களைக் கொண்ட சிறிய தோட்டங்களில் தேங்காய்கள் களவாடப்படுவதைத் தடுப்பதற்கு உயர்மட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் அவசியமாகும். உச்சக்கட்ட மாதாந்த தேங்காய் அறுவடை 90 சதவீதத்திற்கு மேற்கொள்ளப்படுகிறது. இதன் காரணமாக, விழும் தேங்காய்களின் வீதமும் குறைவடைந்துள்ளது. மாதம் இரு முறை தேங்காய்களைப் பறிப்பதனால், விழும் தேங்காய்களின் எண்ணிக்கை அதிகரிப்பதை அவதானிக்க முடிகிகின்றது. இதன் காரணமாகவே, தேங்காய்களைக் களவாடுவதில் யார் ஈடுபட்டுள்ளனர், தென்னந் தோட்டங்களைச் சுற்றி வேலி அமைக்க தீவிர கண்காணிப்பு, அத்தியட்சகர்கள், உதவி அத்தியட்சகர்கள், வெளிக்கள அதிகாரிகள், உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்கள் ஆகியோரின் நேரடி மேற்பார்வை காரணமாக தேங்காய் களவாடப்படுவது குறைவடைந்துள்ளது. கீழே விழுந்த தேங்காய்களைச் சேகரிக்கும் காவலாளிகளுக்கான ஊக்கக் கொடுப்பனவுகளும், தேங்காய் சேகரிப்பு மற்றும் தேங்காய் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஊக்கமளித்துள்ளது. இயற்கை இடர்கள் மற்றும் களவாடல், தீ என்பனவற்றோடு இணைந்த இடர்களை நீக்குவதில் முக்கிய நடவடிக்கையான கொண்டு செல்லப்படும் தேங்காய்களுக்கு காப்புறுதி செய்வதை நிறுவனம் முக்கிய நடவடிக்கையாக மேற்கொண்டுள்ளது.

## தொழிலாளர் பற்றாக்குறை

தென்னந் தோட்டங்கள் தேங்காய் பறித்தல் சம்பந்தமாக தொழிற்திறன் பெற்ற தொழிலாளர்களின் கடும் பற்றாக்குறையை எதிர்நோக்கியிருந்தன. தேங்காய் உரித்தல் போன்ற தொழில்களுக்கு தொழிலாளர் பற்றாக்குறை காணப்பட்டது. எனவே, தொழிற்திறன் அற்ற வேலையாட்களும் பற்றாக்குறையாக இருந்ததனால், நாளாந்த முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. தேயிலை மற்றும் இறப்பர் போன்றல்லாது தென்னந் தோட்டங்களில் அங்கு தங்கியிருந்து தொழில் புரியும் வேலையாட்கள் இல்லை. எனவே, உள்ளூர் தொழிலாளர்களையே வேலைக்கமர்த்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

பெருந்தோட்டங்களில் களை பிடுங்குதல், தேங்கி நிற்கும் நீரை அகற்றல், பசளையிடல் போன்ற நடவடிக்கைகளுக்கு, நிறுவனம் இயந்திரங்களை உபயோகிக்க ஆரம்பித்ததோடு, தோட்டங்களை மிகத் திறமையாகப் பராமரிக்கவென இரசாயனங்களை உபயோகித்து களை அகற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எமது தொழிலாளர்களை உபயோகித்து உச்சக்கட்ட விளைச்சலைப் பெறுவதே எமது நோக்கமாக இருந்துள்ளது. அதேவேளை, பொருத்தமான இயந்திரசாதனங்களை உபயோகிப்பதன் மூலம் அதி உயர் விளைச்சல் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. வதிவிட வசதி, மின் விநியோகம், நீர் விநியோகம், சலுகை விலையில் தேங்காய்களை வழங்கல், தொழிலாளர்களின் செயற்பாட்டின் அடிப்படையில் ஊக்கக் கொடுப்பனவு, அதிகரித்த பணிக்கொடை, போனஸ் கொடுப்பனவு, பிள்ளைகளின் கல்விக்கென புலமைப் பரிசில்கள், அத்தியாவசியத் தேவைகளுக்கென பல்வேறு கடன் வசதித் திட்டங்கள், இடர் நிவாரணக் கடன்கள், தொழிலாளருக்கான கொடுப்பனவுகளை உரிய காலத்தில் வழங்குதல், பயிர்ச்சி அளித்தல், நட்புறவுடன்கூடிய ஒழுக்க அடிப்படையிலான வேலைத்தலங்கள் என்பன காரணமாக, நிறுவனத்துடன் தொழிலாளர்கள் சுய விருப்பத்தின் அடிப்படையில் தொடர்ந்து கடமையாற்ற வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

## காணிச் சுவீகரிப்பிலுள்ள இடர்

தேசிய ரீதியிலான தேவைகள், பொதுத் தேவைகள், சட்டபூர்வப் பிரகடனங்கள் என்பனவற்றுக்கு உற்பத்திசார் காணியைச் சுவீகரிப்பதில் நிறுவனம் பல்வேறு இடர்களை எதிர்நோக்கியுள்ளது. 1992 இல் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்த காணியில் 20 சதவீதமான காணியை குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் இழந்துள்ளது என்பது குறிப்பிடப்பட வேண்டும்.

## தொழிற்சங்கங்கள், சமூக மற்றும் சுற்றாடலில் ஏற்படும் மாற்றங்கள்

கைத்தொழில் துறை ஊழியர்களுடன் ஒற்றுமை இருப்பதன் அவசியத்தை நன்கு உணர்ந்து கொண்ட குருநாகல் பெருந்தொட்ட நிறுவனம், தொழிற்சங்கங்களுடனும் KPL அங்கத்துவம் பெற்றுள்ள இலங்கை தொழில் அதிபர் சம்மேளனத்துடனும் கூட்டு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது. உரிய காலத்தில் சம்பளம் மற்றும் சட்டபூர்வக் கொடுப்பனவுகள் வழங்கப்படுதல், தொழிலாளர் நட்டஈடு சம்பந்மான விடயங்களில் உரிய, உடனடி கவனம் செலுத்தப்படல் மற்றும் தொழிலாளர் சம்பந்தமான விடயங்கள் உரிய காலத்தில் தீர்த்து வைக்கப்படுதல் காரணமாக கைத்தொழில்துறை ஒற்றுமை பலமடைந்துள்ளது.

## இடர் கண்காணிப்பும் மீளாய்வும்

மதிப்பிடல் சம்பந்தமான வழிமுறையும், நிறுவனத்தின் இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளும் உள்ளக மற்றும் வெளிவாரி மாற்றங்கள் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்வதில் கடைப்பிடிக்க வேண்டிய கட்டுப்பாடுகள் பற்றிய பலமிழந்த நிலையை இனங்காணும் முக்கியத்துவம் வற்புறுத்தப்பட்டுள்ளது. தற்சமயம் மேற்கொள்ளப்படும் கண்காணிப்பு நடவடிக்கைகள் அல்லது தனியான மதிப்பீடுகள் என்பனவற்றுக்கான இறுதிப் பொறுப்பு உயர் முகாமைத்துவத்திலும், கணக்காய்வுக் குழுவிலும் தங்கியுள்ளது. எமது உள்ளகக் கணக்காய்வுக் குழுவினர், ஒவ்வொரு பெருந்தோட்டத்திற்கும் சென்று உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் பற்றி தங்களது அவதானங்களை கணக்காய்வுக் குழுவுக்கும் சிரேஷ்ட முகாமைத்துவக் குழுவிற்கும் அறிவித்து வருகின்றனர். இடர் முகாமைத்துவ வழிமுறைகளின் உன்னத நிலைப்பாடு பற்றி வருடா வருடம் மீளாய்வு செய்யப்படும். இந்தக் காலகட்டத்தில் சம்பந்தப்பட்ட தகவல்கள் இனங்காணப்பட்டு, இடர் முகாமைத்துவத்திற்குப் பொறுப்பாகவுள்ளவர்களுக்கு உதவும் வகையில் அவர்களுக்கு அறிவிக்கப்படுகின்றன.

# கூட்டிணைப்பு ஆளுமை

குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினர் கௌரவம், கூட்டிணைப்பில் பக்கம் சாராமை, வெளிப்படையாக நடவடிக்கை மேற்கொள்ளல், கணக்கியல் தன்மை ஆகிய கொள்கைகளைக் கடைப்பிடித்து நடவடிக்கை மேற்கொள்கின்றனர். இத்தகைய முக்கியமான கொள்கைகள், நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றும் சகல தரப்பினருடனும் பலமான உறவை மேற்கொள்ளவென உதவுகின்றன. தார்மீக தரத்திற்கு அமைய நிறுவனத்தின் அடிப்படைகள் மேற்கொள்ளப்படுவதோடு, அதன் பங்குதாரர்களின் நலனைக் கருத்திற் கொண்டு சகல நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன. இத்தகைய அர்ப்பணிப்பு, சரியான பங்களிப்பு, அமைப்பு, தகவல் பரிமாற்றம் என்பனவற்றோடு இணைந்துள்ளது. இவையனைத்தும் சட்டபூர்வ இணக்கத்தையும், வர்த்தகத்தின் நிலைபேறான தன்மையையும் நிச்சயிக்கும் வகையில் கொள்கைகள், வழிமுறைகள், செயல்முறைகள் என்பனவற்றில் அடங்கியுள்ளன. இவற்றின் மூலம் வர்த்தக நடவடிக்கையின் பெறுமானமும் அதிகரித்துள்ளது.

### பணிப்பாளர் சபை

நிறுவனத்தின் சகல நடவடிக்கைகளுக்கும் பணிப்பாளர் சபையினரே பொறுப்பாகவும், இறுதி பதிலளிப்பவராகவும் உள்ளனர். கூட்டிணைப்பு ஆளுமை வழிமுறைகளுக்கான முக்கிய அமைப்பாகவும் பணிப்பாளர் சபை உள்ளது.

### பொறுப்புணர்வு

முக்கிய கொள்கைகள், பிரதான நோக்கங்கள் என்பனவற்றை பணிப்பாளர் சபை தீர்மானிப்பதோடு அவை நடைமுறைக்கிடப்படுவதையும் நிச்சயிக்கிறது. நிதித்துறைத் தகவல்களின் நேர்மைத்தன்மை, நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு வழிமுறைகளின் தாக்கம் என்பனவற்றின் இறுதிப் பொறுப்பும் பணிப்பாளர் சபையைச் சார்ந்ததாகும்.

### அமைப்பு

பணிப்பாளர் சபையில் தலைவர் உட்பட 07 நிறைவேற்று அதிகாரம் பெறாத நியமனம் பெற்ற பணிப்பாளர்கள் உள்ளனர்.

### பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்

மாதாந்த அடிப்படையில் சபைக் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. இத்தகைய கூட்டங்களில் நிறுவனம் சம்பந்தமான முக்கிய தீர்மானங்கள், வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் மீளாய்வு, சகல நடவடிக்கைகளினதும் முன்னேற்றம், மீள் செலவின மற்றும் மூலதன நடவடிக்கைகள் என்பன ஆராயப்படுகின்றன. ஒவ்வொரு கூட்டத்திற்கும் முன்னராக சபை அங்கத்தவர்களுக்குப் பொருத்தமான ஆவணங்கள் வழங்கப்படுகின்றன. 2015 ஆம் ஆண்டில் இந்தக் கூட்டங்களுக்கு பணிப்பாளர் சபையினரின் வருகை கீழே தரப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| திரு. ஏ.எம்.பியசோம உபாலி<br>தலைவர் | | 10/10 |
| திரு. டீ.பீ.விஜேசிங்க<br>நிறைவேற்றுப் பணிப்பாளர் | (பதவி விலகல்<br>2016.10.06) | 09/10 |
| திரு. டீ.எம்.பண்டாரநாயக்க<br>செயலாற்றுப் பணிப்பாளர் | | 10/10 |
| திரு. எச்.ஏ.என்.சமன் குமார<br>திறைசேரிப் பிரதிநிதி | | 10/10 |
| திரு. சுனில் எஸ்.அலஸ்<br>பணிப்பாளர் | (பதவி விலகல்<br>2016.10.06) | 08/10 |
| திரு. டப்ளியூ.எம்.டீ.பி.அபேரத்ன<br>பணிப்பாளர் | | 09/10 |
| திரு. டப்ளியூ.ஏ.டீ.டீ.எம்.பிரியந்த<br>பணிப்பாளர் | (பதவி விலகல்<br>2016.10.06) | 10/10 |

### கணக்காய்வுக்குழு

ஆண்டறிக்கையின் 43 ஆம் பக்கத்தில் “கணக்காய்வுக் குழுவின் அறிக்கை” என்ற தலைப்பின் கீழ் இடம்பெற்ற விடயத்தைப் பார்க்கவும்.

### சட்டபூவத் தேவைகளைக் கடைப்பிடித்தல்

நிறுவனத்தின் நினைவுக் குறிப்பு (Memorandum), ஆட்டிகல்ஸ் ஒப் அசோஸியேஷன் என்பனவற்றோடு, அரச உடைமை வர்த்தக நிறுவனங்களுக்குப் பொருத்தமான சட்டங்களும், பிரமானங்களும் நிறுவனம் கடைப்பிடிப்பதை நிச்சயிப்பதற்கு பணிப்பாளர் சபை சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது. நிறுவனத்தின் நிதி அறிக்கைகள் அனைத்தும் இலங்கை கணக்கியல் தரங்களைக் கடைப்பிடித்து தயாரிக்கப்படுகின்றன என்பதை சபை நிச்சயிப்பதோடு, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைகளுடன் இணங்கியிருப்பதை நிச்சயிப்பதும் சபையின் கடப்பாடாகும்.

# கணக்காய்வுக்குழுவின் அறிக்கை

நிறுவனத்தின் கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர்கள் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்டுள்ளனர். கணக்காய்வுக் குழுவில் மூன்று நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளர்கள் இடம்பெற்றுள்ளனர்.

தேவைக்கேற்ற வகையில் கணக்காய்வுக்குழுக் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. திறைசேரியின் பிரதிநிதியாகவுள்ள பணிப்பாளர் சபை அங்கத்தவர், கணக்காய்வுக் குழுவின் தலைவராக உள்ளார். தலைவர், நிறைவேற்றுப் பணிப்பாளர், செயற்பாட்டுப் பணிப்பாளர், பிரதம நிறைவேற்று அதிகாரி, சிரேஷ்ட முகாமையாளர்கள், பிரதேச அத்தியட்சகர்கள் ஆகியோர் அழைப்பின் பேரில் இந்தக் கூட்டங்களில் கலந்து கொள்கின்றனர். கூட்டங்களை கணக்காய்வு முகாமையாளர் ஒழுங்கு செய்வது வழக்கமாகும்.

கீழே குறிப்பிட்ட சபை அங்கத்தவர்கள் 2015 ஏப்ரல் 07 ஆம் திகதியன்று கணக்காய்வுக் குழுவிற்கென நியமிக்கப்பட்டுள்ளனர். 2015 ஆம் ஆண்டில் அவர்கள் நான்கு தடவைகள் கூட்டத்தை நடத்தியுள்ளனர். அதற்கான விபரம் வருமாறு:

| | 30.04.2015 | 23.07.2015 | 23.09.2015 | 18.11.2015 | சமூகம் |
|---|---|---|---|---|---|
| திரு. எச்.ஏ.என்.சமன் குமார<br>தலைவர் - கணக்காய்வுக் குழு<br>பணிப்பாளர் / திறைசேரிப் பிரதிநிதி | ✓ | ✓ | ✓ | ✓ | 04/04 |
| திரு. சுனில் எஸ்.அலஸ்<br>பணிப்பாளர்<br>(பதவி விலகல் 2016.10.06) | ✓ | ✓ | ✓ | ✓ | 04/04 |
| திரு. டப்ளியூ.எம்.டீ.பி. அபேரத்ன<br>பணிப்பாளர் | ✓ | ✓ | ✓ | ✓ | 04/04 |

### கணக்காய்வுக் குழுவின் பிரதான கடமையும் பொறுப்பும்

நிறுவனத்தின் நிதி அறிக்கைகள் மற்றும் நிதித்துறை அறிக்கையிடல் வழிமுறைகள் என்பன தொடர்பான தரம் மற்றும் நேர்மை சம்பந்தமாக கண்காணிப்பை மேற்கொள்வது கணக்காய்வுக் குழுவின் பிரதான கடமையாகும். நிதி அறிக்கைகளின் தயாரிப்பு, சமர்ப்பணம், அதில் தெரிவிக்கப்பட்ட விடயங்களின் போதிய உண்மைத்தன்மை என்பன அவதானிக்கப்பட்டுள்ளன. இலங்கை கணக்கியல் தரத்திற்கு அமைய இவை தயாரிக்கப்பட்டது என்பதும் முக்கியமானதாகும்.

நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளும், இடர் முகாமைத்துவமும் நிறுவனத்தின் சட்டபூர்வ மற்றும் சட்ட சம்பந்தமான தேவைகளைப் பூர்த்தி செய்கிறது என்பதை நிச்சயிப்பதற்கான பொறுப்புக்களையும் வழிமுறைகளையும் கண்காணிப்பது கணக்காய்வுக் குழுவின் பொறுப்பாகும். சுற்றுநிருபங்கள் காலத்திற்குக் காலம் பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்ட வழிகாட்டி நெறிகள் உட்பட சட்டபூர்வ தேவைகள் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதும் கணக்காய்வுக் குழுவினால் அவதானிக்கப்படுகிறது.


### நிதியாண்டின் போது ஏற்பட்ட முன்னேற்றம்

கணக்காய்வுக் குழுவின் நடவடிக்கைகள் அனைத்தும் ஒழுங்கான அடிப்படையில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கும் நடைமுறைக்குமென சமர்ப்பிக்கப்படுகின்றன.

கணக்காய்வின் எல்லைகளை மீளாய்வு செய்வதோடு, கணக்காய்வுக் குழு கணக்காய்வின் எல்லைகளையும் கண்காணிக்கிறது. அதன் நோக்கம் மற்றும் அதன் நடவடிக்கைகளின் தாக்கம் என்பனவும் அவதானிக்கப்படுகின்றன. எதிர்கால சுபீட்சத்தை முக்கியமாகக் கொண்டு KPL இன் நடவடிக்கைகளை கணக்காய்வுக் குழு மீளாய்வு செய்வது வழக்கமாகும்.

முகாமைத்துவத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக அது மேற்கொண்ட நடவடிக்கைகள் தற்சமயம் நடைமுறையிலுள்ள உள்ளகக் கட்டுப்பாடுகளின் தாக்கம் என்பனவும் வர்த்தகப் பிரிவுகளின் தலைவர்கள் / அத்தியட்சகர்கள் ஆகியோருடன் கலந்துரையாடப்பட்டு, சரியான வழிமுறைகள் பரிந்துரை செய்யப்படுகின்றன. KPL இன் 2015 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி அறிக்கைகள் மீது கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையும், அதற்கான முகாமைத்துவத்தினரின் பதில்களும் கணக்காய்வாளர்களுடனும், முகாமைத்துவத்தினருடனும் கலந்துரையாடப்பட்டு தவறுகளை சீராக்கவென தேவையான ஒழுங்குகள் தீர்மானிக்கப்பட்டன. உள்ளகக் கட்டுப்பாட்டுப் பிரிவினால் இனங்காணப்பட்ட அதன் பலமற்ற தன்மை, தென்னந் தோட்டங்களில் இடம்பெறும் தவறுகள் என்பன பிரதம நிறைவேற்று அதிகாரியுடனும் அத்தியட்சகர்களுடனும் கலந்துரையாடப்பட்டன. இறுதியில் பணிப்பாளர் சபையின் நடவடிக்கைகளுக்கென பொருத்தமான பரிந்துரைகள் கொண்ட அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

உள்ளகக் கட்டுப்பாட்டுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட சேவைகளுக்கும், நிறுவனத்தின் தேவைகளையும், எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்ற அது மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கும் கணக்காய்வுக்குழு நன்றி தெரிவிக்கிறது. குழுவின் அங்கத்தவர்களினால் வழங்கப்பட்ட பங்களிப்பும், சேவையும் மிகுந்த பாராட்டுதலுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நிதித்துறை சம்பந்தமான விடயங்களில் அவர்கள் கொண்டுள்ள தகைமையும், அனுபவமும் நிறுவனத்தின் தொடர்ச்சியான வெற்றிக்கு பெறுமதி கொண்ட காரணிகளாக அமைந்துள்ளன.



**எச்.ஏ.என்.சமன் குமார**

தலைவர்

கணக்காயவுக் குழு



# நிதித்துறை அறிக்கை

பணிப்பாளர் சபையினரின் ஆண்டறிக்கை 46
அறிக்கை - பணிப்பாளர்களின் பொறுப்பு 49
அறிக்கை - வருமானத் தொகுப்பு 50
அறிக்கை - நிதி நிலைமை 51
அறிக்கை - பங்குகள் மாற்றம் 52
அறிக்கை - காசுப்பாய்ச்சல் 53
கணக்கியல் கொள்கைகள் 54
நிதி அறிக்கைகள் மீதான குறிப்புக்கள் 67
நிதி அறிக்கை மீதான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை 84
கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை மீதான கருத்துக்கள் 100
பத்து வருடகால தொகுப்பு 104

# பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் பணிப்பாளர்கள், 2015 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதி ஆண்டிக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகளுடன் அவர்களது ஆண்டறிக்கையைச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றனர்.

## பொது

1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க அரச கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டுத்தாபனங்கள், அரச உடைமை வர்த்தக நிறுவனங்கள் என்பனவற்றை உரிமை மாற்றும் ஏற்பாடுகளின் கீழ் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மட்டுப்படுத்தப்பட்ட பொறுப்புக்களைக் கொண்ட நிறுவனமாக கூட்டிணைக்கப்பட்டது. அது, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் PB 1319 என்ற புதிய பதிவிலக்கத்துடன் மீள் பதிவு செய்யப்பட்டது. நிறுவனத்தின் பதிவுபெற்ற அலுவலகம், குருநாகல், தம்புள்ள வீதி, 80 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளது. தனி பங்குதாரர் நிறுவனமாக கம்பனி தொடர்ந்தும் இருந்து வருகிறது. இலங்கை அரசாங்கத்தின் திறைசேரியின் செயலாளர் பங்குதாரராக உள்ளார்.

## முக்கிய நடவடிக்கைகளும் வணிகத்தின் வகையும்

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் நிறுவனத்தின் முக்கிய நடவடிக்கைகள் - தென்னை, இறப்பர், ஏனைய விவசாய உற்பத்திப் பயிர்களின் பயிர்ச்செய்கை, விவசாய உற்பத்திப் பொருட்களின் செய்கைகள், விற்பனை என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. நிறுவனத்தின் பெருந்தோட்டங்கள் அனைத்தும் குருநாகல், கம்பஹா, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ளன. இவை அனைத்தும் 08 செய்கைகள் மேற்கொள்ளப்படும் பெருந்தோட்டங்களாப் பிரிக்கப்பட்டுள்ளன.

## தொடர்ந்து செயற்படும் வழிமுறை

எதிர்காலத்திலும் நிறுவனம் அதன் நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு தேவையான வளங்களைக் கொண்டுள்ளது என்பதில் பணிப்பாளர் சபையினர் மன நிறைவடைந்துள்ளதன் காரணமாக, நிதி அறிக்கைகள் “தொடர்ந்து செயற்படும் அடிப்படையில்” தயாரிக்கப்பட்டுள்ளன.

## நிதி அறிக்கைகளும் கணக்காய்வாளர் அறிக்கையும்

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு, பணிப்பாளர்களினால் கைச்சாத்திடப்பட்ட நிதி அறிக்கையும், அதேகாலப்பகுதிக்கான (2015 டிசம்பர் 31 உடன் முடிவடைந்த வருடம்) கணக்காய்வாளர் அறிக்கையும் 50 தொடக்கம் 97 ஆம் பக்கம் வரையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

## கணக்கியல் கொள்கைகள்

நிதி அறிக்கையைத் தயாரிப்பதில் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கியற் கொள்கைகள், இந்த அறிக்கையின் 54 ஆம் பக்கத்திலிருந்து 66 ஆம் பக்கங்கள் வரை மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. நிறுவனத்தின் முந்திய வருட அறிக்கை தயாரிக்கப்படுவதில் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கியல் கொள்கைகளில் மாற்றம் எதுவும் இல்லை.

## வருமானம்

நிறுவனத்தின் 2015 ஆம் ஆண்டுக்கான வருமானம் ரூபா 492 மில்லியன் (2014 - ரூபா 577 மில்லியன்) ஆகும். ஆண்டுக்கான ஏனைய செயற்படு வருமானம் ரூபா 122 மில்லியன் (2014 - ரூபா 96 மில்லியன்).

பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டி வருமானம் ரூபா 28 மில்லியன் (2014 - 31 மில்லியன்) ஆகும். நிதி அறிக்கையின் தேறிய நிதி வருமானம் என்ற 08 ஆம் இலக்க குறிப்பில் இது காட்டப்பட்டுள்ளது.

## பெறுபேறுகளும் ஒதுக்கீடுகளும்

2015 ஆம் ஆண்டின் நிறுவனத்தின் வரிக்குப் பிந்திய வருமானம் ரூபா 156 மில்லியன் (2014 - 207 மில்லியன்). நிறுவனத்தின் நிதித்துறைப் பெறுபேறுகள் பரந்த வருமான அறிக்கையில் தரப்பட்டுள்ளன.

| | 2015<br>ரூபா மில்லி. | 2014<br>ரூபா மில்லி. |
|---|---|---|
| தென்னை வருமானம் | 179.98 | 247.22 |
| இறப்பர் வருமானம் / (நட்டம்) | (6.95) | (2.36) |
| ஏனைய பயிர்கள் - இலாபம் | 2.47 | 5.94 |
| மொத்த இலாபம் | 175.50 | 250.80 |
| செயற்படு நடவடிக்கைகள் மூலமான ஏனைய இலாபம் | 121.73 | 95.92 |
| நிர்வாகச் செலவினம் | (132.94) | (131.15) |
| செயற்படு நடவடிக்கைகள் மூலமான இலாபம் | 164.29 | 215.57 |
| தேறிய நிதித்துறை வருமானம் | | |
| வட்டி வருமானம் | 28.11 | 31.35 |
| வட்டிச் செலவினம் | (26.48) | (26.01) |
| | 1.63 | 5.34 |
| வருமான வரிக்கு முந்திய இலாபம் | 165.92 | 220.91 |
| வருமான வரிச் செலவினம் | (10.01) | (13.78) |
| ஆண்டுக்கான வருமானம் | 155.91 | 207.13 |

## மூலதனச் செலவினமும் முதலீடுகளும்

ஆய்வுக்குட்பட்ட நிதி ஆண்டில் ரூபா 135.17 மில்லியன் (2014 - 159.58 மில்லியன்) நிறுவனத்தின் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொகையில் ரூபா 98 மில்லியன் (2014 - 82 மில்லியன்) முதிர்வடையாத பெருந்தோட்டங்களில் செலவிடப்பட்டுள்ளன.

## குறுகியகால முதலீடுகள்

2015 டிசம்பர் 31 ஆம் திகதியன்று குறுகியகால முதலீடுகளாக மொத்தம் ரூபா 415 மில்லியனை நிறுவனம் கொண்டிருந்தது. (2014 - ரூபா 400 மில்லியன்) அரச வங்கிகளில் நிலையான வைப்புக்களாகவே இவை அமைந்திருந்தன. (இலங்கை வங்கி ரூபா 166 மில்லியன், மக்கள் வங்கி ரூபா 130 மில்லியன், தேசிய சேமிப்பு வங்கி ரூபா 119 மில்லியன்).

## கணிக்கப்பட்ட மூலதனம்

பங்குகள் வழங்கப்பட்டதன் அடிப்படையில் நிறுவனம் பெற்றுக்கொண்ட மொத்தத் தொகையையே இது குறிக்கின்றது. 2015 டிசம்பர் 31 இல் நிறுவனத்தின் மொத்த கணிக்கப்பட்ட மூலதனம் ரூபா 200,000,010 ஆகும். இதில் 20,000,000 சாதாரண பங்குகளும் திறைசேரியின் செயலாளர் கொண்டுள்ள 01 தங்கப் பங்கும் அடங்கும். இந்த வருடத்தில் எத்தகைய பங்கு ஒதுக்கீடுகளும் இடம்பெறவில்லை.

## ஒதுக்கீடுகள்

2015 டிசம்பர் 31 இல் நிறுவனத்தின் ஒதுக்கீடுகள் கீழ்க்காணும் வகையில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டிருந்தன. இலாபத்தில் ரூபா 1,098 மில்லியன், மரம் சம்பந்தமான ஒதுக்கீடுகள் ரூபா 247 மில்லியன், ஏனைய ஒதுக்கீடுகள் ரூபா 15 மில்லியன் என்பனவாகும்.

## பணிப்பாளர் சபை

2015 ஆம் ஆண்டின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்கள் மாற்றப்பட்டுள்ளனர். ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் பதவி வகித்த பணிப்பாளர்களின் பெயர் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பெயர் | நியமனத் திகதி | பதவி விலகல் திகதி |
|---|---|---|
| டொக்டர் சுனில் ஜயசேகர<br>தலைவர் | 24.09.2013 | 28.01.2015 |
| திரு. பீ.ஜீ.அமரக்கோன்<br>நிறைவேற்றுப் பணிப்பாளர் | 24.09.2013 | 12.03.2015 |
| திரு. ஆர்.டப்ளியூ.எம்.ஜே. ஆர்.பெரேரா<br>செயற்பாட்டுப் பணிப்பாளர் | 24.09.2013 | 12.03.2015 |
| திரு. ஏ.பீ.குரும்பலபிட்டிய<br>திறைசேரிப் பிரதிநிதி | 24.09.2013 | 05.03.2015 |
| பேராசிரியர் டப்ளியூ.பீ.காமினி டி அல்விஸ் | 24.09.2013 | 12.03.2015 |
| திரு. ஜீ.வீ.ஏ.டப்ளியூ.டீ.கமாராச்சி | 24.09.2013 | 12.03.2015 |
| திரு. ஜே.தேவபிரான் | 24.09.2013 | 28.01.2015 |

| பெயர் | நியமனத் திகதி | பதவி விலகல் திகதி |
|---|---|---|
| திரு. ஏ.எம்.பியசோம உபாலி<br>தலைவர் | 29.01.2015 | |
| திரு. எச்.ஏ.என்.சமன் குமார<br>திறைசேரிப் பிரதிநிதி | 06.03.2015 | |
| திரு. சுனில் எஸ். அலஸ் | 06.03.2015 | பதவி விலகல் 06.10.2016 |
| திரு. டீ.பீ.விஜேசிங்க<br>நிறைவேற்றுப் பணிப்பாளர் | 13.03.2015 | பதவி விலகல் 06.10.2016 |
| திரு. டப்ளியூ.எம்.டீ.பீ.அபேரத்ன | 13.03.2015 | |
| திரு. டப்ளியூ.ஏ.டீ.டீ.எம்.பிரியந்த | 13.03.2015 | பதவி விலகல் 06.10.2016 |
| திரு. டீ.எம்.பண்டாரநாயக்க<br>செயற்பாட்டுப் பணிப்பாளர் | 26.03.2015 | |
| **புதிய நியமனங்கள்** | | |
| திரு. எச்.ஏ.பீதுஷித குமார டயஸ்<br>நிறைவேற்றுப் பணிப்பாளர் | 07.10.2016 | |
| திரு. ஆர்.சிட்னி குலதிலக | 07.10.2016 | |
| திரு. இந்துனில் அமரசிங்க | 07.10.2016 | |

## ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் ஈடுபாடு

ஒப்பந்தங்களில் நேரடியாகவோ, நேரடியற்ற வகையிலோ பணிப்பாளர்களுக்கு எத்தகைய ஈடுபாடுகளும் இல்லை.

## பணிப்பாளர்களின் பங்குரிமை

நிறுவனத்தின் பணிப்பாளரோ அல்லது அவரது கணவரோ / மனைவியோ நிறுவனத்தின் எந்தவொரு பங்கையும் கொண்டிருக்கவில்லை.

## கணக்காய்வுக் குழுக்கள்

2015 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் கணக்காய்வுக் குழுவில் சேவையாற்றியுள்ளனர்.

| | |
|---|---|
| திரு. எச்.ஏ.என்.சமன் குமார<br>பணிப்பாளர் / திறைசேரிப் பிரதிநிதி | |
| திரு. சுனில் எஸ். அலஸ்<br>பணிப்பாளர் | 2016.10.07 இல் பதவி விலகியுள்ளார். |
| திரு. டப்ளியூ.எம்.டீ.பீ.அபேரத்ன<br>பணிப்பாளர் | |

# பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை தொடர்ச்சி...

## வேலை வாய்ப்பு

வேலை வழங்கல் சம்பந்தமாக நிறுவனம் “சகலருக்கும் சம சந்தர்ப்பம்” என்ற கொள்கையைக் கடைப்பிடித்து வருகின்றது. சகல தீர்மானங்களும் “திறமை”க்கு முதலிடம் அளிப்பதை நிச்சயிக்கும் வகையில், தெரிவு, பயிற்சி, அபிவிருத்தி, பதவி உயர்வு சம்பந்தமான கொள்கைகளில் இது அடங்கியுள்ளது. இனம், மதம், அரசியல் கொள்கை, பால், மனநிலை, உடல்நிலை, விவாக அந்தஸ்து என்பனவற்றைக் கருத்திற் கொள்ளாது, சகலருக்கும் சம சந்தர்ப்பம் என்ற கொள்கையை நிறுவனம் சகல ஊழியர்கள் சம்பந்தமாகவும் கடைப்பிடித்து வருகிறது.

## நியதிக் கொடுப்பனவுகள்

நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டிய சகல வரிகளும், தீர்வைகளும், சகல கொடுப்பனவுகளும், சகல கட்டணங்களும் நிறுவனத்தின் சார்பில் செலுத்தப்பட வேண்டிய வரிகளும், நிறுவனத்தின் ஊழியர்களின் கொடுப்பனவுகளும், ஏனைய சகல நியதிக் கொடுப்பனவுகளும் உரிய தினத்தில் நிறுவனத்தினால் தங்களது அறிவுக்குட்பட்ட வகையில் செலுத்தப்பட்டுள்ளன என்பதை பணிப்பாளர்கள் இத்தால் உறுதிப்படுத்துகின்றனர்.

## அறிக்கைக்கான திகதியின் பின்னர் இடம்பெற்ற நிகழ்வுகள்

நிறுவனத்தின் கணக்கியலில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு நிகழ்வும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதைத் தவிர அறிக்கைக்கான திகதியின் பின்னர் இடம்பெற்றிருக்கவில்லை.

## கணக்காய்வாளர்கள்

2015 ஆம் ஆண்டிற்கான நிறுவனத்தின் கணக்குகள், கணக்காய்வாளர் திணைக்களத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன.

## ஆண்டறிக்கை

நிதித்துறை அறிக்கைகளை பணிப்பாளர் சபையினர் 2014 பெப்ரவரி 29 ஆம் திகதி அங்கீகரித்துள்ளனர்.

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

வருடாந்தப் பொதுக் கூட்டம், குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின், கொழும்பு 9, தெமட்டகொட, பேஸ்லைன் வீதி, இல.712/3 ஆம் இலக்க கொழும்பு அலுவலகத்தில் 2016 டிசம்பர் 21 ஆம் திகதி நடைபெறும். வருடாந்தப் பொதுக் கூட்டத்தின் அறிவித்தல் இத்துடண் இணைக்கப்பட்டுள்ளது

பணிப்பாளர் சபைக்காகவும், சபையின் சார்பிலும்

**ஏ.எம்.பியசோம உபாலி**
தலைவர்

**எச்.ஏ.என்.சமன் குமார**
பணிப்பாளர் / திறைசேரிப் பிரதிநிதி

**கூட்டிணைப்பு ஆலோசனை சேவைகள் நிறுவனம்**
மட்டுப்படுத்தப்பட்ட செயலாளர்கள் -
குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம்
குருநாகல்

2016 நவம்பர் 24.

# பணிப்பாளர்களின் பொறுப்பு சம்பந்தமான அறிக்கை

நிதித்துறை அறிக்கைகள் தொடர்பான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள், கீழ்க்காணும் அறிக்கையில் தரப்பட்டுள்ளன. நிதி அறிக்கை சம்பந்தமாக கணக்காய்வாளர்கள் கொண்டுள்ள பொறுப்புக்கள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய தயாரிக்கப்பட்டு, கணக்காய்வாளர் அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

### நிதித்துறை அறிக்கையில் இடம்பெற்றுள்ள விடயங்களாவன:

விரிவான வருமானம் சம்பந்தமான அறிக்கை. இந்த அறிக்கை, நிறுவனத்தின் நிதியாண்டினது இலாப மற்றும் நட்டம் தொடர்பான நீதியான கருத்தை உண்மையின் அடிப்படையில் வெளியிடுகிறது.

### மற்றும்

நிதியாண்டின் இறுதியளவில் நிறுவனத்தின் நிலைமை சம்பந்தமாக உண்மையான, நீதியான கருத்தை வெளியிடுகிறது. 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும் இது அமைந்துள்ளது.

நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதில் கீழ்க்காணும் விடயங்களைப் பூர்த்தி செய்யுமாறு பணிப்பாளர்கள் கோரப்பட்டுள்ளனர்.

- பொருத்தமான கணக்கியல் கொள்கைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, நிலையான அடிப்படையில் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து வேறுபடும் எந்தவொரு விடயமும் வெளிப்படுத்தப்பட்டு விளக்கமும் அளிக்கப்பட்டுள்ளது.
- பொருத்தமான செயற்படு கணக்கியல் தரங்கள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன.
- தீர்மானங்களும், மதிப்பீடுகளும் நியாயமான அடிப்படையிலும், புத்திசாதுரியமான வகையிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- நிறுவனத்தின் நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ள போதிய வளங்கள் நிறுவனத்திடம் உள்ளன என்பதை பணிப்பாளர் நிச்சயித்துக் கொள்ள வேண்டும். நிதி நிலைமை சம்பந்தமாக நிறுவனம் நியாயமான, சரியான கணக்கியல் பதிவேடுகளைக் கொண்டுள்ளது என்பதையும், நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதில் இவையனைத்தும் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளன என்பதையும் பணிப்பாளர்கள் மேலும் நிச்சயித்துக்கொள்ள வேண்டும்.

போதிய சரியான தன்மையுடன் கணக்கியல் பதிவேடுகளை நிறுவனம் பேணிவருகிறது என்பதை நிச்சயிக்கும் பொறுப்பும் பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. சமர்ப்பிக்கப்பட்ட நிதி அறிக்கைகள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன என்பதும் நிச்சயிக்கப்படும் வகையில் நிறுவனத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு பணிப்பாளர் பொறுப்பாகவுள்ளனர். நிதி மோசடிகள், ஏனைய சட்டவிரோத நடவடிக்கைகள் என்பனவற்றைக் கண்டுபிடிக்கவும், தடுக்கவுமென பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு வழிமுறைகளை அமைப்பதற்கு பொருத்தமான வழிமுறைகள் ஏற்படுத்தப்படுவது அவசியமாகும்.

பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு வழிமுறைகளை ஏற்படுத்துவதற்கும் பணிப்பாளர்கள் கவனம் செலுத்த வேண்டும். நிதி அறிக்கைகளை பணிப்பாளர்கள் தயாரிப்பதோ, அதனைக் கணக்காய்வு செய்வதற்கு கணக்காய்வாளர்களுக்கு சகல உதவிகளையும் வழங்குவதுடன், அவர்களது கணக்காய்வுக் கருத்தைத் தெரிவிப்பதற்கெனப் பொருத்தமான விடயங்களை வழங்குவதோடு, அவர்களால் மேற்கொள்ளளப்பட்ட மதிப்பீடுகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம், ஆண்டறிக்கையின் பிரதிகள், நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு வருடாந்தப் பொதுக் கூட்டத்தின் தினத்திற்கு 15 வேலை நாட்கள் முன்னராக அனுப்பப்படுவதை பணிப்பாளர் சபை நிச்சயித்துக்கொள்ள வேண்டும்.

இந்த அறிக்கையில் வெளியிடப்பட்ட வகையில், தங்களுக்கான பொறுப்புகள் அனைத்தையும் நிறைவேற்றியுள்ளனர் என்பது பணிப்பாளர்களின் கருத்தாகும்.

### இணக்க அறிக்கை

நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டிய சகல வரிகளும், தீர்வைகளும், சகல கொடுப்பனவுகளும், சகல கட்டணங்களும் நிறுவனத்தின் சார்பில் செலுத்தப்பட வேண்டிய வரிகளும், நிறுவனத்தின் ஊழியர்களின் கொடுப்பனவுகளும், ஏனைய சகல நியதிக் கொடுப்பனவுகளும் உரிய தினத்தில் நிறுவனத்தினால் தங்களது அறிவுக்குட்பட்ட வகையில் செலுத்தப்பட்டுள்ளன என்பதை பணிப்பாளர்கள் இத்தால் உறுதிப்படுத்துகின்றனர். இவை அனைத்தும், ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ளன அல்லது பொருத்தமான வகையில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

சபையின் உத்தரவின் பிரகாரம்

**கூட்டிணைப்பு ஆலோசனை சேவைகள் நிறுவனம்**

மட்டுப்படுத்தப்பட்ட செயலாளர்கள் -
குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம்
குருநாகல்

2016 நவம்பர் 24.

# விரிவான வருமான அறிக்கை

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான | குறிப்பு | 2015<br>ரூபா. | 2014<br>மீள் தெரிவிப்பு<br>ரூபா. |
|---|---|---|---|
| **வருமானம்** | 4 | 492,140,403 | 576,790,774 |
| விற்பனைக்கான செலவினம் | 5 | (316,643,654) | (325,990,679) |
| மொத்த இலாபம் | | 175,496,749 | 250,800,095 |
| ஏனைய செயற்படு வருமானம் | 6 | 121,733,181 | 95,921,283 |
| நிர்வாக மற்றும் பொதுச் செலவினம் | 7 | (132,937,239) | (131,150,183) |
| **செயற்படு நடவடிக்கைகள் மூலமான இலாபம்** | | **164,292,691** | **215,571,195** |
| தேறிய நிதித்துறை வருமானம் / (செலவினம்) | 8 | 1,630,256 | 5,335,281 |
| **வரிக்கு முந்திய இலாபம்** | | **165,922,947** | **220,906,476** |
| வருமான வரி செலவினம் | 9 | (10,012,206) | (13,776,911) |
| **ஆண்டுக்கான இலாபம்** | | **155,910,741** | **207,129,565** |
| | | | |
| **ஏனைய விரிவான வருமானம்** | | | |
| வரையறுக்கப்பட்ட நன்மைதரும் திட்டத்தின் இலாபம் / (நட்டம்) | | 8,098,729 | (683,093) |
| **ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம்** | | **164,009,470** | **206,446,472** |
| | | | |
| **ஒரு பங்கிற்கான சம்பாத்தியம் (ரூபா)** | 10 | **7.80** | **10.36** |

கணக்கியல் கொள்கைகளும், குறிப்புக்களும் நிதித்துறை அறிக்கைகளின் முக்கிய பகுதியாகவுள்ளன.
வேறு வகையில் தெரிவிக்கப்படா விட்டால், சகல பெறுமதிகளும் ரூபாவில் காட்டப்பட்டுள்ளன. அடைப்புக்குறிக்கு உட்பட்ட இலக்கங்கள் கழிவுத் தொகையைக் காண்பிக்கின்றன.

# நிதி நிலைமை அறிக்கை

| இல் இருந்து | குறிப்பு | 31.12.2015<br>ரூபா. | 31.12.2014<br>மீள் தெரிவிப்பு<br>ரூபா. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | |
| வெற்றுக் காணிக்கான குத்தகை உரிமை | 11 | 93,387,704 | 96,557,661 |
| அசைவற்ற குத்தகைச் சொத்துக்கள் (வெற்றுக்காணி தவிர்ந்த) | 12 | 40,727,824 | 45,569,801 |
| உயிரியல் சொத்துக்கள் | 13A | 785,952,344 | 698,417,014 |
| பாவனைக்குரிய உயிரியல் சொத்துக்கள் | 13B | 140,140,673 | 132,192,052 |
| ஆதனம், இயந்திரசாதனங்கள், உபகரணங்கள் | 14 | 264,684,411 | 268,154,134 |
| ஏனைய நிதித்துறைச் சொத்துக்கள் | 15 | 5,706,257 | 5,529,152 |
| **மொத்த நடைமுறையற்ற சொத்துக்கள்** | | **1,330,599,213** | **1,246,419,814** |
| | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| பதிவேடுகளின் அடிப்படையில் | 16 | 35,007,421 | 43,373,473 |
| வைப்புக்கள் மற்றும் முற் கொடுப்பனவுகள் | | 5,452,268 | 5,549,623 |
| குறுகியகாலத் திட்டங்களில் முன்னரே செலுத்தப்பட்ட செலவினம் | 17 | 11,187,730 | 12,847,143 |
| வருமான வரி மீள் கொடுப்பனவு | | 9,116,377 | 6,829,501 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய பெறுகைகள் | 18 | 56,359,580 | 56,792,077 |
| ஏனைய நிதித்துறைச் சொத்துக்கள் | 15 | 5,528,514 | 5,557,270 |
| குறுகியகால முதலீடுகள் | 19 | 415,000,000 | 400,000,000 |
| ரொக்கப்பண மற்றும் வங்கி நிலுவை | 20 | 30,142,753 | 9,709,538 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **567,794,643** | **540,658,625** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **1,898,393,856** | **1,787,078,439** |
| | | | |
| **பங்குகளும் பொறுப்புக்களும்** | | | |
| **மூலதனம் மற்றும் ஒதுக்கீடுகள்** | | | |
| அறிவிக்கப்பட்ட மூலதனம் | 21 | 200,000,010 | 200,000,010 |
| பிடித்து வைக்கப்பட்ட சம்பாத்தியங்கள் | | 1,098,032,352 | 1,036,042,220 |
| மர பெறுமதி ஒதுக்கீடு | | 247,398,848 | 203,478,239 |
| ஏனைய ஒதுக்கீடுகள் | | 15,039,398 | 6,940,669 |
| **மொத்தப் பங்குகள்** | | **1,560,470,608** | **1,446,461,138** |
| | | | |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | |
| ஓய்வு நன்மைக் கடப்பாடுகள் | 22 | 117,628,140 | 124,548,410 |
| குத்தகையாளருக்கான தேறிய பொறுப்பு | 23 | 64,213,817 | 67,779,021 |
| பின்தள்ளி வைக்கப்பட்ட வரிப் பொறுப்பு | 24 | 75,333,298 | 65,321,092 |
| | | **257,175,255** | **257,648,523** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| குத்தகையாளருக்கான தேறிய பொறுப்பு | 23 | 3,565,204 | 3,565,204 |
| பெறப்பட்ட முற்பணம் | 25 | 1,745,841 | 948,352 |
| வர்த்தகம், செலவினம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | 26 | 75,436,948 | 78,455,222 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | | **80,747,993** | **82,968,778** |
| **மொத்தப் பங்குகளும் பொறுப்புக்களும்** | | **1,898,393,856** | **1,787,078,439** |

கணக்கியல் கொள்கைகளும், குறிப்புக்களும் நிதித்துறை அறிக்கைகளின் முக்கிய பகுதியாகவுள்ளன.

வேறு வகையில் தெரிவிக்கப்படா விட்டால், சகல பெறுமதிகளும் ரூபாவில் காட்டப்பட்டுள்ளன. அடைப்புக்குறிக்கு உட்பட்ட இலக்கங்கள் கழிவுத் தொகையைக் காண்பிக்கின்றன.

**பி.எம்.டீ.ஜீ. பிரேமதிலக**
நிதி முகாமையாளர்

இந்த நிதி அறிக்கைகளின் தயாரிப்பு மற்றும் சமர்ப்பணத்திற்கு பணிப்பாளர் சபையினரே பொறுப்பாக உள்ளனர்.
குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் சார்பில் அங்கீகரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டுள்ளது.

**ஏ.எம். பியசோம உபாலி**
தலைவர்

**எச்.ஏ.என். சமன் குமார**
பணிப்பாளர்/திறைசேரிப் பிரதிநிதி

குருநாகல், 2016 பெப்ரவரி 29

# பங்குகளின் மாற்றம் சம்பந்தமான அறிக்கை

| 2015 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது | தெரிவிக்கப்பட்ட மூலதனம் ரூபா | மர ஒதுக்கீடு ரூபா | ஏனைய ஒதுக்கீடுகள் ரூபா | பிடித்து வைக்கப்பட்ட சம்பாத்தியம் ரூபா | மொத்தப் பங்குகள் ரூபா |
|---|---|---|---|---|---|
| 2014.01.01 இல் நிலுவை | 200,000,010 | 183,160,698 | 7,623,762 | 889,230,196 | 1,280,014,666 |
| 2014 ஆம் ஆண்டுக்கான தேறிய இலாபம் - மீள் தெரிவிப்பு (குறிப்பு A) | | | | 207,129,565 | 207,129,565 |
| ஏனைய விரிவான வருமானம் | | | (683,093) | | (683,093) |
| ஒதுக்கீட்டுக்கு மாற்றப்பட்டுள்ள உயிரியல் சொத்துக்கள் | | 20,317,541 | | (20,317,541) | - |
| 2013 பங்குலாபங்கள் | | | | (40,000,000) | (40,000,000) |
| 2014 டிசம்பர் 31 இல் நிலுவை | 200,000,010 | 203,478,239 | 6,940,669 | 1,036,042,220 | 1,446,461,138 |
| 2015 ஆம் ஆண்டுக்கான தேறிய இலாபம் | | | | 155,910,741 | 155,910,741 |
| ஏனைய விரிவான வருமானம் | | | 8,098,729 | | 8,098,729 |
| ஒதுக்கீட்டுக்கு மாற்றப்பட்டுள்ள உயிரியல் சொத்துக்கள் | | 43,920,609 | | (43,920,609) | - |
| 2014 பங்குலாபங்கள் | | | | (50,000,000) | (50,000,000) |
| **2015 டிசம்பர் 31 இல் நிலுவைத் தொகை** | **200,000,010** | **247,398,848** | **15,039,398** | **1,098,032,352** | **1,560,470,608** |

| **குறிப்பு A - 2014 ஆம் ஆண்டுக்கான இலாபத்தின் சீராக்கம்** | |
|---|---|
| முன்னரே தெரிவிக்கப்பட்டபடி 2014 ஆம் ஆண்டுக்கான இலாபம் | 214,238,022 |
| முன்னைய வருட சீராக்கல்கள் | |
| நிலையான சொத்துக்களின் அகற்றலினால் ஏற்பட்ட நட்டம் (குறிப்பு - A1) | (7,108,457) |
| 2014 ஆம் ஆண்டுக்கான இலாபம் மீள் தெரிவிப்பு | **207,129,565** |

குறிப்பு A1

தெதுருஓயா திட்டத்தின் கீழ் மீள் குடியேற்றத்திற்கென ஹிரியால பிரதேச பெருந்தோட்டங்களைச் சேர்ந்த பீட்டர்வெலி மற்றும் கெட்டகுலலந்த பிரிவுகளில் 60.52 ஹெக்டயர் காணி மாவட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் சுவீகரிக்கப்பட்டுள்ளது. முன்னர் தெரிவிக்கப்பட்ட சுவீகாரம் காரணமாக பெருந்தோட்டக் காணிக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 7,108,457 ஆகும். இந்தத் தொகை பின்தள்ளிய வகையில் நிதி அறிக்கைகளில் சீராக்கப்பட்டுள்ளது.

கணக்கியல் கொள்கைகளும், குறிப்புக்களும் நிதித்துறை அறிக்கைகளின் முக்கிய பகுதியாகவுள்ளன.
வேறு வகையில் தெரிவிக்கப்படா விட்டால், சகல பெறுமதிகளும் ரூபாவில் காட்டப்பட்டுள்ளன. அடைப்புக்குறிக்கு உட்பட்ட இலக்கங்கள் கழிவுத் தொகையைக் காண்பிக்கின்றன.

# காசுப்பாய்ச்சல் அறிக்கை

| காசுப்பாய்ச்சல் அறிக்கை | 2015<br>ரூபா | 2014<br>மீள் தெரிவிப்பு<br>ரூபா |
|---|---|---|
| **செயற்படு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்கள்** | | |
| வருமான வரி செலவினத்திற்கு முன்னரான இலாபம் | 165,922,947 | 220,906,476 |
| **சீராக்கல்கள்** | | |
| தேய்மானங்கள் / படிப்படியான குறைப்புக்கள் | 57,984,958 | 50,933,499 |
| குத்தகை ஒப்பந்தம் மீதான வட்டி | 25,393,663 | 24,844,072 |
| தற்காலிக வங்கிக்கடன் மீதான வட்டி | 52,397 | - |
| சேவையாளர்களுக்கான கடன்கள் படிப்படியான குறைப்பு | 1,032,463 | 1,162,966 |
| ஓய்வு நன்மைக் கடப்பாட்டுக்கான ஏற்பாடுகள் | 23,787,118 | 24,114,591 |
| வட்டி வருமானம் | (28,108,779) | (31,342,319) |
| ஆதனங்கள், இயந்திரசாதனங்கள், உபகரணங்களின் அகற்றலில் ஏற்பட்ட இலாபம் / (நட்டம்) | 1,054,006 | 5,899,432 |
| WIP யின் பதிவழிப்பு | - | 309,677 |
| செலுத்தப்பட்ட வருமான வரி | (2,286,876) | (3,658,174) |
| செயற்பாட்டு ஊக்கத்திற்கான ஏற்பாடுகள் | 25,203,842 | 28,779,734 |
| போனஸ் கொடுப்பனவுக்கான ஏற்பாடுகள் | 11,297,741 | 12,319,147 |
| நீதியான பெறுமதியிலிருந்து பாவனைக்குரிய உயிரியல் சொத்துக்களை விற்கும் செலவினம் கழிக்கும் மாற்றங்களின் போது ஏற்படும் இலாபம் / (நட்டம்) | (43,920,609) | (20,317,541) |
| **செயற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான செயற்படு இலாபம் / (நட்டம்)** | **237,412,872** | **313,951,560** |
| | | |
| பதிவேடுகள் அதிகரிப்பு / (குறைப்பு) | 8,366,052 | (1,423,536) |
| முன்கொடுப்பனவு மற்றும் வைப்புக்களில் அதிகரிப்பு /(குறைப்பு) | 97,355 | (1,019,858) |
| வர்த்தகம் மற்றும் ஏனைய பெறுகைகள் அதிகரிப்பு / (குறைப்பு) | 1,673,343 | 3,792,538 |
| குறுகியகாலத் திட்டங்களின் செலவின முற்கொடுப்பனவு அதிகரிப்பு / (குறைப்பு) | 1,659,413 | (2,583,172) |
| வாடகை முற்பெறுகை அதிகரிப்பு / (குறைப்பு) | 797,489 | (727,521) |
| வர்த்தகம் ஏனைய கொடுப்பனவுகள் அதிகரிப்பு / (குறைப்பு) | 1,639,445 | (5,760,038) |
| ஓய்வுக்கால நன்மை செலவின கொடுப்பனவு | (22,608,659) | (25,031,833) |
| செயற்பாட்டு ஊக்கக் கொடுப்பனவு | (28,917,006) | (27,338,254) |
| போனஸ் கொடுப்பனவு | (12,242,295) | (8,665,902) |
| பெறுமதிமிக்க மரங்களின் விற்பனை மூலம் கிடைத்த ரொக்கப்பணம் | 35,971,988 | 19,011,097 |
| **செயற்படு நடவடிக்கைகளில் இருந்து தேறிய ரொக்கப்பணம் / (உபயோகம்)** | **223,849,997** | **264,205,081** |
| | | |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து காசுப்பாய்ச்சல்கள் / (உபயோகம்)** | | |
| ஆதனங்கள், இயந்திரசாதனங்கள், உபகரணங்கள் கொள்வனவு | (141,215,895) | (179,440,596) |
| WIP அதிகரிப்பு / (குறைப்பு) | 6,041,257 | 19,861,377 |
| ஆதனங்கள், இயந்திரசாதனங்கள், உபகரணங்களின் அகற்றல் மூலம் கிடைத்த பணம் | 82,000 | 1,231,250 |
| பெறப்பட்ட வட்டி | 25,835,469 | 37,658,398 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து தேறிய காசுப்பாய்ச்சல்கள் / (உபயோகம்)** | **(109,257,168)** | **(120,689,571)** |
| | | |
| **நிதித்துறை நடவடிக்கைகளில் இருந்து காசுப் பாய்ச்சல் / (உபயோகம்)** | | |
| செலுத்தப்பட்ட குத்தகை வாடகை | (28,958,867) | (28,409,276) |
| தற்காலிக வங்கிக்கடன்கள் மீதான வட்டி - இலங்கை வங்கி | (52,397) | - |
| சேவையாளருக்கு வழங்கப்பட்ட கடன்கள் | (8,892,850) | (8,071,500) |
| மீளப் பெறப்பட்ட சேவையாளர் கடன் | 8,744,500 | 6,933,143 |
| செலுத்தப்பட்ட பங்குலாபம் | (50,000,000) | (40,000,000) |
| **நிதித்துறை நடவடிக்கைகளில் இருந்து தேறிய காசுப்பாய்ச்சல் / (உபயோகம்)** | **(79,159,614)** | **(69,547,633)** |
| **காசும் காசுக்குச் சமமானவையும் - தேறிய அதிகரிப்பு / (குறைப்ப)** | 35,433,214 | 73,967,877 |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசும் காசுக்குச் சமமானவையும் | 409,709,538 | 335,741,661 |
| ஆண்டின் இறுதியில் காசும் காசுக்கு சமமானவையும் (குறிப்பு A) | **445,142,753** | **409,709,538** |

| | 31.12.2014<br>இல்<br>ரூபா | 31.12.2015<br>இல்<br>ரூபா |
|---|---|---|
| குறிப்பு A | | |
| **காலப்பகுதி முடிவில் காசும் காசுக்குச் சமமானவையும்** | | |
| நிலையான வைப்புக்கள் - இலங்கை வங்கி | 166,000,000 | 65,000,000 |
| நிலையான வைப்புக்கள் - மக்கள் வங்கி | - | 45,000,000 |
| நிலையான வைப்புக்கள் - மக்கள் வங்கி ஓய்வுக்கால பணிக்கொடை நிதியம் | 130,000,000 | 130,000,000 |
| நிலையான வைப்புக்கள் - தேசிய சேமிப்பு வங்கி | 119,000,000 | 160,000,000 |
| திறைசேரி உண்டியல்கள் | | |
| Repo | 21,000,000 | 4,000,000 |
| ரொக்கப்பணம் (கொண்டு செல்கையில்) | | |
| ரொக்கப்பணம் வங்கியில் | 7,559,909 | 4,698,670 |
| ரொக்கப்பணம் கையிருப்பில் | 1,570,876 | 1,002,855 |
| தபால் / முத்திரைகள் | 11,968 | 8,013 |
| | **445,142,753** | **409,709,538** |

# கணக்கியல் கொள்கைகள்

**01. பொது**

**1.1 அறிக்கை வழங்கும் நிறுவனத்தின் சட்டபூர்வ அந்தஸ்து**

குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் அரச உடைமையான வர்த்தக நிறுவனங்களை 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க பொதுக் கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இவற்றை அரச நிறுவனங்களாக மாற்றுவதன் அடிப்படையில் கூட்டிணைக்கப்பட்டு, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள் பதிவு செய்யப்பட்டுள்ளது. நிறுவனத்தின் பதிவுபெற்ற அலுவலகம் குருநாகல், தம்புள்ள வீதி, 80 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளது.

இது, ஒரேயொரு பங்கைக் கொண்ட ஒரு நிறுவனமாகும். இதன் பங்குதாரராக பொதுத் திறைசேரியின் செயலாளர் இருந்து வருகிறார்.

**1.2 முக்கிய நடவடிக்கைகளும் அவற்றின் விபரங்களும்**

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் நிறுவனத்தின் முக்கிய நடவடிக்கைகளாக தென்னை, இறப்பர் ஏனைய விவசாய உற்பத்திப் பொருட்களின் செய்கை, உற்பத்திப் பொருட்களின் தயாரிப்பு மற்றும் விற்பனை என்பனவாகும். இதன் பெருந்தோட்டங்கள் குருநாகல், கம்பஹா, அநுராதபுரம் ஆகிய பெருந்தோட்ட மாவட்டங்களில் அமைந்துள்ளன. இவற்றின் 08 பயிர்ச்செய்கை தோட்டங்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

- அத்தனகல்ல
- தம்பதெனிய
- தொடங்கஸ்லந்த
- ஹிரியால
- கட்டுகம்பொல
- குருநாகல்
- நாரம்மல
- மஹாயாய

**02. அறிக்கை தயாரிப்பின் அடிப்படை அம்சங்கள்**

**2.1 இணக்க அறிக்கை**

வருமானத்தின் விரிவான தகவல்கள், நிதி நிலைமை பற்றிய அறிக்கை, பங்குகள் மாற்றம் சம்பந்தமான அறிக்கை, காசுப்பாய்ச்சல் அறிக்கை என்பனவற்றுடன் கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் ("நிதித்துறை அறிக்கைகள்") என்பன இலங்கை கணக்கியல் தரத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளன. (ளுடுகுசுளு / டுமுயுளு) இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவகம் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைகள் என்பனவற்றைப் பூர்த்தி செய்யும் வகையில் இவை அமைந்துள்ளன.

**2.2 தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளும் நிறுவனம்**

தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்வதற்கு நிறுவனம் கொண்டுள்ள சக்திவளம் பற்றி பணிப்பாளர்கள் மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டுள்ளனர். இதனடிப்படையில் நிறுவனத்தைக் கலைப்பதற்கோ, நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கோ பணிப்பாளர்கள் தீர்மானிக்கவில்லை.

**2.2 சமர்ப்பணத்தின் அடிப்படை அம்சங்கள்**

நிதித்துறை அறிக்கைகள், நிதி நிலைமை சம்பந்தமான அறிக்கையில் கீழ்க்காணும் அம்சங்களைத் தவிர திரண்ட அடிப்படையிலும் வரலாற்றுச் செலவின அடிப்படையிலும் தயாரிக்கப்பட்டுள்ளன.

- JEDB / SLSPC க்குச் சொந்தமான வெற்றுக் காணியின் குத்தகை உரிமை. 11 ஆம் இலக்கக் குறிப்பில் விபரிக்கப்பட்ட பிரகாரம் இவை மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.
- பாவனைக்குரிய முதிர்ச்சியடைந்த உயிரியல் சொத்துக்கள் அனைத்தும், விற்பனைச் செலவினம் கழித்த நீதியான பெறுமதியில் தரப்பட்டுள்ளன. (13 ஆம் இலக்க குறிப்பு)
- காப்புறுதி மதிப்பாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் ஓய்வில் செல்வோருக்கான நன்மைக் கடப்பாடுகள் மதிப்பிடப்பட்டுள்ளன. (LKAS 19) (21 ஆம் இலக்க குறிப்பு)
- உயிரியல் சொத்துக்கள் மூலம் கிடைக்கப்பெற்ற அறுவடை செய்யப்பட்ட விவசாய உற்பத்திப் பொருட்கள், தேறிய பெறக்கூடிய பெறுமதியில் மதிப்பிடப்பட்டுள்ளன. தேறிய பெறக்கூடிய பெறுமதி என்பது, இத்தகைய விற்பனையைப் பெறவென முன்மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் கழித்த முன்மதிப்பீட்டு விற்பனை விலையாகும்.

நிதித்துறை அறிக்கைகளில் அதிகரித்த தொகை அம்சங்கள் தொடர்பாக எத்தகைய சீராக்கல்களும் மேற்கொள்ளப்படவில்லை.

### 2.3 செயற்படு மற்றும் சமர்ப்பண நாணயங்கள்

நிதித்துறை அறிக்கைகள் அனைத்தும் நிறுவனத்தின் செயற்படு நாணயமான இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்ட சகல நிதித்துறைத் தொகைகளும், வேறு வகையில் தெரிவிக்கப்படாதவிடத்து, கிட்டிய ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 2.4 மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்களின் உபயோகம்

இலங்கை கணக்கியல் தரங்களுடன் (SLFRS / LKAS) இணைந்த வகையில் நிதித்துறை அறிக்கைகள் தயாரிக்கப்படுமிடத்து முக்கிய தீர்மானங்கள், மதிப்பீடுகள், கணக்கியல் கொள்கைகளுக்கு பாதிப்பாகவுள்ள நம்பிக்கைகள் மற்றும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம், செலவினம் என்பன சம்பந்தமான அறிவிக்கப்பட்ட தொகைகள் என்பன பற்றி தேவை ஏற்பட்ட இடத்தில் முகாமைத்துவம் தீர்மானம் மேற்கொண்டு வருகின்றது.

தீர்மானங்கள் மற்றும் மதிப்பீடுகள் என்பன வரலாற்று அனுபவம், கடைப்பிடிக்கப்படும் போக்கு, சம்பந்தப்பட்ட சூழ்நிலையில் நியாயமானவை எனக் கருதப்படும் எதிர்பார்ப்புக்கள் உட்பட ஏனைய அம்சங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கமைய உண்மையான பெறுபேறுகள், இத்தகைய தீர்மானங்கள் மற்றும் மதிப்பீடுகளில் இருந்து வேறுபடக் கூடும்.

மதிப்பீடுகளும் முக்கியமான நம்பிக்கைகளும் அவற்றின் பெறுமானங்களை நிச்சயிக்கவென, தொடர்ந்து மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன. மதிப்பீடுகள் மீளமைக்கப்பட்ட காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கணக்கியல் மதிப்பீடுகளின் மீளமைப்பும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. கணக்கியல் கொள்கைகளை நடைமுறைக்கிடும் போது, முக்கிய தீர்மானங்கள் சம்பந்தமான தகவல்கள் கீழ்க்காணும் குறிப்புக்களில் இணைக்கப்பட்டுள்ளன.

குறிப்பு 11 - கட்புலச் சொத்துக்கள் - காணியையும் உயிரியல் சொத்துக்களையும் உபயோகிப்பதற்கான உரிமை தவிர்ந்தவை.

குறிப்பு 13 - பாவனைக்குரிய உயிரியல் சொத்துக்கள்

குறிப்பு 21 - விபரிக்கப்பட்ட நன்மைக் கடப்பாட்டின் அளவீடு

குறிப்பு 24 - பின்தள்ளி வைக்கப்பட்ட வரி

### 2.5 ஒப்பீட்டுத் தகவல்கள்

முந்திய வருடங்களின் நிதித்துறை அறிக்கைகளின் தயாரிப்பும் பகுப்பாய்வும், சிறந்த முறையில் சமர்ப்பிப்பதற்கும் சமகால வருடத்தின் அறிக்கைகளுடன் ஒப்பிடுவதற்கு வசதியாக தேவை ஏற்படும் சமயத்தில் திருத்தப்பட்டுள்ளன.

## 03. முக்கியமான கணக்கியல் கொள்கைகள்

இந்த நிதித்துறை அறிக்கைகளின் தயாரிப்பின் போது கடைப்பிடிக்கப்பட்ட முக்கிய கணக்கியல் கொள்கைகள் கீழே தரப்பட்டுள்ளன. வேறு வகையில் அறிவிக்கப்படாத விடத்து, இந்தக் கொள்கைகள் தொடர்ச்சியாக சகல வருடங்கள் சம்பந்தமாகவும் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன.

### 3.1 சொத்துக்களும் அவற்றின் மதிப்பீட்டுக்கான அடிப்படை அம்சங்களும்

நிதி நிலைமை அறிக்கையில் சமகால சொத்துக்கள் எனத் தெரிவிக்கப்பட்ட சொத்துக்கள், ரொக்கப்பணம், வங்கி நிலுவைகள், நிறுவனத்தின் வழமையான நடவடிக்கைகளின் போது அல்லது அறிக்கை சமர்ப்பித்த திகதியிலிருந்து ஒரு வருடம் (இவற்றுள் எது குறுகியகாலமோ அது) ரொக்கப்பணமாகப் பெற்றுக்கொள்ளப்படக்கூடிய பொருட்கள் என்பனவாகும். நடைமுறைச் சொத்துக்கள் அல்லாத சொத்துக்கள் என்பன அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட திகதியில் இருந்து ஒரு வருடத்திற்கு அப்பால் வைத்திருப்பதற்கு நிறுவனம் நிச்சயிக்கும் சொத்துக்களாகும்.

### 3.1.1 ஆதனங்கள், இயந்திரசாதனங்கள், உபகரணங்கள்

#### 3.1.1.1 அங்கீகாரமும் அளவீடும்

ஆதனங்கள், இயந்திரசாதனங்கள், உபகரணங்கள் என்பன திரட்டிய தேய்மானம் மற்றும் பெறுமதி குறைப்பினால் ஏற்படும் நட்டங்களும் கழிக்கப்பட்ட தொகையில் காண்பிக்கப்பட்டுள்ளன. இதற்கான தொகையைக் கணிக்கும் போது, குறிப்பிட்ட சொத்தைச் செயற்படு நிலைமைக்கு அல்லது பாவனைக்குக் கொண்டுவரும் விதத்தில் ஏற்பட்ட செலவினம் கழிக்கப்பட்ட கொள்விலையாகும். சுயமாக அமைக்கப்பட்ட சொத்துக்களின் விலையில், பொருட்களின் செலவினம், தொழிலாளரின் நேரடிக் கொடுப்பனவு, சொத்துக்களை செயற்படு நிலைமைக்கு அல்லது உத்தேச பாவனைக்குக் கொண்டு வருவதற்கான நேரடிச் செலவினம் என்பன அடங்கும். குறிப்பிட்ட சொத்தை நீக்குவதற்கும், அகற்றுவதற்குமான செலவினங்களும் இதில் உள்ளடங்கும்.

# கணக்கியல் கொள்கைகள் தொடர்ச்சி...

நடைமுறை வேலையில் முன்னேற்றம் என்பது, குறிப்பிட்ட சொத்துடன் இணைக்கப்பட்டு, முதலாவது பாவனையின் காலம் அல்லது சொத்தை முதலாவது பாவனைக்கு உட்படுத்திய காலம் என்பதாகும்.

ஆதனங்கள், இயந்திரசாதனங்கள், உபகரணங்கள் என்பன வெவ்வேறு பயனுள்ள காலத்தைக் கொண்டிருக்கும் சமயத்தில் அவை தனித்தனி விடயங்களாகக் கணக்கிடப்பட்டுள்ளன.

நிரந்தரமான காணி அபிவிருத்திச் செலவினங்கள் என்பது, காணி அமைப்பில் மேற்கொள்ளப்படும் புதிய வீதிகள் உட்பட ஏனைய முக்கிய உட்கட்டமைப்பு அபிவிருத்திகளை உள்ளடக்கிய முக்கிய மாற்றங்களுக்கான செலவினங்களாகும்.

ஆதனங்கள், இயந்திரசாதனங்கள், உபகரணங்கள் என்பனவற்றின் அகற்றலினால் ஏற்படும் இலாபங்கள் மற்றும் நட்டங்கள், விற்பனைத் தொகையில் இருந்து, ஆதனங்கள், இயந்திரசாதனங்கள், உபகரணங்கள் என்பனவற்றின் கொண்டு செல்லப்படும் தொகையைக் கழிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படுகிறது. விரிவான வருமான அறிக்கையில் “ஏனைய வருமானங்கள்” என்ற தலைப்பின் கீழ் இவை தரப்பட்டுள்ளன.

**3.1.1.2 அங்கீகரிக்கப்படாத நிலைமை**

தற்போதைய ஆதனங்கள், இயந்திரசாதனங்கள் மற்றும் உபகரணங்கள் என்பன சம்பந்தமாக ஏற்பட்ட செலவினங்கள், எதிர்கால பொருளாதார நன்மைகளை இவை வழங்குமென எதிர்பார்க்கப்படுமிடத்து, மூலதனமயமாக்கப்படுகின்றன. குறிப்பிட்ட சொத்துக்குப் பதிலான சொத்தின் கொண்டுசெல்லும் மதிப்பீட்டுத் தொகை ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

ஆதனங்கள், இயந்திரசானங்கள், உபகரணங்கள் என்பனவற்றின் நாளாந்த பராமரிப்புச் செலவினம், விரிவான வருமான அறிக்கையில் செலவிடப்பட்ட தொகையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மீள் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்து அகற்றப்படுமிடத்து, மீள் மதிப்பீட்டு மேலதிக ஒதுக்கீட்டில் இழைக்கப்பட்ட தொகை பிடித்து வைக்கப்பட்ட சம்பாத்தியம் என்பதற்கு மாற்றப்பட்டுள்ளது.

**3.1.1.3 அங்கீகரிக்கப்படாத நிலைமை**

ஆதனங்கள், இயந்திரசானங்கள், உபகரணங்கள் என்பனவற்றின் கொண்டு செல்லப்படும் தொகை அவை அகற்றப்படுமிடத்து அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றல் என்பனவற்றில் எத்தகைய எதிர்கால பொருளாதார நன்மைகளும் எதிர்பார்க்கப்படாதவிடத்து விரிவான வருமான அறிக்கையில் “ஏனைய வருமானங்கள்” என்பதன் கீழ் தரப்பட்டுள்ளன.

**3.1.1.4 உரிமை மாற்ற செலவினம்**

சொத்துக்களின் கொள்வனவு, வருமானம், உற்பத்தி என்பனவற்றோடு நேரடித் தொடர்பு கொண்ட உரிமை மாற்றச் செலவினமும், உத்தேச பாவனை அல்லது விற்பனை என்பதற்கு தயாராகும் கால செலவினங்களும் மூலதன மயமாக்கப்படுகின்றன. இதற்கான செலவினம் மூலதன மயமாக்கப்படுவதற்கு சட்டபூர்வ உரிமை கொண்டதாகும். இது LKAS 23 இன் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மூலதன மயமாக்கப்படாத இந்தத் தொகைகள் அவை ஏற்பட்ட காலப்பகுதியில் செலவினங்களாக அங்கீகரிக்கப்பட்டு விரிவான வருமான அறிக்கையில் இணைக்கப்பட்டுள்ளன.

உரிமை மாற்ற செலவினங்கள் மூலதன மாக்கப்படாது, அவை ஏற்பட்ட காலப்பகுதிக்கான செலவினத்துடன் இணைக்கப்பட்டு விரிவான வருமான அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

**3.1.1.5 தேய்மானமும் படிப்படியாக அறவிடுதலும்**

தேய்மானம் என்பது, சொத்தின் கொள்விலையிலிருந்து சொத்தின் எஞ்சிய காலத்திற்கான பெறுமதி கழிக்கப்பட்ட தொகையாகும். சொத்தின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள காலத்தில் இலாபம் அல்லது நட்டம் என்பதன் அடிப்படையில் தேய்மானம் கணிக்கப்படுகிறது.

குத்தகைக் காலத்தின் முடிவில் குறிப்பிட்ட சொத்தின் உரிமையை நிறுவனம் பெற்றுக்கொள்ளும் என்ற நிலைமை ஏற்படாதவிடத்து, குத்தகைச் சொத்துக்கள், குத்தகைக் காலத்தில் அல்லது சொத்தின் பயனுள்ள சேவைக்காலத்தில் மதிப்பிடப்படும் தொகையாகும்..

**மதிப்பிடப்பட்ட பயனுள்ள காலப்பகுதிக்கான விபரங்கள் வருமாறு:**

| | |
|---|---|
| • கட்டடங்கள் | - 40 வருடங்களுக்கு மேல் |
| • கிணறுகள் | - 40 வருடங்களுக்கு மேல் |
| • வேலி | - 3 வருடங்களுக்கு மேல் |
| • மோட்டார் வாகனங்கள் | - 5 வருடங்களுக்கு மேல் |
| •இயந்திரசாதனங்கள் | - 1/3 வருடங்களுக்கு மேல் |
| • மரத்தளபாடங்களும் பொருத்திகளும் | - 10 வருடங்களுக்கு மேல் |
| • உபகரணங்கள் | - 8 வருடங்களுக்கு மேல் |
| • கணனிகள் | - 5 வருடங்களுக்கு மேல் |

ஒரு சொத்தின் தேய்மானம் அந்தப் பொருள் உபயோகிக்கப்பட ஆரம்பிக்கப்படுகையில் தொடங்குகிறது. அதேவேளை, அந்தச் சொத்தின் தேய்மான முடிவு, அது விற்பனைக்கென தரம் பிரிக்கப்பட்ட திகதி அல்லது அந்தச் சொத்தின் உபயோகம் கைவிடப்பட்டு, அது அங்கீகாரம் இழந்த திகதியிலிருந்து கணக்கிடப்படுகிறது.

தேய்மான கணக்கிடும் முறை, பயனுள்ள காலப்பகுதி, எஞ்சியுள்ள பெறுமானங்கள் என்பன ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு தேவையேற்படுமானால் சீராக்கப்பட்டுள்ளன.

**குத்தகைச் சொத்துக்களின் பெறுமதி சமதொகையாக கீழ்க்காணும் காலப்பகுதியில் படிப்படியாகக் குறைக்கப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| • வெற்றுக்காணி | - 53 வருடங்களுக்கு மேல் |
| • கட்டடங்கள் | - 25 வருடங்களுக்கு மேல் |
| • இயந்திரசாதனங்கள் | - 15 வருடங்களுக்கு மேல் |
| • முதிர்ந்த பெருந்தோட்டங்கள் | - 30 வருடங்களுக்கு மேல் |
| • காணி அபிவிருத்தி | - 30 வருடங்களுக்கு மேல் |

### 3.1.1.6 குத்தகைச் சொத்துக்கள்

குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்கள், இறுதியில் நிறுவனத்திற்கு குத்தகைச் சொத்துக்களின் உரிமையுடன் இணைந்த நன்மைகளுடனும் அதேசமயத்தில், இடர்களுடனும் மாற்றப்படுகையில், அவை நேரடியாகக் கொள்வனவு செய்யப்பட்டவையாகக் கருதப்பட்டு, காசுப்பண விலையில் மூலதனமாக்கப்படுகின்றன. குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்கள், அவற்றின் நியாயமான பெறுமதியின் மிகக் குறைந்த தொகைக்குச் சமமாக பெறுமானம் தெரிவிக்கப்பட்டு ஆகக்குறைந்த குத்தகைக் கொடுப்பனவின் பெறுமதியில் இருந்து திரட்டிய தேய்மானம் மற்றும் பெறுமதி குறைப்பினால் ஏற்பட்ட திரண்ட நட்டத்திற்குச் சமமான தொகையில் மதிப்பிடப்படுகிறது. குத்தகையாளருக்குக் கொடுபட வேண்டிய தொகை பொறுப்பு / கடப்பாடு என்ற வகையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

குத்தகை அடிப்படையில் வைத்திருக்கப்பட்ட சொத்துக்கள், குத்தகைக் காலத்தின் இறுதியில் சொத்துக்களின் உரிமை மாற்றப்படா விட்டால், குத்தகையின் மிகக்குறைந்த காலத்தில் அல்லது படிப்படியாகக் குறைக்கப்படும். (சொந்தமாக வைத்திருக்கப்பட்ட சொத்துக்களின் பயனுள்ள காலம்).

குத்தகைக் காலப்பகுதியில் ஏற்படும் இடர்களும் நன்மைகளும் செயற்பாட்டுக் குத்தகைகள் எனக் குறித்துரைக்கப்படுகின்றன. (காப்புறுதி மற்றும் பராமரிப்புச் செலவினங்கள் தவிர்ந்த) செயற்படு குத்தகையின் கீழ் இடம்பெற்ற குத்தகைக் கொடுப்பனவுகள் என்பன குத்தகைக் காலப்பகுதிக்கான செலவினம் என விரிவான வருமான அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

### 3.1.1.7 நிதித்துறையற்ற சொத்துக்களின் பெறுமதி குறைப்பு

அறிக்கையிடும் ஒவ்வொரு தினத்திலும் நிறுவனம் ஒரு சொத்து பெறுமதி குறைக்கப்படக்கூடுமா என்பது பற்றி மதிப்பிடுவது வழக்கம். அதேவேளை, இத்தகைய மதிப்பீட்டின் போது வருடாந்த பெறுமதி குறைப்புக்கான பரிசோதனை தேவைப்படுமானால், நிறுவனம் குறிப்பிட்ட அந்தச் சொத்தின் வசூலிக்கக்கூடிய தொகை சம்பந்தமாக மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ளும்.

ஒரு சொத்தின் வசூலிக்கக்கூடிய தொகை என்பது, பாவனையில் உள்ள சொத்தின் உயர் பெறுமதி மற்றும் நீதியான பெறுமானத்தில் இருந்து விற்பனைச் செலவினம் கழிக்கப்பட்டு, அந்த சொத்தில் இருந்து காசுப்பாய்ச்சல் எதுவும் இடம்பெறாத சமயத்தில் ஏனைய சொத்துக்களில் இருந்து வேறுபட்டுள்ளதுடன் தீர்மானிக்கப்படுகிறது. ஒரு சொத்தின் கொண்டுசெல்லும் மதிப்பீட்டுத் தொகை அதிலிருந்து பெறக்கூடிய தொகையிலும் பார்க்கக் கூடியதாக இருக்குமானால், அந்தச் சொத்து பெறுமதியற்றது எனக்கருதப்பட்டு வசூலிக்கும் தொகை அட்டவணையில் பதிவழிக்கப்படுகிறது.

பாவனைக்குரிய காலத்திற்கான பெறுமதியைத் தீர்மானிக்குமிடத்து, மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் அவற்றின் தற்போதைய பெறுமதியில் கழிக்கப்பட்டு, குறிப்பிட்ட அந்தச் சொத்தின் இடர், பணத்தின் பெறுமானத்திற்கான சந்தை மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கும் வரிக் கழிவு வீதத்தை உபயோகித்து, அவற்றின் தற்போதைய பெறுமதி கழிக்கப்படுகிறது. நீதியான பெறுமதியிலிருந்து விற்பனைச் செலவினம் தீர்மானிக்கப்படுமிடத்து, சொத்தின் சமீபத்திய சந்தை நடவடிக்கைகளின் பெறுமதி, கிடைக்குமானால், கருத்திற் கொள்ளப்படுகின்றன. இத்தகைய நடவடிக்கைகள் எதுவும் இனம் காணப்படாதவிடத்து, பொருத்தமான மதிப்பீட்டு வழிமுறை கடைப்பிடிக்கப்படுகிறது.

தொடர்ச்சியான நடவடிக்கைகளின் பெறுமதிக் குறைப்பினால் ஏற்பட்ட நட்டம் விரிவான வருமான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெறுமதி குறைக்கப்பட்ட சொத்தின் செயற்பாடுகளுடன் இவை இணைந்துள்ளன. முன்னரே அங்கீகரிக்கப்பட்ட பெறுமதி குறைப்பினால் ஏற்பட்ட நட்டம், சொத்தின் வசூலிக்கக்கூடிய தொகையைத் தீர்மானிப்பதற்கு உபயோகிக்கப்பட்ட மதிப்பீட்டில் மாற்றங்கள் ஏதாவது இருந்தால் மாத்திரமே, மீளமைக்கப்படும். அத்தகைய சூழ்நிலையில் சொத்து ஒன்றின் கொண்டு செல்லும் தொகை வசூலிக்கப்படக்கூடிய தொகைக்கு அதிகரிக்கப்படும். இத்தகைய மீளமைப்புக்கள் விரிவான வருமான அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

### 3.1.2 உயிரியல் சொத்துக்கள்

உயிரியல் சொத்துக்கள், முதிர்ந்த உயிரியல் சொத்துக்கள் மற்றும் முதிர்ச்சியடையாத உயிரியல் சொத்துக்கள் என இரண்டு வகைகளாகத் தரம் பிரிக்கப்பட்டுள்ளன. முதிர்ந்த உயிரியல் சொத்துக்கள் என்பன, அறுவடைக்கான காலத்தை அடைந்துள்ள சொத்துக்கள் அல்லது ஒழுங்கான அறுவடையை வழங்கக்கூடிய சொத்துக்களாகும். முதிர்ச்சியடையாத சொத்துக்கள் என்பன அறுவடைக்கான பருவத்தை அடையாத சொத்துக்களாகும்.

உயிரியல் சொத்துக்கள் என்பன, மேலும் இரண்டு வகையில் பயன்தரும் உயிரியல் சொத்துக்கள் மற்றும் பாவனைக்குரிய உயிரியல் சொத்துக்கள் எனப் பிரிக்கப்பட்டுள்ளன. பயன்தரும் உயிரியல் சொத்துக்களில் விற்பனைக்கு அல்லது அறுவடைக்கான நோக்கங்களைக் கொண்டிராத தென்னை, இறப்பர் மரங்கள், அதேசமயத்தில், விவசாய உற்பத்திப் பொருட்களை அறுவடை செய்யவென மாத்திரம் வளர்க்கப்படும் மரங்களாகும். பயன்தரும் உயிரியல் சொத்துக்களில் பெருந்தோட்டங்களில் திட்டமிடப்படாத தேக்கு, மஹோகனி, ஹல்மில்ல மற்றும் மில்ல போன்ற மரங்களைக் கொண்ட திட்டமிடப்படாத வனப் பிரதேசம் என்பன அடங்கும்.

இந்த ஆண்டில் அறுவடைக்கு வரவிருக்கும் முதிர்ச்சியடையாத தென்னந்தோட்டங்களில் இடம்பெற்ற செலவினம் வருட இறுதியில் முதிர்ந்த தோட்டங்கள் கணக்கிற்கு மாற்றப்பட்டு, அவற்றின் பயனுள்ள காலத்தில் தேய்மானம் கீழ்க்காணும் வகையில் கணிக்கப்பட்டுள்ளது.

#### 3.1.2.1 பயன்தரும் உயிரியல் சொத்துக்களின் செலவினங்கள்

நிரப்புதல் நடவடிக்கையில் ஏற்பட்ட காணி அபிவிருத்திச் செலவினங்கள் மூலதன மயமாக்கப்படுகின்றன. இத்தகைய நிரப்புதல் நடவடிக்கைகளின் காரணமாக பொருளாதார காலத்தின் அதிகரிப்பு ஏற்படுத்தப்படுமானால், அவ்வாறு மூலதன மயமாக்கப்பட்ட செலவினங்கள் புதிதாக மதிப்பிடப்பட்ட எஞ்சியுள்ள பயன்தரும் பொருளாதார காலத்தில் அல்லது முடிவுக்கு வராத குத்தகைக் காலம் இவற்றில் எது குறைந்ததோ அதனடிப்படையில் பெறுமதி குறைக்கப்படுகின்றது.

மூலதன மயமாக்கப்படாத நிரப்புதல் செலவினங்கள் அவை ஏற்பட்ட வருடத்தில் விரிவான வருமான அறிக்கையில் இணைக்கப்படுகின்றன.

**முதிர்ந்த பயன்தரும் உயிரியல் சொத்துக்கள்**

- தென்னை - 50 வருடங்களுக்கு மேல்
- இறப்பர் - 20 வருடங்களுக்கு மேல்
- ஏனைய பயிர்கள் - 20 வருடங்களுக்கு மேல்

பயன்தரும் உயிரியல் சொத்துக்கள் சம்பந்தமாக நிரந்தரமாக மதிப்பைக் குறைக்கும் தொகை முழு அளவில் விரிவான வருமான அறிக்கைக்குக் கொண்டு செல்லப்பட்டு, குறிப்பிட்ட பயிர் சம்பந்தமான நட்டம் நிச்சயிக்கப்பட்ட பின்னர் அது சம்பவித்த வருடத்தில் அந்தச் சொத்துக்களின் தேறிய கொண்டு செல்லும் தொகையில் இருந்து கணிக்கப்படும்.

### 3.1.2.2 பயன்தரும் உயிரியல் சொத்துக்களின் செலவினங்கள்

நிரப்புதல் நடவடிக்கையில் ஏற்பட்ட காணி அபிவிருத்திச் செலவினங்கள் மூலதன மயமாக்கப்படுகின்றன. இத்தகைய நிரப்புதல் நடவடிக்கைகளின் காரணமாக பொருளாதார காலத்தின் அதிகரிப்பு ஏற்படுத்தப்படுமானால், அவ்வாறு மூலதன மயமாக்கப்பட்ட செலவினங்கள் புதிதாக மதிப்பிடப்பட்ட எஞ்சியுள்ள பயன்தரும் பொருளாதார காலத்தில் அல்லது முடிவுக்கு வராத குத்தகைக் காலம் இவற்றில் எது குறைந்ததோ அதனடிப்படையில் பெறுமதி குறைக்கப்படுகின்றது.

மூலதன மயமாக்கப்படாத நிரப்புதல் செலவினங்கள் அவை ஏற்பட்ட வருடத்தில் விரிவான வருமான அறிக்கையில் இணைக்கப்படுகின்றன.

### 3.1.2.3 பாவனைக்குரிய உயிரியல் சொத்துக்கள்

உபயோகிக்கக்கூடிய மர வளத்தைக் கொண்ட விருட்சங்கள், பூர்வாங்க அங்கீகாரத் தொகையில் அளவிடப்பட்டு ஒவ்வொரு அறிக்கைக்கான காலப்பகுதியின் முடிவிலும் நீதியான பெறுமதியில் செலவினங்கள் கழிக்கப்பட்டு விற்பனை விலை LKAS 41 இன் பிரகாரம் கணிக்கப்படுகின்றது. இந்தக் காலப்பகுதியில் இத்தகைய மரங்களின் விலைகள் முக்கியமானவை அல்ல என்பதனால், இத்தகைய உயிரியல் மாற்றத்தின் தாக்கம் இளம் தென்னை மரங்களின் நீதியான பெறுமதியில் உத்தேசமானதாகக் கருதப்படுகின்றது. மர வளம் கொண்ட விருட்சங்களின் நீதியான பெறுமதி, DCF வழிமுறையைக் கடைப்பிடித்து, மரத்திற்கு தற்போதைய சந்தையில் கிடைக்கும் விலையைக் கருத்திற் கொண்டு அளவிடப்படுகின்றன. இந்த விலைகள் குறிப்பிட்ட மரங்கள் முதிர்ச்சியடையும் போது சுயேச்சையான மதிப்பீட்டாளரினால் மதிப்பிடப்படுகின்றன.

விற்பனை நடவடிக்கையின் போது, நீதியான விலையில் செலவினங்கள் கழிக்கப்பட்டு, பாவனைக்குரிய உயிரியல் சொத்துக்களின் பூர்வாங்க அங்கீகாரத்தின் மூலம் உருவாகும் இலாபம் அல்லது நட்டம் அது ஏற்படும் காலப்பகுதியில் கிடைக்கும் இலாபம் அல்லது நட்டம் என்பன உள்ளடங்குகின்றன. ஏனைய சகல கருத்துக்களும் குறிப்பு 14B யில் தரப்பட்டுள்ளன.

DCF மாதிரி நடவடிக்கைளில் முக்கிய வேறுபாடுகள்

| வேறுபாடுகள் | கருத்துக்கள் |
|---|---|
| நாணயப் பெறுமதி | ரூபா |
| மரங்கள் தொடர்பாக | மரத்தின் சுற்றளவு, உயரம் என்பனவற்றின் மதிப்பீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட முன்மதிப்பீடு, வெவ்வேறு புவியியல் பிரதேசங்களில் உள்ள ஒவ்வொரு மரத்தினதும் வளர்ச்சி என்பன கருத்திற் கொள்ளப்பட்டுள்ளன. |
| | நிறுவனத்தின் வனப் பிரதேச திட்டத்துடன் இணைந்த வகையில் தற்சமயம் நடைமுறையில் உள்ள சகல சட்டபூர்வ பிரமாணங்களும் மர அறுவடையின் போது கடைப்பிடிக்கப்படுகின்றன. |
| பொருளாதார அடிப்படையிலான பயனுள்ள காலம் | நிறுவனத்தின் வனப் பிரதேசத் திட்டத்துடன் இணைந்த ஒவ்வொரு மரத்தினதும் வழமையான காலத்தின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளது. |
| விற்பனை விலை | தற்சமயம் நிலவும் நாட்டின் சந்தை விலையில் மதிப்பீடுகள் அமைந்துள்ளன. மரங்களை விற்பனைக்குரிய நிலைமைக்குக் கொண்டு வருவதற்கான சகல அம்சங்களும் பூர்த்தி செய்யப்படுவது அவசியமாகும். |
| கழிவுத் தொகை வீதம் | எதிர்கால காசுப்பாய்ச்சல்கள் கீழ்க்காணும் கழிவு வீதத்தில் மதிப்புக் குறைக்கப்படுகின்றன. மரங்கள் 14% |

### 3.1.2.4 அங்கீகாரமும் அளவீடும்

ஸ்தூலப்பொருள் என்பது, உயிரியல் சொத்துக்களை அவற்றை ஸ்தூலப்பொருள் கட்டுப்படுத்தும் சமயத்தில் மாத்திரமே அங்கீகரிக்கிறது. இதன்பலனாக, சொத்துக்களுடன் இணைந்த எதிர்கால பொருளாதார நன்மைகள் நீதியான பெறுமதியில் அல்லது சொத்துக்களின் நம்பகமான கொள்விலையில் ஸ்தூலப்பொருள்களுக்குச் செல்வது சாத்தியமாகும்.

பயன்தரும் உயிரியல் சொத்துக்கள் என்பன கொள்விலையில் இருந்து திரட்டிய தேய்மானமும் LKAS 16 இன் பிரகாரமான திரண்ட குறைந்த நட்ட மதிப்பீட்டுத் தொகையும் கழிக்கப்பட்டு CASL இனால் வழங்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய அளவிடப்படுகின்றன.

பாவனைக்குரிய மர வளம் கொண்ட விருட்சங்கள் பூர்வாங்க அங்கீகாரத் தொகையில் அளவிடப்பட்டு, ஒவ்வொரு அறிக்கையிடும் காலத்தின் இறுதியிலும் நீதியான பெறுமதியில் LKAS 41 இன் பிரகாரமான விற்பனைச் செலவினம் கழிக்கப்படுவதன் மூலம் அளவிடப்படுகின்றன. கொள்விலை என்பது, இளம் தென்னை மரங்களின் நீதியான பெறுமதியாகக் கணிக்கப்பட்டு (05 வருடங்களுக்கு உட்பட்ட மரங்கள்) இந்தக் காலப்பகுதிக்கான இத்தகைய மரங்களின் மீதான உயிரியல் மாற்ற தாக்கங்கள் கருத்திற் கொள்ளப்படுவது அவசியமல்ல.

### 3.1.3 நிதியியல் சாதனங்கள்

### 3.1.3.1 நிதியியல் சொத்துக்கள்

**3.1.3.1.1 ஆரம்ப அங்கீகரித்தல் மற்றும் அளவீடு**

இலங்கைக் கணக்கீட்டு நியமம் 39 இனது செயற்பரப்பினுள் உள்ளடங்கும் நிதியியல் சொத்துக்களானவை, இலாபம் அல்லது நட்டம், கடன் மற்றும் பெறக்கூடியவை என்பவற்றினூடாக நியாயமான சந்தைப் பெறுமதியில் கிடைக்கும் நிதியியல் சொத்துக்கள் முதிர்ச்சி முதலீடுகளுக்காக வைத்திருக்கப்படுபவை மற்றும் விற்பனைக்காகக் கிடைக்கக்கூடிய நிதியியல் சொத்துக்கள் என பொருத்தமானவாறு வகைப்படுத்தப்படுகின்றன. நிறுவனமானது, தனது நிதியியல் சொத்துக்களின் வகைப்படுத்தலை ஆரம்ப அங்கீகரித்தலின் போது தீர்மானிக்கின்றது.

அனைத்து நிதியியல் சொத்துக்களும் ஆரம்பத்தில் அவற்றின் நியாயமான சந்தைப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படுவதுடன், சந்தைப் பெறுமதியில் அல்லாத சொத்துக்கள் நேரடியாகக் கொடுக்கல் வாங்கல் செலவுகளில் சேர்க்கப்படக்கூடிய இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாகவும் அங்கீகரிக்கப்படுகின்றன. நிறுவனத்தின் நிதியியல் சொத்துக்களானவை காசு மற்றும் குறுகியகால வைப்புக்கள், வர்த்தக மற்றும் பிற கிடைக்கத்தக்கவை, கடன்கள் மற்றும் கிடைக்கக்கூடியவை என்பவற்றை உள்ளடக்குகின்றன.

**3.1.3.1.2 பின்வருகின்ற அளவீடு**

நிதியியல் சொத்துக்களின் பின்வருகின்ற அளவீடானது, பின்வருமாறு காட்டப்பட்டுள்ள அவற்றின் வகைப்படுத்தலில் தங்கியுள்ளது.

**இலாபம் அல்லது நட்டத்திற்கூடான சந்தைப் பெறமதி கொண்ட நிதியியல் சொத்துக்கள்**

இலாபம் அல்லது நட்டத்திற்கூடான சந்தைப் பெறுமதியைக் கொண்ட நிதியியல் சொத்துக்களானவை, வர்த்தகத்திற்கென வைத்திருக்கப்படும் நிதியியல் சொத்துக்கள், மற்றும் இலாபம் அல்லது நட்டத்திற்கூடான சந்தைப் பெறுமதியினை வைத்து ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்டதன் மூலம், நியமிக்கப்பட்ட நிதியியல் சொத்துக்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. நிதியியல் சொத்துக்களானவை விற்பனை நோக்கத்தில் அல்லது விரைவில் மீளக் கொள்வனவு செய்யும் நோக்கத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தால், வர்த்தகத்திற்கென வைத்திருக்கப்படுபவை என வகைப்படுத்தப்படுகின்றன. தனியாக்கப்பட்ட ஒன்றிணைந்த வழிப்பொருட்களையும் உள்ளடக்கும் வழிப்பொருட்களானவை, பயனுள்ள இழப்புக் காப்பு என நியமிக்கப்படாத பட்சத்தில் வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்படுபவை என வகைப்படுத்தப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டத்திற்கூடான சந்தைப் பெறுமதியிலுள்ள நிதியியல் சொத்துக்களானவை, அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்றிலுள்ள நிதியியல் வருமானம் அல்லது நிதியியல் செலவுகளில் அங்கீகரிக்கப்பட்டுள்ள சந்தைப் பெறுமதி மாற்றங்களையும் உள்ளடக்கிய சந்தைப் பெறுமதியில் நிதியியல் நிலைமைக் கூற்றினால் தாங்கப்படுகின்றன.

**கடன்கள் மற்றும் கிடைக்கக்கூடியவை**

கடன்கள் மற்றும் கிடைக்கக்கூடியவையானவை, பெறுமதிகள் அல்லாத நிதியியல் சொத்துக்கள் என்பதனுடன், செயற்படும் சந்தையில் விலை குறிக்கப்படாத நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுகளையும் கொண்டதாகும். இவ் நிதியியல் சொத்துக்களானவை, ஆரம்ப அளவீட்டினைத் தொடர்ந்து, குறைந்தளவில் வலு இழக்கக்கூடிய பயனுறு வட்டி வீதங்களை உபயோகித்து தேய்மானச் செலவில் அளவிடப்படுகின்றன. பயனுறு வட்டி வீதத்தின் இன்றியமையாத பகுதிகளான கழிவு அல்லது கைப்பற்றுகையில் செலவிடப்பட்ட உயர் தொகை மற்றும் கட்டணம் அல்லது செலவுகளைக் கணக்கிடுவதன் மூலம் தேய்மானச் செலவானது கணிக்கப்படுகின்றது. அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்றிலுள்ள, நிதியியல் வருமானத்தின் கீழ் பயனுறு வட்டி வீத தேய்மானச் செலவானது உள்ளடக்கப்படுகின்றது. வலு இழப்பதனால் தோண்றக்கூடிய இழப்புகளானவை, அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்றிலுள்ள நிதியியல் செலவீனங்களினுள் உள்ளடக்கப்படுகின்றன.

நிறுவனத்தினால் வைத்திருக்கப்படும் கடன்கள் மற்றும் கிடைக்கத்தக்கவைகளானவை, வர்த்தகத்திலிருந்து பெறத்தக்கவை, வைப்புக்கள், முற்பணங்கள், பிற கிடைக்கத்தக்கவைகள். காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

**முதிர்ச்சி முதலீடுகளுக்காக வைத்திருக்கப்படுபவை**

நிறுவனமானது, நேரான நோக்கத்தையும், முதிர்ச்சி வரையில் வைத்திருக்கக்கூடிய திறனையும் கொண்டுள்ள போது, நிலையான மற்றும் தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுகளுடன் கூடிய பெறுமதியற்ற நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிலையான முதிர்ச்சிகளானவை, முதிர்ச்சி முதலீடுகளுக்காக வைத்திருக்கப்படுபவை என வகைப்படுத்தப்படுகின்றன. இவ் முதிர்ச்சி முதலீடுகளுக்காக வைத்திருக்கப்படுபவை, ஆரம்ப அளவீட்டினைத் தொடர்ந்து குறைந்தளவில் வலு இழக்கக்கூடிய பயனுறு வட்டி வீதங்களை உபயோகித்து தேய்மானச் செலவில் அளவிடப்படுகின்றன. பயனுறு வட்டி வீதத்தின் இன்றியமையாத பகுதிகளான கழிவு அல்லது கைப்பற்றுகைகளில் செலவிடப்பட்ட உயர் தொகை மற்றும் கட்டணம் அல்லது செலவுகளைக் கணக்கிடுவதன் மூலம் தேய்மானச் செலவானது கணிக்கப்படுகின்றது. பயனுறு வட்டி வீதத் தேய்மானச் செலவானது, அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்றினுள் நிதியியல் வருமானத்தின் கீழ் உள்ளடக்கப்படுகின்றது. வலு இழப்பதனால் தோன்றக்கூடிய இழப்புகளானவை அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்றிலுள்ள நிதியியல் செலவீனங்களினுள் உள்ளடக்கப்படுகின்றன.

**விற்பனைக்காகக் கிடைக்கக்கூடிய நிதியியல் முதலீடுகள்**

விற்பனைக்காகக் கிடைக்கக்கூடிய நிதியியல் முதலீடுகளானவை, பங்குரிமை மூலதனம் மற்றும் கடன் பிணையங்களை உள்ளடக்குகின்றன. விற்பனைக்காகக் கிடைக்கக்கூடிய பங்குரிமை மூலதனங்கள் ஆகியவை, விற்பனைக்காக வைத்திருக்கப்படுபவை என்றோ இலாபம் அல்லது நட்டத்திற்கூடான சந்தைப் பெறுமதியில் நியமிக்கப்பட்டவை என்றோ வகைப்படுத்தப்படவில்லை. இவ்வகையினுள் உள்ளடங்கும் கடன் பிணையங்களானவை, கால வரையறையற்ற முறையில் வைத்திருப்பதன் மூலம், திரவத் தேவைகளுக்குப் பதிலாக விற்கப்படக் கூடியவை அல்லது சந்தை நிலவரங்களில் ஏற்படும் மாற்றங்களுக்கமைய விற்கப்படக்கூடியவை ஆகும்.

ஆரம்ப அளவீட்டின் பின்னர் விற்பனை நிதி முதலீடுகளுக்காக இருக்கின்றவைகள் குறிப்பிட்ட முதலீடு அங்கீகரிக்கப்படாத போது ஏனைய விரிவான வருமானத்தில் உள்ள விற்பனைகளுக்கு இருக்கக்கூடிய ஒதுக்கீடு என்ற வகையில் பெறப்படாத இலாபங்கள் அல்லது நட்டங்களுடன் இணைத்து நியாயமான பெறுமதியில் அளவிடப்படும். அந்த நேரத்தில் ஏனைய செயற்பாட்டு வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட அல்லது ஈடு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்ட

ஒட்டுமொத்த இலாபங்கள் அல்லது நட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டு அந்த நேரத்தில் ஒட்டுமொத்த நட்டம் நிதிச் செலவுகளில் விரிவான வருமானக் கூற்றில் மீள் வகைப்படுத்தப்படுவதுடன், விற்பனைக்காக ஒதுக்கியுள்ளதில் இருந்து விற்பனைக்கு இருக்கக்கூடிய கடன்பாதுகாப்பு மீதான வட்டி வருமானம் பலன்தரும் வட்டி முறையைப் பயன்படுத்தி கணக்கிடப்படுவதுடன், இலாப அல்லது நட்டமாக அங்கீகரிக்கப்படும்.

**3.1.3.1.3 அங்கீகரிக்கப்படாதவை**

ஒரு நிதியியல் சொத்தானது, (அல்லது எங்கும் பொருந்துமாறு நிதியியல் சொத்தினது ஒரு பகுதி அல்லது ஒத்த நிதியியல் சொத்துக்களின் ஒரு தொகுதி) பின்வரும் சந்தர்ப்பங்களில் அங்கீகரிக்கப்படுவதில்லை.

- சொத்திலிருந்து காசுப் பாய்ச்சலைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமைகளை காலாவதியாகியுள்ளமை

- சொத்திலிருந்து காசுப்பாய்ச்சலைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமைகளை நிறுவனமானது இடம் மாற்றியிருத்தல் அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட காசுப் பாய்ச்சலை தாமதமில்லாமல் முழுவதுமாக ஒரு மூன்றாம் தரப்பினருக்கு வழங்க வேண்டிய கடமை இருத்தல், மற்றும் (அ) நிறுவனமானது அனைத்து இடர்கள் மற்றும் வெகுமதிகளையும் கணிசமான அளவு இடமாற்றியிருந்தாலோ அல்லது (ஆ) நிறுவனமானது சொத்துக்களில் இருந்து பெறும் அனைத்து இடர்கள் மற்றும் வெகுமதிகளையும் இடம்மாற்றாமலோ அல்லது நீடுறுதியாக வைத்திருக்காமலோ, ஆனால் சொத்தினது கட்டுப்பாட்டினை இடமாற்றியிருந்தாலோ.

**3.1.3.1.4 நிதியியல் சொத்துக்கள் வலுவிழத்தல்**

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் நிறுவனமானது, ஒரு நிதியியல் சொத்து அல்லது நிதியியல் சொத்துக்களின் ஒரு தொகுதியானது, வலுவிழந்திருக்கின்றதா என்பதனைக் காட்டும் நம்பகரமான புறநிலை ஆதாரங்களை மதிப்பீடு செய்கிறது. ஒரு நிதியியல் சொத்து அல்லது நியியியல் சொத்துக்களின் ஒரு தொகுதியானது, பின்வரும் சந்தர்ப்பங்களான சொத்தினது ஆரம்ப அங்கீகரித்தலுக்குப் பிறகு நிகழும் ஒரு அல்லது பல நிகழ்வுகளின் விளைவாக வலு இழந்தமையை உறுதிப்படுத்தும் நம்பகரமான ஆதாரம் காணப்படல் (இழப்பு நிலைமைக்கு உள்ளாகியமை) மற்றும் நம்பத்தகுந்த விதத்தில் மதிப்பீடு செய்யக்கூடிய இவ் இழப்பு நிலைமையானது மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களில் விளைவினை ஏற்படுத்த வல்லதாகவோ காணப்படுவதன் மூலம் வலு இழந்ததாகக் கருதப்படுகின்றது.

**3.1.3.2 நிதியியல் பொறுப்புக்கள்**

**3.1.3.2.1 ஆரம்ப அங்கீகரித்தலும் அளவீடும்**

இலங்கைக் கணக்கீட்டு நியமம் 39 இனது செயற்பரப்பினுள் உள்ளடங்கும் நிதியியல் பொறுப்புக்கள் ஆனவை, பொருத்தமான விதத்தில் இலாபம் அல்லது நட்டம் அல்லது கடன்கள் மற்றும் கடன்பாடுகள் என்பனவற்றிற்கூடாக நியாயமான சந்தைப் பெறுமதியில் கிடைக்கும் நிதியியல் பொறுப்புக்கள் என வகைப்படுத்தப்படுகின்றன. நிறுவனமானது, தனது நிதியியல் பொறுப்புக்களின் வகைப்படுத்தலை ஆரம்ப அங்கீகரித்தலின் போது தீர்மானிக்கிறது. அனைத்து நிதியியல் பொறுப்புகளும் ஆரம்பத்தில் அவற்றின் நியாயமான சந்தைப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படுவதுடன், கடன்கள் மற்றும் கடன்பாடுகள் ஆனவை, நிதியியல் பொறுப்புக்களினைக் கையேற்றல் அல்லது வெளிவிடுதலுடன் நேரடியாகச் சேர்க்கப்படக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் ஊடாகவும் அங்கீகரிக்கப்படுகின்றன. நிறுவனத்தினது நிதியியல் பொறுப்புக்களாவன, வர்த்தகம், பிற கொடுப்பனவுகள், வங்கி மேலதிகப்பற்றுக்கள், கடன்கள் மற்றும் கடன்பாடுகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. இலாபம் அல்லது நட்டத்திற்கூடான சந்தைப் பெறுமதியைக்கொண்ட நிதியியல் பொறுப்புக்களின் பின்வருகின்ற அளவீடானது வர்த்தகத்திற்கென வைத்திருக்கப்படும் நிதியியல் பொறுப்புக்கள் மற்றும் இலாபம் அல்லது நட்டத்திற்கூடான சந்தைப் பெறுமதியினை வைத்து ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்டதன் மூலம் நியமிக்கப்பட்ட நிதியியல் பொறுப்புக்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. நிதியியல் பொறுப்புக்களானவை, அடுத்து வரும் காலத்தில் விற்பனை செய்யப்படும் நோக்கில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தால், வர்த்தகத்திற்கென வைத்திருக்கப்படுபவை என வகைப்படுத்தப்படுகின்றன. இப்பொறுப்புக்களில் ஏற்படும் ஆதாயங்கள் அல்லது இழப்புக்கள் வர்த்தகத்திற்கென வைத்திருக்கப்படுவதுடன், அவை அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. நிறுவனமானது, இலாபம் அல்லது நட்டத்திற்கூடான சந்தைப் பெறுமதியின் ஆரம்ப அங்கீகரித்தலின் போது, எவ் நிதியியல் பொறுப்புக்களையும் நியமித்திருக்கவில்லை. ஆரம்ப அங்கீகரித்தலின் பின்னரான வட்டியுடன் கடன்கள், கடன்பாடுகள், வட்டியுடன் சேர்ந்த கடன்கள் மற்றும் கடன்பாடுகள் என்பன பயனுறு வட்டி வீத முறையையும் உபயோகித்து, தேய்மானச் செலவில் அளவிடப்படுகின்றன. ஆதாயங்கள் மற்றும் இழப்புக்கள் என்பன பொறுப்புக்களானவை அங்கீகாரமிழக்கும் போதும், பயனுறு வட்டி வீத முறையிலுள்ள தேய்மானச் செலவு படிமுறையின் ஊடாகவும், அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. பயனுறு வட்டி வீதத்தின் இன்றியமையாத பகுதிகளான கழிவு அல்லது கையேற்கும் போது செலவிடப்பட்ட உயர் தொகை மற்றும் கட்டணம் அல்லது செலவுகளைக் கணக்கெடுப்பதன் மூலம் தேய்மானச் செலவானது கணிக்கப்படுகின்றது. அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்றிலுள்ள நிதியியல் வருமானத்தின் கீழ் பயனுறு வட்டி வீதத் தேய்மானச் செலவானது உள்ளடக்கப்படுகின்றது.

**3.1.3.2.2 அங்கீகரிக்கப்படாதவை**

நிதிப் பொறுப்பு ஒன்று செயலிழக்கப்பட்ட பின் அல்லது இரத்துச் செய்யப்பட்ட பின் அல்லது காலாவதியான பின் அது நிதிக் கூற்றுக்களில் இருந்து அகற்றப்படும்.

**3.1.3.3 நிதியியல் சாதனங்களை தீதறுப்புச் செய்தல்**

நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புக்களை அங்கீகரிக்கப்பட்ட தொகைகளில் தீதறுப்புச் செய்வதற்கு

# கணக்கியல் கொள்கைகள் தொடர்ச்சி...

நடைமுறைப்படுத்தக்கூடிய தீதறுப்புக்கான சட்ட உரிமை ஒன்று உள்ளவிடத்து மாத்திரமே அத்துடன், நிகர அடிப்படையில் சமரசப்படுத்துவதற்கான மன எண்ணம் ஒன்று உள்ள போதும் அல்லது ஒரே நேரத்தில் சொத்துக்களை மாற்றுவதற்கும் பொறுப்புக்களைச் சமரசப்படுத்துவதற்கும் ஏற்பாடு ஒன்று உள்ள போது மாத்திரமே தீதறுப்புச் செய்ய முடியும்

**3.1.3.4 நிதி இடர் முகாமைத்துவம்**

**கடன் இடர்**

நிதி சாதனம் ஒன்றுக்கு உரிய வாடிக்கையாளர் ஒருவர் அல்லது மறு திறத்தவர் அவர்களுடைய ஒப்பந்த ரீதியான கடப்பாடுகளைப் பூர்த்தி செய்யத் தவறுகின்றவிடத்து, கம்பனிக்கு ஏற்படுகின்ற நிதி ரீதியான நட்டம் கடன் இடர் எனப்படும். மேலும், இது, வாடிக்கையாளர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புபட்ட திறத்தவர்களிடம் இருந்து கம்பனிக்கு பெறவேண்டிய தொகைகளில் இருந்து எழும்.

கம்பனியுடைய வியாபாரம் மற்றும் ஏனைய பெறுகைகள் மற்றும் முதலீடுகள் என்பனவற்றில் இருந்து உறப்படும் நட்டங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட தொகையைப் பிரதிபலிப்பதற்காக கம்பனி அந்தப் பாதிப்பை ஈடு செய்வதற்காக அலவன்ஸ் ஒன்றை ஸ்தாபிக்கும்.

**திரவ இடர்**

கம்பனி அதனுடைய கடப்பாடுகளைச் சந்திக்கின்ற போது, கடப்பாடுகளுடன் தொடர்புபட்டுள்ள பணத்தை வழங்குவதன் மூலம் அல்லது வேறு நிதிச் சொத்தை அளிப்பதன் மூலம் ஈடு செய்யக்கூடிய நிதிப் பொறுப்புக்கள் தொடர்பாக பிரச்சினைகளை எதிர்நோக்குகின்ற போது ஏற்படும் இடர் திரவ இடர் எனப்படும். கம்பனியுடைய நன்மதிப்புக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் அல்லது ஏற்றுக்கொள்ள முடியாத அளவு நட்டங்கள் ஏற்படாத வகையிலும் சாதாரண மற்றும் அழுத்தம் கொடுக்கக்கூடிய நிலைகளிலும் கம்பனி சந்திக்க வேண்டிய பொறுப்புக்களைப் பூர்த்தி செய்வதற்கு இயலுமான வரையில் போதுமான அளவு திரவத்தன்மையைப் பேணிப் பாதுகாக்கும் வகையில் கம்பனியுடைய திரவத்தன்மையை முகாமைத்துவம் செய்யும் அணுகுமுறை காணப்படல் வேண்டும்.

**வட்டி விகித இடர்**

கம்பனியுடைய சந்தைப்படுத்தல் வட்டி விகிதத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள் தொடர்பான இடர், பிரதானமாக, கம்பனியுடைய நீண்டகால கடன் கடப்பாடுகளுடன் தொடர்புபடும். இது, மிதக்கும் வட்டி விகிதங்களுடன் சேர்ந்தது. கம்பனி தன்னுடைய வட்டி விகித இடரை நிலையான மற்றும் மாற்றமடையக்கூடிய விகிதத்திலான கடன்கள் மற்றும் பெறுவனவுகள் என்பன தொடர்பான ஒரு சமமான நிலையைப் பேணுவதன் மூலம் முகாமைத்துவம் செய்யும்.

**3.1.4 இருப்புச் சரக்கு**

**3.1.4.1 உயிரியல் சொத்துக்களில் இருந்து அறுவடை செய்யப்பட்ட விவசாய உற்பத்தி**

அறுவடை செய்யப்பட்ட விவசாயப் பொருட்கள் அறிக்கையிடப்படும் திகதியின் பின்னர் விற்பனை செய்யப்பட்ட விற்பனை ஒப்பந்தங்களில் குறித்துரைக்கப்பட்ட விலைகளில் மதிப்பீடு செய்யப்படும். அத்துடன், கணக்கியல் கூற்றுக்கள் தயார் செய்யப்படும் வரையில் ஈடுபடாத விற்பனை ஒப்பந்தங்களில் விவசாயப் பொருட்களின் பெறுமதி நிகர விற்பனை விலையின் சராசரியில் மதிப்பீடு செய்யப்படும்.

தேங்காய்களைப் பொறுத்தவரையில், சந்தையில் நிச்சயமற்ற தன்மை நிலவுகின்ற பொழுது, கொப்பறாவாக மாற்றப்பட்ட பின்னர் அதனுடைய நிகர கைவரப் பெறக்கூடிய பெறுமதி மதிப்பீட்டுக்காகப் பயன்படுத்தப்படும்.

**3.1.4.2 மேலதிக செயற்பாட்டின் பின்னரான விவசாயப் பொருட்கள்**

மேலதிகச் செயற்பாட்டின் மூலம் பெறப்பட்ட விவசாயப் பொருட்கள் வழக்கற்றுப்போன மற்றும் மந்தகதியில் செல்கின்ற பொருட்களுக்கான அலவன்சுகள் ஒழுங்குபடுத்தப்பட்ட பின்னர் குறைந்த விலையிலும், மதிப்பிடப்பட்ட நிகர கைவரப் பெறப்பட்ட பெறுமதி அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும். நிகர கைவரப்பெறக்கூடிய பெறுமதி என்பது, மதிப்பிடப்பட்ட விற்பனை விலை ஆகும். இதனடிப்படையிலேயே சாதாரண வியாபாரச் சூழ்நிலைகளின் போது இருப்பிலுள்ள பொருட்கள் விற்பனை செய்யப்படும். இதிலிருந்து பூர்த்தி செய்வதற்குத் தேவைப்படுகின்ற மதிப்பிடப்பட்ட தொகை மற்றும் விற்பனை செய்வதற்கு அவசியமான மதிப்பிடப்பட்ட விலை ஆகியன கழிக்கப்படும்.

**3.1.4.3 உள்ளீட்டுப் பொருள், நுகர்வுப்பொருள் மற்றும் உதிரிப்பொருட்கள்**

உள்ளீட்டுப் பொருட்கள், உதிரிப்பொருட்கள் மற்றும் நுகர் பொருட்கள் என்பன FIFO அடிப்படையில் உண்மையான விலையில் மதிப்பீடு செய்யப்படும்.

**3.1.4.4 பயிர் வளர்ப்பு நாற்றுப் பண்ணைகள்**

நாற்றுப் பண்ணை விலை, நேரடிப் பொருட்களின் விலை, நேரடி ஊழியம் மற்றும் பொருத்தமான விகிதாசார அடிப்படையிலான நேரடியாக அடையக்கூடிய மேலதிகச் செலவுகள் மிகை வளர்ச்சியடைந்த தாவரங்கள் என்பவற்றுக்கு ஏற்படுகின்ற செலவுகள் என்பனவற்றை உள்ளடக்கும்.

**3.1.5 காசு மற்றும் காசுக்கு சமமானது**

காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள், காசு மீதிகள், அழைப்பு வைப்புகள், கேள்வி வைப்புகள் மற்றும் குறைந்தகால உடனடியாக பணத்தொகைகளாக மாற்றக்கூடிய உயரிய திரவ முதலீடுகள் மற்றும் நிதிப் பாய்ச்சல் கூற்றுக்களுக்காக கேள்வியின் மீது மீளச் செலுத்தக்கூடிய வங்கி மேலதிகப்பற்றின் பெறுமதி ஆயின் அது குறிப்பிடத்தக்க அளவு இடர் மாற்றங்களுக்கு உட்படக்கூடியது ஆகியன இவற்றில் உள்ளடங்கும்.

**3.2 பொறுப்புக்களும் ஒதுக்கீடுகளும்**

பொறுப்புகள் நிதி நிலைமை கூற்றுக்களின் மீதான நடைமுறைப் பொறுப்புகள் பின்வருமாறு வகைப்படுத்தப்படும். அவையாவன: கேள்வியின் மீது கொடுப்பனவு செய்ய வேண்டியவை அல்லது அறிக்கையிடும் திகதியில் இருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டியவை என்பனவாகும். நடைமுறை அல்லாத பொறுப்புகள் அறிக்கையிடப்படும் திகதியில் இருந்து ஒரு வருடம் பூர்த்தி அடைந்த பின்பு செலுத்தப்பட வேண்டிய தொகைகளின் மீதிகளாகும். அனைத்து பொறுப்புக்களும் இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கருத்திற் கொள்ளப்படும்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட நிகழ்வு ஒன்றின் காரணமாக, கம்பனி தற்போது சட்ட அல்லது ஆக்கம் சார்ந்த கடப்பாடு ஒன்றுக்கு பொறுப்புள்ள போது அத்துடன் அது உண்மையான அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகின்ற போதும் அத்துடன் அத்தகைய கடப்பாடு ஒன்றை சமரசப்படுத்துவதற்கு பொருளாதார அனுகூலத்தின் வெளிப்பாய்ச்சல் ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ள போது ஒதுக்கீடு ஒன்று அங்கீகரிக்கப்படும்.

**3.2.1 தொழிலாளர்களுக்கான அனுகூலங்கள்**

**3.2.1.1 வரையறுக்கப்பட்ட பங்கீட்டுத் திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதியம் ஊழியர் நம்பிக்கை நிதியம்**

வரையறுக்கப்பட்ட பங்கீட்டுத் திட்டம் என்பது, தொழிலின் பின்னர் வழங்கப்படும் ஒரு அனுகூலமாகும். இதன் கீழ் ஒரு கம்பனி, நிலையான பங்கீடுகளை இன்னுமொரு அமைப்புக்குச் செலுத்துவதுடன், மேலதிகக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு சட்ட ரீதியான அல்லது ஆக்கம் சார்ந்த கடப்பாடு ஒன்று ஏற்படாது.

திட்டமிடப்பட்ட பங்கீட்டு ஓய்வூதியத் திட்டங்களுக்கான பங்கீடுகளைச் செய்வதற்கான கடப்பாடுகள் ஊழியர் நலன் செலவு என அங்கீகரிக்கப்பட்டிருப்பதுடன், ஊழியர்களால் குறிப்பிட்ட நிறுவனத்திற்கு சேவைகளை வழங்கிய காலப்பகுதியின் போது கம்பனி இலாபம் அடைந்திருந்தாலும், நட்டம் அடைந்திருந்தாலும் இதனை வழங்க வேண்டும்.

நிறுவனம் மொத்த பணியூதியங்களில் இருந்து 12% ஐ ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் (EPF) தோட்டப் பணியாட்கள் சேமலாப அமைப்புக்கும் (ESPS) வழங்குகிறது. அனைத்து ஊழியர்களும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்குத் தகுதியுடையவர்கள் ஆவர். அத்தகைய ஊழியர்களுக்கு கம்பனி மொத்த பணியூதியங்களில் இருந்து 3% பங்களிப்புச் செய்கிறது.

**3.2.1.2 வரையறுக்கப்பட்ட நலன்திட்டம் - ஓய்வுப் பணிக்கொடை**

வரையறுக்கப்பட்ட நலத்திட்டங்கள் ஒரு ஊழியர் ஓய்வு பெறுகின்ற போது பெறக்கூடிய தொகையை வரையறை செய்கிறது. இது பொதுவாக வயது, சேவைக்காலம், நட்டஈடு போன்ற ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட காரணிகளின் அடிப்படையிலோ தீர்மானிக்கப்படும்.

கம்பனி தகுதியான ஊழியர்களுக்கு 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு வரையறுக்கப்பட்ட நலத்திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது.

இந்தத் திட்டத்திற்கான நிதி முழுமையாக கம்பனியில் இருந்து பங்களிப்புச் செய்யப்படுகிறது. சுயாதீனமான, தகுதிவாய்ந்த காப்பீட்டுக் கணிப்பாளர்களுடைய ஆலோசனைகளைக் கருத்திற் கொண்டு, கம்பனி பணிக்கொடைக்கான ஒதுக்கீட்டை மேற்கொண்டது.

நிதிநிலைக் கூற்றில் வரையறுக்கப்பட்ட அனுகூலத் திட்டங்களுக்கான அங்கீகரிக்கப்பட்டுள்ள பொறுப்பு என்பது, அறிக்கையிடும் திகதியில் வரையறுக்கப்பட்ட அனுகூலம் தொடர்பான கடப்பாட்டின் நடைமுறைப் பெறுமதியைக் குறிக்கும். இது, கடந்தகால அங்கீகரிக்கப்படாத சேவைக்கான செலவுகளையும் உள்ளடக்கும். கம்பனி வரையறுக்கப்பட்ட நலத் திட்டத்திற்கான கடப்பாட்டினை வருடம் தோறும் கணக்கிடுவதுடன் அதற்கு ஊழியர்கள் நலன் தொடர்பான இலங்கையின் கணக்கியல் தரம் 19 இல் குறிப்பிடப்பட்டுள்ள கூறுகடன் முறைமை பயன்படுத்தப்படுகின்றது. வரையறுக்கப்பட்ட நலன் தொடர்பான கடப்பாடுகளுடைய நடைமுறைப் பெறுதியைத் தீர்மானிக்கும் போது, நாணய அடிப்படையில் பெயரிடக்கூடிய அரசாங்க முறிகளுக்கான வட்டி வீதங்களைப் பயன்படுத்தி, எதிர்காலத்தில் ஏற்படுகின்ற நிதிப் பாய்ச்சல்கள் கழிக்கப்பட்டு கணக்கிடப்படும். இந்த அடிப்படையில் நலன்களுக்கான கொடுப்பனவுகள் செலுத்தப்படுவதுடன், அது, தொடர்புடைய ஓய்வூதியப் பொறுப்புடைமை தொடர்பான விதிகளோடு பொருந்தக்கூடியதாக இருக்கும்.

அனுபவமுள்ள சீர்படுத்தல்கள் மற்றும் காப்பீட்டுக் கணிப்பீட்டாளர்களின் ஊகங்களில் இருந்து எழக்கூடிய பெறுவனவுகளும், நட்டங்களும், அக்காலப்பகுதியின் போது இருக்கக்கூடிய ஏனைய விரிவான வருமானத்தில் இருந்து அறவிடப்படும் அல்லது வரவு வைக்கப்படும்.

தொழிலாளர்களின் மிகுதி சேவைக்காலம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இருக்குமாயின், அக்காலத்தில் ஏதேனும் மாற்றங்கள் எற்படாத வரையில், கடந்தகால சேவைக்கான செலவுகள் விரிவான வருமானக் கணக்கில் உடனடியாக அங்கீகரிக்கப்படும். (கையளிக்கும் காலப்பகுதி) இச்சந்தர்ப்பத்தில், கடந்தகால சேவைக்கான செலவுகள் நேர் கோட்டு அடிப்படையில் கையளிக்கும் காலப்பகுதியில் கடன் தீர்ப்பு செய்யப்படும்.

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் ஒரு தொழிலாளி தொடர்ச்சியாக 05 வருடகால சேவையைப் பூர்த்தி செய்கின்ற போது மாத்திரமே நிறுவனம் ஒன்றுக்கு கடப்பாடு தோன்றும்.

எவ்வாறாயினும், 24.01.2013 ஆம் ஆண்டு நடைபெற்ற 281வது சபைக் கூட்டத்தில் நடைமுறையில் இருக்கின்ற பணிக்கொடை தொடர்பான விதி மாற்றப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. நடைமுறையில் இருக்கக்கூடிய விதியின்படி ஒவ்வொரு பூர்த்தி செய்யப்பட்ட வருடமும் ஓய்வு பெறும் தொழிலாளர்களுக்கு அரை வருட சம்பளம் கருத்திற் கொள்ளப்படும். புதிய தீர்மானத்தின்படி 31.01.2013 இல் இருந்து பின்வரும் விதி பயன்படுத்தப்படும். குறைந்தபட்சம் 5 வருட சேவை இருக்க வேண்டும் என்ற நிபந்தனையின் கீழ் 10 வருடங்களுக்குக் குறைவான சேவையை மேற்கொண்ட ஆட்களுக்கு ஒவ்வொரு பூர்த்தி செய்யப்பட்ட வருடத்தின் அரை வருட சம்பளம் கருத்திற் கொள்ளப்படும்.

10 வருடங்களுக்கு மேற்பட்ட சேவையில் இருந்த ஊழியர்களுக்கு ஒவ்வொரு வருடமும் ஒரு மாத சம்பளம் கருத்தில் எடுக்கப்படும்.

இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட கணக்கியல் கொள்கை தொடர்பான மாற்றம் பின்னோக்கி ஆளும் வகையில் 2012 ஆம் ஆண்டில் இருந்து உள்ள நிதிக் கணக்குகளில் சீர் செய்யப்பட்டது.

சபை பரிந்துரையின்படி கம்பனி பணிக்கொடை தொடர்பான கடப்பாடுகளைச் சந்திப்பதற்காக உள்ளக நிதியம் ஒன்றை ஸ்தாபித்தது.

ஓய்வு நலத் திட்டம் தொடர்பான கடப்பாடுகளைத் தீர்மானிப்பதில் கருத்தில் எடுக்கப்படுகின்ற முக்கியமான ஊகங்கள் குறிப்பு 21 இல் தரப்பட்டுள்ளன.

### 3.3 மூலதனப் பொறுப்புகளும் எதிர்பாராத செலவுகளும்

எதிர்பாராத செலவுகள் கடந்கால நிகழ்வு ஒன்றின் மூலம் எழுகின்ற சொத்துக்களாகவோ அல்லது பொறுப்புக்காகவோ இருக்கலாம். இது, நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் இடம்பெறுகின்ற போதோ அல்லது இடம்பெறாத போதோ மாத்திரமே பூர்த்தி செய்யப்படும். இது கம்பனிகளுடைய கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதாகும்.

அனைத்து மூலதனப் பொறுப்புகளும் எதிர்பாராத செலவு தொடர்பான பொறுப்புகளும் குறிப்பு 33 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 3.4 ஒத்திவைக்கப்பட்ட வருமானம்

#### 3.4.1 அரசாங்கக் கொடைகளும் உதவுத் தொகைகளும்

அரசாங்கக் கொடைகள் முறையாகப் பெறப்படும் அத்துடன் அதனோடு இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படும் என்ற நியாயமான உறுதிப்பாடு ஒன்று இருக்கும் போது மாத்திரமே அரசாங்கக் கொடைகள் அங்கீகரிக்கப்படும். இக்கொடை சொத்து ஒன்றாக இருக்கின்ற போது சொத்தைப் பராமரிப்பதற்கான தொகை அதிலிருந்து கழிக்கப்படும். குறிப்பிட்ட கொடை செலவுக்கான ஒரு அம்சமாக இருக்கின்ற போது அது, ஈடு செய்யப்பட வேண்டிய செலவுகளின் அடிப்படையில் ஒரு கிரமமான அடிப்படையில் குறிப்பிட்ட காலப்பகுதிக்குத் தேவையான வருமானம் என அங்கீகரிக்கப்படும்.

### 3.5 விரிவான வருமானக் கணக்குக் கூற்று

விரிவான வருமானக் கணக்குக் கூற்று ஒன்றைச் சமர்ப்பிக்கும் நோக்கத்திற்காக செலவு தொடர்பான விடயங்கள் கம்பனியுடைய செயற்பாட்டு அம்சங்களை நியாயமான அடிப்படையில் பிரதிபலிக்கும் என்ற கருத்தை இயக்குநர்கள் கொண்டுள்ளனர். எனவே, அத்தகைய சமர்ப்பிக்கும் முறைமை கணக்குக் கூற்று சமர்ப்பணம் LKAS 1 ஏற்பாட்டின் பிரகாரம் கையாளப்பட்டுள்ளது

#### 3.5.1 வருமான அங்கீகாரம்

வருமானம் ஒன்று கம்பனியுடைய பொருளாதார நலன்கள் சுமுகமாக நடைபெறுவதற்கான சாத்தியம் இருக்கின்ற அளவுக்கும் அத்துடன், அதனோடு தொடர்புபட்ட உறப்பட்ட செலவுகள் அல்லது உறப்படவுள்ள செலவுகளை உண்மையாக மதிப்பீடு செய்யப்படுகின்ற போது மாத்திரமே அங்கீகரிக்கப்படும். வருமானமானது, பெறப்பட்ட பிரதிபயன் அல்லது பெறப்பட இருக்கின்ற பிரதிபயன் என்பவற்றை நியாயமான பெறுமதியின் அடிப்படையிலும், நிகர வர்த்தக கழிவுகள் மற்றும் விற்பனை வரிகள் அத்துடன் அவற்றிலிருந்து கம்பனிக்குள் நடைபெற்ற விற்பனைகளை நீக்கி அறவிடப்படும். வருமானத்தை அங்கீகரிக்கும் நோக்கத்திற்காக கீழே தரப்பட்டுள்ள விசேட தகுதிகாண் அளவுகள் பயன்படுத்தப்படும்.

**3.5.1.1 பொருள் விற்பனைகள்**

பொருட்கள் விற்பனைகளில் இருந்து பெறப்படுகின்ற வருமானமானது, தூண்டக்கூடிய சான்றுகள் இருக்கின்ற போது அங்கீகரிக்கப்படும். இது, வழமையாக நிறைவேற்றப்பட்ட விற்பனை உடன்படிக்கை அடிப்படையில் இருக்கும். குறிப்பிடத்தக்க விசேட இடர்கள் மற்றும் உரிமையாளரின் வெகுமதிகள் பொருட்களை வாங்குபவருக்கு மாற்றப்படும். இது வழமையாக பொருட்களை விநியோகிக்கின்ற போது செய்யப்படும். பிரதிபயனை மீளப் பெறுவது சாத்தியமாக உள்ள வேளையில் இது நடைபெறும். இதனுடன் தொடர்புபட்ட செலவுகளும் சாத்தியமான பொருள் திரும்பல்களும் உண்மையாக மதிப்பிடக்கூடியதாக இருக்கும். பொருட்கள் தொடர்பான தொடர்ச்சியான முகாமைத்துவம் ஒன்று இருக்காது. அத்துடன், வருமானத்தின் அளவு உண்மையாக மதிப்பிடக்கூடியதாக இருக்கும். வருமானம் விலைப்பட்டியல் பெறுமதியில் பதிவு செய்யப்படும்.

**3.5.1.2 வட்டி வருமானம்**

வட்டியைச் சேகரிப்பதில் எவ்வித ஐயப்பாடும் ஏற்படாத வரையில் பெறப்படுகின்ற வட்டி வருமானமாக அங்கீகரிக்கப்படும். (சொத்தில் இருந்து பெறப்பட்ட வினைத்திறனான பெறுபேறு கருத்தில் எடுக்கப்படும்)

**3.5.1.3 தீர்வு முடிப்பின் போதான பெறுவனவுகளும் நட்டங்களும்**

ஏதேனும் ஒரு சொத்து, உபகரணங்கள் என்பவற்றின் தீர்வு முடிப்பின் போதான பெறுவனவுகளும் நட்டங்களும் அந்த சொத்து, உபகரணங்கள் தொடர்பாக கொண்டு செல்லக்கூடிய தொகைகளுடன் பெறப்பட்ட நிகர விற்பனை வருவாய்கள் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். அத்துடன், இது, கம்பனியின் விரிவான வருமானக் கூற்றில் “ஏனைய வருமானம்” என்ற வகுதிக்குள் உள்ளடக்கப்படும்.

**3.5.2 செலவுகளின் அங்கீகாரம்**

**3.5.2.1 செயற்பாட்டு செலவுகள்**

வியாபார நடவடிக்கையின் போது நாளாந்தம் ஏற்படுகின்ற செயற்பாட்டு ரீதியான அனைத்து செலவுகளும் சொத்துக்கள், உபகரணங்கள் என்பவற்றை நல்ல நிலையில் பேணிப் பாதுகாப்பதற்கு ஏற்பட்ட செலவுகள் என்பனவாகும். நிதி சாராத சொத்துக்கள், மந்தகதியில் செல்லும் இருப்புக்கள் மிகை வளர்ச்சியடைந்த தாவரங்கள் மற்றும் ஏனைய பொறுப்புக்கள் சொத்து பெறுமானத் தேய்வு, சொத்து உபகரணங்கள் என்பனவுடனான தேய்வு ஈடு செய்வதற்காக ஒதுக்கீடு ஒன்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**3.5.2.2 நிதிச்செலவு**

வெளியிலிருந்து பெறப்பட்ட பெறுவனவுகளுக்கான வட்டிச் செலவுகள் மற்றும் செயற்பாட்டிலுள்ள குத்தகைக்கான கொடுப்பனவுகள் என்பன நிதிச் செலவுகளில் உள்ளடக்கப்படும். பெறுவனவுகளுக்கான செலவுகள் பலன்தரும் வட்டி விகித முறைமையைப் பயன்படுத்தி இலாபம் அல்லது நட்டத்தை அங்கீகரித்துள்ள தகுதிவாய்ந்த சொத்து ஒன்றை உற்பத்தி செய்தல் அல்லது நிர்மாணித்தல், கையேற்புச் செய்தல் என்பவற்றுடன் நேரடித் தொடர்புடையதாக இருக்காது. செயற்பாட்டிலுள்ள குத்தகைக்காக செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் குத்தகைக் காலப்பகுதியின் போது வருமான நட்டத்தில் வருமானமாக அல்லது நட்டமாக நேர்கோட்டு அடிப்படையில் அங்கீகரிக்கப்படும்.

**3.5.2.3 வரிச் செலவு**

வருமான வரிச் செலவு நடைமுறை மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரி விரிவான வருமானக் கணக்கில் அங்கீகரிக்கப்பட்ட வருமான வரி என்பவற்றை உள்ளடக்கும்.

**3.5.2.3.1 நடைமுறை வரிகள்**

நடைமுறை மற்றும் ஒப்பீட்டு காலப்பகுதிகளுக்கான நடைமுறை வரி செலவு 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு (அறிக்கையிடப்படும் திகதியில் உள்ள திருத்தங்கள் உள்ளடங்கலாக) அமைய வருமான வரி செயலாளர் நாயகத்திற்கு குறிப்பிட்ட வரி ஆண்டின் கணக்கெடுக்கப்பட்ட வருமானம் தொடர்பாக செலுத்தப்பட்ட அல்லது செலுத்த எதிர்பார்க்கின்ற தொகையாகும்.

**3.5.2.3.2 ஒத்திவைக்கப்பட்ட வரி விதிப்பு**

கொண்டு செல்கின்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கு நிதி அறிக்கையிடும் நோக்கங்களுக்காக அவற்றுக்கிடையில் ஏற்படுகின்ற தற்காலிக வேறுபாடுகள் தொடர்பாக பொறுப்பு முறையைப் பயன்படுத்தி ஒத்திவைக்கப்பட்ட வரி விதிப்பு அங்கீகரிக்கப்படும். ஒத்திவைக்கப்பட்ட வரி கீழே தரப்பட்டுள்ள தற்காலிக

# கணக்கியல் கொள்கைகள் தொடர்ச்சி...

வேறுபாடுகளுக்கு அங்கீகரிக்கப்படவில்லை. ஒரு வியாபாரத்துடன் இணைப்பாக அல்லாத ஒரு கொடுக்கல் வாங்கலில் சம்பந்தப்பட்ட ஆரம்ப சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் அத்துடன் அது, கணக்கியல் அல்லது வரி விதிக்கக்கூடிய இலாபம் அல்லது நட்டத்தை அத்துடன் துணைக் கம்பனிகளில் உள்ள முதலீடுகளில் ஏற்பட்ட வேறுபாடு அத்துடன் கூட்டிணைந்த கட்டுப்பாட்டில் இருந்த அமைப்புகள் என்பனவற்றைப் பாதிக்காத போது அந்த அளவில் அது எதிர்காலத்தில் வேறு விதமாக நடைபெறாது என்பதற்கு சாத்தியம் உள்ள போது. மேலும், ஒத்திவைக்கப்பட்ட வரி ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட கம்பனியின் நன்மதிப்பில் இருந்து தோன்றுகின்ற வரிவிதிக்கப்படக்கூடிய தற்காலிக வேறுபாடுகளுக்கும் அங்கீகரிக்கப்பட மாட்டாது.

அறிக்கையிடப்படும் திகதியில் உருவாக்கப்பட்ட சட்டம் அல்லது அதற்கு முன் உருவாக்கப்பட்ட சட்டங்களின் அடிப்படையில் தற்காலிக வேறுபாடுகள் மீள் திரும்புகின்ற போது இருக்கக்கூடிய எதிர்பார்க்கப்பட்ட பிரயோகிக்கக்கூடிய தற்காலிக வேறுபாடுகளுக்கு பிரயோகிக்கக்கூடிய எதிர்பார்க்கப்பட்ட வரி விகிதங்களின் அடிப்படையில் அளவிடப்படும். ஒத்திவைக்கப்பட்ட வரி ஆதனம், பயன்படாத வரி நட்டங்கள், வரி கடன்கள் அல்லது கழிக்கப்படக்கூடிய தற்காலிக வேறுபாடுகள் என்பற்றுக்கு அங்கீகரிக்கப்படும். இது, எதிர்கால வரி விதிப்பு இலாபங்கள் எவ்வளவு தூரம் பயன்படுத்த முடியுமோ அந்தளவிற்கு அங்கீகரிக்கப்படும். ஒத்திவைக்கப்பட்ட வரி ஆதனங்கள் ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீளாய்வு செய்யப்படும். அத்துடன், உத்தேசிக்கப்பட்ட வரி அனுகூலம் பெறப்படுவதற்கான சாத்தியம் இல்லை என்ற போது அந்த அளவிற்கு ஒத்திவைக்கப்பட்ட வரி குறைக்கப்படும்.

ஒத்தி வைக்கப்பட்ட வரி சொத்துக்களும், ஒத்திவைக்கப்பட்ட வரி பொறுப்புக்களும் நடைமுறை வரிச்சொத்துக்களுக்கு எதிராக நடைமுறை வரி பொறுப்புக்களை தீதறுப்புச் செய்வதற்கான சட்ட ரீதியான செயற்படுத்தக்கூடிய உரிமையுள்ள போதும் ஒத்தி வைக்கப்பட்ட வரிகள் அதே வரி விதிக்கக்கூடிய அமைப்பு மற்றும் அதே வரிவிதிப்பு அதிகார சபையாக உள்ள போது தீதறுப்புச் செய்யப்படும்.

பொருத்தமான விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் உரிய குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**3.6 காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள்**

காசுப்பாய்ச்சல் கூற்று “உட்கிடை முறையைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது. செலுத்தப்பட்ட குத்தகை வாடகை செலுத்தப்பட்ட பங்குலாபம் மற்றும் பெறப்பட்ட கொடைகள் என்பன நிதியிடல் காசுப் பாய்ச்சல்களாக வகைப்படுத்தப்படுள்ளன. அதேவேளையில், பெறப்பட்ட வட்டி, பெறப்பட்ட பங்குலாபங்கள் என்பன காசுப்பாய்ச்சல் கூற்றினைச் சமர்ப்பிக்கும் நோக்கத்திற்காக முதலீட்டு காசுப்பாய்ச்சல்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன

**3.8 ஒரு பங்கிற்கான வருமானங்கள்**

கம்பனி அதனுடைய சாதாரண பங்குக்கு ஒரு பங்குக்கான அடிப்படை வருமானங்களுக்கான (EPS) தரவுகளை சமர்ப்பித்துள்ளது. அடிப்படை EPS கம்பனியுடைய சாதாரண பங்குதாரர்களுக்கு ஏற்பட்ட இலாபம் அல்லது நட்டங்களை குறிப்பிட்ட காலப்பகுதியின் போது செலுத்தப்பட வேண்டிய சாதாரண பங்குகளின் எடையிட்ட சராசரி அளவில் வகுக்கப்பட்டு கணக்கிடப்படும்.

**3.9 அறிக்கையிடப்பட்ட காலப்பகுதிக்குப் பின்னர் நடைபெற்ற நிகழ்வுகள்**

அறிக்கையிடப்படுகின்ற இறுதிக் காலப்பகுதிக்கும் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட காலப்பகுதிக்கும் இடையில் நடைபெற்ற சாதகமான மற்றும் பாதகமான நிகழ்வுகள் ஆகும். அறிக்கையிடப்படும் காலப்பகுதிக்குப் பின்னர் நடைபெறும் நிகழ்வுகளில் நடைமுறைப்படுத்தப்படல் கருத்தில் எடுக்கப்படுவதுடன் தேவையான நேரத்தில் சீர் செய்யப்படும் அல்லது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும்.

# நிதித்துறை அறிக்கைக்கான குறிப்புக்கள்

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது | | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|---|
| 04. | **வருமானம்** | | |
| | தென்னை (குறிப்பு 4.1) | 442,113,846 | 514,176,778 |
| | இறப்பர் | 30,606,278 | 39,698,357 |
| | றம்புட்டான் | 4,087,610 | 4,209,286 |
| | மிளகு | 1,461,660 | 3,189,240 |
| | மர முந்திரிகை | 2,034,769 | 4,330,443 |
| | மா மரம் | 2,526,435 | 1,736,547 |
| | மேய்ச்சல் புல்லும் அலங்கார செடிகளும் | 4,140,575 | 4,558,466 |
| | ஏனையவை | 5,169,230 | 4,891,657 |
| | | **492,140,403** | **576,790,774** |
| | | | |
| 4.1 | **தென்னை வருமானம்** | | |
| | பாவனைத் தேங்காய்கள் | 432,980,437 | 444,456,824 |
| | விதைத் தேங்காய்கள் | - | 41,655,519 |
| | எண்ணெய் வருமானம் | 9,133,409 | 23,330,346 |
| | கொப்பறா | - | 4,734,089 |
| | | **442,113,846** | **514,176,778** |
| | | | |
| | **தென்னை** | | |
| | உற்பத்தி (தேங்காய்கள்) | 14,067,173 | 16,701,797 |
| | விற்பனை (தேங்காய்கள்) | 14,167,242 | 16,777,304 |
| | | | |
| | NSA (ஒவ்வொரு 1000 தேங்காய்களுக்கும்) | 31,207 | 30,647 |
| | COP (ஒவ்வொரு 1000 தேங்காய்களுக்கும்) | 18,635 | 15,984 |
| | | **12,572** | **14,663** |
| | | | |
| | **இறப்பர்** | | |
| | உற்பத்தி (கிலோ) | 140,678 | 157,474 |
| | விற்பனை (கிலோ) | 140,245 | 161,376 |
| | | | |
| | NSA (1 கிலோ) | 218 | 246 |
| | COP (1 கிலோ) | 267 | 267 |
| | | **(49)** | **(21)** |
| | | | |
| 05. | **விற்பனைச் செலவினம்** | | |
| | தென்னை | 262,136,535 | 266,963,038 |
| | இறப்பர் | 37,551,747 | 42,054,702 |
| | றம்புட்டான் | 1,163,883 | 1,155,416 |
| | மிளகு | 630,147 | 427,462 |
| | மர முந்திரிகை | 1,482,611 | 1,846,843 |
| | மா மரம் | 896,662 | 758,007 |
| | மேய்ச்சல் புல்லும் அலங்கார செடிகளும் | 7,834,008 | 8,658,404 |
| | ஏனையவை | 4,948,061 | 4,126,807 |
| | | **316,643,654** | **325,990,679** |

# நிதித்துறை அறிக்கைக்கான குறிப்புக்கள் தொடர்ச்சி...

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது | | 2015 ரூபா | 2014 மீள் தெரிவிப்பு ரூபா |
|---|---|---|---|
| 06. | ஏனைய செயற்படு வருமானம் | | |
| | தென்னை மர விற்பனை | 34,925,181 | 29,081,400 |
| | இறப்பர் மர விற்பனை | 4,380,317 | 8,778,518 |
| | நீதியான பெறுமதியிலிருந்து விற்பனைச் செலவினம் கழிக்கப்பட்ட இலாபம் / (நட்டம்) – பாவனைக்குரிய உயிரியல் சொத்துக்கள் | - | |
| | | 43,920,609 | 20,317,541 |
| | மேலதிக தென்னை மட்டை விற்பனை | 21,146,756 | 25,190,659 |
| | காலம் தாழ்த்தி அகற்றுதலும் கொடுப்பனவுக் கட்டணமும் - தேங்காய் | 5,124,795 | 7,286,474 |
| | குத்தகைக் கட்டண வருமானம் | 4,512,441 | 3,168,662 |
| | PE இன் அகற்றல் மற்றும் விற்பனை இலாபம் / நட்டம் குறிப்பு 6.1 | (1,054,006) | (5,899,432) |
| | பின்பதிவு / பதிவழிப்பு | 1,351,194 | 1,424,089 |
| | மணல் | 3,984,481 | 936,838 |
| | ஏனைய நானாவித வருமானம் | 3,441,413 | 5,636,534 |
| | | **121,733,181** | **95,921,283** |

**குறிப்பு 6.1**

தெதுருஓயா திட்டத்தின் கீழ் மீள் குடியேற்றத்திற்கென ஹிரியால பிரதேச பெருந்தோட்டங்களைச் சேர்ந்த பீட்டர்வெலி மற்றும் கெட்டகுலலந்த பிரிவுகளில் 60.52 ஹெக்டயர் விஸ்தீரணமான காணி மாவட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் சுவீகரிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சுவீகரிப்பின் காரணமாக பெருந்தோட்டக் காணிக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 7,108,457 ஆகும். இந்தத் தொகை பின்தள்ளிய வகையில் நிதி அறிக்கைகளில் சீராக்கப்பட்டுள்ளது.

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது | | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|---|
| 07. | நிர்வாகம் மற்றும் பொதுச் செலவினம் | | |
| | சம்பளப் பட்டியல் தொடர்பான செலவினம் | 84,193,373 | 79,439,748 |
| | பராமரிப்பும் திருத்தங்களும் | 11,957,144 | 14,153,358 |
| | ஏனைய நிர்வாகச் செலவினங்கள் | 36,786,722 | 37,557,077 |
| | | **132,937,239** | **131,150,183** |
| | | | |
| | செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான இலாபம் | | |
| | கீழ்க்காணும் விடயங்கள் சீராக்கப்பட்ட பின் - | | |
| | பணிப்பாளர்களுக்கான கொடுப்பனவுகள் | 4,390,964 | 4,047,756 |
| | சட்டபூர்வ கணக்காய்வுக்கென கணக்காய்வாளர்களுக்கான கட்டணம் | - | 635,000 |
| | செயற்பாட்டு ஊக்கத் தொகை | 25,203,842 | 28,779,734 |
| | போனஸ் | 11,297,741 | 12,319,147 |
| | அன்பளிப்புக்கள் | 4,133,752 | 4,564,825 |
| | **தேய்மானமும் படிப்படியாகச் செலுத்துதலும்** | | |
| | JEDB தோட்டங்களின் வெற்றுக்காணிகளுக்கான குத்தகை உரிமை | 3,169,957 | 3,169,953 |
| | JEDB தோட்டங்களின் அசைவற்ற குத்தகைச் சொத்துக்கள் | 4,841,977 | 4,841,976 |
| | முதிர்ந்த பெருந்தோட்டங்கள் | 9,516,970 | 9,205,466 |
| | ஆதனங்கள், இயந்திரசாதனங்கள், உபகரணங்கள் | 40,456,054 | 33,716,104 |
| | **ஆளணிச் செலவு** | | |
| | சம்பளங்கள், கட்டணங்கள், ஊ.செ.நி, ஊ.ந.நி | 226,208,745 | 229,054,334 |
| | குறித்துரைக்கப்பட்ட நன்மைத் திட்டம் - ஓய்வுப் பணிக்கொடை | 23,787,118 | 24,114,591 |

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது | | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|---|
| 08. | **தேறிய நிதித்துறை வருமானம்** | | |
| 8.1 | **வட்டி வருமானம்** | | |
| | நிலையான வைப்பு மீதான வட்டி | 25,798,714 | 28,878,489 |
| | REPO மீதான வட்டி (குறிப்பு 08.1.1) | 727,789 | 748,532 |
| | ஊழியர் கடன் பெறுகைகள் மீதான வட்டி | 549,813 | 552,332 |
| | ஊழியர் நன்மைகள் முற்கொடுப்பனவு மீளப் பெறுகை | 1,032,463 | 1,162,966 |
| | | **28,108,779** | **31,342,319** |
| | | | |
| 8.2 | **நிதித்துறைச் செலவினம்** | | |
| | குத்தகை மீதான வட்டி - JEDB | 25,393,663 | 24,844,072 |
| | தற்காலிக வங்கிக் கடன்கள் மீதான வட்டி | 52,397 | - |
| | ஊழியர் செலவினம் படிப்படியாகக் குறைப்பு | 1,032,463 | 1,162,966 |
| | | **26,478,523** | **26,007,038** |
| | | **1,630,256** | **5,335,281** |

**8.1.1 இரண்டாந்தர சந்தைப் பரிவர்த்தனைகளின் போது, அரச பிணையங்கள் மீதான பிடித்து வைக்கப்பட்ட வரியின் தேசிய வரவு.**

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 137 ஆவது பிரிவின் அடிப்படையில், அரச பிணையங்கள் சம்பந்தமான இரண்டாந்தர சந்தை நடவடிக்கைகளில் இருந்து வட்டி வருமானத்தைப் பெறும் நிறுவனத்திற்கான வரிக்குரிய வரவு வட்டி வருமானத்தின் 9 இல் ஒரு பங்காகும். நிறுவனத்தின் அந்த வருட வரி மதிப்பீட்டு ஆண்டின் நியதி வருமானமாக இது அமையுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நிறுவனத்தினால் 2015 ஆம் ஆண்டின் அரச பிணையங்களின் இரண்டாந்தர சந்தைப் பரிவர்த்தனை நடவடிக்கைகள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தேறிய வருமானம், பெற்றுக்கொள்ளப்பட்ட தேசிய வரி வரவின் 9 இல் ஒரு பங்கைச் சேர்ப்பதன் மூலம் நிதி அறிக்கைகளில் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை ரூபா 72,779 ஆகும்.

## 09. வருமான வரி

**9.1 செலவு 09.1 நடைமுறை வரி**

2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 48(a) பிரிவின் பிரகாரம், உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 16 ஆம் பிரிவில் தெரிவிக்கப்பட்ட வகையில் விவசாய நிறுவனங்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் இலாபங்களும், வருமானங்களும் இந்தச் சட்டத்தின் முதலாவது அட்டவணையின் பிரகாரம் 10 சதவீத வரிக்கு உட்பட வேண்டும். ஏனைய இலாபங்கள் அனைத்தின் மீதும் வழமையான வீதத்தில் வரி கணிக்கப்படும்.

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|
| நடைமுறை வருமான வரி செலவினம் (குறிப்பு 9.2) | - | 4,400,495 |
| பின்தள்ளி வைக்கப்பட்ட வரி (குறிப்பு 9.3 மற்றும் 25) | 10,012,206 | 9,376,416 |
| | **10,012,206** | **13,776,911** |

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புக்கள் தொடர்ச்சி...

| | டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|---|
| 9.2 | **வருமான வரிக்கான கணக்கியல் இலாபத்திற்கிடையில் மீள் சீராக்கல்** | | |
| | வரிக்கு முந்திய கணக்கியல் இலாபம் (குறிப்பு 09.2.1) | 165,922,947 | 220,906,476 |
| | ஏனைய துறைகளிலிருந்து வருமானமும் விலக்களிக்கப்பட்ட வருமானம் | (69,860,919) | (69,285,293) |
| | | 96,062,028 | 151,621,183 |
| | அனுமதிக்கக்கூடாத விடயங்களின் தொகை | 86,346,028 | 81,892,433 |
| | அனுமதிக்கக்கூடிய விடயங்களின் தொகை | (170,210,322) | (152,967,150) |
| | வர்த்தகத்திலிருந்து சீராக்கப்பட்ட இலாபம் | 12,197,734 | 80,546,466 |
| | | | |
| | ஏனைய வளங்கள் மூலமான வருமானம் | 27,076,315 | 30,179,353 |
| | நிலைபேறான மொத்த வருமானம் | 39,274,049 | 110,725,819 |
| | தகைமைபெற்ற கொடுப்பனவுகள் | (39,274,049) | (66,720,873) |
| | வரிவிதி வருமானம் | - | 44,004,947 |
| | | | |
| | விசாய நடவடிக்கைகள் மீதான வரி 10% | - | 4,400,495 |
| | ஏனைய வருமானங்கள் மீதான வரி 28% | - | - |
| | | | |
| | ஆண்டின் இலாபத்தின் மீதான வருமான வரி | - | 4,400,495 |

**குறிப்பு 9.2.1**

தெதுருஓயா திட்டத்தின் கீழ் மீள் குடியேற்றத்திற்கென ஹிரியால பிரதேச பெருந்தோட்டங்களைச் சேர்ந்த பீட்டர்வெலி மற்றும் கெட்டகுலலந்த பிரிவுகளில் 60.52 ஹெக்டயர் விஸ்தீரணமான காணி மாவட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் சுவீகரிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சுவீகரிப்பின் காரணமாக பெருந்தோட்டக் காணிக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 7,108,457 ஆகும். இந்தத் தொகை முந்திய வருடங்களையும் இணைத்து பின்தள்ளிய வகையில் நிதி அறிக்கைகளில் சீராக்கப்பட்டுள்ளது.

**9.3 பின்தள்ளி வைக்கப்பட்ட வரி**

நிதித்துறை அறிவிப்புகள் காரணமாக, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கொண்டு செல்லப்படும் தொகைகளிலிருந்து எழும் தற்காலிக வேறுபாடுகள் சம்பந்தமாக, பொறுப்புக்கள் வழிமுறையின் கீழ் பின்தள்ளிய வரி தொடர்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 24 ஆம் இலக்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்ட பிரகாரம், தொகைகள் வரி அமைப்பில் இடம்பெற்றுள்ள அறிக்கைகளில் ஆண்டிற்கான நிதித்துறை அறிக்கைகளின் கீழ், பின்தள்ளி வைக்கப்பட்ட வரிப்பொறுப்புக்கள், குறிப்பிட்ட ஆண்டில் நிதி அறிக்கைகளில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

| | டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|---|
| | **பின்தள்ளிய வரி செலவினம் / (வருமானம்) இருந்து உருவானது** | | |
| | வரி காரணமாக துரிதப்படுத்திய தேய்மானம் | (1,302,760) | (2,046,489) |
| | முதிர்ந்த மற்றும் முதிர்ச்சியடையாத பெருந்தோட்டங்களில் படிப்படியான திருப்பிச் செலுத்தல் | (8,042,687) | (7,315,012) |
| | அறவிட முடியாக்கடன்கள் மற்றும் சந்தேகக் கடன்களுக்கான ஏற்பாடுகள் | 25,268 | 8,500 |
| | சேவையாளர் நன்மைப் பொறுப்புக்கள் | (692,027) | (23,415) |
| | | **(10,012,206)** | **(9,376,416)** |

**10. ஒரு பங்கிற்கான சம்பாத்தியம்**

ஒரு பங்கிற்கான சம்பாத்தியத்தின் கணிப்பு, சாதாரண பங்குதாரரின் ஆண்டுக்கு உரித்தான இலாபத்தை அந்த ஆண்டுக்கான கணக்கிடப்பட்ட சராசரி சாதாரண பங்குகளின் எண்ணிக்கையினால் பிரிப்பதன் மூலம் பெறப்படும் தொகையாகும்.

**10.1 ஒரு பங்கிற்கான அடிப்படை சம்பாத்தியம்**

| டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டு | 2015 ரூபா. | 2014 ரூபா. |
|---|---|---|
| சாதாரண பங்குதாரர்களுக்கு ஒதுக்க வேண்டிய இலாபம் (ரூபா) (குறிப்பு 10.1.1) | 155,910,741 | 207,129,565 |
| மதிப்புறு சராசரி சாதாரண பங்குகளின் எண்ணிக்கை | 20,000,001 | 20,000,001 |
| ஒரு பங்குக்கான சம்பாத்தியம் (ரூபா சதம்) | **7.80** | **10.36** |

**10.2 ஒரு பங்கிற்கான காத்திரமன்ற சம்பாத்தியம்**

2015 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் எந்தவொரு சமயத்திலும், எந்தவொரு காத்திரமற்ற சாதாரண பங்குகளும் எஞ்சியிருக்கவில்லை. எனவே, ஒரு பங்கிற்கான காத்திரமற்ற சம்பாத்தியம் மேலே தரப்பட்ட ஒரு பங்கிற்கான அடிப்படை சம்பாத்தியமாகும்.

**குறிப்பு 10.1.1**

ஹிரியால பிரதேச பெருந்தோட்டங்களைச் சேர்ந்த பீட்டர்வெலி மற்றும் கட்டகுலகந்த பிரிவுகளில் உள்ள 60.52 ஹெக்டயர் விஸ்தீரணமான காணி, தெதுருஓயா திட்டத்தின் கீழ் மீள் குடியேற்றத்திற்கென மாவட்ட காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவினால் சுவீகரிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட சுவீகாரம் காரணமாக, இழக்கப்பட்ட தெங்குச் செய்கையின் பெறுமானம் ரூபா 7,108,457 ஆகும். இந்தத் தொகை நிதி அறிக்கைகளில் சீராக்கப்பட்டுள்ளது.

## 11. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் வெற்றுக் காணிக்கான குத்தகை உரிமை

11.1 நிறுவனம் அமைக்கப்பட்டதுடன், 1992 ஜுன் 18 ஆம் திகதியில் சகல பெருந்தோட்டங்களினதும் குத்தகை உரிமை நிறுவனத்தின் பேரேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் துரித நடவடிக்கைப் பிரிவில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 1995 மார்ச் 08 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் இந்தக் காணிகள் அனைத்தும் மீள் மதிப்பீடு செய்யப்படும் என்றும், நிறுவனம் அமைக்கப்படுவதற்கு முன்னர் காணி மதிப்பீட்டு நிபுணர் திரு.டீ.ஆர்.விக்கிரமசிங்கவினால் தெரிவிக்கப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் இது மேற்கொள்ளப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. 1992 ஜுன் 18 ஆம் திகதிய நிதி நிலைமை சம்பந்தமான அறிக்கைக்கென கொண்டு செல்லப்பட்ட மீள் மதிப்பீட்டுத் தொகை ரூபா 168,007,552 ஆகும். கொண்டு செல்லப்பட்ட பெறுமதிகளின் விபரங்கள் குறிப்பு 11.3 இல் தரப்பட்டுள்ளன. இருந்த போதிலும், LKAS/SLFRS இன் தீர்மானம் நடைமுறைக்கிடப்பட்டதை அடுத்து, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் UITF தீர்மானத்தை வாபஸ் பெற்றதோடு, குத்தகைக் காணி சம்பந்தமாகப் பரிந்துரை செய்யப்பட்ட நடைமுறைகளைக் கொண்டு அறிக்கையை 2012 டிசம்பர் 19 ஆம் திகதி அறிமுகம் செய்துள்ளது. பரிந்துரை செய்யப்பட்ட வழிமுறைகள் அறிக்கைக்கு அமைய காணியை உபயோகிக்கும் உரிமை இருப்பதனால் மாத்திரம் மேலும் மீள் மதிப்பீடு அனுமதிக்கப்பட மாட்டாது.

11.2 மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை சகல 13 பெருந்தோட்டங்களையும் நிறுவனத்திடம் ஒப்படைத்த போதிலும், ஐந்து பெருந்தோட்டங்களின் குத்தகை ஒப்பந்தம் மாத்திரம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எஞ்சிய 08 பெருந்தோட்டங்களின் (தம்பதெனிய, தொடங்கஸ்லந்த, ஹிரியால, கட்டுகம்பொல, குருநாகல், மஹாயாய, நாரம்மல மற்றும் வாரியப்பொல) குத்தகைய ஒப்பந்தங்கள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. குத்தகை ஒப்பந்தம் நிறைவேற்றப்படாத பெருந்தோட்டங்கள் சம்பந்தப்பட்ட மட்டில், நிறுவனம் மக்கள் பேருந்தோட்ட அபிவிருத்திச் சபையுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டுள்ளது. இந்தப் பதிவேட்டு ஒப்பந்தம், நிறுவனத்திற்கும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கும் இடையிலான உடன்படிக்கை எனக் கருதப்படுகின்றது

**11.3 வெற்றுக்காணிகளுக்கான குத்தகை உரிமை (53 வருடங்கள்)**

| 2015.01.01 இல் செலவின நிலுவை ரூபா | 2015.01.01 இல் திரட்டிய கடன் தீர்ப்புத் தொகை ரூபா | ஆண்டுக்கான கடன்தீர்ப்புத் தொகை ரூபா | 2015.12.31 இல் திரட்டிய தேய்மானம் ரூபா | 2015.12.31 இல் பதிவழிக்கப்பட்ட பெறுமதி ரூபா | 2014.12.31 இல் பதிவழிக்கப்பட்ட பெறுமதி ரூபா |
|---|---|---|---|---|---|
| 168,007,552 | 71,449,891 | 3,169,957 | 74,619,848 | 93,387,704 | 96,557,661 |

## 12. . அசைவற்ற குத்தகைச் சொத்துக்கள் (வெற்றுக்காணிகள் தவிர)

ஏற்கனவே, குறிப்பு 7 இல் விபரிக்கப்பட்ட பிரகாரம் UITF இன் தீர்ப்பின் காரணமாக, மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் சகல குத்தகைகளும் இன்று வரை நிறைவேற்றப்படாத போதிலும், நிதிக் குத்தகையின் கீழ் உள்ள இந்த பெருந்தொட்டங்களில் காணப்படும் சகல அசைவற்ற சொத்துக்களும் 1992 ஜுன் 18 ஆம் திகதியில் இருந்து நிறுவனத்தின் பேரேடுகளில் கணக்கில் வைக்கப்பட்டுள்ளன. இதற்கென 1995 மார்ச் 08 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் நிறுவனம் அமைக்கப்பட்ட திகதிக்கு முன்னர் இவையனைத்தும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் பேரேடுகளின் இடம்பெற்றதனால் இவை அவற்றின் புத்தகப் பெறுமதியில் பேரேடுகளில் இடம்பெற வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புக்கள் தொடர்ச்சி...

1992 ஜுன் 18 ஆம் திகதிய நிதி நிலைமை சம்பந்தமான அறிக்கையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட சொத்துக்களின் பெறுமதி கீழே தரப்பட்டுள்ளன.

| மீள் மதிப்பீடு | சொத்துக்களின் காலம் (வருடங்கள்) | பெறுமதி ரூபா |
|---|---|---|
| காணி அபிவிருத்திச் செலவினம் | 30 | 1,123,305 |
| கட்டடங்கள் | 25 | 22,130,873 |
| இயந்திரசாதனங்கள் | 15 | 34,841 |
| முதிர்ந்த தோட்டங்கள் | 30 | 43,001,122 |
| முதிர்ச்சியடையாத தோட்டங்கள் | - | 90,647,222 |
| | | **156,937,363** |

ஆண்டுக்கென கொண்டு செல்லப்பட்ட பெறுமதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| மீள் மதிப்பீடு | சொத்தின் காலம் வருடங்கள் | 2015.01.01 இல் நிலுவை ரூபா | மாற்றம் உள்ளே / (வெளியே) ரூபா | சேர்க்கைகள் ரூபா | அகற்றல்கள் ரூபா | 2015.12.31 இல் நிலுவை ரூபா |
|---|---|---|---|---|---|---|
| காணி அபிவிருத்திச் செலவினம் | 30 | 1,123,305 | - | - | - | 1,123,305 |
| கட்டடங்கள் | 25 | 17,693,752 | - | - | - | 17,693,752 |
| இயந்திரசாதனங்கள் | 15 | 34,841 | - | - | - | 34,841 |
| முதிர்ந்த தோட்டங்கள் | 30 | 122,903,503 | - | - | - | 122,903,503 |
| | | **141,755,401** | **-** | **-** | **-** | **141,755,401** |

| திரட்டிய பெறுமதி | சொத்தின் காலம் வருடங்கள் | 2015.01.01 இல் நிலுவை ரூபா | மாற்றம் உள்ளே / (வெளியே) ரூபா | சேர்க்கைகள் ரூபா | அகற்றல்கள் ரூபா | 2015.12.31 இல் நிலுவை ரூபா |
|---|---|---|---|---|---|---|
| காணி அபிவிருத்திச் செலவினம் | 30 | 843,966 | - | 37,444 | - | 881,410 |
| கட்டடங்கள் | 25 | 15,952,494 | - | 707,750 | - | 16,660,244 |
| இயந்திரசாதனங்கள் | 15 | 34,841 | - | - | - | 34,841 |
| முதிர்ந்த தோட்டங்கள் | 30 | 79,354,299 | - | 4,096,783 | - | 83,451,082 |
| | | **96,185,600** | **-** | **4,841,977** | **-** | **101,027,577** |

| இருப்புப் பெறுமதி | 2015.01.01 இல் நிலுவை ரூபா | | | | 2015.12.31 இல் நிலுவை ரூபா |
|---|---|---|---|---|---|
| காணி அபிவிருத்திச் செலவினம் | 279,339 | - | - | - | 241,895 |
| கட்டடங்கள் | 1,741,258 | - | - | - | 1,033,508 |
| இயந்திரசாதனங்கள் | - | - | - | - | - |
| முதிர்ந்த தோட்டங்கள் | 43,549,204 | - | - | - | 39,452,421 |
| | **45,569,801** | **-** | **-** | **-** | **40,727,824** |

பெருந்தோட்டக் குத்தகைக் காலத்தில் கையளிக்கப்பட்ட சமயம் முதிர்ச்சியடையாதவை எனக் குறித்துரைக்கப்பட்ட பெருந்தோட்டச் சொத்துக்களிலான முதலீடுகள், முதிர்ச்சியடையாத தோட்டங்கள் எனக் காண்பிக்கப்பட்டுள்ளன. (1992.06.18 இல் மீள் மதிப்பீடு செய்யப்பட்டது) இத்தகைய முதிர்ச்சியடையாத தோட்டங்களை, பயன்தரும் தோட்டங்களாக மாற்றுவதற்கான முதலீடுகள் குறிப்பு 13A இல் காண்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் பெருந்தோட்டங்கள் பயன்தர ஆரம்பித்ததும், அத்தகைய நிலைமைக்கு அவற்றைக் கொண்டுவரவென செலவிடப்பட்ட மேலதிக முதலீடுகள் குறிப்பு 13A இன் கீழ் முதிர்ச்சியடையாத பெருந்தோட்டங்கள் என்ற பிரிவில் இருந்து மாற்றப்பட்டுள்ளன. இது தொடர்பான முதிர்ச்சியடையாத பெருந்தோட்டங்களில் இருந்து முதிர்ந்த தோட்டங்களுக்கென இடம்பெற்ற மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 13A உயிரியல் சொத்துக்கள்

நிறுவனம் அமைக்கப்பட்ட காலத்திலிருந்து பெருந்தோட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் கீழே தரப்பட்டுள்ளன. சொத்துக்கள் (பெருந்தோட்ட சொத்துக்கள் உட்பட) பெருந்தோட்ட குத்தகை அடிப்படையில் பொறுப்பேற்கப்பட்டனவற்றின் விபரங்கள் குறிப்புக்கள் 11 மற்றும் 12 இல் தரப்பட்டுள்ளன. இந்தக் குத்தகையின் கீழ் பொறுப்பேற்கப்பட்ட முதிர்ச்சியடையாத பெருந்தோட்டங்களில் தொடர்ச்சியாக இடம்பெற்ற முதலீடுகள் மேலே தரப்பட்ட குறிப்பில் இடம்பெற்றுள்ளன. இந்தப் பெருந்தோட்டங்கள் பயன்தரும் நிலையை அடைந்ததும், இவற்றைப் பொறுப்பேற்கப்பட்ட காலத்தில் இருந்து இடம்பெற்ற மேலதிக முதலீடுகள் இந்தக் குறிப்பில் முதிர்ச்சியடையாத பிரிவில் இருந்து முதிர்ச்சியடைந்த பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளன. குறிப்பு 12 இல் விபரிக்கப்பட்ட பிரகாரம் இந்த நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டதற்கு முன்னர் பெருந்தோட்டத்தில் இடம்பெற்ற முதலீடுகள் சம்பந்தமாக முதிர்ச்சியடையாத பெருந்தோட்டத்தில் இருந்து முதிர்ந்த பெருந்தோட்டத்திற்கு மாற்றம் இடம்பெற்றுள்ளது..

| | முதிர்ச்சியடையாத உயிரியல் சொத்துக்கள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | தென்னை ரூபா | இறப்பர் ரூபா | மரமுந்திரிகை ரூபா | கறுவா ரூபா | றம்புட்டான் ரூபா | ஏனையவை ரூபா | மொத்தம் ரூபா |
| **செலவினம்** | | | | | | | |
| முன்னரே தெரிவிக்கப்பட்டபடி 2014.12.31 இல் நிலுவை | 339,785,181 | 45,572,333 | 11,024,082 | 4,506,414 | 1,612,537 | 18,548,667 | 421,049,214 |
| முந்திய வருட சீராக்கல் (குறிப்பு 13A-1) | (7,108,457) | | | | | | (7,108,457) |
| 2015.01.01 இல் நிலுவை (மீள வழங்கியது) | 332,676,724 | 45,572,333 | 11,024,082 | 4,506,414 | 1,612,537 | 18,548,667 | 413,940,757 |
| ஆண்டின் சேர்க்கைகள் | 73,566,487 | 13,027,491 | 863,658 | 1,676,574 | 653,087 | 8,290,509 | 98,077,806 |
| ஆண்டின் மாற்றங்கள் | (22,858,442) | (4,090,922) | (1,833,393) | - | - | (8,116,062) | (36,898,819) |
| ஆண்டின் அகற்றல்கள் | | (225,000) | - | - | - | (800,506) | (1,025,506) |
| 2015.12.31 இல் நிலுவை | **383,384,769** | **54,283,902** | **10,054,347** | **6,182,988** | **2,265,624** | **17,922,608** | **474,094,238** |

| சொத்தினது பயனுள்ள காலம் | முதிர்ந்த உயிரியல் சொத்துக்கள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | தென்னை 50 வருடங்கள் ரூபா | இறப்பர் 20 வருடங்கள் ரூபா | மரமுந்திரிகை 20 வருடங்கள் ரூபா | கறுவா 20 வருடங்கள் ரூபா | றம்புட்டான் 20 வருடங்கள் ரூபா | ஏனையவை ரூபா | மொத்தம் ரூபா |
| **செலவினம்** | | | | | | | |
| 2015.01.01 இல் நிலுவை | 291,931,196 | 50,471,818 | 8,427,826 | 2,468,600 | 1,926,783 | 10,271,837 | 365,498,060 |
| ஆண்டின் மாற்றங்கள் | 23,074,180 | 4,090,922 | 1,833,393 | | | 7,900,324 | 36,898,819 |
| ஆண்டின் சேர்க்கைகள் | | - | | - | - | | - |
| ஆண்டின் அகற்றல்கள் | - | - | - | - | - | - | - |
| 2015.12.31 இல் நிலுவை | **315,005,376** | **54,562,740** | **10,261,219** | **2,468,600** | **1,926,783** | **18,172,161** | **402,396,879** |
| | | | | | | | |
| **திரட்டிய பெறுமதி** | | | | | | | |
| 2015.01.01 இல் நிலுவை | 51,727,478 | 24,762,968 | 1,230,153 | 1,719,840 | 471,832 | 1,109,532 | 81,021,803 |
| ஆண்டிற்கான கட்டணம் | 5,838,625 | 2,523,591 | 421,392 | 123,430 | 96,340 | 513,592 | 9,516,970 |
| ஆண்டின் அகற்றல்கள் | - | - | - | - | - | - | - |
| 2015.12.31 இல் நிலுவை | **57,566,103** | **27,286,559** | **1,651,545** | **1,843,270** | **568,172** | **1,623,124** | **90,538,773** |
| | | | | | | | |
| **பதிவழிக்கப்பட்ட பெறுமதி** | | | | | | | |
| 2015.01.01 இல் | 240,203,718 | 25,708,850 | 7,197,673 | 748,760 | 1,454,951 | 9,162,305 | 284,476,257 |
| 2015.12.31 இல் | 257,439,273 | 27,276,181 | 8,609,674 | 625,330 | 1,358,611 | 16,549,037 | 311,858,106 |
| | | | | | | | |
| **மொத்த உயிரியல் சொத்துக்கள்** | | | | | | | |
| **பதிவழிக்கப்பட்ட பெறுமதி** | | | | | | | |
| 2015.01.01 இல் (மீள வழங்கப்பட்டது) | 572,880,442 | 71,281,183 | 18,221,755 | 5,255,174 | 3,067,488 | 27,710,972 | 698,417,014 |
| 2015.12.31 இல் | **640,824,042** | **81,560,083** | **18,664,021** | **6,808,318** | **3,624,235** | **34,471,645** | **785,952,344** |

**குறிப்பு** 13A-1

தெதுருஓயா திட்டத்தின் கீழ் மீள் குடியேற்றத்திற்கென ஹிரியால பிரதேச பெருந்தோட்டங்களைச் சேர்ந்த பீட்டர்வெலி மற்றும் கெட்டகுலலந்த பிரிவுகளில் 60.52 ஹெக்டயர் விஸ்தீரணமான காணி மாவட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் சுவீகரிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சுவீகரிப்பின் காரணமாக பெருந்தோட்டக் காணிக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 7,108,457 ஆகும். இந்தத் தொகை முந்திய வருடங்களையும் இணைத்து பின்தள்ளிய வகையில் நிதி அறிக்கைகளில் சீராக்கப்பட்டுள்ளது.

| | திகதியிலிருந்து | 31.12.2015 ரூபா | 31.12.2014 ரூபா |
|---|---|---|---|
| 13B | **பாவிக்கக்கூடிய உயிரியல் சொத்துக்கள்** | | |
| | 2015.01.01 இல் நிலுவை | 132,192,052 | 130,885,608 |
| | நியாயமான பெறுமதியிலிருந்து விற்பனைச் செலவினம் கழிக்கப்பட்ட மாற்றங்களை அடுத்து எழும் இலாபம் /(நட்டம்) | 43,920,607 | 20,317,541 |
| | அறுவடை காரணமாக குறைவு | (35,971,986) | (19,011,097) |
| | 2015.12.31 இல் நிலுவை | **140,140,673** | **132,192,052** |

பெருந்தோட்டங்களில் வளர்ந்த மரங்களும், பாவிக்கக்கூடிய உயிரியல் சொத்துக்களில் அடங்கும். சொற்ப அளவிலான உயிரியல் மாற்றங்களே இடம்பெற்றுள்ளன என்பதன் அடிப்படையில் முதிர்ச்சியடையாத மரங்களின் செலவினம், ஏறத்தாள நீதியான பெறுமதி எனக் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது. உயிரியல் மாற்றத்தின் மீது ஏற்படும் தாக்கம், விலை சம்பந்தப்பட்ட மட்டில் முக்கியமானதல்ல என்பதும் இதற்கான காரணமாகும்.

மதிப்பீடு சுயேச்சையான பட்டய மதிப்பீட்டாளர்களான ஆரியதிலக நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டது. மரம் சம்பந்தமாக நீதியான பெறுமதியைத் தீர்மானிக்கும் போது சகல பெருந்தோட்டங்களையும் உள்ளடக்கிய விதத்தில் சரிபார்க்கப்பட்டுள்ளது.

**மதிப்பீட்டின் போது உபயோகிக்கப்பட்ட முக்கியமான விடயங்கள்**

1. அறுவடை நடவடிக்கைகள் வன பாதுகாப்புத் திட்டத்திற்கமைய PMMD மற்றும் வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
2. கருத்திற்கொள்ளப்பட்ட விலைகள் செலவினமற்ற தேறிய தொகைகளாகும்.
3. கழிவு வீதம் 14%

மதிப்பீடுகள், தேறிய சமகாலப் பெறுமதிகளின் அடிப்படையில் வெளிவாரி மதிப்பீட்டு மாதிரிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன. மரங்களின் நீண்டகாலப் பயன்பாடு கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது. உயிரியல் சொத்துக்களின் நீதியான பெறுமானத்துடன் இணைந்துள்ள நிலையற்ற தன்மை காரணமாக அவற்றைக் கொண்டு செல்லும் பெறுமதி அவற்றின் உண்மையான பெறுமானத்திலும் பார்க்க வேறுபடும். பொருட்களை சந்தைப்படுத்துதலில் வேறுபடும் தன்மையுடைய பொருட்களின் துரிதமாக மாற்றமடையும் நிலைமை காரணமாக உயிரியல் சொத்துக்களின் நீதியான பெறுமதியை மதிப்பீடு செய்தலோடு இணைந்துள்ள நிலையற்ற தன்மை காரணமாக அவற்றின் கொண்டு செல்லும் பெறுமதி அவற்றை விற்பதனால் பெறக்கூடிய பெறுமானத்திலிருந்து வேறுபடலாம். பொருட்களின் விற்பனைச் சந்தைகள் துரிதமாக மாற்றமடையும் தன்மை கொண்டன என்றும், நீண்டகால அடிப்படையில் விலைகளை முன்னறிவித்தல் செய்வது நம்பகத்தன்மை கொண்டதல்ல என்றும் பணிப்பாளர் சபையினர் கொண்டுள்ள கருத்தை அவர்கள் தொடர்ந்தும் கடைப்பிடித்துள்ளனர்.

பெருந்தோட்ட மரங்கள் சம்பந்தமாக கீழ்க்காணும் இடர்களை நிறுவனம் எதிர்நோக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**ஒழுங்கமைப்பான மற்றும் சுற்றாடல் இடர்கள்**

நிறுவனம் நாட்டின் சட்டங்கள், பிரமாணங்கள் என்பனவற்றுக்கு உட்பட்டதாகும். உள்ளூர் சூழல் மற்றும் ஏனைய சட்டங்களைக் கடைப்பிடிக்கும் விதத்தில் நிறுவனம் சூழல் பாதுகாப்பு சம்பந்தமான கொள்கைகளையும், வழிமுறைகளையும் தயாரித்துள்ளது. சூழல் பாதுகாப்பு சம்பந்தமான இடர்களை இனங்காணவென ஒழுங்கான அடிப்படையில் முகாமைத்துவம் மீளாய்வுகளை மேற்கொண்டு வருகிறது. கடைப்பிடிக்கப்படும் வழிமுறைகள் இந்த இடர்களை முகாமைத்துவப்படுத்துவதற்கு போதியதாக உள்ளன என்பதும் இதன்மூலம் நிச்சயிக்கப்படுகிறது.

**விநியோகம் மற்றும் கேள்வி சம்பந்தமான இடர்கள்**

மரங்களின் விற்பனை விலைகள் மற்றும் தொகை என்பனவற்றில் ஏற்படும் திடீர் மாற்றங்கள் காரணமாக, நிறுவனம் இடர்களை எதிர்நோக்கியுள்ளது. இயன்ற வரையில், இந்த இடரை அறுவடைத் தொகுதியை விநியோகம் மற்றும் கேள்வி சந்தையில் விற்பனைக்கு அனுப்புவதன் மூலம் நிர்வாகம் முகாமைத்துவப்படுத்துவது நிறுவனத்தின் விலைகள் சந்தை விலைகளோடு ஒத்திருப்பதை நிச்சயிக்கவென முகாமைத்துவம் ஒழுங்கான அடிப்படையில் கைத்தொழில் அடிப்படையிலான பகுப்பாய்வை மேற்கொண்டு வருகிறது. அறிவிக்கப்பட்ட அறுவடைத் தொகுதிகள் எதிர்பார்க்கப்படும் கேள்வியைப் பூர்த்தி செய்யக் கூடியன என்பதை நிச்சயிக்கும் வகையிலும் இது மேற்கொள்ளப்படுகிறது.

**காலநிலை மற்றும் ஏனைய இடர்கள்**

நிறுவனத்தின் பெருந்தோட்ட மரங்கள் அனைத்தும் காலநிலை மாற்றம், நோய், காட்டுத் தீ மற்றும் ஏனைய இயற்கை அனர்த்தங்கள் என்பனவற்றை எதிர்நோக்கியுள்ளன.

## 14. ஆதனங்கள், இயந்திரசாதனங்கள், உபகரணங்கள்

1992 ஜுன் 18 ஆம் திகதி நிறுவனம் அமைக்கப்பட்ட தினத்தில் அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் உரிமையளிக்கப்பட்ட சொத்துக்களின் விபரங்களும் அதன் பின்னரான சேர்க்கைகளும் கீழே தரப்பட்டுள்ளன. பெருந்தோட்டக் குத்தகை அடிப்படையில் பொறுப்பேற்கப்பட்ட சொத்துக்களின் விபரங்கள் கணக்கறிக்கையில் குறிப்பு 11 மற்றும் 12 இல் காட்டப்பட்டுள்ளன.

| சொத்துக்களின் பயனுள்ள பாவனைக்காலம் (வருடங்கள்) | காணி சுவீகரிப்பு | காணி மீதான அபிவிருத்தி | கட்டடங்கள் | கிணறுகள் | வேலிகள் | மோட்டார் வாகனங்கள் | இயந்திர சாதனங்கள் | தளபாடங்களும் பொருத்திகளும் | உபகரணங்கள் | கணனி உபகரணங்கள் | கணனி மென்பொருட்கள | மொத்தம் | மேற்கொள்ளப்படும் வேலைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 40 | 40 | 3 | 5 | 13 1/3 | 10 | 8 | 5 | 5 | | | |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **கொள்விலை** | | | | | | | | | | | | | | |
| 2015.01.1.01 இல் நிலுவை | 8,123,564 | 3,627,723 | 125,819,550 | 5,187,115 | 36,700,037 | 140,581,676 | 1,849,609 | 10,980,756 | 13,875,203 | 3,307,925 | 220,000 | 350,273,158 | 15,203,659 | 365,476,817 |
| ஆண்டின் சேர்க்கைகள் | - | 242,031 | 23,337,725 | 284,083 | 11,937,046 | 3,901,877 | - | 1,829,488 | 1,334,339 | 271,500 | - | 43,138,089 | 9,162,402 | 52,300,491 |
| ஆண்டின் அகற்றல்கள் | - | - | - | - | (3,896,479) | (315,829) | - | - | (253,000) | - | - | (4,465,308) | - | (4,465,308) |
| மாற்றப்பட்டது இருந்து / க்கு | | | | - | | | | | | | | - | (15,203,659) | (15,203,659) |
| 2015.12.31 இல் நிலுவை | **8,123,564** | **3,869,754** | **149,157,275** | **5,471,198** | **44,740,604** | **144,167,724** | **1,849,609** | **12,810,244** | **14,956,542** | **3,579,425** | **220,000** | **388,945,939** | **9,162,402** | **398,108,341** |
| **தேய்மானம்** | | | | | | | | | | | | | | |
| 2015.01.01 இல் நிலுவை | | | 4,590,107 | 881,314 | 13,644,492 | 67,533,459 | 58,921 | 2,813,084 | 5,917,260 | 1,884,047 | - | 97,322,684 | | 97,322,684 |
| ஆண்டுக்கான கட்டணங்கள் | | | 3,146,787 | 129,679 | 10,896,229 | 23,129,041 | 138,721 | 1,085,297 | 1,455,579 | 430,721 | 44,000 | 40,456,054 | | 40,456,054 |
| ஆண்டில் அகற்றல்கள் | | | - | - | (3,896,479) | (315,829) | - | - | (142,500) | - | - | (4,354,808) | | (4,354,808) |
| 2015.12.31 இல் நிலுவை | **-** | **-** | **7,736,894** | **1,010,993** | **20,644,242** | **90,346,671** | **197,642** | **3,898,381** | **7,230,339** | **2,314,768** | **44,000** | **133,423,930** | **-** | **133,423,930** |
| **பதிவழிக்கப்பட்ட பெறுமானம்** | | | | | | | | | | | | | | |
| 2015.01.01 இல் | 8,123,564 | 3,627,723 | 121,229,443 | 4,305,801 | 23,055,545 | 73,048,217 | 1,790,688 | 8,167,672 | 7,957,943 | 1,423,878 | 220,000 | | 15,203,659 | |
| 2015.12.31 இல் | **8,123,564** | **3,869,754** | **141,420,381** | **4,460,205** | **24,096,362** | **53,821,053** | **1,651,967** | **8,911,863** | **7,726,203** | **1,264,657** | **176,000** | **255,522,009** | **9,162,402** | **264,684,411** |

நிறுவனத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள 1,416 ஹெக்டயர் விஸ்தீரணமான காணி, குருநாகல் பிரதேச செயலாளரினால் கொள்வனவு செய்யப்பட்டு, 1987 ஜுலை 15 ஆம் திகதி மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைக்கு கையளிக்கப்பட்டதாகும். காணியின் சட்டபூர்வ உரிமை JEDB க்கு மாற்றப்படாததனால், அந்தக் காணி தற்சமயம் அரசாங்கத்திற்குச் சொந்தமாகவுள்ளது. காணி சுவீகரிக்கப்பட்டது சம்பந்தமான நட்டஈடு காணியின் மூல உரிமையாளர்களான எச்.எல்.டீ மெல் நிறுவனத்திற்கு வழங்கப்படவில்லை. மீள்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவின் பிரகாரம், சட்டபூர்வ நட்டஈட்டுத் தொகையான ரூபா 3.5 மில்லியனை எச்.எல்.டீ மெல் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டுமென்று பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு கம்பனியைக் கேட்டுக் கொண்டது. இந்தக் காணி, அரசாங்கத்தினால் பின்னர் உரிமை மாற்றப்பட வேண்டுமென்ற அமைச்சினால் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைக்கமைய, இந்தத் தொகை குருநாகல் பிரதேச செயலாளருக்கு ஊடாக செலுத்தப்பட்டது. 18 வருட காலமாக கொடுப்பனவைத் தாமதித்தமைக்கான சட்டபூர்வ வட்டி ரூபா 4,623,563.92 எனக் கணக்கிடப்பட்டதை அடுத்து, அமைச்சின் கோரிக்கையின் பேரில் நிறுவனம் இதனையும் செலுத்த உடன்பட்டது. காணிச் சுவீகரிப்புச் சம்பந்தமாக செலுத்திய மற்றும் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபா 8,123,563.92 ஆகும். முழுத் தொகையும் 'காணி சுவீகரிப்புக்கான செலவினம்' என்ற தலைப்பின் கீழ் கணக்கறிக்கைகளில் காட்டப்பட்டுள்ளது. 2015.11.16 லிருந்து காணியுரிமை குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. (பதிவு இல. பு 146/78)

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புக்கள் தொடர்ச்சி...

| திகதியிலிருந்து | | | 31.12.2015 ரூபா. | 31.12.2014 ரூபா. |
|---|---|---|---|---|
| 15. | ஏனைய நிதித்துறைச் சொத்துக்கள் | | | |
| | நடைமுறையற்றது | | | |
| | ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் | 15.1 | 5,446,034 | 5,232,250 |
| | முன்னரே வழங்கப்பட்ட ஊழியர் நன்மைகள் | 15.2 | 260,223 | 296,902 |
| | | | **5,706,257** | **5,529,152** |
| | | | | |
| | நடைமுறை | | | |
| | ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் | 15.1 | 4,994,299 | 4,834,481 |
| | முன்னரே வழங்கப்பட்ட ஊழியர் நன்மைகள் | 15.2 | 534,215 | 722,789 |
| | | | **5,528,514** | **5,557,270** |
| | | | | |
| 15.1 | **ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள்** | | | |
| | ஆண்டின் ஆரம்பத்தில் நிலுவை | | 11,086,422 | 9,948,065 |
| | ஆண்டில் வழங்கப்பட்ட கடன்கள் | | 8,892,850 | 8,071,500 |
| | ஆண்டில் வசூலிக்கப்பட்ட கடன்கள் | | (8,744,500) | (6,933,143) |
| | | | **11,234,772** | **11,086,422** |
| | முன்னரே வழங்கப்பட்ட ஊழியர் நன்மைக்கு மாற்றம் | | (794,438) | (1,019,691) |
| | ஆண்டின் இறுதியில் நிலுவை | | **10,440,334** | **10,066,731** |
| | | | | |
| | நடைமுறையற்றது | | 5,446,034 | 5,232,250 |
| | நடைமுறை | | 4,994,299 | 4,834,481 |
| | | | **10,440,333** | **10,066,731** |
| | | | | |
| 15.2 | **முன்னரே வழங்கப்பட்ட ஊழியர் நன்மைகள்** | | | |
| | ஆண்டின் ஆரம்பத்தில் நிலுவை | | 1,019,691 | 1,394,466 |
| | ஆண்டின் சேர்க்கைகள் | | 807,210 | 788,191 |
| | திரட்டிய பெறுமதி | | (1,032,463) | (1,162,966) |
| | ஆண்டின் இறுதியில் நிலுவை | | **794,438** | **1,019,691** |
| | | | | |
| | நடைமுறையற்றது | | 260,223 | 296,902 |
| | நடைமுறை | | 534,215 | 722,789 |
| | | | **794,438** | **1,019,691** |

நிறுவனம் ஊழியர்களுக்கு குறைந்த வட்டி வீதத்தில் (ஆண்டுக்கு 5%) கடன்களை வழங்குகிறது. இந்தக் கடன்கள் நீதியான பெறுமதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்தக் கடன்கள் அனைத்தும், ஆரம்பத்தில் நீதியான பெறுமதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. நீதியான பெறுமதி என்பது, இத்தகைய கடன்கள் சம்பந்தமான சந்தை வீதத்தை உபயோகித்து எதிர்பார்க்கப்படும் எதிர்கால காசுப்பாய்ச்சலைக் கழித்து தீர்மானிக்கப்படுகின்றன. ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் கொள்முதலுக்கும், நீதியான பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசம் முன்னரே கொடுக்கப்பட்ட ஊழியர் நன்மைகள் என்ற வகையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் "கடன்கள்" எனவும், "பெறுகைகள்" எனவும் தரப்படுத்தப்பட்டு பின்னர் திரட்டிய கொள்முதலை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்டுள்ளன.

| இடர் நிவாரணக் கடன்கள் | | 2015 | 2014 |
|---|---|---|---|
| | குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் | 5.0% | 5.0% |
| | சந்தை வட்டி வீதம் | 11.5% | 12.0% |

| திகதியிலிருந்து | | 31.12.2015 ரூபா | 31.12.2014 ரூபா. |
|---|---|---|---|
| 16 | **பதிவேடுகள்** | | |
| | உற்பத்திக் கையிருப்புக்கள் | 16,711,223 | 25,276,212 |
| | உதிரிப்பாகங்களும் பாவனைப் பொருட்களும் | 8,084,049 | 7,447,110 |
| | உட்பாய்ச்சல் பொருட்கள் | 6,799,632 | 6,619,387 |
| | நாற்று மேடைகள் | 1,990,900 | 2,702,082 |
| | கால்நடைகள் | 522,330 | 460,182 |
| | ஏனைய கையிருப்புக்கள் | 899,287 | 868,500 |
| | | **35,007,421** | **43,373,473** |
| | | | |
| 17 | **குறுகியகால திட்டங்களில் முன் செலுத்தப்பட்ட செலவினம்** | | |
| | வெட்டுப் புல் திட்டம் - அத்தனகல்ல | 10,544,985 | 12,512,380 |
| | அன்னாசி | 114,428 | 191,378 |
| | மரவெள்ளி | 142,636 | 103,177 |
| | சேதப்பசளை உற்பத்தி | 253,801 | - |
| | பப்பாசி | 45,244 | - |
| | நெல் | 86,636 | 40,208 |
| | | **11,187,730** | **12,847,143** |
| | | | |
| 18 | **வர்த்தகம் மற்றும் ஏனைய பெறுகைகள்** | | |
| | **வர்த்தகக் கடனாளிகள்** | | |
| | உற்பத்திக் கடனாளிகள் - தென்னை | | 32,052,251 |
| | கழி: நிராகரிப்பு ஏற்பாடு | | (963,131) |
| | தெங்குச் செய்கை நட்டம் வசூலிப்பு | | 1,721,531 |
| | உற்பத்திக் கடனாளிகள் - நாற்று | | - |
| | உற்பத்திக் கடனாளிகள் - இறப்பர் | | 1,976,768 |
| | கடனாளிகள் - மர விற்பனை | | 10,013,898 |
| | கடனாளிகள் - ஏனைய உற்பத்தி | | 249,146 |
| | வாடகை பெறுகைகள் | 210,455 | 307,383 |
| | கடனாளிகள் வாகன திருத்தம் - டிரக்டர் பிரிவு | | 53,715 |
| | **ஏனைய பெறுகைகள்** | | |
| | காப்புறுதிக் கோரிக்கைகள் பெறுகை | 23,068 | 41,059 |
| | ஊழியர் கடனாளிகள் | 2,263,384 | 1,673,310 |
| | பெறப்பட வேண்டிய வட்டி | 9,192,792 | 7,951,946 |
| | வழங்கப்பட்ட காசு முற்பணம் | - | 210,000 |
| | நானாவித கடனாளிகள் | 1,692,889 | 3,225,732 |
| | | - | - |
| | கழி: அறவிடமுடியாக் கடன் மற்றும் சந்தேகக் கடன்களுக்கான ஏற்பாடுகள் | (1,974,208) | (1,721,531) |
| | | **56,359,580** | **56,792,077** |

| | திகதியிலிருந்து | 31.12.2015 ரூபா | 31.12.2014 ரூபா. |
|---|---|---|---|
| 19 | **குறுகியகால முதலீடுகள்** | | |
| | நிலையான வைப்புக்கள் - இலங்கை வங்கி | 166,000,000 | 65,000,000 |
| | நிலையான வைப்புக்கள் - மக்கள் வங்கி | - | 45,000,000 |
| | நிலையான வைப்புக்கள் - தேசிய சேமிப்பு வங்கி | 119,000,000 | 160,000,000 |
| | நிலையான வைப்புக்கள் - மக்கள் வங்கி - ஓய்வுப் பணிக்கொடை நிதியம் | 130,000,000 | 130,000,000 |
| | | **415,000,000** | **400,000,000** |
| | | | |
| 20 | **காசும் வங்கி நிலுவைகளும்** | | |
| | முத்திரைகள் | 11,968 | 8,013 |
| | Repo | 21,000,000 | 4,000,000 |
| | வங்கியிலுள்ள காசு | 7,559,909 | 4,698,670 |
| | கையிலுள்ள காசு | 1,570,876 | 1,002,855 |
| | | **30,142,753** | **9,709,538** |
| | | | |
| 21 | **கணிக்கப்பட்ட மூலதனம்** | | |
| | வழங்கப்பட்டதும் பூரணமாகச் செலுத்தப்பட்டதும் | | |
| | 20,000,000 சாதாரண பங்குகள் ஒவ்வொன்றும் ரூபா 10/- | 200,000,000 | 200,000,000 |
| | பொதுத் திறைசேரி செயலாளரின் வசமுள்ள தங்கப் பங்கு (குறிப்பு 21.1) | 10 | 10 |
| | | **200,000,010** | **200,000,010** |

**21.1 தங்கப் பங்காளி**

தங்கப் பங்கு என்பது, திறைசேரியின் செயலாளர் வசமுள்ளது. இது, இலங்கை அரசாங்கத்தினால் நேரடியாகவோ 100% அரச உடைமையான பொது நிறுவனத்தினாலோ சொந்தமாக வைத்திருக்கப்பட வேண்டும். வழமையான சாதாரண பங்குதாரரின் உரிமைகளுக்கு மேலதிகமாக தங்கப் பங்குதாரருக்கு விசேட உரிமைகள் அளிக்கப்பட்டுள்ளன.

| | திகதியிலிருந்து | 31.12.2015 ரூபா | 31.12.2014 ரூபா |
|---|---|---|---|
| 22 | **ஓய்வுக்கால நன்மைக் கடப்பாடுகள்** | | |
| | ஆண்டின் ஆரம்பத்தில் நிலுவை | 124,548,410 | 124,782,559 |
| | ஆண்டுக் காலப்பகுதிக்கான தொகை | 15,688,389 | 24,797,684 |
| | ஆண்டின் போது இடம்பெற்ற கொடுப்பனவுகள் | (22,608,659) | (25,031,833) |
| | ஆண்டின் இறுதியில் நிலுவை | **117,628,140** | **124,548,410** |

காப்புறுதி மதிப்பீட்டு அதிகாரிகளின் காப்புறுதி நன்மைகளை மதிப்பீடு செய்ய உபயோகிக்கப்பட்ட வழிமுறை, இலங்கை கணக்கியல் தரம் 19 "ஊழியர்களுக்கான நன்மைகள்" என்பதனால் பரிந்துரை செய்யப்பட்ட திட்மிட்ட யூனிட் வரவு வழிமுறையாகும். ஓய்வு நன்மைக்கான கடப்பாடு பற்றிய காப்பீட்டு அதிகாரிகளின் மதிப்பீடு அக்ஷுவேரியல் அன்ட் மனேஜ்மென்ற் கொன்சல்ட்டன்ற் நிறுவனத்தினால் 2014 டிசம்பர் 31 இல் மேற்கொள்ளப்பட்டது.

| திகதியிலிருந்து | | 31.12.2015 ரூபா. | 31.12.2014 ரூபா. |
|---|---|---|---|
| 22.1 | **ஆண்டில் இடம்பெற்ற ஓய்வுக்கால நன்மைக் கடப்பாடுகளின் பரிமாற்றங்கள் கீழே தரப்பட்டுள்ளன:** | | |
| | வட்டிச் செலவு | 12,454,841 | 12,478,256 |
| | நடைமுறைச் சேவைச் செலவினம் | 11,332,277 | 11,636,335 |
| | ஊழியர் செலவினத்தில் இடம்பெற்ற மொத்த தொகை (குறிப்பு 7) | 23,787,118 | 24,114,591 |
| | தேறிய காப்பீட்டு மதிப்பீடு இலாபம் / (நட்டம்) உடனடி அங்கீகாரம் | (8,098,729) | 683,093 |
| | ஏனைய விரிவான வருமான அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட தொகை | (8,098,729) | 683,093 |
| | விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட மொத்த தொகை | **15,688,389** | **24,797,684** |

**22.2 அக்ஷுவேரியல் அன்ட் மனேஜ்மென்ற் ஆலோசக நிறுவனத்தினால் உபயோகிக்கப்பட்ட முக்கிய கருத்துக்களில் கீழ்க்காணும் விடயங்களும் அடங்கியுள்ளன:**

**22.2.1 நிதித்துறைக் கருத்துக்கள்**

| | | |
|---|---|---|
| வட்டி வீதம் | | வருடம் ஒன்றுக்கு 10% (2014 - 10%) |
| சம்பள அதிகரிப்பின் வீதம் | | |
| பெருந்தோட்ட ஊழியர் | 2015.06.01 இல் வரவிருக்கும் அடுத்த சம்பள அதிகரிப்பில் வருடம் ஒன்றுக்கு 2% | |
| நிறைவேற்று அதிகாரிகள் | | 2015.06.01 இல் வரவிருக்கும் அடுத்த சம்பள அதிகரிப்பில் வருடம் ஒன்றுக்கு 3% |
| நிறைவேற்று தரமற்ற அதிகாரிகள் | | 2015.06.01 இல் வரவிருக்கும் அடுத்த சம்பள அதிகரிப்பில் வருடம் ஒன்றுக்கு 2% |
| நாள் சம்பள ஊழியர் | | 2015.06.01 இல் வரவிருக்கும் அடுத்த சம்பள அதிகரிப்பில் வருடம் ஒன்றுக்கு 9% |

**22.2.2 இனப் புள்ளியியல் கருத்துக்கள்**

மேற்குறிப்பிட்ட நிதித்துறைக் கருத்துக்களுக்கு மேலதிகமாக மரணம், வாபஸ் பெறுகை, வலது குறைவு, ஓய்விற் செல்லும் வயது என்பன போன்ற இனப் புள்ளியியல் கருத்துக்கள் உண்மையான பெறுமானத்தைத் தீர்மானிப்பதில் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளன. லண்டன் காப்பீட்டு மதிப்பீட்டு நிலையத்தினால் வழங்கப்பட்ட A 1967/70, A 1949/52 மரண வீத அட்டவணை பணிக்கொடைக் கொடுப்பனவை மதிப்பீடு செய்வதில் நிறுவனத்தினால் உபயோகிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| ஓய்வு வயது | ஆண் / பெண் | 60 வருடங்கள் |

நிறுவனம் தொடர்ந்தும் செயற்படு ஸ்தாபனமாக நடவடிக்கை மேற்கொள்ளும். பணிக்கொடைப் பொறுப்பு முற்றிலும் உள்ளக ரீதியில் வழங்கப்பட்டதாகும்.

| திகதியிலிருந்து | | 31.12.2015 ரூபா. | 31.12.2014 ரூபா. |
|---|---|---|---|
| 23 | **குத்தகைக்கு விடுபவரின் தேறிய பொறுப்பு** | | |
| | மொத்த குத்தகைப் பொறுப்பு | 241,219,031 | 249,405,031 |
| | கழி: எதிர்காலத்திற்கு செல்லுபடியான நிதித்துறைக் கட்டணங்கள் | (136,142,622) | (140,763,418) |
| | தேறிய குத்தகைப் பொறுப்புக்கள் | 105,076,409 | 108,641,613 |
| | கழி: உரிமை மாற்ற காணிகளின் பெறுமதி | (37,297,388) | (37,297,388) |
| | | **67,779,021** | **71,344,225** |

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புக்கள் தொடர்ச்சி...

| திகதியிலிருந்து | 31.12.2015 ரூபா. | 31.12.2014 ரூபா. |
|---|---|---|
| **அ) ஐந்து வருடங்களின் பின் செலுத்தப்பட வேண்டியவை** | | |
| மொத்தப் பொறுப்புக்கள் | 200,289,031 | 208,475,031 |
| கழி: வருங்கால தவணைகளுக்கான நிதிக் கட்டணங்கள் | (113,038,642) | (117,659,438) |
| தேறிய பொறுப்புக்கள் | 87,250,389 | 90,815,593 |
| கழி: பராதீன காணிகளின் பெறுமதி | (37,297,388) | (37,297,388) |
| | **49,953,001** | **53,518,205** |
| | | |
| **ஆ) இரண்டு தொடக்கம் ஐந்து வருடங்களில் செலுத்தப்பட வேண்டியவை** | | |
| மொத்தப் பொறுப்புக்கள் | 32,744,000 | 32,744,000 |
| கழி: வருங்கால தவணைகளுக்கான நிதிக் கட்டணங்கள் | (18,483,184) | (18,483,184) |
| தேறிய பொறுப்புக்கள் | **14,260,816** | **14,260,816** |
| | | |
| **இ) ஒரு வருடத்தில் செலுத்தப்பட வேண்டியவை** | | |
| மொத்தப் பொறுப்புக்கள் | 8,186,000 | 8,186,000 |
| கழி: வருங்கால தவணைகளுக்கான நிதிக் கட்டணங்கள் | (4,620,796) | (4,620,796) |
| குத்தகைக்கு விடுபவருக்கான தேறிய பொறுப்புக்கள் | 3,565,204 | 3,565,204 |
| | **67,779,021** | **71,344,225** |

பெருந்தோட்டக் குத்தகை சம்பந்தமாக, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் “அவசர பிரச்சினைகள் துரித நடவடிக்கைக் குழு”வினால் வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம், தேறிய சமகால பெறுமதி கழிவு வீதமான 4% கடைப்பிடிக்கப்பட்டது. அந்தக் காலப்பகுதிக்கெனச் செலுத்தப்பட்ட குத்தகை வாடகை (அவ்வப்போது ஏற்படும் வாடகை தவிர) குத்தகைக்காரருக்கு மொத்தப் பொறுப்புக்களை ஈடுசெய்ய கணக்கிடப்படுவதோடு, வட்டி, வருமான அறிக்கையில் இடம்பெற்றுள்ளது.

பெருந்தோட்டங்களுக்கான குத்தகை 1996 ஜுன் 18 லிருந்து திருத்தப்பட்டுள்ளது. ஒரு பெருந்தோட்டத்திற்கு ஒரு ஆண்டுக்கு முந்திய சாதாரண குத்தகை வாடகையான ரூபா 500/- க்கு ஓரளவு அதிகமானதாக இது அமைந்திருக்கும். 1996 ஜுன் 16 லிருந்து 1997 ஜுன் 17 வரையில் மீளாய்வு செய்யப்பட்ட முதலாவது குத்தகை வாடகை ரூபா 8,186,000/- ஆகும். இந்தத் தொகை, மொத்த உள்நாட்டு உற்பத்தித் தொகையினால் (GDP) வருடா வருடம் அதிகரிக்கப்படுவதோடு, அவசரத் தேவை வாடகை என்ற வகையிலும் இது அமைந்திருக்கும்.

2045 ஜுன் 18 குத்தகை முடிவடையும் காலப்பகுதிக்கு பின்வரும் ஒவ்வொரு 12 மாத காலப்பகுதிக்குமான கொடுப்பனவு, தற்போதைய வருட கடைசி இரண்டு தவணைகளின் மொத்த குத்தகைக் கொடுப்பனவுடன் முந்திய வருட மொத்த உள்நாட்டு உற்பத்தித் தொகையும் அடுத்த வருட முதலாம் 02 தவணைகளின் மொத்த குத்தகை தொகையுடன் இந்த வருட மொத்த உள்நாட்டு உற்பத்தித் தொகையும் சேர்ந்ததாகும். இது, இந்த வருட வருமான அறிக்கையில் சேர்க்கப்பட்ட கட்டணமாகும். இந்தக் காலப்பகுதிக்கென வருமான அறிக்கையில் காண்பிக்கப்பட்ட தொகை ரூபா 25,393,663 ஆகும். இது, நிலையான குத்தகை வாடகையின் வட்டியையும் அவ்வப்போது ஏற்படும் வட்டியையும் சேர்த்த தொகையாகும்.

தெங்குச் செய்கைச் சபை, இலங்கை முதலீடுகள் சபை, மாவட்ட காணிச் சீர்திருத்த ஆணைக்குழு உட்பட பல அமைப்புக்களுக்கு அரசாங்கத்தின் பணிப்புரையின் பேரில் நிறுவனம் காணிகளை விடுவித்துள்ளது. இவற்றின் பெறுமதி மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையிடமிருந்து அவற்றைப் பொறுப்பேற்கையில் இருந்து வந்த பெறுமானமான ரூபா 37,297,387.96 ஆகும். இந்தத் தொகையினால் JEDB க்கான குத்தகைப் பொறுப்பு குறைக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் காணிகளின் இந்தப் பெறுமதியுடனேயே குத்தகைப் பொறுப்பு கணக்கிடப்பட்டதும் இந்தக் காணிகள் நிறுவனத்தின் சொந்தமாக இப்போது இல்லாததும் இதற்கான காரணமாகும். இருந்த போதிலும், இந்தக் குறைப்பு சம்பந்தமாக அரசாங்கத்துடன் எந்தவித ஒப்பந்தமும் செய்து கொள்ளப்படவில்லை.

| | திகதியிலிருந்து | 31.12.2015 ரூபா | 31.12.2014 ரூபா |
|---|---|---|---|
| 24 | **பின்தள்ளிய வரிப் பொறுப்புக்கள்** | | |
| | ஆண்டின் ஆரம்பத்தில் நிலுவை | 65,321,092 | 55,944,676 |
| | ஆண்டிற்கான தொகை | 10,012,206 | 9,376,416 |
| | ஆண்டின் இறுதியில் நிலுவை | **75,333,298** | **65,321,092** |

**24.1 அங்கீகரிக்கப்பட்ட பின்தள்ளிய வரி சொத்துக்களும் பொறுப்புக்களும்**

பின்தள்ளிய வரி சொத்துக்களும், பொறுப்புக்களும் கீழ்க்காணும் தற்காலிக வேறுபாடுகளைக் காண்பிக்கும் மூலப்பொருட்களோடு சேர்க்கப்பட வேண்டியவையாகும்.

வரி விதிக்கப்பட வேண்டிய / (கழிக்கப்பட வேண்டியவை) தற்காலிக வேறுபாடுகள்

| திகதியிலிருந்து | | 31.12.2015 ரூபா | 31.12.2014 ரூபா. |
|---|---|---|---|
| | கொண்டுவந்த உயிரியல் சொத்துக்கள் | (785,952,344) | (705,525,471) |
| | ஆதனங்கள், இயந்திரசானங்கள், உபகரணங்கள் | (86,982,983) | (73,955,397) |
| | சந்தேகக் கடன்களுக்கான ஏற்பாடுகள் | 1,974,208 | 1,721,531 |
| | ஓய்வுக்கால நன்மைகள் கடப்பாடு | 117,628,140 | 124,548,410 |
| | | **(753,332,979)** | **(653,210,927)** |
| | பொருத்தமான வரி வீதம் | 10% | 10% |
| | தேறிய பின்தள்ளிய வரிப் பொறுப்புக்கள் | **(75,333,298)** | **(65,321,092)** |

அறிவிக்கப்பட்ட திகதியில் ரூபா 11,960,235 ஐ பின்தள்ளிய வரி சொத்துக்கள் என நிறுவனம் எற்றுக் கொண்டுள்ளது. இதற்கான காரணம், எதிர்காலத்தில் கிடைக்கவிருக்கும் வரிவிதி இலாபம் உள்ளதனால் பின்தள்ளிய வரிச் சொத்துக்களை வசூலிக்க முடியுமென முகாமைத்துவம் நம்பிக்கை கொண்டுள்ளதேயாகும். இதற்கு மேலதிகமாக, அறிவிக்கப்பட்ட திகதியில் அங்கீகரிக்கப்பட்ட பின்தள்ளிய வரி பொறுப்புக்களின் தொகை ரூபா 87,293,533/- ஆகும். இத்தகைய தேறிய பின்தள்ளிய வரி பொறுப்புக்களின் 2015 டிசம்பர் 31 இற்கான மதிப்பீடு ரூபா 75,333,298/- ஆகும்.

**எதிர்கால பிரயோக வரி வீதம்**

வரி ஆலோசகர்களின் கருத்துக்களின் அடிப்படையில், வழமையான வர்த்தக நடவடிக்கையின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இலாபம் “விவசாயத்தின்” மூலம் கிடைக்கப் பெற்றதெனக் கருதப்பட்டு 10% வருமான வரி 2011 ஏப்ரலில் இருந்து விதிக்கப்படும்.

| திகதியிலிருந்து | | 31.12.2015 ரூபா | 31.12.2014 ரூபா |
|---|---|---|---|
| **25.** | **பெறப்பட்ட முற்பணம்** | | |
| | வாடகைக்கென, | 1,551,881 | 512,427 |
| | வெட்டிய புல் மற்றும் புற் செடிகள் வழங்கல் | - | 323,925 |
| | ஏனையவை | 193,960 | 112,000 |
| | | **1,745,841** | **948,352** |
| | | | |
| **26.** | **வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்** | | |
| | வர்த்தக மற்றும் ஏனைய கடனாளிகள் மற்றும் திரண்ட செலவினம் | 18,268,632 | 17,765,501 |
| | மீளளிக்கப்பட வேண்டிய கேள்விப் பத்திரம், பாதுகாப்புச் சேவை வைப்புப் பணம் மற்றும் பிடித்து வைக்கப்பட்டவை | 11,838,255 | 10,190,906 |
| | ஏற்பாடுகள் | | |
| | போனஸ் | 11,523,600 | 12,468,154 |
| | செயற்பாட்டு ஊக்கத் தொகை | 25,106,935 | 28,820,099 |
| | மருத்துவ விடுமுறை | 3,893,848 | 4,018,272 |
| | விடுமுறைக் கொடுப்பனவு | 4,805,677 | 5,192,290 |
| | | **75,436,947** | **78,455,222** |

**27. மூலதனக் கடப்பாடுகள்**

நிதி அறிக்கைக்கான திகதியில் நிறுவனம் எத்தகைய மூலதனக் கடப்பாடுகளையும் எஞ்சியுள்ளதாகக் கொண்டிருக்கவில்லை.

**28. அறிக்கைக்கான திகதியின் பின்னர் இடம்பெற்ற நிகழ்வுகள்**

எத்தகைய சீராக்கல்களையும் அல்லது நிதி அறிக்கைகளில் வெளிப்படுத்தலையோ தேவைப்படும் எத்தகைய நிகழ்வுகளையோ அறிக்கைக்கான திகதியின் பின்னர் கொண்டிருக்கவில்லை.

**29. நிதித்துறை இடர்**

**முகாமைத்துவ மேற்பார்வை**

நிதி உபகரணங்களின் பாவனை காரணமாக கீழ்க்காணும் இடர்ளை நிறுவனம் கொண்டுள்ளது.

- கடன் இடர்
- ரொக்கப்பண இடர்
- சந்தை இடர் (நாணய இடர் வட்டி வீத இடர் உட்பட)

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு இடர் சம்பந்தமாகவும், நிறுவனத்தின் தர அடிப்படையிலான மற்றும் தொகை அடிப்படையிலான தகவலை இந்தக் குறிப்பு வழங்குகிறது. அதேவேளை, இடர் முகாமைத்துவம் தொடர்பாக நிறுவனத்தின் நோக்கம், கொள்கைகள், அதனை அளவிடுவதற்கும், முகாமைப்படுத்துவதற்குமான வழிமுறைகள் என்பன இந்தக் குறிப்பில் தரப்பட்டுள்ளன.

**இடர் முகாமைத்துவ வழிமுறைகள்**

நிறுவனத்தின் இடர் முகாமைத்துவம் தொடர்பாக. அதற்கான வழிமுறையொன்றை உருவாக்கி, அதனை மீள்பார்வை செய்வதற்கான பொறுப்பை பணிப்பாளர் சபையினர் கொண்டுள்ளனர். நிறுவனம் எதிர்நோக்கும் இடரை இனங்காணவும், அதனைப் பகுப்பாய்வு செய்யும் வகையிலும், நிறுவனத்தின் இடர் முகாமைத்துவக் கொள்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. பொருத்தமான இடர் எல்லைகள் மற்றும் கட்டுப்பாடுகளைத் திட்டமிடுவதும், இடர்கள் ஏற்படாதவாறு கண்காணிப்பதும், அதற்கான எல்லைகளைக் கடைப்பிடிப்பதும் அவர்களது பொறுப்பாகும். இடர் முகாமைத்துவக் கொள்கைகளும், வழிமுறைகளும், சந்தை நிலைமை மற்றும் நிறுவனத்தின் நடவடிக்கைகள் என்பனவற்றில் ஏற்படும் மாற்றங்களைப் பிரதிபலிக்கும் வகையில் அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டுள்ளன.

**கடன் இடர்**

கடன் இடர் என்பது, வாடிக்கையாளர் அல்லது கொடுப்பனவு ஒப்பந்தமொன்றின் எதிர்தரப்பினர் ஒப்பந்தக் கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறுவதனால், நிறுவனத்திற்கேற்படும் பண நட்டம் தொடர்பான இடர் ஆகும். இது, நிறுவனத்தின் பெறுகைகள் மற்றும் முதலீட்டுப் பிணையங்கள் சம்பந்தமாகவே ஏற்படுகின்றது..

கொண்டு செல்லப்படும் நிதித்துறைச் சொத்துக்கள் என்பது, உச்சக்கட்ட கடன்களின் மொத்தத் தொகையை இது பிரதிபலிக்கின்றது. அறிக்கைத் திகதியன்று கடன் இடருக்கான உச்சக்கட்ட மொத்தத் தொகை பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| திகதியிலிருந்து | 31.12.2015 ரூபா. | 31.12.2014 ரூபா |
|---|---|---|
| **கடன்களும் பெறுகைகளும்** | | |
| வர்த்தக மற்றும் ஏனைய பெறுகைகள் | 56,359,580 | 56,792,077 |
| குறுகியகால முதலீடுகள் | 415,000,000 | 400,000,000 |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 30,142,753 | 9,709,538 |
| | **501,502,333** | **466,501,615** |

**ரொக்கப்பண இடர்**

காசு அல்லது ஏனைய நிதிச் சொத்துக்களினால் தீர்க்க முடியாத நிதிப் பொறுப்புக்களுடன் இணைந்துள்ள கடப்பாடுகளைத் தீர்ப்பதில் நிறுவனம் எதிர்நோக்கும் கஷ்டங்களைக் கொண்ட இடரே ரொக்கப்பண இடர் எனப்படும். இந்த இடரை முகாமைத்துவப்படுத்துவதில், நிறுவனத்தின் அணுகுமுறை வழமையான சந்தர்ப்பங்களில் ஏற்படக்கூடிய நிதித்துறைக் கஷ்டங்களுக்குத் தீர்வு காணக்கூடிய போதியளவு பணத்தை நிறுவனம் கொண்டிருப்பதாகும். ஏற்றுக்கொள்ள முடியாத நட்டங்கள் அல்லது நிறுவனத்தின் நற்பெயருக்குக் களங்கமேற்படுதல் என்பன தவிர்க்கப்பட வேண்டும்.

ரொக்கப்பண இடரை அளவிடவும், நீக்கவுமென நிறுவனம் அதன் தேறிய செயற்படு காசுப்பாய்ச்சலைத் தீவிரமாகக் கண்காணித்ததோடு, காசு மற்றும் காசுக்குச் சமமானவை தொடர்பான மட்டம் ஒன்றையும் வைத்திருந்திருந்து, நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி வழங்கப்படும் என்ற உறுதிமொழியையும் பெற்றுக்கொண்டது.

| திகதியிலிருந்து | 31.12.2015 ரூபா. | 31.12.2014 ரூபா. |
|---|---|---|
| **மூலத்திலிருந்து பெறப்படாத நிதிப் பொறுப்புக்கள்** | | |
| குத்தகைக்கு விடுபவருக்கான தேறிய பொறுப்புக்கள் | 67,779,021 | 71,344,225 |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | 75,436,947 | 78,455,222 |
| | **143,215,968** | **149,799,447** |

**சந்தை இடர்**

வெளிநாட்டு நாணயமாற்று வீதம், வட்டி வீதம் உட்பட சந்தை விலைகளில் மாற்றங்கள் காணப்படும் போது ஏற்படும் இடரே சந்தை இடர் எனப்படும். இது, நிறுவனத்தின் வருமானத்தை அல்லது நிதித்துறை வைப்புக்களின் பெறுமானங்களை அல்லது நிதித்துறை உபகரணங்களைப் பெரிதும் பாதிக்கும். சந்தை இடர் முகாமைத்துவத்தின் முக்கிய நோக்கம், வருமானத்தை உச்சக்கட்டமாக அதிகரிக்கும் அதேசமயத்தில், சந்தை இடர் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவு குறைப்பதற்கென முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டு வழிமுறைகளை மேற்கொள்வதாகும்.

**வட்டி வீத இடர்**

சந்தை வட்டி வீத மாற்றங்கள் காரணமாக, நிதி உபகரணங்களின் எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் அல்லது நீதியான பெறுமதி என்பன மாற்றமடைவதனால் எற்படும் இடரே வட்டி வீத இடர் எனக் குறிப்பிடப்படும். சந்தை வட்டி வீத மாற்றத்தினால் நிறுவனத்திற்கு ஏற்படும் தாக்கம் என்பது, நிறுவனத்தின் நீண்டகால கடன் கடப்பாடு மற்றும் மாற்றமடையும் வட்டி வீதங்களைக் கொண்ட முதலீடுகளுடன் தொடர்புபட்டதாகும். இருந்த போதிலும், நிறுவனம் மாற்றமடையும் வீதங்களைக் கொண்ட நீண்டகாலக் கடன்களையோ அல்லது அறிக்கைக்கான திகதியன்று வட்டி வீத இடரை எதிர்நோக்கக்கூடிய வைப்புக்களையோ கொண்டிருக்கவில்லை.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. பிஎல்ஏ/ஏ/கேபிஎல்/1/15/08 ඔබේ අංකය / உமது இல. / Your No. දිනය / திகதி / Date 2016 ஆகஸ்ட் 31

தலைவர்,
வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி

**வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளித்தல் தகல்வல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. கம்பனியின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காட்டப்படுகின்றன. மேற்படி நிதிக்கூற்றுக்கள் மீதான விரிவானதோர் அறிக்கை கம்பனியின் தலைவருக்கு 2016 ஏப்ரல் 27 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 கம்பனியின் ஸ்தாபிப்பு மற்றும் உரிமைத்துவம்**

வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி (கேபிஎல்) ஆனது கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான வணிகங்களை பொதுக் கம்பனிகளாக மாற்றிக் கையேற்கும் 1987 இன் 23 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் கீழ் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் மூலம் கூட்டிணைக்கப்பட்டு 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் மீளப் பதிவுசெய்யப்பட்டது. இது ஒரு முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனியாக இருப்பதுடன் பொதுத் திறைசேரி கம்பனியின் ஒரேயொரு பங்காளராக காணப்படுகின்றது.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் பணிப்பாளர் சபையின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla. Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர்கள் சபை ("சபை") பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) ஒத்ததாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

2. **நிதிக்கூற்றுக்கள்**

2.1 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

28 DEC 2016

2.2 **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

2.2.1 **கணக்கீட்டு குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 4,590,300 பெறுமதியான நுகரத்தக்க தாவரவியல் சொத்துக்களை அகற்றுவதற்காக மீளாய்வாண்டில் தனியார் கம்பனியொன்றுக்கு ஒப்பந்தமொன்று கையளிக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் இந்த வேலை மேற்கொள்ளப்படாத போதிலும், மீளாய்வாண்டில் நுகரத்தக்க தாவரவியல் சொத்துக்களின் பெறுமதி கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. ஆகையால், மீளாய்வாண்டிற்கான நுகரத்தக்க தாவரவியல் சொத்துக்களும் இலாபமும் அத் தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(ஆ) அரசாங்கத் தேவைகளிற்காக 2014 முதல் 2015 வரையான காலத்தில் விடுவிக்கப்பட்டிருந்த 455.6 ஹெக்டயர் விஸ்தீரணமுடைய காணி பெறுமதியிடப்பட்டு 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஹிரியால பிரதேச தோட்டத்தின் கடகுலலந்த பிரிவிலுள்ள ரூபா 7,108,457 கிரயமான முதிர்ச்சியற்ற பயிர்களுடன் கூடிய 40.98 ஹெக்டயர் விஸ்தீரணமுடைய காணி 2014 ஆம் ஆண்டில் மீள்குடியமர்த்தல் நோக்கத்திற்காக வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், அந்த ஆண்டில் கணக்குகளில் எவ்வித சீராக்கத்தினையும் மேற்கொள்ளாது அதற்குப் பதிலாக 2015 ஆம் ஆண்டின் கணக்குகளில் அது சீராக்கப்பட்டிருந்தது.

3

**2.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச்சட்டத்தின் 6.2(அ) பந்தி | 10 ஆண்டுகளிற்கு மேல் சேவையாற்றி இளைப்பாறுகின்ற ஊழியர்களிற்கு அரை மாதச் சம்பளத்தினை செலுத்துவதற்குப் பதிலாக பூரணப்படுத்தப்பட்ட ஒவ்வோர் ஆண்டுக்கும் ஒரு மாதச் சம்பளத்தினை செலுத்துவதற்குப் பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. அதன் விளைவாக ஓய்வுபெற்ற ஊழியர்களிற்கு ரூபா 10,141,160 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களின் 6.2.2 ஆம் வழிகாட்டல் | தேசிய போட்டி கேள்வி ஆவணங்களை தயாரித்துச் சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட காலம் 21 நாட்களாக காணப்பட்ட போதிலும், அதன் பதவியணியனருக்கு விடுதிகளை நிர்மாணிப்பதற்கான கேள்விகளை கோருவதற்கு கம்பனி 14 நாட்களை மாத்திரமே வழங்கியிருந்தது. |
| (இ) தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் புதிய தேங்காய் ஏலமிடல் விதிகள் | |
| விதி இல. 21 | தேங்காய் பொதிகளை கொள்வனவு செய்கின்ற கொள்வனவாளர் நிலுவைகளை 35 கலண்டர் நாட்களில் தீர்த்தல் வேண்டும். இருப்பினும், விற்பனை திகதியிலிருந்து 5 மாதங்கள் கடந்த பின்னரும் கொள்வனவாளரிடமிருந்து ரூபா 2,442,827 நிலுவை மீதியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| விதி இல. 26 | விற்பனை பெறுமதியில் 25 சதவீதத்தினை ஆரம்ப கொடுப்பனவாக செலுத்துவதற்குத் தவறிய |

4

| | | |
|---|---|---|
| | | கொள்வனவாளர்களிற்கு எதிராக தெங்கு அபிவிருத்தி அதிகாரசபைக்கு அறிவித்த பின்னர் கம்பனி அவசியமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய போதிலும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட 2009 ஒக்தோபர் 26 ஆந் திகதிய டீஎம்எஸ்/ஈ3/39/8/222 ஆம் இலக்க கடிதம் | கம்பனியின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்கு (சீஈஓ) அனைத்தும் உள்ளடங்கலாக ரூபா 72,300 மாதாந்த படியொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், கம்பனியின் சீஈஓ இற்கு ஆரம்ப மாதாந்த சம்பளமாக ரூபா 80,000 செலுத்தப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர், அவ்வப்போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது பணிப்பாளர் சபையினால் அது ரூபா 297,500 வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி, 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 165,922,947 வரிக்கு முந்திய இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முந்திய இலாபம் ரூபா 220,906,476 ஆனமையால் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 54,983,529 ஆன வீழ்ச்சியினை சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தெங்கு, இறப்பர் மற்றும் மிளகு என்பவற்றின் விற்பனைகளிலிருந்தான வருமானம் குறைவடைந்திருந்தமையே நிதி விளைவுகளின் இந்த வீழ்ச்சிக்குப் பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

#### 3.2.1 பிரதான உற்பத்திப் பொருட்களின் இலாபத்தன்மை

முன்னைய இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் பிரதான உற்பத்திப் பொருட்களிலிருந்து பெறப்பட்ட பங்களிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| உற்பத்திப் பொருள் | பங்களிப்பு {சாதகம்/(பாதகம்)} 2015 | 2014 | 2013 |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| தேங்காய் | 170,843,902 | 177,493,786 | 129,805,642 |
| இறப்பர் | (6,945,469) | (2,356,345) | 13,988,267 |
| ரம்புட்டான் | 2,923,727 | 3,053,870 | 2,403,732 |
| மிளகு | 831,513 | 2,761,778 | 1,112,053 |
| மரமுந்திரிகை | 552,158 | 2,483,600 | 57,527 |
| மாங்காய் | 1,629,773 | 978,540 | - |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இறப்பர் உற்பத்தியிலிருந்து கிடைத்த பங்களிப்பு தொடர்ச்சியாக ரூபா 20,933,736 அல்லது 150 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் இறப்பர் உற்பத்தி 16,796 கிலோகிராம்களால் அல்லது 11 சதவீதத்தால் குறைவடைந்திருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மிளகு உற்பத்தியிலிருந்து கிடைத்த பங்களிப்பு ரூபா 1,930,265 ஆல் அல்லது 70 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மிளகு உற்பத்தி 1,885 கிலோகிராம்களால் அல்லது 60 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. ஆகையால், மிளகு உற்பத்தியிருந்தான வருமானமும் மீளாய்வாண்டில் 50 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

### 3.2.2 முக்கயமான கணக்கீட்டு விகிதங்கள்

கிடைக்கக்கூடியதாகவிருந்த தகவல்களின் படி, மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான கம்பனியின் சில முக்கியமான விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2015 | 2014 |
|---|---|---|
| மொத்த இலாப விகிதம் | 35% | 43% |
| நடைமுறை விகிதம் | 6.91 : 1 | 6.52 : 1 |
| திரவச் சொத்து விகிதம் | 6.48 : 1 | 5.99 : 1 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

6

நீண்டகால முதலீட்டு மார்க்கங்களில் அவற்றை முதலீடு செய்யாது மேலதிக தொழிற்படு மூலதனத்தை கம்பனி தொடர்ந்து பேணி வருகின்றமை வெளிப்படுத்தப்பட்டிருந்தமையால் கம்பனியின் தொழிற்படு மூலதன முகாமைத்துவம் மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 இலக்குகளை அடைந்து கொள்ளுதல்

செயன்முன்னேற்ற அறிக்கை, செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாகவிருந்த ஏனைய தகவல்களின் பிரகாரம் சில பிரதான இலக்குகளும் மீளாய்வாண்டில் அவற்றின் அடைதல்களும் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| விடயம் | இலக்குகள் | அடைதல் | இலக்குகளின் சதவீதமாக அடைதல்கள் |
|---|---|---|---|
| | | | % |
| தேங்காய் விளைச்சல் (காய்கள் மில்லியனில்) | 18.07 | 14.07 | 77.8 |
| ஒரு மரத்தின் சாராசரி விளைச்சல் | 72 | 29.46 | 40 |
| எஸ்4 நில வகையின் ஏக்கர் ஒன்றுக்கான சராசரி தேங்காய்கள் | 2,835 | 1,786 | 63 |

#### 4.1.2 பயிர்ச்செய்கை பிரதேச தோட்டங்களின் செயலாற்றல்

கம்பனியின் கீழுள்ள 08 பயிரிடுதல் பிரதேச தோட்டங்களின் உற்பத்தி, விற்பனை வருமானம் மற்றும் இலாபம் / (நட்டம்) என்பன முன்னைய இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பீடு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

| தோட்டம் | உற்பத்தி | | | விற்பனை வருமானம் | | | இலாபம் / (நட்டம்) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015 | 2014 | 2013 | 2015 | 2014 | 2013 | 2015 | 2014 | 2013 |
| | காய்கள் மில்லியன் | காய்கள் மில்லியன் | காய்கள் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| அத்தனகல்ல | 1.7 | 1.7 | 1.8 | 59.4 | 56.7 | 62.1 | 30.1 | 31.2 | 39.9 |
| தம்பதெனிய | 1.3 | 1.5 | 1.3 | 41.1 | 45.5 | 42.0 | 13.1 | 17.3 | 16.3 |
| தொடங்கஸ்லந்த | 2.0 | 2.5 | 1.5 | 68.4 | 78.4 | 44.3 | 32.2 | 45.9 | 18.0 |
| ஹிரியால | 2.6 | 2.9 | 1.5 | 69.7 | 82.6 | 36.1 | 27.0 | 33.4 | 3.7 |

7 ,

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கடுகம்பொல | 1.6 | 2.1 | 2.1 | 55.1 | 70.4 | 69.5 | 17.8 | 29.3 | 37.4 |
| குருநாகல் | 2.0 | 2.8 | 1.9 | 57.3 | 78.7 | 54.3 | 21.0 | 39.3 | 24.7 |
| மஹயாய | 1.1 | 1.1 | 1.1 | 38.6 | 37.1 | 38.8 | 17.8 | 17.5 | 20.8 |
| நாரம்மல | 1.7 | 2.1 | 1.7 | 52.4 | 64.5 | 55.1 | 20.7 | 32.9 | 28.4 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கம்பனி 2014 ஆம் ஆண்டில் அதிகூடிய தேங்காய் விளைச்சலை பதிவுசெய்திருந்த போதிலும், அத்தனகல்ல பிரதேச தோட்டம் 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அந்த ஆண்டில் அதனது அதிகூடிய விளைச்சலை அடைவதற்குத் தவறியிருந்தது.

(ii) கடந்த இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் அதிகூடிய உற்பத்திக் கிரயம் (சீஓபி) மீளாய்வாண்டில் பதிவுசெய்யப்பட்டிருந்தமை காரணமாக உற்பத்திப் பொருட்களிலிருந்தான பங்களிப்பு மீளாய்வாண்டில் ரூபா 2 ஆல் குறைவடைந்திருந்தது.

(iii) கம்பனியின் 4085 ஹெக்டயர் விஸ்தீரணமுடைய மொத்த தெங்கு பயிர்ச்செய்கை பிரதேசத்தில் 20 சதவீதத்தினை ஹிரியால பிரதேச தோட்டம் உள்ளடக்கியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்கான தெங்கு வருமானத்திற்கு 12 சதவீதம் அல்லது ரூபா 53,997,824 மாத்திரம் பங்களிப்புச் செய்யப்பட்டிருந்தது.

## 4.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

### 4.2.1 மிளகு பயிர்ச்செய்கை செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மிளகு பயிர்ச்செய்கை செயற்திட்டத்துடன் தொடர்புடைய கிரயம் 2014 ஆம் ஆண்டின் ரூபா 427,462 இலிருந்து 2015 ஆம் ஆண்டளவில் ரூபா 630,147 அல்லது 47 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும், மிளகு பயிர்ச்செய்கையிலிருந்தான வருமானம் 2014 ஆம் ஆண்டின் ரூபா 3,189,240 இலிருந்து மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 1,461,660 அல்லது 54 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஆ) ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் தொழில்நுட்பக் கையேட்டின் பிரகாரம், ஒரு மிளகுச் செடியிலிருந்தான சராசரி விளைச்சல் ஆண்டொன்றுக்கு 1.5 முதல் 2 கிலோகிராம்களாகக் காணப்படுதல் வேண்டும். இருப்பினும், கம்பனி அதனது 23,178

செடிகளிலிருந்து 1270 கிலோகிராம் மிளகு விளைச்சலை அல்லது 4 சதவீதத்தினை மாத்திரம் பெற்றிருந்தமையால், அது மிளகுப் பயிர்ச்செய்கையிலிருந்து மிகக் குறைந்த விளைச்சலைக் காட்டுகின்றது. விவசாய நடைமுறைகள் இன்மை காரணமாக மொத்தச் செடிகளின் எண்ணிக்கையில் 41 சதவீதம் மாத்திரமே விளைச்சல் தரக்கூடிய செடிகளாகக் காணப்பட்டன.

(இ) ரூபா 55,312 தொகையினை செலவிட்டு அத்தனகல்ல பிரதேச தோட்டத்திலிருந்து மீளாய்வாண்டில் 1.5 கிலோகிராம் மிளகு விளைச்சல் சேகரிக்கப்பட்டிருந்ததுடன், இந்த மிளகு தோட்டம் அதனது பயன்தரு பொருளியல் ஆயுட்காலத்தினை கடந்திருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

### 4.2.2 நெற் பயிர்ச்செய்கை

கம்பனியின் 86.13 ஹெக்டயர் மொத்த நெற் பயிர்ச்செய்கை நிலத்திலிருந்து 36.42 ஹெக்டயர் நெற் பயிர்ச்செய்கை காணி மாத்திரம் கம்பனியால் பயன்படுத்தப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. ஆகையால், ஹிரியால பிரதேச தோட்டத்தின் கீழுள்ள நெற் காணியில் 57 சதவீதத்தினை பயன்படுத்துவதற்கு கம்பனி தவறியிருந்தது. அதன் விளைவாக, பருவ காலத்திற்கான ஏக்கரொன்றுக்கான ஒட்டுமொத்த தேறிய வருமானம் ரூபா 10,378 மாத்திரமேயாகும்.

### 4.2.3 தெங்கு பயிர்ச்செய்கை

பின்வரும் பயிரிடப்படுகின்ற தோட்டங்களில் தெங்கு பயிர்ச்செய்கையினை முன்னேற்றுவதற்கு கம்பனி தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

**(அ) ஹிரியால பிரதேச தோட்டம்**

ஹெக்டயர் ஒன்றுக்கான சராசரி மரங்கள் 150 ஆக காணப்பட வேண்டிய போதிலும், ஹிரியால பிரதேச தோட்டத்தில் அது 107 ஆக மாத்திரம் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான விளைச்சல் 427,887 காய்களால் குறைவடைந்திருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

**(ஆ) அத்தனகல்ல பிரதேச தோட்டம்**

(i) ஹெக்டயர் ஒன்றுக்கு சராசரியாக 64 தென்னை மரங்களை பராமரிப்பதற்கு பிரேரிக்கப்பட்டிருந்த போதிலும், தனவ்கந்த மற்றும் திப்பலதென்ன பிரிவுகளில் ஹெக்டயார் ஒன்றுக்கான மரங்கள் முறையே 25 மற்றும் 29 ஆக மாத்திரம் காணப்பட்டன.

9

(ii) இத் தொழிலில் தென்னை மரமொன்றின் நியம விளைச்சல் 72 காய்கள் ஆன போதிலும், அத்தனகல்ல பிரதேச தோட்டம் மீளாய்வாண்டில் 21 இலிருந்து 54 வரையான தேங்காய்களை மாத்திரம் விளைச்சலாக பெற்றிருந்தது.

(iii) தென்னை மரங்கள் தொடர்பான புள்ளிவிபரக் கணக்கெடுப்பு கணக்காய்வுத் திகதியான 2016 மார்ச் 10 ஆந் திகதி வரையிலும் இத் தோட்டத்தில் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) வயகொல்ல பிரிவிலுள்ள 04 ஆம் இலக்க பயிர்ச்செய்கை நிலத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில் 392 மரங்களில் 163 மரங்கள் பயனற்றவை என்பது அவதானிக்கப்பட்டதுடன் கணக்காய்வுத் திகதியான 2016 மார்ச் 10 ஆந் திகதி வரையிலும் 60 பயன்தரும் மரங்களை மீள நாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை மேலும் அவதானிக்கப்பட்டது.

### 4.2.4 இறப்பர் பயிர்ச்செய்கை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நியமத்தின் பிரகாரம் ஏக்கரொன்றுக்கு 500 மரங்கள் காணப்பட வேண்டிய போதிலும், அத்தனகல்ல பிரதேச தோட்டத்தின் கீழுள்ள 110.9 ஹெக்டயரில் 37,515 இறப்பர் மரங்கள் மாத்திரமே காணப்பட்டன. இருப்பினும், தோட்டத்திலுள்ள மரங்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்கு கம்பனி பயனுள்ள நடவடிக்கையினை எடுத்திருக்கவில்லை.

(ஏ) அத்தனகல்ல மற்றும் தொடம்கஸ்லந்த பிரதேச தோட்டங்களிலுள்ள இறப்பர் பால் விற்பனைகள் 2011 ஆம் ஆண்டில் நிச்சயிக்கப்பட்ட விலைகளின் அடிப்படையில் தனியார் தரப்பினரால் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் 2015 இறுதி வரை எவ்வித கூறுவிலைகளும் கோரப்பட்டிருக்கவில்லை. மஹயாய பிரதேச தோட்டத்திலுள்ள இறப்பர் பால் விற்பனை 2011 ஆம் ஆண்டிலேனும் கோரப்படாது உடன்படிக்கையொன்று இன்றி தனியார் தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தது.

(இ) அத்தனகல்ல பிரிவில் நாளொன்றுக்கு சராசரியாக 3 முதல் 6 கிலோகிராம் வரையான சராசரி இறப்பர் பால் பதிவுசெய்யப்பட்டிருந்ததுடன், அது இறப்பர் ஆராய்ச்சி திணைக்களத்தின் நியம சுட்டியுடன் ஒப்பிடுகையில் ஆண்டொன்றில் மிகக் குறைவாக ஹெக்டயர் ஒன்றுக்கு சேகரிக்கப்பட்ட 664 கிலோகிராம்கள் இறப்பர்

பாலாக காணப்பட்டது. 2015 இல் இறப்பர் கிலோகிராம் ஒன்றுக்கான எதிர்மறையான பங்களிப்பு ஏறத்தாழ ரூபா 43 ஆகும்.

(ஈ) இறப்பர் அபிவிருத்தி திணைக்கள புள்ளிவிபரங்களின் படி, இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஏக்கரொன்றுக்கான 748 கிலோகிராம் சராசரி இறப்பர் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் ஹெக்டயர் ஒன்றுக்கு 544 கிலோகிராம் ஒட்டுமொத்த குறைந்தளவிலான இறப்பர் செயன்முன்னேற்றத்தினை கம்பனி பதிவுசெய்திருந்தது.

### 4.2.5 விழுந்த தேங்காய்களை சேகரித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 சனவரி 01 முதல் பெப்ரவரி 07 வரையான காலப்பகுதியில் அத்தனகல்ல பிரதேச தோட்டத்திலுள்ள தனவகந்த பிரிவில் விழுந்த தேங்காய்களுடன் தொடர்புடைய தகவல்கள் எந்தவொரு உத்தியோகத்தரினாலும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், நாளொன்றுக்கு சராசரியாக 20 தேங்காய்களாக காணப்பட்ட போதிலும், இக்காலப்பகுதியில் வழமைக்கு முரணாக அலுவலகத்தில் 240 தேங்காய்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தன.

(ஆ) அத்தனகல்ல பிரதேச தோட்டத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள காப்பாளர் விழுந்த தேங்காய்கள் தொடர்பில் வழமையாக பிழையான தகவல்களை அறிவித்திருந்த போதிலும் அவருக்கு எதிராக தேவையான நடவடிக்கையினை எடுப்பதற்கு கம்பனி தவறியிருந்தது.

### 4.2.6 தேங்காய்களை பறித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் கொள்கையின் படி, ஒவ்வொரு 30 நாட்களுக்கு ஒரு முறையும் அதாவது வருடத்திற்கு 12 தடவைகள் தேங்காய்கள் பறிக்கப்படுகின்றன. இருப்பினும், தேங்காய் பறித்தல் 30 நாட்களுக்கு முன்னரும் 30 நாட்களுக்கு பின்னரும் இடம்பெறுகின்றமையும் அவதானிக்கப்பட்டது. ஆகையால், இந்த நடவடிக்கைக்காக பொருத்தமான கால எல்லையினை பராமரிப்பதற்கு கம்பனி தவறியிருந்தது.

(ஆ) தேங்காய் பறித்தல் செயன்முறை கம்பனியினால் வெளியிலிருந்து பெறப்படுகின்றது. இருப்பினும், வெளியிலிருந்து பெறப்படுகின்ற செயன்முறை எந்தவொரு சபைத் தீர்மானமுமின்றி மேற்கொள்ளப்படுவதுடன் தரப்பினர்களுக்கிடையில் எந்தவொரு எழுத்துமூல உடன்படிக்கையும் காணப்படவில்லை.

**4.2.7 "மைடா" தாக்கத்துக்கு உட்பட்ட தென்னை மரங்கள்**

மைடா ஆய்வுகூடத்தினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம், மைடாவின் தாக்கத்திற்கு உட்பட்ட மரங்களை பராமரிப்பதற்காக 90 நாட்கள் இடைவெளியில் 3 தடவைகள் சிகிச்சையளித்தல் தொடரப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், 153 நாட்கள் முதல் 240 நாட்கள் வரையான தாமதமொன்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன் ஹிரியால பிரதேச தோட்டம் கணக்காய்வுத் திகதியான 2016 மார்ச் 04 ஆந் திகதி வரையிலும் மூன்றாவது சிகிச்சையளித்தலை மேற்கொண்டிருக்கவில்லை. அதன் காரணமாக, "மைடா" தாக்கத்துக்கு உட்பட்ட தேங்காய்கள் 2015 இன் ஆரம்பத்தில் காணப்பட்ட 11 சதவீதத்திலிருந்து 2015 ஆம் ஆண்டின் இறுதியில் 64 சதவீதம் வரை குறிப்பிடத்தக்களவில் அதிகரித்திருந்ததுடன் குருக்கனே பிரிவில் "மைடா" தாக்கத்துக்கு உட்பட்ட ஒட்டுமொத்த தேங்காய்கள் 48 சதவீதமாக காணப்பட்டது. மேலும், அநேகமான "மைடா" தாக்கத்துக்கு உட்பட்ட மரங்களும் தேங்காய்களும் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்டன.

**4.2.8 தேங்காய் ஏலமிடல்**

கணக்காவின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இரண்டாவது எத்தனிப்பில் ஏலமிடுவதற்காக தேங்காய் பொட்டலங்களை அனுப்புகையில், அவைகள் மீள் விற்பனை வகையின் கீழ் அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், அவ்வாறான தேங்காய் பொட்டலங்கள் (குவியல்) மீள் விற்பனைகளாக வகைப்படுத்தப்படாது மூன்று அல்லது நான்கு தடவைகள் ஏலமிடுவதற்கு வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டில் 85 சந்தர்ப்பங்களில் ஏலமிடுவதன் மூலம் தேங்காய் விற்பனைகள் இடம்பெற்றிருந்ததுடன், 78 சந்தர்ப்பங்களில் அது உள்நாட்டு விற்பனைகளின் ஊடாக நடாத்தப்பட்டிருந்தன. ஏலமிடப்படுவதனைக் காட்டிலும் உள்நாட்டு விற்பனைகள் ஒப்பீட்டளவில் கூடிய விலை கொண்டதாக காணப்பட்ட போதிலும், ஏல விற்பனைகளின் நலிவான செயலாற்றலுக்கான காரணங்களை கண்டறிவதற்கும் இது தொடர்பில் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையுடன் தொடர்பாடுவதற்கும் கம்பனி தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

**4.2.9 குத்தகை அடிப்படையில் காணிகளை வழங்குதல்**

நான்கு பயிர்ச்செய்கை பிரதேச தோட்டங்களின் கீழுள்ள 102 ஏக்கர் மற்றும் 02 ரூட் விஸ்தீரணமுடைய காணியினை உப பயிர்களை பயிரிடுவதற்காக 19 வெளித்தரப்பினர்களிற்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. இருப்பினும்,

12

காணியினையும் ஆட்களினையும் தெரிவுசெய்வதற்கான கொள்கை கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2.10 நுகரத்தக்க தாவரவியல் சொத்துக்களை விலை மதித்தல்

மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான தாவரவியல் சொத்தினை (மரம்) விலை மதிப்பிடும் நோக்கத்திற்காக மரத்தின் சதுர டெசிமீற்றரொன்று ரூபா 80.34 என பெறுமதியிடப்பட்டிருந்தது. இருப்பினும், அதே வகையினைச் சேர்ந்த மரத்தின் சதுர டெசிமீற்றரொன்று கைதவிர்க்கும் நோக்கத்திற்காக ரூபா 75.90 என விலைமதிப்பிடப்பட்டிருந்தது. ஆகையால், எந்தவொரு தக்க காரணமுமின்றி கம்பனி ஒத்த வகையான நுகரதத்க்க தாவரவியல் சொத்துக்களை விலை மதிப்பதற்கு இரண்டு வேறுபட்ட பெறுமதிகளை பிரயோகித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 4.2.11 இறப்பர் தொழிற்சாலையினை செயற்படுத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 6 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தினை விஞ்சி ரூபா 12,078,708 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட அத்தனகல்ல பிரதேச தோட்டத்திலுள்ள இறப்பர் தொழிற்சாலையின் செயற்பாடுகள் 2013 நவம்பரில் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்படாமையால் 2014 மார்ச் மாத்தில் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டன. அதன் காரணமாக, மதிப்பிடப்பட்ட ரூபா 10,863,465 தேறிய வருமானம் ஈட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இந்த தொழிற்சாலையினை நிர்மாணிப்பதற்கு முன்னர் எவ்வித சாத்தியவள கற்கையும் மேற்கொள்ளப்படாதிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டதுடன் திரவக் கழிவுப் பொறியொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 5,552,352 தொகை செலவிடப்பட்டிருந்தமையால் மொத்தக் கிரயம் ரூபா 17.5 மில்லியனுக்கு அதிகரித்திருந்தமையின் விளைவாக மதிப்பீட்டுக் கிரயத்தில் 191 சதவீத முரண் ஏற்பட்டிருந்தது.

### 4.2.12 இலைக்கொத்து செயற்திட்டத்தினை அமுல்படுத்தல்

மீளாய்வாண்டில் அத்தனகல்ல பிரதேச தோட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட இலைக்கொத்து செயற்திட்டத்திலிருந்து ரூபா 3,693,432 செயற்பாட்டு நட்டம் உள்ளடங்கலாக ரூபா 14,932,214 ஒட்டுமொத்த நட்டமொன்று கம்பனிக்கு ஏற்பட்டிருந்தது.

13

**4.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

கணக்காய்வின் போது பின்வரும் நட்டங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் சந்தையில் 1 கி.கி. ஆர்எஸ்எஸ் 1 இறப்பரின் கொள்வனவு விலையினை நிச்சயிப்பதற்காக நிலவிய உயர் விலைகளை வழங்குவதற்குப் பதிலாக கொள்வனவாளரால் குறைவான விலைகள் வழங்கப்பட்டிருந்தமை காரணமாக கம்பனிக்கு ரூபா 515,096 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டின் போது மாம்பழ பயிர்ச்செய்கைக்கு வெள்ளத்தால் ஏற்பட்டிருந்த சேதம் காரணமாக இடம்பெற்றிருந்த ரூபா 714,020 நட்டம் மீளாய்வாண்டில் பதிவழிக்கப்பட்டிருந்தது.

**4.4 சச்சரவுத் தன்மையான விடயங்கள்**

(அ) மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த கொப்பரா உற்பத்தி தொடர்பிலான ரூபா 905,112 பெறுமதி சேர் வரியினை கம்பனி செலுத்தியோ அல்லது கணக்கீடு செய்தோ இருக்காமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) பதிவிநிலை உத்தியோகத்தர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் தேங்காய்களை தோலுறிக்கும் செயன்முறையினை நடாத்தவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், மதுரன்கன்சிய மற்றும் குரக்கானே பிரிவுகளில் காப்பாளர் ஒருவரினால் அவரது தற்றுணிபின் மீது இந்த வேலை மேற்கொள்ளப்பட்டிருந்தமை கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டது.

(இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீசீடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.8 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது 2014 ஆம் ஆண்டில் ரூபா 3,075,000 தொகை தனியார் நிறுவனமொற்றுக்கு அன்பளிப்பாகச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், சனாதிபதி விசாரணை ஆணைக்குழு இது தொடர்பில் விசாரணை நடாத்தி வருகின்றது.

(ஈ) ஏலமிடுவதற்காக வழங்கப்பட்ட அத்தனகல்ல மற்றும் தம்பதெனிய பிரதேச தோட்டங்களிற்கு உரித்தான பத்து தேங்காய் குவியல்கள் பின்னர் ஏலத்தலிருந்து மீளப்பெறப்பட்டு அதற்குப்பின் அத் தேய்காய்கள் கம்பனியினால் உள்ளூரில் விற்பனை செய்யப்பட்டிருந்தன. இருப்பினும், இது ஏல விற்பனையாகக் கருதப்பட்டு ரூபா 69,501 தொகை தரகருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

14

(உ) ஒரு ஆண்டு செயலாற்றலை அடிப்படையாகக் கொண்டு இரண்டு ஆண்டுகளினுள் 7 சம்பள உயர்வுகள் கம்பனியின் ஊழியர்களிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்கு மேலதிகமாக உபகாரச் சம்பளமும் ஊக்குவிப்புப் படிகளும் இக் காலப்பகுதியில் செலுத்தப்பட்டிருந்தன.

(ஊ) கம்பனியின் சீஈஓ இற்கு அவருக்கு உரித்தான மாதாந்த படிகளிற்கு மேலதிகமாக ரூபா 533,484 வீட்டுக்கான 3 தொழிலாளர் சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தன.

### 4.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

கம்பனியின் நடைமுறையல்லா சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 12,078,708 பெறுமதியான தம்புள்ளஹேன இலுள்ள இறப்பர் தொழிற்சாலை 2014 ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்டிருக்கவில்லை.

### 4.6 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஹிரியால பிரதேச தோட்டத்திலுள்ள தாதுசேனபுர மற்றும் வாரியபொல பிரிவுகளை ஒன்றிணைப்பதன் மூலம் நோக்கெல்லை குறைக்கப்பட்டிருந்தமை காரணமாக 22 மிகை பதவியணியினர் ஏற்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கம்பனியின் நடவடிக்கைகளிற்கு நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஆறு பொறுப்பதிகாரி பதவிகள் 12 மாதங்களிற்கும் மேலாக வெற்றிடமாகக் காணப்பட்ட போதிலும், இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு கம்பனி எவ்வித காத்திரமான நடவடிக்கையினையும் எடுத்திருக்கவில்லை. அதேவேளை, ஒரு பொறுப்பதிகாரி அத்தனகல்ல பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின்றி பணியாற்றி வருகின்றார்.

(இ) மேலதிகமாக 16 தொழிலாளர்கள், தொடர்புடைய அதிகாரத்தரப்பினரிடமிருந்து தேவையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது அத்தனகல்ல மற்றும் ஹிரியால பிரதேச தோட்டங்களில் ரொக்க வேலையாளர்களாக பணியாற்றியிருந்தனர்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

கூட்டிணைந்த திட்டத்திற்கு அமைவாக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளிற்குப் பொறுப்புடைய முகாமையாளர்களை இனங்காண்பதற்கு கம்பனி தவறியிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்கு காலம் கம்பனியின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றன.

| **கட்டுப்பாட்டுப் பரப்பு** | **அவதானிப்பு** |
|---|---|
| (அ) பதவியணியினர் நிர்வாகம் | - காலை அணிவகுப்புக்கு ரொக்க தொழிலாளர்கள் சமூகமளிக்காதிருந்ததுடன் பதிவேடுகள் எதுவும் காணப்படாமையால் வருகைகளை கணக்காய்வில் செவ்வைபார்க்க முடியாதிருந்தது. மேலும், இது தொடர்பில் போதியளவு உள்ளகக் கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) கொடுப்பனவு முறைமை | - வருகை இடாப்பில் இடப்பட்டுள்ள சில தொழிலாளர்களின் கையொப்பங்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்டுக் காணப்பட்டன.<br>- ரொக்க தொழிலாளர்களால் செய்யப்பட்ட வேலைகள் "மஸ்ரர்" தாள்களில் பதியப்பட்டிருக்கவில்லை. |

ஒப்பம்: எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

16

# குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் 2015.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதித்துறை அறிக்கைகள் மீது கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை சம்பந்தமான எமது கருத்துக்கள்

## 2. நிதித்துறை அறிக்கைகள்

### 2.1 தகைமைபெற்ற கருத்து

### 2.2 நிதி அறிக்கைகள் மீதான குறிப்புக்கள்

#### 2.2.1 கணக்கியற் பற்றாக்குறைகள்

(a) ஒப்பந்தம் வழங்கப்பட்டதையடுத்து, வருமானம் ரூபா 4,590,300/- 2015 இல் கிடைத்த சம்பாத்தியமாகும். இந்த மரங்கள் அனைத்தும் உயிரியல் சொத்துக்கள் என மீள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன

(b) இந்த விடயம் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் ஆராயப்படும்.
ஆண்டறிக்கையுடன் இணைக்கப்பட்ட ஆண்டுப் பொதுக் கூட்ட அறிவித்தலில் "வேறு விடயங்கள்" என்ற தலைப்பைப் பார்க்கவும்.

(c) இந்தத் தொகை, 2015.12.31 இல் முடிவடைந்த நிதி அறிக்கைகளில் பின்நோக்கிய வகையில் சீராக்கப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பீட்டுத் தொகைகள் மீள தெரிவிக்கப்பட்டுள்ளன.

### 2.3 சட்டங்கள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்க்ள என்பனவற்றுடன் இணங்காமை

(a) 10 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட கால சேவையைப் பூர்த்தி செய்த ஊழியருக்கு, வருடமொன்றுக்கு 01 மாத சம்பளத்தைக் கொடுப்பனவாக வழங்குவது என்று முன்னைய பணிப்பாளர் சபை மேற்கொண்ட தீர்மானம், 2016.04.25 ஆம் திகதி மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டதோடு, இந்தத் திகதியிலிருந்து 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்தின் 6.2 (அ) பிரிவின் பிரகாரம் பணிக்கொடை வழங்கப்பட்டது.

(b) 2016.04.25 லிருந்து இது சீராக்கப்பட்டுள்ளது.

(c) 2016.04.29 ஆம் திகதி இந்தத் தொகை பெற்றுக்கொள்ளப்பட்டது.

(d) இந்த விடயத்தை சட்ட ஆலோசனை பெற்றுக்கொள்ளவென சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதென்று பணிப்பாளர் சபையினர் தீர்மானித்துள்ளனர்.

## 3. நிதித்துறை மீளாய்வு

### 3.1 நிதித்துறைப் பெறுபேறுகள்

2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், வரிக்கு முந்திய இலாபம் ரூபா 51 மில்லியன் ரூபாவினால் குறைவடைந்தது. இதற்கான விபரம் வருமாறு:

| தென்னை வருமானத்தின் குறைவு | ரூபா மில்லி. |
|---|---|
| உற்பத்திக் குறைவு காரணமாக வருமானத்தில் ஏற்பட்ட தாக்கம் | (81) |
| ஞேயு அதிகரிப்புக் காரணமாக வருமானத்தில் ஏற்பட்ட தாக்கம் | 9 |
| | (72) |

| தென்னை வருமானத்தின் குறைவு | ரூபா மில்லி. |
|---|---|
| உற்பத்திக் குறைவு காரணமாக வருமானத்தில் ஏற்பட்ட தாக்கம் | (4) |
| ஞேயு அதிகரிப்புக் காரணமாக வருமானத்தில் ஏற்பட்ட தாக்கம | (5) |
| | (9) |

### 3.2 பகுப்பாய்வு அடிப்படையில் நிதித்துறை மீளாய்வு

#### 3.2.1 முக்கிய உற்பத்திப் பொருட்களின் இலாபமீட்டும் தன்மை

(a) இந்த வருடத்தின் 02 ஆம் மற்றும் 03 ஆம் தவணைகளின் போது நிலவிய சீரற்ற காலநிலையும், 2015 இல் மிகக்குறைந்த மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்த இறப்பர் விலைகளும், உலக நாடுகளின் கேள்வி வீழ்ச்சியும், இறப்பர் வருமானத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தன.

(b) பருவகாலப் பின்னடைவு, குருநாகல் மாவட்டத்தில் பாரிய அளவில் காணப்பட்டது. மிளகு அறுவடை வீழ்ச்சிக்கும் இதுவே காரணமாகும்.

#### 3.2.2 முக்கிய கணக்கியல் வீதங்கள்

மூலதனம் என்ற நிலையில் இல்லாமல், மேலதிகத் தொகையோ / செயலற்ற தொழிற்படு மூலதனமோ இல்லை. குறுகியகால மூலதனம் காரணமாக சமகால சொத்துக்களின் வீதமும், துரித சொத்துக்கள் வீதமும் அதிகரித்துள்ளன. 2015 இல் வட்டி வீதங்கள் மிகக் குறைந்த அளவில் இருந்ததனால், நீண்டகால நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதிலும் பார்க்க குறுகியகால வங்கி வைப்புக்களில் முதலீடு செய்வது பொருளாதார ரீதியில் நன்மை தரும்.

| | |
|---|---|
| குறுகியகால முதலீடுகளுடன் கூடிய தொழிற்படு மூலதனம் தவணை வைப்புக்களில் | ரூபா 487.05 மில்லி. (2014 - 457.66 மில்லி.) |
| குறுகியகால முதலீடுகளுடன் கூடிய தொழிற்படு மூலதனம் தவணை வைப்புக்களில் | ரூபா 72.05 மில்லி. (2014 - 57.66 மில்லி.) |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயற்பாடு

#### 4.1.1 இலக்குகளை அடைதல்

2015 ஆம் ஆண்டில் எதிர்பாராத விதமாக வீழ்ச்சி கண்ட தெங்கு உற்பத்தி சம்பந்தமான முக்கிய இலக்குகள் இதில் உள்ளன. பருவகாலப் பின்னடைவைப் பிரதிபலிக்கும் இதன் மூலம் சென்ற வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்த வருடத்தில் 16% வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலைமை நிச்சயம் 2016 ஆம் ஆண்டில் மாற்றமடையும். 17 மில்லியன் தேங்காய்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

#### 4.1.2 நடுகைக்கு உட்பட்ட பெருந்தோட்டங்களின் செயற்பாடு

(i) பல்வேறு விவசாயக் காலநிலைக்கு உட்பட்ட வலயங்களில் வெவ்வேறு மண் வளத்துடன் காணப்படும் பெருந்தோட்டங்களின் செயற்பாடுகள் ஒன்றோடு ஒன்று ஒப்பிடுதல் பொருத்தமற்றதாகும். இதற்கான காரணம், அவற்றின் பயன்பாடு ஒன்றுக்கொன்று வேறுபட்டதாகும். அதேவேளை, பருவகால வித்தியாசங்களும் ஒன்றுக்கொன்று வேறுபடும். எனவே, ஒரு பெருந்தோட்டத்தின் முந்திய ஆண்டின் செயற்பாட்டை இந்த ஆண்டுடன் ஒப்பிடுவது மிகவும் பொருத்தமானதாகும்.

(ii) ஒரு தேங்காய்க்கான COP யை முக்கிய சுட்டியாகக் கொள்வதும் தோல்வியைத் தரும். தென்னை போன்ற விவசாயப் பயிர் சம்பந்தமாக அதன் உள்பாய்ச்சலுக்கும், வெளிப்பாய்ச்சலுக்கும் (உற்பத்தி) இடையில் பரஸ்பரம் தொடர்பு சம்பந்தமாக எத்தகைய தீவிர தொடர்பையும் எதிர்பார்க்க முடியாது. இருந்த போதிலும், தென்னையின் வளர்ச்சி சம்பந்தமாகவும், எதிர்கால உற்பத்தி பற்றியும் தேவைப்படும் அத்தியாவசிய உள்பாய்ச்சல்களையும் கட்டுப்படுத்த முடியாது. குறிப்பிட்ட ஒரு வருடத்தின் உற்பத்தி மிகவும் குறைவாக இருந்த போதிலும், இது சாத்தியமில்லை.

(iii) மேலே (i) மற்றும் (ii) இல் குறிப்பிட்ட விடயங்கள் இருந்த போதிலும், பன்முகப்படுத்தல் மரம் மற்றும் மண் என்பனவற்றில் இருந்து கிடைக்கும் வருமானத்தைத் திரட்டுவதனாலும், ஒரு ஹெக்டயருக்கான வருமானத்தை அபிவிருத்தி செய்வதற்கு நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

### 4.2 செயற்படு திறமையீனம்

#### 4.2.1 மிளகுச் செய்கைத் திட்டம்

(a) குருநாகல் மாவட்டத்தின் சகல பிரதேசங்களிலும் மிளகு அறுவடை வீழ்ச்சி கண்டுள்ளது. 2015 ஆம் ஆண்டின் 1.4 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் மிளகில் இருந்து கிடைத்த வருமானம் 03 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகும்.

(b) மேலே (அ) வை பார்க்கவும். உற்பத்தியை அதிகரிக்கவென சிறந்த விவசாய செயல்முறைகள் கையாளப்பட்டுள்ளன.

(c) கணக்கியல் சம்பந்தப்பட்ட மட்டில் மிளகின் பொருளாதார காலம் முடிவுக்கு வந்துள்ள போதிலும், இந்தப் பயிர்ச் செய்கையை தொடர்ந்து மேற்கொள்ள முடியும். தேவையான உட்பாய்ச்சல்களையும், செயற்பாடுகளையும் இதற்கென வழங்குவது அவசியமாகும். 2016 ஆம் ஆண்டில் ரூபா 100,000 க்கும் அதிகமான வருமானம் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

#### 4.2.2 நெற் செய்கை

குத்தகை அடிப்படையில் நெல் வயல்களுக்கான கேள்வி அந்தப் பிரதேசத்தின் நீர் வளத்தில் தங்கியுள்ளது. இத்தகைய சகலவித நெல் வயல்களும் முக்கியமாக இருந்த போதிலும் நம்பகமான நீர் வளத்தைப் பெறுவதில்லை.

#### 4.2.3. தெங்குச் செய்கை

(a) ஹிரியால பிரதேச பெருந்தோட்டம்

சகல தரங்களிலும் தென்னை மரங்கள் உள்ளன. தென்னை மரங்களின் பூக்கும் கட்டம், தென்னை மரங்கள் குறைவாகவுள்ள பகுதிகளில் தென்னை மற்றும் தென்னங்கன்றுகள், மண் போட்டு நிரப்பல் போன்ற நடவடிக்கைகள் ஒரு ஏக்கருக்கான தென்னைகளைக் கணக்கிடும் போது கருத்திற் கொள்ளப்பட வேண்டும். இந்தப் பெருந்தோட்டத்தில் ஒரு ஏக்கருக்கான தென்னைகள் 143 ஆகும்.

வறண்ட வலயத்தில் அமைந்துள் ஹிரியால பிரதேச பெருந்தோட்டங்களில் தெங்கு உற்பத்தி 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 14% வீழ்ச்சி கண்டுள்ளது. 2014 ஆம் ஆண்டில் தெங்கு உற்பத்தி உச்சக்கட்டமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலைமை தற்சமயம் மாறியுள்ளது. (2015 உடன் ஒப்பிடுகையில் 19%) 3.1 மில்லியன் தென்னைகள் 2016 இல் எதிர்பார்க்கப்படுகிறது.

(b) அத்தனகல்ல பிரதேச பெருந்தோட்டங்கள்

(i) கணக்காய்வு அறிக்கையில் ஒரு ஏக்கருக்கான தென்னைகளின் எண்ணிக்கை என்ற வசனம் சீராக்கப்பட்டு, ஒரு ஏக்கருக்கான தென்னைகள் என்று வாசிக்கப்பட வேண்டும். பல வருட காலமாக இடைநிறுத்தப்பட்டிருந்த தனவக்கந்த பிரிவின் அபிவிருத்தி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதோடு, இந்தப் பிரிவின் 69 ஏக்கர் பெருந்தோட்டத்தை நிலையியல் பிரகடனத்தின் அடிப்படையில் விடுவிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால், இது பின்னர் இரத்துச் செய்யப்பட்டது. இவற்றுக்கு மேலதிகமாக, அங்கு காணப்பட்ட மலைப்பாங்கான பிரதேசம் காரணமாக ஒரு ஹெக்டயருக்கான தென்னைகளின் எண்ணிக்கையும் வீழ்ச்சி கண்டுள்ளது.

(ii) உற்பத்தி குறைவடைந்ததை அடுத்து 2015 ஆம் ஆண்டில் ஒரு தென்னைக்கான தேங்காய்களின் எண்ணிக்கை வீழ்ச்சி கண்டது. இந்த நிலைமையை நிறுவனத்தின் வேறும் பல பெருந்தோட்டங்களிலும் அவதானிக்க முடியும். 2016 ஆம் ஆண்டில் தேங்காய் உற்பத்தி அதிகரிப்பதோடு, பொருளாதாரச் சுட்டிகளும் அபிவிருத்தியடையும்.

(iii) தென்னைகள் சம்பந்தமாக முழு அளவிலான கணக்கெடுப்பை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(iv) தென்னங்கன்று நடுகையும், பெருந்தோட்டக் காணிகளை மணல் போட்டு நிரப்பும் செயற்பாடும் கூட்டிணைப்புத் திட்டத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒரு ஏக்கருக்கான தென்னைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதே இதன் நோக்கமாகும்.

# குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் 2015.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதித்துறை அறிக்கைகள் மீது கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை சம்பந்தமான எமது கருத்துக்கள்

**4.2.4. இறப்பர் செய்கை**

(a) அத்தனகலயில் இறப்பர் நடுகைக்கான வருடங்கள் 1995 இல் இருந்து 2000 வரைக்குமாகும். சில மரங்கள் மண் நிற பூச்சிகளினால் பாதிக்கப்பட்டதோடு, கடந்த வருடங்களில் கடும் காற்று காரணமாக சில மரங்கள் வீழ்ந்துள்ளன. இதனடிப்படையில், தற்போது ஒரு ஹெக்டயருக்கு 338 இறப்பர் மரங்கள் மாத்திரம் உள்ளன. இதனை உடனடியாக சீராக்க முடியாது. எதிர்காலத்தில் மீள் மர நடுகையுடன் இது மாற்றமடையும்.

(b) இந்த விடயம் 2016.07.01 இல் இருந்து சீராக்கப்பட்டுள்ளது.

(c) நிறுவனத்தின் ஒரு ஹெக்டயருக்கான சராசரி இறப்பர் பால் சேகரிப்பு 2015 ஆம் ஆண்டில் ஒரு ஹெக்டயருக்கு 767 கிலோவாகும். (2015 ஆம் ஆண்டின் தேசிய சராசரி ஒரு ஹெக்டயருக்கு 784 கிலோ). அத்தனகல பிரதேச பெருந்தோட்டங்களில் ஒரு தொழிலாளரின் சராசரி பால் சேகரிப்பு ஆண்டிற்கு 07 கிலோ என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோவுக்கு ரூபா 59 நட்டம் ஏற்பட்டிருந்த போதிலும், ஒரு கிலோவுக்கான உற்பத்திச் செலவினத்தில் இருந்து பொதுக் கட்டணங்கள் ஏனைய கொடுப்பனவுகள் தவிர்க்கப்படுமிடத்து ஆக்கபூர்வமான ரூபா 82 கிலோ பங்களிப்பு கிடைக்கும். பொதுச் செலவினங்கள், ஏனைய கொடுப்பனவுகள் என்பன உள்ளடக்கப்பட்டதனால், செலவினக் கட்டணங்களின் தொகை அதிகரித்துள்ளது.

(d) ஒரு ஹெக்டயருக்கு குறைந்தளவு இறப்பர் பால் பெற்றுக்கொள்வதற்கான காரணகள் கீழே தரப்பட்டுள்ளன.

- மழைக்கால நாட்களின் அதிகரிப்பு
- திறமைபெற்ற பால் சேகரிப்போர்களின் பற்றாக்குறை
- மேலே குறிப்பிட்ட காரணங்களின் அடிப்படையில் ஒரு ஹெக்டயருக்கான இறப்பர் மரங்களின் எண்ணிக்கை குறைவு.

**4.2.5 கிழே விழுந்த தேங்காய்களை சேகரித்தல்**

(a) நாளாந்த அடிப்படையில் கீழே விழுந்த தேங்காய்களின் சேகரிப்புக்கும், தென்னை மர தேங்காய் அறுவடைக்கும் வித்தியாசம் எதுவும் அவதானிக்கப்படவில்லை. கடும் காற்று, பெரும் மழை அல்லது நீண்டகால வறட்சி என்பன காரணமாக கீழே விழுந்த தேங்காய்களின் சேகரிப்பு வழக்கத்திற்கு மாறாக அமைந்துள்ளது.

(b) இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவதைக் குறைப்பதற்கென தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தேவை ஏற்படும் வேளைகளில் எச்சரிக்கைக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது அல்லது அபராதக் கட்டணம் விதிக்கப்பட்டுள்ளது.

**4.2.6 தேங்காய் பறித்தல்**

(a) வெளிவாரி ஒப்பந்தகாரர்கள் / தேங்காய் பறிக்கும் குழுவினர் ஆகியோரினால் தேங்காய்கள் பறிக்கப்படுகின்றன. தற்சமயம், இந்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கை பற்றாக்குறையாகவுள்ளது. தொழிலாளர் வருகை தரும் தினங்களின் அடிப்படையில் தேங்காய் பறிக்கும் தினங்கள் 02 முதல் 05 நாட்களுக்கு மாற்றப்பட முடியும். இருந்த போதிலும், இத்தகைய மாற்றங்களை இயன்றளவு குறைப்பதற்கு சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(b) வரவு செலவுத் திட்டத்தில் ஒவ்வொரு பிரிவுக்குமான தேங்காய் பறிக்கும் வீதம் குறிப்பிடப்பட்டுள்ளது. தேங்காய் பறிப்பவர்களுடன் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்வது இயலாத விடயமாகும்.

**4.2.7 பூச்சிகள் வண்டுகளினால் தாக்கப்பட்ட தென்னை மரங்கள்**

இவற்றை அழிப்பதற்கான நடவடிக்கைகள் 120 நாட்கள் இடைவெளியில் வருடத்திற்கு மூன்று தடவைகள் இடம்பெற்றுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக சபை விசேட கவனம் செலுத்தியுள்ளது. மரங்களைத் தாக்கும் பூச்சிகளை ஒழிப்பதற்கான விரிவான நடவடிக்கைகளில் மீளாய்வு மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**4.2.8 தேங்காய் ஏல விற்பனை**

(a) CDA ஏல விற்பனை சட்டங்களின் அடிப்படையில் "மீள் விற்பனை" என தரப்படுத்தல் தேவைப்படவில்லை.

(b) CDA தேங்காய் ஏல விற்பனைக்கு மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான தரகர்கள் / கொள்வனவாளர்கள் பங்குபற்றுவதற்கான காரணம் ஏல விற்பனையின் செயற்பாடாகும். இத்தகைய பிரச்சினைகள் சம்பந்தமாக அமைச்சுக்கும் CDA க்கும் நிறுவனம் ஏற்கனவே அறிவித்துள்ளது.

**4.2.9 குத்தகை அடிப்படையில் காணிகளை வழங்குதல்**

கடன் வசதிகளை, குத்தகை / வசதிகள் அடிப்படையில் வழங்கும் செயற்பாடுகளைச் சட்டபூர்வமாக்கவென நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**4.2.10 பாவனைக்குரிய உயிரியல் சொத்துக்களின் மதிப்பீடு**

LKAS 41 இன் பிரகாரம் தேவைப்பட்ட பாவனைக்குரிய உயிரியல் சொத்துக்களின் பெறுமதித் தீர்வு பட்டய மதிப்பாளர்களான ஆரியதிலக நிறுவனத்தினால் சில கருத்துக்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. அகற்றலின் போது தென்னை மரத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதி (ஸ்தலப் பெறுமதி) மரக் கூட்டுத்தாபன பெறுமதிகளின் அடிப்படைகளின் கணிப்பிடப்பட்டுள்ளது.

**4.2.11 இறப்பர் தொழிற்சாலையின் செயற்பாடு**

(a) முன்னைய பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வகையில் இந்தத் தொழிற்சாலையின் நிர்மாணம் 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது சூழல் பாதுகாப்புச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்படவில்லை. இருந்த போதிலும், சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(b) வரவு செலவுத் திட்டத் தொகையிலும் பார்க்க ரூபா 5.6 மில்லியன் இறப்பர் தொழிற்சாலையின் அத்தியாவசிய அபிவிருத்திக்கென செலவிடப்பட்டது. ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்டாத இயந்திரசாதனம் ஒன்றின் நிர்மாணத்திற்கென ரூபா 5.7 மில்லியன் செலவிடப்பட்டது. தொழிற்சாலையின் முன்னேற்றத்தை கண்காணிக்கவும், மீளாய்வு செய்யவுமென குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

**4.2.12 புற் தரை திட்டம் நடைமுறைக்கிடப்படல்**

இந்தத் திட்டத்தை நடைமுறைக்கிடவென நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முன்னைய சபையின் அங்கீகாரத்தின் பேரில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தை சாதகமான முறையில் மாற்றுவதற்கான வழிவகைகளைக் காண்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கென குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

**4.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

(a) லேடெக்சை விற்பனை செய்வதற்கே புதிய கேள்விப்பத்திரம் 2016.07.01 இல் இருந்து வழங்கப்பட்டள்ளது.

(b) சம்பவத்தை ஆராய்ந்த பின்னர் ரூபா 714,020/- நட்டத்தை பதிவழிப்பதற்கென சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**4.4 பிரச்சினைக்குரிய வகையிலான விடயங்கள்**

(a) கொப்பறாவின் விற்பனைப் பெறுமதியில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி செலுத்தப்பட்டுள்ளது. 2016 ஒக்டோபர் 01 ஆம் திகதியில் இருந்து எண்ணெய் நேரடியாக எடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(b) வழங்கப்பட்ட பணிப்புரைகளில் எத்தகைய மாற்றமும் செய்யாமல் அதனைக் கடைப்பிடிக்கும்படி அத்தியட்சகர் பணிக்கப்பட்டுள்ளார்.

(c) முன்னைய தலைவர், நிறைவேற்றுப் பணிப்பாளர், செயற்பாட்டுப் பணிப்பாளர் ஆகியோரினால் அங்கீகரிக்கப்பட்ட அன்பளிப்பு இதுவாகும். இருந்த போதிலும், இந்த விடயம் தொடர்பாக உள்ளக விசாரணை தற்சமயம் மேற்கொள்ளப்படுகிறது.

(d) இந்தத் தொகை முழுவதும் தரகர்கள் மூலமே விற்கப்பட்டுள்ளன. எனவே, தரகர்களுக்கான கட்டணம் செலுத்தப்படுவது அவசியமாகும்.

(e) இந்த விடயம் தொடர்பாக பூர்வாங்க விசாரணை தற்சமயம் இடம்பெறுகிறது. இதற்கு மேலதிகமாக எதிர்காலத்தில் இத்தகைய வேறுபாடு அவசியமாகும் பட்சத்தில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படும்.

(f) தொழிலாளர்களுக்கு அவர்களின் கொடுப்பனவை ரொக்கப்பணமாகச் செலுத்துவதற்கு முன்னைய பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**4.5 செயலற்ற குறைந்த பயன்பாடு கொண்ட சொத்துக்கள்**

இது சம்பந்தமான இயந்திரசாதனம் நிர்மாணிக்கப்படும் வரை புகையூட்டப்பட்ட இறப்பர் சீட்டுக்களின் உற்பத்தியின் பிரசார நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. 2016 ஒக்டோபர் மாதத்தில் இருந்து இதன் தயாரிப்பு மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**4.6 மனிதவள முகாமைத்துவம்**

(a) இத்தகைய வெற்றிடங்கள், எதிர்காலத்தில் நிறுவன நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்படும் போது நிரப்பப்படும்.

(b) பொறுப்பதிகாரி என்ற பதவி அதன் நிபந்தனைகளின் அடிப்படையிலும், குறைந்த வசதிகள் வழங்கப்பட்டதனாலும், கவர்ச்சிகரமானதாக அமையவில்லை. பொருத்தமான வதிவிட வசதிகள், நீர் விநியோகம், மின் விநியோகம். சுகாதார வசதிகள் போன்ற வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக, இவர்களின் தொழில் அபிவிருத்திக்குப் பொருத்தமான பயிற்சி நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2016 செப்டம்பர் 01 ஆம் திகதியில் இருந்து அத்தனகலயில் இருந்து பொறுப்பதிகாரி ஒருவர் தம்பதெனியவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இந்த விடயத்திற்கு தற்சமயம் தீர்வு காணப்பட்டுள்ளது.

(c) ரொக்கப்பண வேலையின் கீழ் தொழிலாளர்களை வேலைக்கமர்த்தும் விடயம் 2016 ஒக்டோபரில் இருந்து மேலும் சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது.

## 5. கணக்கியல் தன்மையும் சிறந்த ஆளுமையும்

**5.1 வருடாந்த நடவடிக்கைத் திட்டம்**

ஒவ்வொரு பெருந்தோட்டதிற்கான நடவடிக்கைத் திட்டம் தனித்தனியாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே, குறிப்பிட்ட ஒரு பெருந்தோட்டத்தின் அத்தியட்சகர், அந்தத் தோட்டத்தின் நடவடிக்கைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும், நடவடிக்கைத் திட்டத்திலும், வரவு செலவுத் திட்டத்திலும் குறிப்பிட்ட வருடத்திற்கெனத் தெரிவிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்குமென நேரடிப் பொறுப்பாகவுள்ளார்.

## 6. வழிமுறைகளும் கட்டுப்பாடுகளும்

(a) ரொக்கப்பண வேலையின் கீழ் தொழிலாளர்களை வேலைக்கமர்த்தும் விடயம் 2016 ஒக்டோபரில் இருந்து மேலும் சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது

(b) இத்தகைய தவறுகளை இயன்றளவு குறைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

ஏ.எம்.பியசோம உபாலி

தலைவர்

குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம்

# பத்து வருடகால தொகுப்பு

செயற்பாட்டு நடவடிக்கைகளின் முக்கிய சுட்டிகள்

| | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தென்னை | | | | | | | | | | |
| சம்பாத்தியம் (ஹெ) | 3,712.69 | 3,741.20 | 3,756.10 | 3,766.57 | 3,738.46 | 3,472.35 | 3,401.96 | 3,292.82 | 3,264.04 | 3,186.82 |
| உற்பத்தி | 15,914,656 | 15,404,540 | 15,010,322 | 17,309,128 | 15,474,602 | 15,543,555 | 18,103,053 | 13,000,150 | 16,701,797 | 14,067,173 |
| NSA (ஒவ்வொரு 1000 தேங்காய்கள்) | 10,150 | 16,099 | 20,387 | 16,896 | 22,904 | 25,680 | 22,327 | 30,926 | 30,647 | 31,207 |
| COP (ஒவ்வொரு 1000 தேங்காய்கள்) | 7,780 | 9,005 | 11,691 | 9,627 | 12,364 | 12,872 | 13,531 | 16,386 | 15,984 | 18,635 |
| | | | | | | | | | | |
| விளைச்சல் ஒரு ஏக்கர் | 4,287 | 4,118 | 3,996 | 4,595 | 4,139 | 4,476 | 5,321 | 3,948 | 5,117 | 4,414 |
| இலாபம் ஒரு ஏக்கர் | 10,161 | 29,206 | 34,751 | 33,404 | 43,631 | 57,332 | 46,809 | 57,504 | 75,739 | 56,476 |
| | | | | | | | | | | |
| இறப்பர் | | | | | | | | | | |
| சம்பாத்தியம் (ஹெ) | 191.35 | 191.35 | 191.35 | 191.35 | 191.35 | 191.35 | 188.28 | 191.78 | 192.62 | 183.53 |
| உற்பத்தி | 180,142 | 203,034 | 207,512 | 202,680 | 200,778 | 227,977 | 209,898 | 188,934 | 157,474 | 140678 |
| NSA (ஒவ்வொரு 1 கிலோ) | 185 | 214 | 222 | 183 | 348 | 457 | 371 | 330 | 246 | 218 |
| COP (ஒவ்வொரு 1 கிலோ) | 113 | 132 | 156 | 149 | 185 | 200 | 213 | 256 | 267 | 267 |
| | | | | | | | | | | |
| விளைச்சல் ஒரு ஏக்கர் | 941 | 1,061 | 1,084 | 1,059 | 1,049 | 1,191 | 1,115 | 985 | 818 | 767 |
| இலாபம் ஒரு ஏக்கர் | 67,631 | 87,170 | 71,920 | 35,031 | 171,614 | 306,606 | 176,960 | 72,939 | (12,233) | (37,844) |
| | | | | | | | | | | |
| வருமான அறிக்கை விபரங்கள் | | | | | | | | | | |
| வருமானம் | | | | | | | | | | |
| தென்னை | 161,539,826 | 247,991,075 | 306,021,001 | 292,448,058 | 354,436,203 | 399,151,639 | 404,191,573 | 402,365,395 | 514,176,778 | 442,113,846 |
| இறப்பர் | 33,326,923 | 43,497,656 | 46,103,417 | 36,999,577 | 69,911,163 | 104,284,153 | 77,964,363 | 62,405,810 | 39,698,357 | 30,606,278 |
| ஏனையவை | 1,752,429 | 2,055,309 | 8,171,751 | 8,023,084 | 6,417,504 | 6,450,097 | 9,663,550 | 11,118,970 | 22,915,639 | 19,420,279 |
| மொத்த வருமானம் | **196,619,178** | **293,544,040** | **360,296,169** | **337,470,719** | **430,764,870** | **509,885,889** | **491,819,486** | **475,890,175** | **576,790,774** | **492,140,403** |
| | | | | | | | | | | |
| விற்பனைச் செலவினம் | | | | | | | | | | |
| தென்னை | (123,814,515) | (138,723,789) | (175,492,646) | (166,631,038) | (191,322,313) | (200,075,494) | (244,948,017) | (213,015,395) | (266,963,038) | (262,136,535) |
| இறப்பர் | (20,385,806) | (26,817,758) | (32,341,535) | (30,296,350) | (37,072,837) | (45,615,137) | (44,646,298) | (48,417,543) | (42,054,702) | (37,551,747) |
| ஏனையவை | (1,857,713) | (3,824,407) | (8,070,797) | (8,377,449) | (6,879,815) | (6,762,242) | (7,688,806) | (7,363,880) | (16,972,939) | (16,955,372) |
| | **(146,058,034)** | **(169,365,954)** | **(215,904,978)** | **(205,304,837)** | **(235,274,965)** | **(252,452,873)** | **(297,283,121)** | **(268,796,818)** | **(325,990,679)** | **(316,643,654)** |
| | | | | | | | | | | |
| மொத்த இலாபம் | **50,561,144** | **124,178,086** | **144,391,191** | **132,165,882** | **195,489,905** | **257,433,016** | **194,536,365** | **207,093,357** | **250,800,095** | **175,496,749** |
| | | | | | | | | | | |
| ஏனைய செயற்படு வருமானம் | 23,977,560 | 28,456,198 | 36,529,836 | 55,808,066 | 41,112,867 | 63,714,382 | 89,353,353 | 95,827,085 | 95,921,283 | 121,733,181 |
| | | | | | | | | | | |
| நிருவாக மற்றும் பொதுச் செலவினம் | (35,595,006) | (55,657,826) | (69,506,682) | (72,962,545) | (73,440,475) | (89,787,664) | (107,147,020) | (109,250,679) | (131,150,183) | (132,937,239) |
| செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான வருமானம் | **38,943,698** | **96,976,458** | **111,414,346** | **115,011,403** | **163,162,297** | **231,359,734** | **176,742,698** | **193,669,763** | **215,571,195** | **164,292,691** |
| | | | | | | | | | | |
| வட்டி வருமானம் | 376,774 | 3,373,863 | 9,236,529 | 11,386,989 | 18,103,874 | 22,232,991 | 38,200,820 | 44,336,994 | 31,342,319 | 28,108,779 |
| வட்டி செலவினம் | (16,027,368) | (18,326,367) | (20,464,060) | (23,602,575) | (26,737,125) | (28,429,380) | (21,892,306) | (24,377,772) | (26,007,038) | (26,478,523) |
| தேறிய நிதித்துறை வருமானம் / (செலவினம்) | **(15,650,594)** | **(14,952,504)** | **(11,227,531)** | **(12,215,586)** | **(8,633,251)** | **(6,196,389)** | **16,308,514** | **19,959,222** | **5,335,281** | **1,630,256** |
| | | | | | | | | | | |
| வரிக்கு முந்திய இலாபம் | **23,293,104** | **82,023,954** | **100,186,815** | **102,795,817** | **154,529,046** | **225,163,345** | **193,051,212** | **213,628,985** | **220,906,476** | **165,922,947** |
| | | | | | | | | | | |
| வருமான வரி செலவினம் | - | (371,632) | (3,269,984) | (7,693,412) | (13,058,661) | (33,126,698) | (15,784,867) | (5,483,047) | (13,776,911) | (10,012,206) |
| | | | | | | | | | | |
| ஆண்டுக்கான இலாபம் | **23,293,104** | **81,652,322** | **96,916,831** | **95,102,405** | **141,470,386** | **192,036,647** | **177,266,345** | **208,145,938** | **207,129,565** | **155,910,741** |
| | | | | | | | | | | |
| ஏனைய விரிவான வருமானம் | - | - | - | - | - | - | 6,839,858 | 783,904 | (683,093) | 8,098,729 |
| ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம் | **23,293,104** | **81,652,322** | **96,916,831** | **95,102,405** | **141,470,386** | **192,036,647** | **184,106,203** | **208,929,842** | **206,446,472** | **164,009,470** |

| | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிதி நிலைமை விபரங்கள் | | | | | | | | | | |
| சொத்துக்கள் | | | | | | | | | | |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | 524,408,813 | 563,810,934 | 596,585,296 | 624,315,272 | 692,832,173 | 857,362,895 | 991,947,684 | 1,143,266,952 | 1,246,419,814 | 1,330,599,213 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 72,423,762 | 108,220,975 | 177,926,604 | 240,573,754 | 354,097,893 | 476,633,700 | 459,074,756 | 473,180,784 | 540,658,625 | 567,794,643 |
| மொத்தச் சொத்துக்கள் | **596,832,575** | **672,031,909** | **774,511,900** | **864,889,026** | **1,046,930,066** | **1,333,996,595** | **1,451,022,440** | **1,616,447,736** | **1,787,078,439** | **1,898,393,856** |
| | | | | | | | | | | |
| பங்குகளும் பொறுப்புக்களும் | | | | | | | | | | |
| மூலதனமும் ஒதுக்கீடுகளும் | | | | | | | | | | |
| தெரிவிக்கப்பட்ட மூலதனம் | 200,000,010 | 200,000,010 | 200,000,010 | 200,000,010 | 200,000,010 | 200,000,010 | 200,000,010 | 200,000,010 | 200,000,010 | 200,000,010 |
| பிடித்து வைக்கப்பட்ட இலாபம் | 137,047,210 | 218,699,532 | 305,616,363 | 381,161,381 | 522,631,767 | 644,668,414 | 755,412,408 | 889,230,196 | 1,036,042,220 | 1,098,032,352 |
| மர ஒதுக்கீடு | | | | | | 111,428,668 | 148,832,548 | 183,160,698 | 203,478,239 | 247,398,848 |
| ஏனைய ஒதுக்கீடுகள் | | | | | | | 6,839,858 | 7,623,762 | 6,940,669 | 15,039,398 |
| மொத்தப் பங்குகள் | **337,047,220** | **418,699,542** | **505,616,373** | **581,161,391** | **722,631,777** | **956,097,092** | **1,111,084,824** | **1,280,014,666** | **1,446,461,138** | **1,560,470,608** |
| | | | | | | | | | | |
| பொறுப்புக்கள் | | | | | | | | | | |
| நடைமுறையற்ற பொறுப்புக்கள் | 152,857,977 | 161,196,724 | 165,570,260 | 168,709,437 | 179,951,047 | 201,441,218 | 248,699,905 | 252,071,460 | 257,648,523 | 257,175,255 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 106,927,378 | 92,135,643 | 103,325,267 | 115,018,198 | 144,347,242 | 176,458,285 | 91,237,711 | 84,361,610 | 82,968,778 | 80,747,993 |
| மொத்தப் பொறுப்புக்கள் | **259,785,355** | **253,332,367** | **268,895,527** | **283,727,635** | **324,298,289** | **377,899,503** | **339,937,616** | **336,433,070** | **340,617,301** | 337,923,248 |
| | | | | | | | | | | |
| மொத்தப் பங்குகளும் பொறுப்புக்களும் | **596,832,575** | **672,031,909** | **774,511,900** | **864,889,026** | **1,046,930,066** | **1,333,996,595** | **1,451,022,440** | **1,616,447,736** | **1,787,078,439** | **1,898,393,856** |
| | | | | | | | | | | |
| காசுப் பாய்ச்சல் விபரங்கள் | | | | | | | | | | |
| வருட ஆரம்பத்தில் காசும் காசுக்குச் சமமானவையும் | 8,157,250 | 26,078,378 | 48,112,932 | 74,595,894 | 162,149,037 | 274,978,694 | 321,380,740 | 325,659,031 | 335,741,661 | 409,709,538 |
| செயற்படு நடவடிக்கையில் இருந்து காசுப் பாய்ச்சல் | 70,174,487 | 106,019,826 | 82,236,880 | 170,228,691 | 206,895,556 | 196,643,896 | 203,658,090 | 228,933,956 | 264,205,081 | 223,849,997 |
| முதலீட்டு நடவடிக்கைளிலிருந்து காசுப் பாய்ச்சல் | | | | | | | | | | |
| முதலீட்டு நடவடிக்கையிலிருந்து காசு | 433,737 | 2,549,106 | 2,184,984 | 13,580,463 | 14,467,425 | 25,662,626 | 35,036,688 | 42,100,470 | 38,889,648 | 25,917,469 |
| PE மீது முதலீட்டு நடவடிக்கை | (37,014,222) | (55,705,246) | (53,012,978) | (52,461,092) | (92,326,212) | (81,628,173) | (164,809,564) | (186,700,542) | (159,579,219) | (135,174,637) |
| | **(36,580,485)** | **(53,156,140)** | **(50,827,994)** | **(38,880,629)** | **(77,858,787)** | **(55,965,547)** | **(129,772,876)** | **(144,600,072)** | **(120,689,571)** | **(109,257,168)** |
| | | | | | | | | | | |
| நிதி நடவடிக்கையிலிருந்து காசுப் பாய்ச்சல் | | | | | | | | | | |
| நிதி நடவடிக்கையிலிருந்து காசு | 257,088 | 264,960 | 316,700 | 1,371,410 | 1,569,447 | 1,099,614 | 4,290,173 | 6,422,291 | 6,933,143 | 8,744,500 |
| நிதி நடவடிக்கைகளில் உபயோகிக்கப்பட்ட காசு | (15,929,962) | (31,094,092) | (5,242,624) | (45,166,329) | (17,776,559) | (95,375,917) | (73,897,096) | (80,673,545) | (76,480,776) | (87,904,114) |
| | **(15,672,874)** | **(30,829,132)** | **(4,925,924)** | **(43,794,919)** | **(16,207,112)** | **(94,276,303)** | **(69,606,923)** | **(74,251,254)** | **(69,547,633)** | **(79,159,614)** |
| | | | | | | | | | | |
| கால முடிவில் காசும் காசுக்கு சமமானவையும் | **26,078,378** | **48,112,932** | **74,595,894** | **162,149,037** | **274,978,694** | **321,380,740** | **325,659,031** | **335,741,661** | **409,709,538** | **445,142,753** |
| | | | | | | | | | | |
| மொத்த இலாபம் மார்ஜின் | 26% | 42% | 40% | 39% | 45% | 50% | 40% | 43.52% | 43.48% | 35.66% |
| தேறிய இலாபம் மார்ஜின் | 12% | 28% | 27% | 28% | 33% | 38% | 36% | 43.74% | 35.91% | 31.68% |
| ஒரு பங்கிற்கான தேறிய சொத்து | 16.85 | 20.93 | 25.28 | 29.06 | 36.13 | 47.80 | 55.55 | 64.00 | 72.32 | 78.02 |
| நடைமுறைச் சொத்து விகிதம் | 0.68 | 1.17 | 1.72 | 2.09 | 2.45 | 2.70 | 5.03 | 5.61 | 6.52 | 6.91 |
| ROCE | 7% | 22% | 21% | 18% | 22% | 25% | 20% | 20.36% | 17.82% | 12.31% |
| ஒரு பங்கிற்கான சம்பாத்தியம் (ரூபா) | 1.16 | 4.08 | 4.85 | 4.76 | 7.07 | 9.60 | 8.86 | 10.41 | 10.36 | 7.80 |



# இணைப்புக்கள்

வருடாந்தப் பொதுக் கூட்ட அறிவித்தல் ____ 106
அதிகாரம் பெற்ற பிரதிநிதிக்கான படிவம் ____ 107
கூட்டிணைப்புத் தகவல்கள் - பின் அட்டையின் உட்பக்கம்

# வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்கான அறிவித்தல்

குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம், அதன் கொழும்பு 9, தெமட்டகொடை, பேஸ்லைன் வீதி, 712/3 ஆம் இலக்க கொழும்பு அலுவலகத்தில் 2016 டிசம்பர் 21 ஆம் திகதி பி.ப 03.00 மணியளவில் கீழ்க்காணும் காரணங்களின் அடிப்படையில் நடைபெறும் என்பதற்கான அறிவித்தல் இத்தால் விடுக்கப்படுகிறது.

1. 2015 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான கணக்கறிக்கையையும், பணிப்பாளர்களின் அறிக்கை அதன் மீதான கணக்காய்வு அறிக்கை என்பனவற்றையும் ஏற்றுக்கொண்டு அதனை ஆராய்தல்.

2. 2016 ஆம் ஆண்டிற்கான நிறுவனத்தின் கணக்காய்வாளராக, கணக்காய்வாளர் திணைக்களத்தை நியமித்தல்.

3. 2015 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டின் இலாபத்திலிருந்து ரூபா 30 மில்லியனை இறுதி பங்குலாபமாகப் பிரகடனம் செய்தல்.

4. வேறு விடயங்கள்

   A) இலங்கை அரசாங்கத்தின் சார்பிலும், அதன் பணிப்புரையின் பேரிலும், தெங்குச் செய்கைச் சபை, இலங்கை முதலீடுகள் சபை, மாவட்ட காணிச் சீர்திருத்த அதிகார சபை, ஏனைய பல தரப்பினருக்கு காணிகள் விடுவிக்கப்பட்டமையினால், நிறுவனத்தின் குத்தகைச் சொத்துக்களும், குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தினால் சொந்தமாக்கப்பட்ட சொத்துக்களும் நிறுவனத்திற்கு நட்டத்தை ஏற்படுத்தியுள்ளன.

   1992.06.18 இல் இருந்து 2003.12.31 வரை உரிமை மாற்றப்பட்டு மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் பெறுமானங்களில் இருந்து பெறப்பட்ட பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதிகள் அல்லது ரூபா 37,297,387.96 என்ற தொகைக்குப் பொருத்தமான நிறுவனத்தின் செலவினம் கணக்கேடுகளில் சீராக்கப்பட்டுள்ளதை அடுத்து, சொத்துக்களின் பெறுமதி குறைவடைந்துள்ளது. ஆண்டறிக்கையின் 79 ஆம் 80 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ள மற்றொரு பதிவு குத்தகையாளரின் (JEDB) குத்தகைப் பொறுப்பிலிருந்து கழிவுத் தொகையாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. நிதி அறிக்கைகளின் 23ஆம் இலக்க குறிப்பை பார்க்கவும்.

   2004.01.01 இலிருந்து இன்று வரை உரிமை மாற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதிகள் கணக்கேடுகளில் சீராக்கப்பட வேண்டி வந்துள்ளன. 2015.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இறுதி அறிக்கையை அங்கீகரித்த கணக்காய்வாளர் அதிபதி இந்த விடயத்தையும் பிரஸ்தாபித்துள்ளார். கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையின் இரண்டாம் பக்கத்தில் 221(B) பந்தியில் இதனைப் பார்க்கவும்.

   குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் சட்டபூர்வமாக அமைக்கப்பட்ட சமயம், இலங்கை திறைசேரியின் செயலாளரினால் முற்றிலும் சொந்தமான நிறுவனத்தின் பங்குமூலதனம் என்ற ரூபா 200,000,010 ஒவ்வொன்றும் ரூபா 10 பெறுமதியான சாதாரண பங்குகளை உள்ளடக்கியதோடு, 01 தங்கப் பங்கும் குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்திற்கு சொத்துக்களாகக் கையளிக்கப்பட்டுள்ளன.

   மேலே குறிப்பிட்ட உரிமை மாற்றப்பட்ட சொத்துக்கள் நிறுவனத்திடம் தற்சமயம் இல்லாதபடியால் மொத்தப் பங்குகளில் இருந்து உரிமை மாற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதியை குறைப்பதற்கு இத்தால் அங்கீகாரம் கோரப்படுகிறது. (2016 ஆம் ஆண்டுக்கான நிதி அறிக்கைகள் தயாரிக்கப்படுமிடத்து பிடித்து வைக்கப்பட்ட இலாபமாகக் கருதப்படும்).

குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின்

பணிப்பாளர் சபையின் உத்தரவின் பிரகாரம்

கோப்பரேட் அட்வைசரி சேர்விசஸ் பிரைவேட் லிமிட்டெட்
செயலாளர்கள்

2016 நவம்பர் 24

கூட்டத்தில் சமூகமளித்திருந்து வாக்களிக்கத் தகுதி பெற்ற பங்குதாரர், தமது சார்பில் சமூகமளித்து வாக்களிப்பதற்கென பிரதிநிதி ஒருவரை நியமிக்க உரிமை பெற்றவராவர். அந்தப் பிரதிநிதி நிறுவனத்தின் அங்கத்தவராக இருப்பது அவசியமில்லை. இதற்கென பிரதிநிதிக்கான படிவம் இணைக்கப்பட்டுள்ளது.

# பிரதிநிதிக்கான படிவம்

கீழே கைச்சாத்திட்டுள்ள நாம் ..............................................................(முகவரி) ......................

.............................................................. குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் அங்கத்தவராக

/ அங்கத்தவர்களாக உள்ளதனால் இத்தால் கீழே குறிப்பிட்டவர்களை நியமிக்கின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| திரு. ஏ.எம்.பியசோம உபாலி | அவர் இல்லாவிட்டால் | திரு. எச்.ஏ.பி.துசித குமார டயஸ் | அவர் இல்லாவிட்டால் |
| திரு.டி.எம்.பண்டாரநாயக்க | அவர் இல்லாவிட்டால் | திரு.எச்.ஏ.என்.சமன் குமார | அவர் இல்லாவிட்டால் |
| திரு. டபிள்யூ.எம்.டீ.பி.அபேரத்ன | அவர் இல்லாவிட்டால் | திரு.ஆர்.சிட்னி குலதிலக | அவர் இல்லாவிட்டால் |
| திரு.இந்துனில் அமரசிங்க | அவர் இல்லாவிட்டால் | | |

..............................................................ஐ எனது / எமது பிரதிநிதியாக என்னை / எம்மைப் பிரதிநிதித்துவம் செய்து எனது / எமது சார்பில் குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் கொழும்பு (தெமட்டகொட, பேஸ்லைன் வீதி, 712/3 என்ற கொழும்பு அலுவலகத்தில் 2016 டிசம்பர் 21 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் அல்லது கூட்டம் பின்தள்ளி வைக்கப்பட்ட திகதியில் கூட்ட நடவடிக்கையின் பலனாக இடம்பெறும் ஒவ்வொரு வாக்கெடுப்பின் போதும்,

தீர்மானம் இல. ……… க்கு உங்களது விருப்பை அதற்கு முன்னராக X புள்ளியிடுவதன் மூலம் தெரிவிக்கவும்..

| | | ஆதரவு | எதிர் |
|---|---|---|---|
| 1. | 2015 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான கணக்கறிக்கையையும், பணிப்பாளர்களின் அறிக்கை அதன் மீதான கணக்காய்வு அறிக்கை என்பனவற்றையும் ஏற்றுக்கொண்டு அதனை ஆராய்தல். | | |
| 2. | 2016 ஆம் ஆண்டிற்கான நிறுவனத்தின் கணக்காய்வாளராக, கணக்காய்வாளர் திணைக்களத்தை நியமித்தல். | | |
| 3. | 2015 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டின் இலாபத்திலிருந்து ரூபா 30 மில்லியனை இறுதி பங்குலாபமாகப் பிரகடனம் செய்தல். | | |
| 4. | ஏனைய விடயங்கள் | | |

A) இலங்கை அரசாங்கத்தின் சார்பிலும், அதன் பணிப்புரையின் பேரிலும், தெங்குச் செய்கைச் சபை, இலங்கை முதலீடுகள் சபை, மாவட்ட காணிச் சீர்திருத்த அதிகார சபை, ஏனைய பல தரப்பினருக்கு காணிகள் விடுவிக்கப்பட்டமையினால், நிறுவனத்தின் குத்தகைச் சொத்துக்களும், குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தினால் சொந்தமாக்கப்பட்ட சொத்துக்களும் நிறுவனத்திற்கு நட்டத்தை ஏற்படுத்தியுள்ளன.

1992.06.18 இல் இருந்து 2003.12.31 வரை உரிமை மாற்றப்பட்டு மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் பெறுமானங்களில் இருந்து பெறப்பட்ட பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதிகள் அல்லது ரூபா 37,297,387.96 என்ற தொகைக்குப் பொருத்தமான நிறுவனத்தின் செலவினம் கணக்கேடுகளில் சீராக்கப்பட்டுள்ளதை அடுத்து, சொத்துக்களின் பெறுமதி குறைவடைந்துள்ளது. ஆண்டறிக்கையின் 79 ஆம் 80 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ள மற்றொரு பதிவு குத்தகையாளரின் (JEDB) குத்தகைப் பொறுப்பிலிருந்து கழிவுத் தொகையாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. நிதி அறிக்கைகளின் 23ஆம் இலக்க குறிப்பை பார்க்கவும்.

2004.01.01 இலிருந்து இன்று வரை உரிமை மாற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதிகள் கணக்கேடுகளில் சீராக்கப்பட வேண்டி வந்துள்ளன. 2015.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இறுதி அறிக்கையை அங்கீகரித்த கணக்காய்வாளர் அதிபதி இந்த விடத்தையும் பிரஸ்தாபித்துள்ளார். கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையின் இரண்டாம் பக்கத்தில் 221(B) பந்தியில் இதனைப் பார்க்கவும்.

குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் சட்டபூர்வமாக அமைக்கப்பட்ட சமயம், இலங்கை திறைசேரியின் செயலாளரினால் முற்றிலும் சொந்தமான நிறுவனத்தின் பங்குமூலதனம் என்ற ரூபா 200,000,010 ஒவ்வொன்றும் ரூபா 10 பெறுமதியான சாதாரண பங்குகளை உள்ளடக்கியதோடு, 01 தங்கப் பங்கும் குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்திற்கு சொத்துக்களாகக் கையளிக்கப்பட்டுள்ளன.

மேலே குறிப்பிட்ட உரிமை மாற்றப்பட்ட சொத்துக்கள் நிறுவனத்திடம் தற்சமயம் இல்லாதபடியால் மொத்தப் பங்குகளில் இருந்து உரிமை மாற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதியை குறைப்பதற்கு இத்தால் அங்கீகாரம் கோரப்படுகிறது. (2016 ஆம் ஆண்டுக்கான நிதி அறிக்கைகள் தயாரிக்கப்படுமிடத்து பிடித்து வைக்கப்பட்ட இலாபமாகக் கருதப்படும்).

2016 .................... ஆந் திகதி .............................. கைச்சாத்திடப்பட்டது.

..................................................

பங்குதாரரின் கையொப்பம்

தே.அ.அ.இல./PP/பதிவிலக்கம்

# பிரதிநிதிக்கான படிவம் தொடர்ச்சி...

பூர்த்தி செய்வதற்கான வழிகாட்டிகள்

1. பிரதிநிதிக்கான படிவத்தை நிரப்பி, கைச்சாத்திட்டு, கையொப்பமிட்ட திகதியையும் தரவும்.

2. பிரதிநிதிக்கான படிவம் சட்டத்தரணி ஒருவரினால் கைச்சாத்திடப்பட்டால், அந்தப் பத்திரம் நிறுவனத்தில் ஏற்கனவே பதிவு செய்யப்படாதவிடத்து, சம்பந்தப்பட்ட அந்த வழக்கறிஞருக்கான அதிகாரப் பத்திரம் பிரதிநிதிக்கான நிரப்பப்பட்ட படிவத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

3. பூர்த்தி செய்யப்பட்ட பிரதிநிதிக்கான படிவம், கூட்டம் நடைபெறும் நேரத்துக்கு முன்னர் 48 மணித்தியாலங்கள் பிந்தாமல், கொழும்பு 7, அலெக்சாந்திரா பிளேஸ், 47 ஆம் இலக்கத்தில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

# குறிப்புகள்

# குறிப்புகள்

# கூட்டிணைப்புத் தகவல்கள்

## கம்பனியின் பெயர்

வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்ட
பயிர்ச்செய்கைகள் கம்பனி

## பதிவு செய்யப்பட்ட அலுவலகம்

இல. 80, தம்புள்ள வீதி, குருநாகல்.
தொலைபேசி இல: 037 2223133
தொலைநகல் : 037 2229618
மின்னஞ்சல் : kurunegalaplt@sltnet.lk

## கூட்டிணைப்புத் திகதி

1992 ஜுன் 18

## கம்பனியின் பதிவிலக்கம்

PB1319

## சட்ட அந்தஸ்து

முழுமையான அரச உடைமையாகத் திகழும் வரையறுக்கப்பட்ட ஒரு பொதுக் கம்பனியாகும். வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி, 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க அரச கூட்டுத்தாபன அல்லது அரசுக்குச் சொந்தமான வர்த்தக நிறுவனங்களை பொது நிறுவனங்களாக மாற்றும் சட்டத்தின் விதிகளுக்கு அமைய, 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். இது, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## சபையின் பணிப்பாளர்கள்

| | |
|---|---|
| திரு. ஏ.எம்.பியசோம உபாலி | தலைவர் |
| திரு. எச்.ஏ.பி.துஷித குமார டயஸ் | நிறைவேற்றுப் பணிப்பாளர் |
| திரு. டி.எம்.பண்டாரநாயக்க | செயலாற்றுப் பணிப்பாளர் |
| திரு. எச்.ஏ.என்.சமன் குமார | திறைசேரிப் பிரதிநிதி |
| திரு. டப்ளியூ.எம்.டீ.பி.அபேரத்ன | பணிப்பாளர் |
| திரு. ஆர்.சிட்னி குலதிலக | பணிப்பாளர் |
| திரு. இந்துனில் அமரசிங்க | பணிப்பாளர் |

## கம்பனியின் கணக்காய்வாளர்கள்

கணக்காய்வாளர் நாயகம்

306/72, பொல்துவ வீதி,
பத்தரமுல்ல
தொலைபேசி : 0112 887028-34
தொலைநகல் : 0112 887223
மின்னஞ்சல் : oaggov@sltnet.lk
இணையதளம் : www.auditorgeneral.gov.lk

## வங்கியாளர்கள்

இலங்கை வங்கி
மக்கள் வங்கி
தேசிய சேமிப்பு வங்கி

## செயலாளர்

கோப்பரேட் அட்வைசரி சேர்விசஸ் (பிரைவெட்) லிமிட்டெட்
இல. 47, அலெக்சாந்திரா பிளேஸ்,
கொழும்பு 07
தொலைபேசி : 0112 695782
தொலைநகல் : 0112 695410

வடிவமைப்பு, அச்சிட்டு விநியோகதித்தல் : mediaWIZE® Annual Reports

படங்கள்: சுமேத லியனகே

வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்ட பயிர்ச்செய்கைகள் கம்பனி
இல. 80, தம்புள்ள வீதி, குருநாகல்
தொலைபேசி இல : 037 2223133, 037 2223191 | தொலைநகல் : 037 2229618 | மின்னஞ்சல் : kurunegalaplt@sltnet.lk